# முரியப்பதாசன் கதைகள்



மணிமேகலைப் பிரசுரம்



# முனியப்பதாசன் கதைகள்

மல்லிகைப்பந்தல்

201 1/1, ஸ்ரீகதிரேசன் வீதி,
கொழும்பு - 13.
தொலைபேசி: 320721
E-Mail: panthal@sltnet.lk

டொமினிக் ஜீவா அவர்களின் பவள விழா ஆண்டு ஞாபகார்த்தமாக.......

இது ஒரு மல்லிகைப் பந்தல் வெளியீடு

முதற் பதிப்பு: 2001-ஆகஸ்ட்

பக்கங்கள் : 117 - xviii

விலை: **150/=**

ISBN: 955-8050-09-0

அச்சிட்டோர்:
**யு. கே. பிரின்டர்ஸ்,**
**98 A,** விவேகானந்த மேடு,
கொழும்பு - 13.
தொலைபேசி: 344046, 074-614153

# பதிப்புரை

எனக்கு முனியப்பதாசனை அவர் யாழ்ப்பாண வீதிகளில் நடமாடித் திரிந்த காலத்திலிருந்தே தெரியும்.

பல தடவைகள் பல்வேறு தெருக்களில், வீதித் திருப்பங்களில், பஸ் நிலையங்களில் இவரைச் சந்தித்து உரையாடியிருக்கிறேன். அந்த வாரங்களில் வெளிவந்துள்ள அவரது சிறுகதைகளைப் பற்றி இவருடன் நீண்ட நேரம் கருத்துப் பரிமாறல செய்துள்ளேன். பரஸ்பரம் இருவரும் இலக்கியத்தைப் பற்றிப் பேசிக் கொள்வோம். பிரிவோம்.

ஒருவகையான ஆன்மீகப் போக்கும் நோக்கும் கொண்டு நடமாடி வந்தவர் இவர். அதை நிரூபிப்பது போன்ற தோற்றம் - சித்தன் போக்கு, சிவன் போக்கு - எனச் சொல்வார்களே, அந்தப் போக்குக் கொண்டவர். அவரது பேச்சு, போக்கும், நடையுடை பாவனைகளும் அந்த நோக்கத்தையே பிரதிபலித்தன.

இந்த வாழ்க்கைப் போக்கே இவரது எழுத்துப் பாணியாகவும் இறுதிவரை நிலவி வந்தது. இவரது எழுத்துக்களிலும், படைப்புகளிலும் எதிரொலித்து வந்தது.

இவரது இந்த ஆன்மீகப் போக்கு - நோக்குக்கு நேர் எதிரானதே எனது இலக்கியப் பார்வை.

இருந்தும் கவரச் கூடிய புதிய இலக்கிய நடைக்காகவும் புதிய சிந்தனைத் தடத்தின் ஆளுமைககாகவும் கதையை நகர்த்திச் செல்லும் முறைக்காகவும் இவரது சிருஷ்டிகளை நான் விரும்பி மனதூன்றிப் படித்து வந்தேன்.

இலக்கிய, ஆன்மீக வழி துறைகளில் அவரது கருத்துக்களிலும் கொள்கைகளிலும் எனக்குப் பாரிய வேறுபாடுகள் இருந்த போதிலும் கூட, தனது ஆன்மீகத் தேடலைக் கண்டடைவதற்காக இலக்கியத்தையும் ஒரு வழி முறையாகக் கண்டுணர்ந்து, அதற்கான அர்ப்பணிப்பு உணர்வுடன் அவர் எழுதி வந்த

சிறுகதைகளை ஒருவிதமான உள்ளுணர்வுச் சிலிர்ப்புடன் படித்து வந்ததுடன் அவரது படைப்புகளையும் கனம் பண்ணிச் சிலாகித்து வந்தேன், அந்தக் காலகட்டத்தில்.

அவர் மறைந்து போய்ப் பல ஆண்டுகள் மறைந்தோடிப் போய் விட்டன.

இன்று, அவரது படைப்புகளை 'மல்லிகைப் பந்தல்' மூலம் வெளியிட்டு வைக்கிறேன்.

மன நிறைவு எனக்கு.

இப்படியான புதிய பார்வைகளும் - நோக்கும் - போக்கும் வளர்ந்து வரும் தமிழ் படைப்புலகுக்கு அவசியம் தேவை.

தேவை கருதித்தான் இந்தச் சிறுகதைத் தொகுதியை வெளியிட்டு வைக்கின்றேன். இப்படியான புதிய பார்வைகளும் புத்தூக்கமும் கொண்ட மறைந்த படைப்பாளிகளின் சிருஷ்டிகளைத் தேடிக் கண்டுபிடித்து இலக்கியப் பதிப்பில் ஆவணப் படுத்த ஆவன செய்யவேண்டும் என்ற மன ஆர்வம் எனக்கு நீண்ட நாட்களாகவே உண்டு.

இந்த மன ஆர்வத்திற்கு உதவுவதுபோல நண்பர் செங்கை ஆழியான் முனியப்பதாசனின் படைப்புகளைத் தேடியெடுத்துத் தூசி தட்டி, ஒழுங்கு படுத்தி, அதற்கேற்ற வகையில் நீண்ட முன்னுரை ஒன்றையும் தீட்டி முனியபபதாசனின் சிறுகதைகளை வெளியிட ஆவன செய்தபோது உண்மையாகவே சிலிர்ப்புற்றேன்.

இந்தச் சிறுகதைத் தொகுதி வெளிவர இருப்பதை நண்பர் முருகபூபதி ஊடாக, எழுத்தாளர் அருண் விஜயராணி மூலம் கேள்வியுற்ற அவுஸ்திரேலியாவில் வாழும் முனியப்பதாசனின் கிட்டிய இரத்த உறவினர்களான திரு. K. T. செல்லத்துரையின் பிள்ளைகள் தமது ஆசியையும் நல்கி, வரவேற்று, ஆசீர்வதித்து மகிழ்ச்சி தெரிவித்தனர். இவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

அட்டைப்படத்தை வரைந்து தந்துதவிய ஓவியர் 'ரமணி' அவர்களுக்கும் எழுத்துப் படிகளை ஒப்புநோக்கி உதவிய நண்பர் மா. பாலசிங்கம் அவர்களுக்கும் அழகாக அச்சிட்டுத் தந்துதவிய யு. கே. அச்சகத்தினருக்கும் எனது நேசம் நிறைந்த நன்றிகள்.

டொமினிக் ஜீவா
கொழும்பு - 13.

# முன்னுரை

1964-ஆம் ஆண்டு ஜனவரி மாதக் கலைச் செல்வியில் 'வெறியும் பலியும்' என்றொரு சிறுகதை வெளிவந்தது. கலைச்செல்வி நடாத்திய சிறுகதைப் போட்டியில் முதற் பரிசைப் பெற்ற அச்சிறுகதையினை 'முனியப்பதாசன்' என்ற இளம் எழுத்தாளர் எழுதியிருந்தார். அந்த முதற் சிறுகதையே முதிர்ந்த எழுத்தாக விளங்கியமை பலரை வியப்பிலாழ்த்தியது. கனதியான புதியதொரு படைப்பாளியை இனங்கண்டு ஈழத்திற்கு அறிமுகப்படுத்திய பெருமையைக் கலைச் செல்வி – சிற்பி சரவணபவன் தனதாக்கிக் கொண்டார். அதன் பின்னர் முனியப்பதாசன் என்ற இந்த எழுத்தாளன், எனது கணிப்பீட்டின் படி, ஏப்ரல் 1967 வரையிலான காலகட்டத்தில் 20 சிறுகதைகள் வரையில் எழுதியுள்ளார். இதில் கவனத்திற் கொள்ளத்தக்க சங்கதி, மிகக் குறுகிய மூன்றாண்டு காலத்திற்குள் அற்புதமானதும் தனித்துவமானதுமான இருபது சிறுகதைகளையாக்கித் தந்துவிட்டு மறைந்து விட்டார் என்பதாகும்.

ஆம். இன்று முனியப்பதாசன் என்ற அற்புதப் படைப்பாளி எம்மிடையே இல்லை. தனது மூன்று தசாப்தங்கள் நிறைவுறாத அகவையில் ஈழத்துப் புனைகதை இலக்கியத்திற்கு அவர் அளித்திருக்கின்ற செழுமை மிக அதிகமாகும். அவரது படைப்பிலக்கியப் பங்களிப்பினை இதுவரை எவரும் சரிவரக் கணிப்பீடு செய்யாமைக்கு அவரது ஆக்கங்கள் உதிரிகளாகப் பத்திரிகையிலும் சஞ்சிகைகளிலும் வெளிவந்து ஒருங்கே தொகுக்கப்படாது கிடந்தமை காரணமாகும். அதேவேளை முனியப்பதாசன் என்ற படைப்பாளி இதுவரை ஈழத்துத் தமிழ் இலக்கிய ஆய்வாளர்களின் கண்களில் தட்டுப்படாது போனமை பெரும் துரதிர்ஷ்டமாகும்.

இந்த ஆற்றல் மிக்க படைப்பாளியைத் தமிழுலகிற்கு வெளிக்கொணர வேண்டுமென்ற அயராத ஆவலின் விளைவாக அவரது சிறுகதைகளைச் சேகரிக்க ஆரம்பித்தேன். இவ்வளவையும் சேர்த்து முடிக்க எனக்கு ஆறு

ஆண்டுகளெடுத்தன. முனிப்பதாசன் தான் காலமாவதற்கு முன் தன்னிடமிருந்த அனைத்துப் பிரதிகளையும் எடுத்துச் சென்று தீயிட்டுக் கொளுத்தி, அதனைப் பார்த்துச் சிரி சிரியென்று சிரித்துள்ளார். அவர் வார்த்தையில் சொல்வோமாயின், "உலகம் பொல்லாதது, மகாத்மாவே, உலகம் பொல்லாதது. நீங்கள் வீடு தோறும் பிறந்தாலும் எங்கோ ஒரு மூலையில் வெறியும் பித்தலாட்டமும், கயமைகளும் வாழ்ந்து கொண்டே இருக்கும். புனிதமான ஆத்மாவின் வலிமை மிக்க சக்தியோடு வளர்ந்து கோடி கோடியாய்ப் பல்கிப்பெருகி தழைத்து நிற்கிற கயமைத்தனங்கள் செத்து மடியப் போவதில்லை. (ஆன்மீகத் தேர்தல்). எழுத்துக்கள் மூலம் சமூகத்திற்கு விடப்படுகின்ற கருத்துக்கள் சமூகத்தினைத் திருத்திவிடாதெனக் கருதினாரோ? "மனிதர்கள் மாறவே மாட்டார்கள். மாறுவதாயிருந்தால் புத்தன், யேசுவிற்குப் பிறகு காந்தி மகாத்மா தோன்ற வேண்டிய அவசியம் இருந்திராதே?' என்றோரிடத்தில் முனியப்பதாசன் ஆதங்கப் படுகின்றார். (ஆன்மீகத் தேர்தல்). அதனால் தான் தன் படைப்புக்களைத் தன் இறுதிக் காலத்தில் தீயில் சங்கமிக்க வைத்தாரோ?

முனியப்பதாசனின் இயற்பெயர் தாமோதரம்பிள்ளை சண்முகநாதன். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் மாணவர். 1944-1945களில் வண்ணார் பண்ணையில் பிறந்தார். அவரது இல்லம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் அருகு ஒழுங்கையில் அமைந்திருந்தது. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி உருவாக்கிய பேராசிரியர் கைலாசபதி, கவிஞர் முருகையன், கவிஞர் சோ. பத்மநாதன், செங்கை ஆழியான், செம்பியன் செல்வன், து. வைத்திலிங்கம், வண்ணை சே. சிவராஜா என்ற படைப்பாளிகள் வரிசையில் முனியப்பதாசனுக்கு மிக உயர் இடமுள்ளது. சிறுவயதிலிருந்தே சமய நம்பிக்கையும் சமய நெறிகளைக் கைக்கொள்ளும் விருப்பும் அவரிடம் இருந்தன. முனியப்பதாசன் என்ற புனைப் பெயர் அவ்வாறான சமய நம்பிக்கை வழி வந்ததாகும். கல்வியில் பொதுத்தராதர சாதாரண வகுப்புடன் தன் கல்வியை நிறுத்தி கொண்ட முனியப்பதாசன் தமிழறிவும், ஆங்கில நூல்களையும் வாசித்துப் புரியக்கூடிய ஆங்கில அறிவும் கைவரப் பெற்றிருந்தார். புனைகதை சார்ந்த அனைத்து இலக்கிய நூல்களையும் ஆரம்பத்தில் விரும்பிப் படித்தார். 1966களில் அவரது வாசிப்புப் பார்வை சமய நூல்களிலும் ஆத்மீக நூல்களிலும் நிலைக்கத் தொடங்கியது. ராமகிருஷ்ணர், விவேகானந்தர், தாகூர், பாரதியார், காந்தி என அவர் படிக்கத் தொடங்கினார். படித்ததோடு நின்றுவிடாது அவர்களின் சமய, ஆத்மீகக் கருத்துக்களை உள்வாங்கி வாழவும் தொடங்கிய நிகழ்ச்சி முக்கியமானது. முனியப்பதாசனின் சிறுகதைகளில் பெரும்பாலானவை தன்மையில் கூறப் படுபவவை. தான் கற்று உணர்ந்த அனுபவங்களின் வெளிப்பாடாக அவருடைய சிறுகதைகள் எழுந்தன. முனியப்பதாசன்

ஓரிடத்தில், "பொதுசன நூலகங்களில் எடுக்கின்ற கனமான புத்தகங்கள் எனக்கு மோசமான உண்மையைக் கற்பித்துவிட்டன" என்கிறார். (துறவி) முனியப்பதாசனால் இந்த லௌகீக வாழ்வின் துயரங்களிலிருந்து முற்றாக விடுபடமுடியவில்லை. இந்த மண்ணின் அவலங்கள் அவரை மிக மிக வருத்தியுள்ளன. வறுமை, சமூக அறியாமை, அருவருப்பூட்டுகின்ற பலவீனங்கள், பெண்ணடிமைத்தனம் போன்ற இன்னோரன்ன பிரச்சினைகள் அவர் முன் பூதாகரமாக எழுந்து நின்றன. அவற்றினை அவரது சிறுகதைகளில் அடையாளம் காணலாம்.

"எனக்குத் தெரிந்த நூற்றுக்கணக்கான மனிதர்களின் வாழ்க்கைத் துன்பங்களை மறந்து நான் நிம்மதியாக இருக்க முடியுமா?" (அம்மா)

"இராப்போதுகளில் நெடுநேரமாய் உறக்கமின்றி உன் மகனை வாட்டி வதைப்பதற்கு உன் மகனுக்குத் தெரிந்த நூற்றுக்கணக்கான குடும்பங்களின் சோகக் கதைகள் நெஞ்சை அரித்துக்கொண்டே கிடக்கின்றன என்ற உண்மையை நீ கண்டு கொள்ளக் கூடுமா? முஸ்லீம் தெருக்களில் அடர்த்தியான அந்தக் குடிசனப் பிரதேசங்களில் கிடந்து தவிக்கின்ற முஸ்லீம் குழந்தைகளின் கண்களில் வாழ்க்கை வரட்சி தெரிகின்றதே, அம்மா. நாவாந்துறைப் பிரதேசங்களில் துர்நாற்றமான காற்றை நுகர்ந்தபடி வாழ்ந்து கொண்டிருக்கின்ற கரையூர்ச் சமூகம்-அதன் கன்றுகள் மேலாடையும் கீழாடையுமின்றி எதற்காக அப்படி ஒதுக்கப்பட்டு அலைகின்றனவோ? அந்தக் குழந்தைகளின் கண்களில் வெறும் நம்பிக்கை வரட்சி மட்டுமா தெரிகின்றது அப்பாவித்தனமும் தெரிகிறதே? நகரத்தின் நடுப்புறமான பெரிய தெருக்களில் கூனும் குருடுமாக, முடமுமாக நித்திய ஒப்பாரியில் மற்றைய மனிதன் இரக்க உணர்ச்சியைத் தேடித் திரியும் அவர்கள் மட்டும் மனிதர்களில்லையா?" (அம்மா)

மானுடனின் துயரத்தைத் தன் துயரமாக எண்ணிக் கவலையுற முனியப்பதாசனால் முடிந்தது. இந்தத் துயரங்களுக்குத் தீர்வு காண அவர் சமய ஆன்மீக நூல்களைத் தஞ்சம் புகுந்தார். அவற்றில் விடை தேடினார்.

முனியப்பதாசனுக்கு இரண்டு வாழ்க்கை நிலைகளுள்ளன. ஒன்று லௌகீக புறவாழ்வை அனுபவிக்கத் துடிக்கும் நிலை. மற்றையது ஆத்மீகத்தைத் தேடி அலையும் அக வாழ்வு நிலை. இரண்டும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாதவை என அவர் கருதினார். இல்லறத்திலிருந்து அழுந்திக்கொண்டே ஆத்மாவின் உன்னத நிலையை அனுபவிக்க முடியுமென அவர் நம்பினார். அவரைச் சமூகத்தின் ஒரு பகுதியினர் 'விசரன்' என்று கொச்சைப் படுத்தினார்கள். அவரது எழுத்தைப் படித்தவர்களும் – அவற்றில் அவரின் படைப்பனுபவத்தினைத் தரிசித்தவர்களும் அவரது அன்பர்களும் அவரைச் சித்தன் - துறவி என்றார்கள். இந்த இருவிதமான கருத்துக்களையும்

முனியப்பதாசன் ஏற்றுக் கொண்டதோடு, தெரிந்தும் வைத்திருந்தார். வண்ணார் பண்ணையின் தெருக்களில் அவர் பித்தனைப் போல அலைந்திருந்திருக்கிறார். நாவாந்துறைப் பிரதேசம், வில்லூன்றித் தீர்த்தக் கேணிச் சூழல், கோம்பயன் மணல் மயானபூமி, ஆலடிச்சந்தி, வயல் வெளிகள் என்பன அவரின் விருப்பத்திற்குரிய இடங்களாகவிருந்துள்ளன. அவற்றினைக் கனிவான சொற்களால் தன் கதைகளில் பகைப்புலமாக்கியுள்ளார். பிரபஞ்சத்தை இரசிக்கவும், அதன் அர்த்தத்தினைப் புரிந்து கொள்ளவும் முனியப்பதாசனால் முடிந்திருக்கின்றது. அந்தச் சித்தி நிலை அவருக்கு வாய்த்திருந்தது.

"எப்படியிருந்த பொடியன்?"

"உந்தத் தகப்பனுக்குப் பிறந்தவனா?"

"அணைத்து அணைத்து வளர்த்தார்களே?" (அம்மா)

"சீலைப்பேனும் அழுக்கும் ஈறெல்லாம் புகுந்து நிற்கும் நான்கு முழத்துண்டை அரையில் தொடுத்தபடி யாழ்ப்பாணத்து வீதிகளில் உலாவுவார்". (உரிமை).

"மகத்தான காரியத்தைச் செய்திருக்கிறேன் என்கிறாற்போல எனக்கு அடிக்கடி ஒரு நினைவு மனதில் எழுவதுண்டு". (நிமிடப் பூக்கள்)

பிறர் துயரத்தினைத் தன் துயரமாக மதிக்கின்ற முனியப்பதாசனால் தன்னை இந்தச் சமூகம் ஆத்மீகத் துறவியாகக் காண்பதை விரும்பியிருக்கவில்லை. அவர் சித்தன் போக்குச் சிவன் போக்காக வீதிகளில் அலைந்த போதும் அவரது உள்ளொளி தெளிவாகவேயிருந்தது. அவர் கூறுகிறார்: "இந்துத் தத்துவங்களின் பெயரையே தெரிந்திருக்காத இளைஞர்களும் – பெரியவர்களும் – சின்னவர்களும் ஆணும் – பெண்ணும் எல்லாருமாகக் கூடி என் கதைகளை வார்த்தைக்கு வார்த்தை பரிசோதித்தார்கள். என் கண்களையும் கண் பார்வையையும் சிரிப்பையும் உடையையும் தோற்றத்தையும் பார்த்து என் எழுத்தோடு பொருத்தினார்கள். தம் அறியாமையெனும் அளவுகோலால் என்னை மந்திரவாதியாகவும், சாமி துறவியாயும், இராமகிருஷ்ணராயும் ஆக்கிவிட்டார்கள். நான் எதைப் பார்க்கிறேன், எப்படிப் பார்க்கிறேன் என்பதையெல்லாம் வேவு பார்க்கின்ற மனிதர்கள் பெருகி நின்ற சமயம் அது. என்னை வேவு பார்த்த மனிதர்கள் எல்லாரையுமே நான் பைத்தியங்களாக்கியிருக்கிறேன். அவர்களைப் பைத்தியங்களாக்குவதற்காய் மேலேயும் கீழேயும் பார்த்துப் பார்த்து நான் துறவியாய் நடித்த நடிப்பில் என் கண்கள் கூட நோ எடுத்து விட்டிருந்தன. உணர்வு மயமாய் நான் எழுதிய எழுத்திற்கு நானே அர்த்தம் கண்டுபிடித்து அவற்றைத் தாகூரின் பேரிலும், பாரதியின் பேரிலும் சுமத்திவிட்டுப்

பைத்தியங்களாய் இந்த உலகத்தை ஆக்கிவிட்ட சிரிப்பில் நான் மகிழ்ந்தது என்னவோ உண்மைதான். கலைப் பயிற்சியில் ஈடுபட்ட எவருக்கும் இயல்பாய் அமையும் மயக்கத்தைத் தருகின்றாற் போன்ற கண் அமைப்பை புனிதமான யோகியின் கண்களுக்கும் மந்திரவாதியின் வெறிக் கண்களுக்குமாய் ஒப்பிட்டு நின்ற அந்த மனிதர்களை நான் உற்று உற்றுப் பார்த்தே கதிகலங்கப் பண்ணியிருக்க முடியும். ஆனாலோ என்னால் அழத்தான் முடிந்தது. தம் சமயத்தின் அந்தரங்கமான இரகசியங்களைப் புரிந்து கொள்ள முடியாத அந்த மனிதர்களை நொந்து ஆகிறது என்ன? சந்தி முகப்புக்கள், பஸ் நிலையங்கள், வீதி முகப்புக்கள் என்று இன்றைக்கு ஒன்றுமே தெரியாமல், தெரிந்து கொள்ள விருப்பமில்லாமல் பெருகி நிற்கின்ற இளைஞர்களின் நெஞ்சங்களில் கனலை மூட்டி விடுவதாய் அப்பொழுதே நான் சத்தியம் செய்தேன். இது வாழ்க்கைப் போராட்டம். எழுதுகிறவன் அழிகின்ற போராட்டம். வேறு நினைப்பின்றி அந்த இலட்சியத்தையே நினைத்து நினைத்து வாழ்ந்தால் மட்டுமே அதைச் சாதிக்க முடியும். அந்தச் சாதனையில் அவன் அழிகிறான்". (நிமிடப் பூக்கள்)

முனியப்பதாசனைச் சிறு வயதிலிருந்தே எனக்குத் தெரியும். "அண்ணை" என்றே அழைத்துப் பழகுவான். நானும் செம்பியன் செல்வனும் தன்னை எழுதத் தூண்டியவர்கள் எனக் கூறிக் கொள்வான். முனியப்பதாசனும் மனதளவில் இந்த வாழ்க்கையின் அனைத்துச் சுகங்களையும் அனுபவிக்கத் தான் விரும்பினார். லௌகீகத் துறவியாய் வாழ விரும்பினார். "மகனே, நீ துறவியாக வாழ ஆசைப்படுகின்றாய். அந்த ஆசை நுட்பமான உன் இளமைத் துடிப்போடு கூடிய புலன்களின் ஆசையாக இருக்கட்டும். அதில் மோசமில்லை. ஆனாலோ அந்தப் பற்றுடைய துறவியாக மட்டும் இரு. துறவு என்ற வார்த்தைக்குப் பொருந்தாத உன் துறவுக் கோலத்தை ஊரும் உலகமும் லௌகீகத் துறவி என்று தூற்றட்டும். ஆனால், அப்படி தூற்றுகின்ற ஊரும் நாடும் உலகமும் உன் தெய்வமல்லவா? போ மகனே, லௌகீகத் துறவியாய் வாழ்ந்துவிடு". (துறவி). ஆனால் முனியப்பதாசனுடைய வாழ்க்கை அவ்வாறு அமைய முடியாமற் போயிற்று. அவருடைய இளமை வாழ்வில் ஒருத்தி குறுக்கிட்டாள்.

"பின்னால் நீண்டோடி இறுதியில் குஞ்சமாய்ச் சரிந்து கொஞ்ச, சௌந்தர்யப் பேரெழில் போல இறங்கி ஒருத்தி நடந்து வருகிறாள். மஞ்சள் சட்டையும் ஒரு கலரோடு கூடிய பட்டுப் பாவாடையுமாய் மலரே மலர்மேல் நடக்கிறாற் போல......" (அம்மா).

"பெண்ணே, உன் முகத்தில் காவியங்களின் அழகுகளைக் காண்கிறேன். உன் விழிக் கோணத்தில் நிலவு வழியும் அழகினை உணருகிறேன். நிலத்தைப் பிளந்து புறப்படும் பயிரின் முனையில் துள்ளும் உயிரின் பொலிவு போன்ற

உன் பொலிவில் ஆட்படுகின்றேன். அழகுகள் உன்னிலிருந்தும் பிறந்து உன்னிலே சங்கமமாகி விடுகிற விந்தையில் என்னை இழந்து கொண்டிருக்கிறேன். ஓவியனின் நினைவோடே ஒட்டி ஒட்டித் தூரிகை சிதறும் நிறங்களின் அழகு போல உன்னை நினைக்க நினைக்க என்மனமாகிய தூரிகை அழகுகளைத் தூற்றுகிறது". (நிமிடப் பூக்கள்)

முனியப்பதாசன் தன் காதல் நினைவுகளைக் கருக்கிக் கொண்டமைக்கு இந்தச் சமூகந்தான் காரணம் என்பது சரியன்று. அவர் கற்ற சமய ஆத்மீக நூல்களும் என் போன்ற மூத்த நண்பர்கள், "முனியப்பதாசன், இவ்வாறான அற்புதப் படைப்புக்களைப் படைக்க உன்னை விட்டால் வேறொருவருமில்லை. உன் சிந்தனைத் தடம் தனித்துவமானது. நீ ஒரு சித்தன். துறவியப்பா!" என்று ஓயாது உரைத்தமையும் காரணங்களாகின. சுவாமி விவேகானந்தரின் பக்தர் அவர். இந்த நேரத்தில் அவர் மனதில் விவேகானந்தர் சொல்கிறார்: "தம்பி, உன் எழுத்தில் தெரியும் பரிசுத்தங்கள் உன் பேச்சில், பார்வையில், நினைப்பில் ஏற்படும் பரிசுத்தங்களின் பிரதிபலிப்பாக இருக்க வேண்டும். இந்த சலனத்திற்கு நீ ஆட்படாதே? எழுத்தை நீ என் முன்னால் உன் இலட்சியமாக ஏற்றுக் கொண்டாய். அதை நாணும் படியாய் நீ ஆக்கிவிடக்கூடாது". (நிமிடப் பூக்கள்). அந்த நிமிடமே அந்தப் பெண்ணின் கருநீலக் கண்களும் அதில் புரளும் அற்புதச் சௌந்தர்யங்களும் குமிழியிடக் குமிழியிடச் சிரிக்கும் சிரிப்பும் மறைந்துவிட்டன. "இந்த அழிவில் உன் அற்புதமான இருதயத்தையும் என்னோடு பிணைத்து அழித்துக் கொண்டு விடுவதாய் எனக்கு உத்தேசமில்லை. நீ என்னை மன்னித்து விட வேண்டும்". (நிமிடப் பூக்கள்) அவருடைய இளம் வயதுக் காதல் இவ்வாறு கருகிவிட்டது.

எழுத்தையும் வாழ்வையும் ஒன்றாகக் கருதி வாழ்ந்து முடித்த படைப்பாளி முனியப்பதாசனை விட வேறொருவருமில்லை என்பேன். தானாகவே தனக்கு இட்டுக் கொண்ட தடையை மீறி அவரால் விடுபடமுடியவில்லை. தன்னை மறக்கக் கள்ளுக் கொட்டில்களுள் அவர் நுழைகிறார். "கள்ளுக் கொட்டிலினுள் நுழையும் போது மனம் நடுங்கிச் சோர்கிறது. கற்ற நூல்களின் ஆழமான பொருட்கள் சிந்தையில் சில கணங்கள் நடம் புரிகின்றன". (அம்மா). அவருக்கு நன்மை, தீமை, சரி பிழை என்பன நன்கு தெரியாமலில்லை. "பேயே, நான் சாகிற வரைக்கும் என் உணர்வுகளைச் சுட்டுப் பொசுக்கும் துன்பங்கள் மாறிவிடுவதாய் எனக்கு நம்பிக்கையில்லை. அந்த நம்பிக்கை இருக்கும் வரையும் உன்னிடம் நான் வருவேன்". (அம்மா). "நானும்கூடப் புறவாழ்வின் சகல படிகளையும் தோற்றுவிட்டுத்தான் நிற்கிறேன். எதனாலோ, எப்பொழுதோ தோற்கடிக்கப்பட்ட ஒரு தோல்வியின் வித்திலிருந்து வெடித்துக் கிளம்பிய அகவுணர்வு ஒன்று வலிமையுடையதாகி அதுவே நானாய் மாறிச் சத்தியத்தின் குரலிற்காய் என் செவிப்புலனை மலரவைத்துக் கொண்டுதான் நான் நிற்கிறேன்.

இப்பொழுது அந்தத் தோல்வியின் முடிவில் உள்ளத்தில் ஆழமாகப் பதிந்து போன வடுக்களின் நிழல் இல்லை". (சத்தியத்தின் குரல்)

முனியப்பதாசன் என்ற படைப்பாளியை இனங்கண்ட பெருமை சிற்பி சரவணபவனுக்குரியது. வளர்த்தெடுத்த பெருமை ஈழநாடு ஹரனுக்குரியது. அவருடைய சிறுகதைகளை வற்புறுத்தி வாங்கி விவேகியிலும் சுதந்திரனிலும் வெளிவரச் செய்தது செங்கை ஆழியானுக்கும் உரியது. ஈழநாடு பத்திரிகையின் ஆசிரியர் ஹரன் ஐயா முனியப்பதாசனின் சிறுகதைகளால் மிகவும் கவரப்பட்டிருந்தார். ஈழநாட்டில் அவருடைய சிறுகதைகளைத் தொடர்ந்து வெளியிடவைத்தார். ஈழநாட்டில் 'காற்றே நீ கேட்டிலையோ' என்றொரு நாவலைத் தொடராக எழுதுவித்தார். ஆனால் அந்த நாவல் நான்கு இதழ்களின் பின்னர் தொடர முடியாது போய்விட்டது. நாவாந்துறைப் பின்னணியில் கத்தோலிக்க–சைவப் பின்னணியில் சமய ஆத்மீக விசாரணைகளை அந்தத் தொடர் செய்தமையால் அதை நிறுத்தும்படி ஈழ நாடு நிர்வாகத்திற்கு வற்புறுத்தப் பட்டதால் இடை நிறுத்தப்பட்டமை தமிழ் இலக்கியத்திற்குக் கிடைத்த இழப்பாகும். தன் கருத்துக்களைச் சமூகம் ஏற்கவில்லை என்பது முனியப்பதாசனுக்குப் பெரும தோல்வியாக விழுந்தது. உண்மையில் முனியப்பதாசனின் கருத்துக்களை இந்தச் சமூகம் புரிந்து கொள்ளவில்லை. ஈழநாடு ஹரன் அவர்கள் முனியப்பதாசனின் சிறுகதையொன்றினை விரும்பிப் பெற்றுச் சென்று சென்னையில் ஆனந்த விகடனுக்கு வழங்கினார். அச் சிறுகதை முத்திரைக் கதையாக ஆனந்தவிகடனில் வெளிவந்தது. ஈழநாட்டில் அவரது தொடர் இடை நிறுத்தப்பட்ட துயரத்தை அவர் சர்வ சாதாரணமாக எடுத்துக் கொள்ளவில்லை. தன் எழுத்துக்களை ஒருங்கே தீயிடுவதற்குச் சமூக ஏற்காமையும் ஒரு காரணமாகவிருந்திருக்குமென நான் நம்புகிறேன்.

முனியப்பதாசனின் எழுத்துக்கும் வாழ்க்கைக்குமிடையில் ஒருவித வேறுபாடுமில்லை. அவர் தான் எழுதியதுபோலவே வாழ்ந்து காட்டினார். அவருடைய சிறுகதைகளிலிருந்து அவரை நிச்சயமாக இனங்காணமுடியும். அவர் தன் வாழ்நாளில் ஏறத்தாழ இருபது சிறுகதைகள் எழுதியுள்ளார். வெறியும் பலியும், மேவுவீர் தீக்கொண்டு தோழரே, வரையறை, பிரபஞ்சப் பூ ஆகிய நான்கு சிறுகதைகளைக் கலைச் செல்வியில் எழுதியுள்ளார். ஆத்மீகத்தேர்தல், ஆணிவேர், உரிமை ஆகிய மூன்று சிறுகதைகள் சுதந்திரனிலும், சந்திரிகை, பிரவாகம், வெறுமையில் திருப்தி, சத்தியத்தின் குரல், அழிவும் தேய்வும், நிமிடப்பூக்கள் அகிய ஆறு கதைகள் ஈழநாட்டிலும் வெளிவந்துள்ளன. துறவி என்ற சிறு கதை விவேகியிலும் அம்மா என்றொரு சிறுகதை கலைவாணியிலும் வெளிவந்துள்ளன. இவை என்னால் சேகரிக்கப்பட்ட சிறுகதைகள். இவற்றினை விட தினகரனில் 'மாவிலங்கை மரம்' என்றொரு சிறுகதையும், வீரகேசரியில் 'ஏழையின் ஆத்மா' என்றொரு

சிறுகதையும் வெளிவந்துள்ளன. ஆனந்த விகடனில் ஒரு முத்திரைக் கதை வெளிவந்தது. இன்னமும் சில சிறுகதைகளைக் கலைச் செல்விச் சிறுகதைகளை அதன் ஆசிரியர் சிற்பி தந்துதவினார். கலைவாணியில் வெளிவந்த சிறுகதையை புத்தொளி சிவபாதம் தந்தார். ஏனையவை என்னால் பத்திரிகைளிலிருந்து பிரதி பண்ணப்பட்டவை.

தேடிப் பெறப்பட்ட இந்தப் பதினைந்து சிறுகதைகளும் முனியப்பதாசனின் படைப்பாற்றலை பேசுவதற்கும் நிரூபிப்பதற்கும் போதுமானவை. இவற்றில் வெறியும் பலியும், சந்திரிகை, வெறுமையில் திருப்தி, வரையறை நான்கு சமூகச் சித்திரங்களாகும். முனியப்பதாசன் சாதாரண மனநிலையில் இவற்றினை எழுதியிருக்க வேண்டும். பழிவாங்கத் துடிக்கும் சம்மாட்டியார், லூசியன் என்கிற மீனவத் தொழிலாளியின் தியாக உணர்வால் மனந்திருந்துகிற இயற்பண்பை, நாவாந்துறைப் பின்னணியில் வெறியும் பலியும் என்ற சிறுகதையில் வெகு தத்ரூபமாக முனியப்பதாசன் சித்திரித்துள்ளார். நல்லதொரு சிறுகதைக்கு உதாரணமாக அமையக்கூடியது சந்திரிகை. சிறுமி என்ற எண்ணத்தில் அவள் மனவுணர்வை மதிக்காத மச்சான், இறுதியில் அவள் சிறுமியல்லாள் என்றுணர்கின்ற இடம் முனியப்பதாசனின் படைப்பாற்றலின் உச்சம். வெறுமையில் திருப்தி, வரையறை ஆகிய இரு சிறுகதைகளிலும் முனியப்பதாசனின் பெண்ணியல் பற்றிய கருத்துக்களை அறியலாம். பெண்களின் அடிமை விலங்குகளை அறுத்தெறிந்துவிடும் ஆவேசம் அக்கதைகளிற் காணப்படுகின்றது. வெறுமையில் திருப்தி என்ற சிறுகதையில் கணவனின் அடக்கு முறைக்குள்ளாகும் மனைவியின் துயரம் படிப்படியாக விபரிக்கப் படுகின்றது. கணவன் அடிக்கும் போது அவள் துயரத்துடன் இது ஆடவனது உலகம். அவர் கணவரல்லவா? அடித்தாலும் நோகக் கூடாது, என எண்ணுகிறாள். இந்த நினைவு, இப்படி அவள் இருக்கக் கூடாதென வாசிப்போரை எதிர்மறையாக எண்ண வைக்கிறது. பன்னிரண்டு வயது மகன் தாய்க்கு நடக்கும் கொடுமைகளைப் பார்த்துப் பொறுக்க முடியாமல், 'விடடா' எனத் தகப்பனைப் பார்த்துக் கத்துவது ஆதிக்கத்திற்கு எதிரான குரலாக ஒலிக்கிறது. பெண்ணியம் சம்பந்தமான யதார்த்தச் சித்திரிப்பு இக்கதை. பெண்ணின் கற்பிற்கு மொத்தமாய் இந்த ஆண் வர்க்கம் கொடுக்கின்ற வரையறை என்ன என்பதை முனியப்பதாசன் வரையறை என்ற சிறுகதையில் காட்டியுள்ளார். "ஆணை நம்பி நம்பித் தேய்ந்து போகிற இந்த நிர்மூடமான பெண்களின் கூட்டம் இருக்கிறதே, அவர்களுக்கு எதில் தான் நிறைவிருக்கிறதோ?" என முனியப்பதாசன் கவல்கிறார். இந்த நான்கு சிறுகதைகளுக்கும் அப்பால் முனியப்பதாசனின் சிந்தனை, பிரபஞ்சம் தழுவியதாய், சமய ஆத்மீக விசாரம் கொண்டதாய் அவரின் சிறுகதைகள் மாறிவிடுகின்றன.

அவருடைய ஆத்மீகத் தேர்தல், பிரவாகம், சத்தியத்தின் குரல், அம்மா, ஆணிவேர், உரிமை, துறவி, மேவுவீர் தீக்கொண்டே தோழரே, அழிவும் தேய்வும், பிரபஞ்சப் பூ, நிமிடப்பூக்கள் ஆகிய பதினொரு சிறுகதைகளும் ஆத்மீகச் சிந்தனைகளை லௌகீக வாழ்வோடு பிணைத்து நோக்கும் சிறுகதைகளாகும். சமூகத்தின் இழி நிலை கண்டு கனகரத்தினம் என்ற பக்தர் தேர்தலில் குதிக்கிறார். "ஆத்மாவை விழிப்புறச் செய்து வாழ்க்கையோடு இணைந்து போய்க்கிடக்கிற அரசியலுக்கு அதனைப் பயன்படுத்து. உன்னைச் சுற்றிச் சொர்க்கத்தை காணலாம்" என்கிறார். தேர்தலில் எதிர்பார்த்தது போலத் தோல்வி காண்கிறார். அழுகிறார். மனைவி கூறுகிறாள்: "உங்களது புனிதமான உணர்ச்சிகளை எனக்குத் தெரியும். அவை இந்த உலகத்தை எட்டாது என்று தான் தடுத்தேன். மனிதர்கள் மாறவே மாட்டார்கள். மாறுவதாயிருந்தால் புத்தன் யேசுவிற்குப் பிறகு காந்தி மகாத்மா தோன்ற வேண்டிய அவசியம் இருந்திராதே" -இது முனியப்பதாசனின் குரலாக ஒலிக்கிறது - ஆத்மீகத் தேர்தல் சிறுகதையில்.

நூறாண்டுகளுக்கு முற்பட்ட ஓட்டுமடம் பிரதேசத்தின் கத்தோலிக்க, சைவ மதச்சண்டையைச் சமரச நோக்குடைய ஒரு இந்துப்பெண் தனது ஞானப் பேராற்றலாலும், பிரச்சாரங்கள் வாயிலாகவும் வாழ்ந்து காட்டிய முறையினாலும் தீர்த்து ஒற்றுமையை நிலைநாட்டிய உண்மை நிகழ்ச்சி ஒன்றினை பிரவாகத்தில் முனியப்பதாசன் சிறுகதையாக்கியுள்ளார். கொடிய வெறிக்கு எதிரான குரலாக இக்கதை ஒலிக்கின்றது. சத்தியத்தின் குரலில் முனியப்பதாசன் புறவாழ்வின் சுகங்களைத் துறக்கும் அவாவினையும் ஆத்ம போதனைகளையும் அலசுகிறார் இறுதியில் மலசலகூடம் துப்பரவு செய்கிற தொழிலாளி அவரிடம் நீட்டிய பிசைந்த இடியப்பம் வைப்பதும், தடுத்தும் கேளாமல் அவன் கரத்தில் ஒட்டியிருந்த மலத்தையும் அலட்சியப்படுத்திவிட்டு வாயிலிடுவதும் அவர் அவனில் நசிகேசனைக் காண்பதும் சித்திரிக்கப்பட்டிருக்கின்றது.

முனியப்பதாசன் ஆத்மீகச் சிறுகதைகளில் அம்மா சற்று வித்தியாசமானது. ராமகிருஷ்ணர் சக்தியிடம் பேசுவதுபோல, முனியப்பதாசன் அம்மாவிடம் பேசுகிறார். சிலவிடங்களில் லௌகீகத்தாயிடம் சிலவிடங்களில் தெய்வீகத்தாயிடம் பேசுவதாக இச்சிறுகதை வாசிக்கும்போது உணரவைக்கின்றது. மற்றவன் படுகின்ற துயரங்களுக்கு இரங்கும் முனியப்பதாசன், ஆழமாகச் சமூகப் பிரச்சினைகளின் தோல்வியை இச்சிறுகதையில் அலசுகிறார். இறுதியில் ஆத்மா விழித்துக் கொள்கின்றது. "மகாத்மாவிற்கும் ரோல்ஸ் ரோய்க்கும் தான் மேலான ஆத்மா விழித்துக் கொண்டதென்பதில்லை. மிகமிகச் சாதாரண உணர்வுகளை மதிக்கவும் காக்கவும் அவற்றின் வாயிலாகப் பிரபஞ்சத் தத்துவத்தை உணர சாதாரண மனிதனுக்கும் கூட ஏதோ ஒரு சிறு நிகழ்ச்சிப் பொறியில் அவனுள் அடங்கியிருக்கும் ஆத்மா விழிப்படைந்து விடுகிறது. அந்த ஆத்மீக விழிப்பில்

அவன் உடன் மகாத்மாவாகவோ, ரோல்ஸ்ரோயாகவோ மாறிவிடுகிறானென்பதில்லை. உள்ளுணர்வுகளின் விழிப்பில் ஆத்மீக விழிப்பில் அவன் அவர்களுக்குச் சமானமாகிறான். முனியப்பதாசன் மகானாக மாறிவிட முயலவில்லை. அவர்களுக்குச் சமானமாக மாறிவிடுகின்றார்.

முனியப்பதாசனின் 'ஆணிவேர்', பொருளாதாரத் தத்துவ வளர்ச்சியில் ஆத்மீகம் தோற்பதைச் சித்திரிக்கும் சிறுகதையாகும். மனிதன் புதிய உலகு சமைக்கிறான். தேவைகள் அதிகரிக்கின்றன. உற்பத்தி அதிகரிக்கின்றது. ஆனால், மறுபுறம் சமுதாயத்தில் கொலை, கற்பழிப்பு, மரணம் களிநடம் புரிகின்றது. 'ஆத்மீக அத்திவாரத்தில் எழும்பும் மனித முன்னேற்றமே. உண்மையான முன்னேற்றம்' என ஒரு கிழவன் எண்ணுகிறான். ஆத்மீகம் தான் ஆணிவேரென முனியப்பதாசன் கருதுகிறார். முனியப்பதாசனின் 'துறவி' சற்று வித்தியாசமான சிறுகதை. இளமையில் வாள் முனையில் மாற்ற விரும்பிய சமூகத்தைச் சமூகம் விரும்பும் பாங்கில் துறவியாகி மாற்ற விரும்கிறார். பணக்காரர்கள் அவரிடம் படையெடுத்து வருகின்றனர். அவர்களின் சுயநலம் அவரை வாட்டுகின்றது. 'ஒவ்வொரு வரும் தத்தம் மக்களுக்குச் சொத்துச் சேர்த்து வைத்துப்போக ஆசைப்படுகிறார்கள்'. தாம் வாழும் நாட்டிற்கும் மொழிக்கும் ஒரு வருங்காலத்தையாவது தேடி வைக்க ஆசைப்படுகிறார்களில்லை. 'முனியப்பதாசன் மொழியைப் பற்றி அக்கறைப்படுகின்ற இடம் இதுவாகும். 'பணக்காரனுக்குத் தெய்வ பக்தியும் ஏறவில்லை. அதைக்கொண்டு நான் ஏற்றவிரும்பிய பற்றுக்களும் ஏறவில்லை". எனத் துறவி சோர்ந்து போகிறார். "உலக நினைப்பற்று நாட்டு நினைப்பற்று தவம் இருக்க ஆசைப்படாதே" எனக் கதையை முடிக்கிறார்.

கலைச் செல்வியில் வெளிவந்த 'மேவுவீர் தீக்கொண்டு தோழரே' என்ற சிறுகதையில் இளைஞர்களின் செயற்பாட்டில் அவர் நம்பிக்கை வைக்கின்ற தன்மையைக் காணலாம். அவர்கள் மூலம் இந்த உலகத்தின் தீமைகள் கொளுத்தப்படும் என நினைக்கிறார். கதையின் ஆரம்பத்தில் இந்தச் சமூகத்தின் நடத்தை அவருக்கு வெறுப்பைத் தருகின்றன. 'மந்தையின் கூட்டம். சமயத்தை சாம்ராச்சியங்களோடும் கொடூர யுத்தங்களோடும் இணைத்து மதத்தின் புனிதத் தன்மையை மாசுபடுத்திவிட்ட மந்தைகளின் கூட்டம்' என்கிறார் முனியப்பதாசன். அவருடைய நீண்ட குழப்பத்திற்கு விடையாக ஆண்மையும் வீரமுமிக்க இளைஞர்கள் இதோ இதோ என்று கிளம்புவது போன்ற உரு வெளித்தோற்றம் எழுகிறது. அந்த உருவெளித் தோற்றத்தில் மயங்கி, மேவுவீர் தீக்கொண்டு தோழரே என உரக்கக் கத்துகிறார்.

கலைச்செல்வியில் வெளிவந்த பிரபஞ்சப் பூ இன்னொரு உன்னதமான சிறுகதையாகும். மேற்கின் காரண ரீதியான முடிவுகளையும் கிழக்கின் உணர்வு

மயமான முடிவுகளையும் இக்கதையில் முனியப்பதாசன் அலசுகிறார். காலம் காலமாய் இந்திய மண்ணில் தோன்றிய ஒளி முத்துக்களான ஆத்மீகத் துறவிகள் எதனையோ பற்றிப் பேச மறந்துவிட்டதாக முனியப்பதாசனுக்குப் படுகின்றது. 'உயிர்ப் பூக்கள் உதயமாகிற திருமணத்தை எதற்காக இந்தியத் துறவிகள் தூற்றினார்களோ' என இக்கதையில் அவர் வினா எழுப்புகிறார். விவேகானந்தராக வரவிரும்பிய முனியப்பதாசனின் பாத்திரம் இக்கதையில் இல்லறத்தில் ஈடுபடுகின்றது. குழந்தையொன்றினைப் பெற்றுவிட்டு மனைவி இறக்க, ஆத்மா இறப்பதுமில்லை பிறப்பதுமில்லை என்ற ஞானம் பிறக்கிறது. இச்சிறுகதையில் முனியப்பதாசன் தத்துவ விசாரங்களைப் புதிய அர்த்தத்துடன் கையாள்கின்றார்.

மரணம் பற்றிய சிந்தனைச் சிக்கலை 'அழிவும் தேய்வும்' என்ற சிறுகதையில் முனியப்பதாசன் கருவாக எடுத்திருக்கின்றார். இயற்கையின் அனைத்து இயக்கத்திலும் மரணம் மறைந்திருப்பதாக அவருக்கு படுகின்றது. மரணம் வந்து அவர் வாசற்படியைத் தட்டிக் கொண்டிருப்பதாகப் படுகின்றது. உலகம் அழகிய மரணமாக அவருக்குப் படுகின்றது. பைத்தோகிரஸ், ஆங்கிலக் கவி ரெனிசன், தத்துவ ஞானி ஸ்பயின்னோசா ஆகியோர் இக்கதையில் பொருத்தமாக அலசப்படுகின்றார்கள். மரணம் என்பது மாற்றமா, தேய்வா, பிறிதொன்றின் பிறப்பா என முனியப்பதாசன் வினாவெழுப்பி விடை காண்கிறார் இக்கதையில். மரணம் என்பது தேய்வுமில்லை, பிறப்புமில்லை. தனக்கு நெருக்கமான உயிரின் பிரிவை உணர்ந்தவன் மட்டும் உணரும் இரகசியம். பாஷைகள் தோற்கிற இடமும் அதுதான், எனக் கூறுகிறார்.

முனியப்பதாசனின் 'நிமிடப் பூக்கள்' சோகமான, நெஞ்சைப் பிளக்கும் கலைத்துவப் படைப்பு. முனியப்பதாசனை அறிந்தவர்கள் தெளிவாகப் புரிந்து கொள்ளும் அவரின் கதை. தான் வரித்துக்கொண்ட ஆத்மீக வாழ்விற்காகத் தன் நெஞ்சிலிடம் பிடித்த காதல் உணர்வைக் கருக்கிக் கொண்ட இளைஞனின் கதை. லௌகீகமும் துறவறமும் இணைய முடியாதென்பதை உணரும் இறுதிக் கதை. புரியாத புதிராக முனியப்பதாசன் இச் சிறுகதையில் தெரிகிறார். விவேகானந்தரைப் பார்க்கிறார். இவ்வாறு கதை முடிகிறது. "அவர் கண்களைப் பார்த்தபடியே சொன்னேன்...... நீங்கள் சலனமேயில்லாமல் எப்படி வாழ்ந்திருக்கிறீர்கள் என்று இப்பொழுதுதான் எனக்குப் புரிகிறது. இலட்சிய வாதியின் மனதிலும் ஒரு சமயம் காதல் அரும்புகள் அரும்புகின்றன. ஆனால் அவை ஒரு நிமிடம் மட்டுமே வாழ்கின்றன. அவர் வரையில் காதல் நிமிடப் பூக்கள் தான்"........

முனியப்பதாசனின் சிறுகதைகள் தனித்துவமானவை. அவரின் சிறுகதைகளை எவருடனும் ஒப்பிட முடியாது. புரிந்து கொள்வதற்கு ஒப்பிடவேண்டுமாயின் மௌனி, லா. ச. ராமாமிர்தம், பிச்சமூர்த்தி என்போரோடு

ஒப்பிடலாம். ஆனால் அவர்கள் முனியப்பதாசன் போல துறவியாக வாழ்ந்து, தாம் எழுதிய, எழுத்தாக வாழ்ந்து பார்த்தவர்களல்லர். முனியப்பதாசனின் சிறுகதைகள் குறிப்பாக ஆத்மீகச் சிறுகதைகள் தமிழிற்குப் புதிய பரிமாணம். அவர் கையாளும் மொழிநடை தனித்துவமானது. இறுக்கமானது. தேடிப் பெற்ற சொற்கள் அழுத்தமாக அவர் சிறுகதைகளில் நிற்கும். பேச்சு வழக்கு அழுத்தம் பெறாத சுத்தமான மொழிநடை. அவர் கதைகளில் வருகின்ற பகைப்புல வர்ணனைகள் கையாளும் உவமைகள், சம்பவத்திற்கும் உரையாடலுக்கும் ஏற்ற சொற்கள் அனைத்தும் முனியப்பதாசனின் படைப்பனுவத்தினை எமக்குக் காட்டி நிற்கின்றன. அவரது ஒவ்வொரு சிறுகதைகளிலும் ஏதோ ஒரு தேடலும் சோகமும் தொக்கி நிற்கின்றன.

திறமைசாலிகளின். ஆயுட்காலம் குறுகியதென்பர். பாரதியார் போல, புதுமைப் பித்தன் போல சிறிய வயதில் அதிகம் சாதித்தவர் முனியப்பதாசன். மௌனி போலக் குறைவாக எழுதி மலையாக உயர்ந்து நிற்பவர்.

தமிழிலக்கியத்திற்கு முனியப்பதாசனின் சிறுகதைகள் புதியவை. செழுமை சேர்ப்பவை. அதனை இன்று நாடறிய வைக்கும் பெருமை மல்லிகைப் பந்தல் டொமினிக் ஜீவாவிற்குரியது என்பதை நன்றியறிதலுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். ஜீவா அவர்களின் நூல் வெளியீட்டுத் துறையின் பணியை, வரலாறு என்றும் பேசும். அவருக்கு இலக்கிய உலகு என்றும் கடமைப்பட்டுள்ளது.

மல்லிகைப் பந்தல் வெளியீடாக முனியப்பதாசனின் சிறுகதைகள் வெளிவருவது சிறுகதை உலகிற்கும் முனியப்பதாசனுக்கும் பெருமை தருவது. நன்றி.

செங்கை ஆழியான்
18-02-2000

# நல் ஆசிகள்

"சீரார் மனைவி மக்கள்
செல்வம் உயர் சுற்றமுடன்
பேரால் நண்பனையும் பெற்றிடலாம்
பார் மீதில் இப்பிறப்பில் சகோதரனே
உம்மை மறந்தால்
எப்பிறப்பில் காண்போம் இனி"

பொறுப்புக்கள் முடிவுற்ற நிலையில் தனது முதுமைப் பருவத்தில் எம் தந்தையார் தன் சகோதரியின் சிறப்புக்களை அருகில் இருந்து ரசித்து ரசித்து அவர் கூறிய பாடல்களை எல்லாம் டயரியில் எழுதிக் கூறியே வந்திருந்தார். தம் சகோதரனை நினைத்துக் கூறியதே மேலே உள்ள பாடல்.

"என் சகோதரியின் அறிவுதான் என் மருமகன் சண்முகநாதனுக்கு (முனியப்பதாசனுக்கு) வந்திருத்தல் வேண்டும். அநியாயமாக இளவயதில் காலாமாகி விட்டானே........ அவனது புகழ் பேச ஒரு கதை கூட இல்லையே" என அடிக்கடி எம் தந்தையார் கவலைப் பட்டார். அந்த ஏக்கமும் - மனதில் ஓர் ஏக்கமாக - எம் தந்தையார் காலமாகி விட்டார்.

அவரது கதைகளை நூலுருவாக வெளியிடப் பிரதிகள் ஏதும் இல்லாத நிலையில், நாம் சிந்தித்துக் கொண்டிருந்த வேளையில் தான் மல்லிகையில் அந்தக் கட்டுரை வெளியானது.

நேசமுடன் - ஒரு திறமைமிக்க சக எழுத்தாளன் நினைவுகள் - அழிந்து போய்விடக் கூடாது என்ற நல்ல எண்ணத்துடன் அவரது திறமையினை வியந்து செங்கை ஆழியான் எழுதியிருந்த பாங்கு எம்மைக் கவர்ந்தது. அவற்றை நூலுருவில் கொண்டு வர வேண்டுமென்ற எமது ஆசைகளை

எமது தந்தையார் மீது அபிமானமும் பாசமும் கொண்ட திரு. லெ. முருகபூபதியிடம் தெரிவித்தோம். அவர் செங்கை ஆழியானுடன் தொடர்பு கொண்டு கதைகளை மல்லிகை ஆசிரியரிடம் சேர்க்கும் படி கேட்டுக் கொண்டார்.

இலக்கியமே உயிர் மூச்சாக வாழ்பவர் மல்லிகை ஆசிரியர் டொமினிக் ஜீவா அவர்கள். பல உன்னதமான எழுத்தாளர்களைத் தம் மல்லிகை மூலம் உருவாக்கியவர் அவர்.

மிகுந்த உற்சாகத்துடன் ஒரு திறமைமிக்க எழுத்தாளரின் எழுத்துக்கள் அழிந்து விடாமல் தலைமுறை தலைமுறையாகப் பேணப்படல் வேண்டும் என்ற வேட்கையுடன் அவரது கதைகளை நூலுருவில் கொண்டு வருவதற்கு ஆயத்தங்கள் செய்யத் தொடங்கியும் விட்டார்.

ஸ்ரீ இராமபிரானின் அணை கட்டலுக்கு - அணில் கூடத் தனது பங்குக்கு உதவியை நல்கியதாம் - ஜீவா அவர்களின் இவ் அளப்பரிய பணிக்கு நாமும் அணில்களாகச் செயல் படுவதில் எமக்கு மிகுந்த மன நிறைவும் சந்தோஷமும்.

மறைந்து விட்ட எம் தந்தையாரின் மனம் வானுலகில் நிறைவு பெறும்போது........

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்."

என உயிரோடு இருக்கும் முனியப்பதாசனின் தாயார் இராசம்மா (எமது மாமி) வின் மனம் குளிர்வதோடு அவரது சகோதரர்கள் உறவினர்கள் அனைவரது நெஞ்சமும் பெருமைப்படும் என்பதில் எமக்கு அசைக்க முடியாத நம்பிக்கை

அவரது நூல் வெளியிடுவதில் துணை நின்ற அத்தனை உள்ளங்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகள்.

K. T. செல்லத்துரையின்.
பிள்ளைகள்.
அவுஸ்திரேலியா.

# வெறியும் பலியும்

"லூசியா..... லூசியா.......... லூசியா..........."

நாவாந்துறையில் புறவீதி. அப்பால் நீண்டு இன்னும் நீண்டு கிடந்தது கடல். தூற்றலுடன் தொடங்குகிற வானம். புனலாய்ச் சொரிகிற மார்கழி மாதத்தின் நடுப் பகுதி. பல நூறு ஆண்டுகளாகக் கருமைக்குமேல் கருமையை நாள் தோறும் பூசி வந்ததால் முடிவில் பூசிய இடத்தில் கிளரும் பேய்க் கறுப்புப் படைபோல வானமெங்கும் கருமை பூத்துக் கிடந்தது. அலை நிமிர்த்திய தலையில் முட்டுகிறாற் போன்றொரு அழகு. இந்தப் போதிலே இயல்பாகக் கடலின் கண் தோன்றும் பேயமைதி - நாவாந்துறைப் பிரதேசம் வானத்திடம் எதையோ எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறதாக முணு முணுப்பு எல்லாம் பின்னிப் பிணைந்து நின்றது.

அமைதி என்று வரையறுத்துச் சொல்ல முடியாத இந்த அமைதியைக் கிழித்து மேற்கூறிய குரல் ஒலித்தது. உற்றுக் கேட்கிற மனித மனங்களுக்கு மட்டும் புரியும் படியானதொரு வஞ்சகக் கலப்பின் சாயல் அந்தக் குரலிலே பிணைந்து நின்றது.

புறவீதியின் மேற்கே தென்னஞ் சோலைகளுக்கிடையே அமைந்து கிடந்த மண் குடிலை, 'லூசியா' என்ற மூன்றாம் குரலை முடிப்பதற்குள் சம்மாட்டியார் அடைந்து விட்டார். சுட்ட மின்சார பல்ப்பால் செய்த லாந்தர் ஒன்றை ஏந்திய வண்ணம் லூசியன் வந்தான்.

"லூசியா - ?"

"சம்மாட்டியாரா?"

"சம்மாட்டியார் தான். வேறு யார், இந்த நேரத்தில் உன்னிடம் வருவார்கள்? தெரியாமல் முதலை விட்டுவிட்டேன் பார். இன்னும்

கிளம்பவில்லையா நீ?''

லூசியன் அண்ணாந்து சம்மாட்டியாரைப் பார்த்தான். அந்தப் பார்வையிலே சந்தேகம்-சோகம், எல்லாம் கலந்து நின்றது. கொல்லன் உலைக் களத்துத் துருத்தியில் இருந்து கிளம்பும் உஷ்ணமான காற்றைப் போல நீண்டதொரு பெரு மூச்சோடு லூசியன் கூறினான். ''சம்மாட்டியாரே இந்த நேரத்திலே கடலிலே போய் என்ன செய்ய முடியும்.' புற வீதியின் கிழக்கே அலை எற்றிக் கொண்டிருந்த கடலையும்-கருங்கும் என்று கிளர்ந்தெழுகிற வானத்தையும் மாறி, மாறி அவன் விரல்கள் சுட்டிக் காட்டின.

மெல்லச் சிரித்தார் சம்மாட்டியார். அந்தச் சிரிப்பு நெஞ்சின் உள்ளே அனலாய் எரிந்து கொண்டிருந்த வெறியின் கொடுந் தழல்கள் - சிரித்ததால் பிளவு கண்ட வாய்ப் பகுதியூடே வீசியதாகப் பட்டது.

''லூசியா''

இனம் தெரியாத நடுக்கம். அந்தப் பெயரை உச்சரிக்கிறபோது அவர் குரலில் இழைந்தது. பெரிதாய் வலிமையைக் கூட்டி இல்லாததொன்றை வலிந்து நிரூபிக்கிறவன் காட்டுகிற சிரமத்தோடு அவர் பேசினார். 'லூசியா தொழில் தெரியாதவன். மாதிரியாகவல்லவா பேசுகிறாய். நீ-இந்தப் போதுகளிலே கடலில் கிடைக்கும் திரவியங்களை உனக்குத் தெரியாதா? மந்தாரைப் போதுகளிலே பெறும் வருமானங்களை நீ எத்தனை தரம் அறிந்திருக்கிறாய்''.

'சம்மாட்டியாரே, இது என்ன பையித்தியப் பேச்சு. கேட்கிறேன், இது மந்தாரைப் போதா? கடலும் வானும் குமுறப் போகிறதான சூழ் நிலையல்லவா - முகில் ஓட்டத்தைப் பார்த்தால் பெரும் சூறைக் காற்றே எற்றப் போவதான சூழ் நிலை அல்லவா,'

சம்மாட்டியார் அப்போதைக்கு மனிதனின் நல்ல உணர்வுகளைப் பொசுக்கி வந்தவர். பல காலமாய் தாம் செய்யத் தவறிய ஒன்றை வெற்றிகரமாய் இந்தச் சூழ்நிலையில் உருவாக்கி விடவேண்டுமென்ற வெறி தவிர அவருக்கு வேறு ஒன்றிலும் மனது லயிக்கவில்லை.

'அப்படியானால்' என்று அவர் இழுத்தார். அந்த இழுவை முடியு முன்னமேயே உள்ளேயிருந்து மரியாள் கத்தினாள்.

'வெளியே எதற்காக நிற்கிறாய் லூசியா - இடிகிடி விழுந்து தொலைக்கப் போகிறது. உள்ளே வாவேன். சம்மாட்டியார் தன் பாட்டில் போவார்'.

லூசியனுக்கு நெஞ்சு திக்கென்றது சம்மாட்டியாரின் பழைய தீவினைகளை இவள் சீண்டுகிறாளா? லூசியன் சம்மாட்டியாரைப் பார்த்தான். சம்மாட்டியாரோ லூசியனைச் சற்றும் கவனியாமல் குரல் வந்த திக்கை எட்டி - இன்னும் எட்டிப் பார்த்தார். லூசியன் கையில் இருந்த லாந்தர் 'பக்' என்று அணைந்தது. குடிசை கருமையாக - கருமைக்குள் பிடித்து வைத்த பண்டம் மாதிரி இருந்தது.

``நல்லது லூசியா. மரியாள் சொல்லுகிறபடி நீ செய்யலாம். ஆனால், இடையே நிறுத்தி லூசியனை உற்றுப் பார்த்தார் சம்மாட்டியார். அவரது சிந்தனையிலே அந்த மண் குடிசையும் அவனது பலமான உடற்கட்டும் நெஞ்சில் வந்து மோதின. இவை தவிர ஒன்றும் இல்லை-இந்தச் சிந்தனையின் முடிவோடு விட்ட இடத்தைத் தொட்டுக் கடைசி அஸ்திரத்தைப் பிரயோகித்தார். ``விடலைத் தொழிலுக்காக முன் பணமாக நான் தந்த நூற்றைம்பது ரூபாவையும் போது புலர்ந்ததும் நாளைக்கு வைத்தாக வேண்டும்''. இடையே நிறுத்தி நிறுத்தி லூசியன் முகத்தை அழுத்தமாகப் பார்த்துக் கொண்டு கூறினார், சம்மாட்டியார்.

இருளில் நீண்ட காலப் பழக்கம் சம்மாட்டியாருக்கு. அந்த மண் குடிசையின் வாயிற் புறத்துச் சாக்குத் தட்டி மெல்ல விலகியது. கருமைக்குள் கருமை அசைவது போல இருந்தது. எட்டி நின்று கத்தினாள் மரியாள். ``சம்மாட்டியாரே நீர் செய்த கொடுமைகள் போதாதா? மப்பும் மந்தாரையுமாய்க் குமுறப்போகிற இந்தப் பொழுதிலே மனம் வந்து விடலைத் தொழிலுக்குப் போ அல்லது முன் பணமாக வாங்கியதை வை என்கிறாயே? வலிமையற்ற எங்களை எதற்காக நீ வதைக்கிறாய்? மனம் மாறியதாக நடந்து கொண்டாயே? இதற்கெல்லாம் இந்த மண்டபத்தில் இருக்கும் யேசுநாதர் உன்னைக் கேட்டால் விடவேமாட்டார்''.

வானத்திலே இடி இடித்தது. அந்த இடியோசையோடு ஒத்திசைந்ததாகக் கம்பீரமாய் ``லூசியா, வெட்கம் கெட்டவனே, இன்னும் எதற்காக நிற்கிறாய்? வேண்டிய பணத்தைக் கொடுத்து விடலாம். வா உள்ளே'' என்ற மரியாளின் கத்தல் உரிமையோடு முடிந்தது.

``ஞாபகமிருக்கட்டும் லூசியா, விடிந்தால் பணம்'' என்று கத்தி விட்டு வேகமாக நடந்தார் சம்மாட்டியார். அப்போது அவர் முகத்தை லூசியன் பார்த்திருக்கக் கூடுமானால் உலகம் வரையறைகளற்ற காலம் தொடக்கம் பெற்ற பயங்கரங்களின் தொகுப்புப் பின்னிக் கிடப்பதைக் கண்டிருப்பான்.

நெட்டை மரமாக நின்றான் லூசியன். `விடிந்தால் நாளைக்கு' என்று சம்மாட்டியார் தான் பெற்ற முன் பணத்திற்குக் கீறியிருக்கும் காலக் கோட்டை எண்ண அவனுக்குச் சிரிப்பாய் இருந்தது. இப்போது மணி மூன்று இருக்கலாம். பார்க்கப் போனால் இப்போது கூட விடிந்த மாதிரித்தானே. நாளை என்பது ஆரம்பித்து விட்டதே என்று கலங்கினான். `மரியாள் ஒரு மாதிரிப் பழைய வடுக்கள் ஆறி இருந்த இடங்களில் மீண்டும் புண்ணை உண்டாக்கி அனலையும் வார்த்து விட்டாள் போலத் தான் பட்டது. அவர் தனக்கு ஆற்றியவற்றை எண்ணினான். மனம் மாறி நல்லபடி வாழ்ந்த கோலத்தையும் எண்ணினான். இப்போதோ மீண்டும் சீண்டி விட்டாயிற்று என்ன நடக்குமோ? அவனுக்கு ஒன்றும் ஓடவில்லை.

பாவம் லூசியன்! சம்மாட்டியார் மனம் மாறவேயில்லை. பழைய சம்பவங்கள், ஏமாற்றங்கள் அவருக்கு கொடுத்துக் கொண்டிருந்த வெறி இன்றைக்கும் - மந்தாரைச் சூழ்நிலையில் ஒரு பலியை உண்டாக்கி

ஒன்றை ஏங்கப் பண்ண வேண்டுமென்றே வந்திருந்தார் தன்னிடம் என்பதை அவன் உணர நியாயமில்லை. அவன் நல்லவன்.

வேகமாக நடந்து கொண்டிருந்தார் சம்மாட்டியார். வேகமாக அவர் நடந்தபோது புறவீதியிலே நனைந்து கிடந்த சாதாளைகள் சதக் என்று நசிந்தன 'இன்றைக்கும் தோல்வி. எல்லாம் மரியாள் தான் காரணம்' என்று கருதினார். அவரது சிந்தனையின் மையமாகவும் நடுவேயும் மரியாள் நின்றாடினாள்.

வானம் சிணுங்கத் தொடங்கியிருந்தது. இப்போது பலக்கவும் தொடங்கியது. மீன் விற்கும் சந்தை மண்டபத்தடியில் போய் ஒதுங்கி நின்றார் சம்மாட்டியார்.

மின்னல் மின்னியது. ஆழமில்லாத கரைப் பகுதியிலே கூட இலைகள் எழும்பி வெகு தூரத்திற்கு உயர்ந்து மோதிச் சிதறுவது பட்டது. வீசிய மின்னலில் வெண் நுரைகள் குமிழிவிட்டுச் சுழல்வதை அவர் கண்டார்.

அந்த வெண் நுரைகள் மரியாள் அவர் அகத்தே நடத்திக் கொண்டிருந்த வெறியாட்டத்திற்கு இன்னும் வலிமையைக் கொடுத்தன. இன்றைக்கு எப்படியும் பழிவாங்கிட வேண்டும் என்று கருதும் மரியாளை, ஒரு காலத்திலே நெஞ்சின் மையமாகக் கொண்டு அவர் சுற்றிப் படரவிட்டிருந்த இன்பக் கற்பனைகளை அந்த வெண்நுரைக் குவியல் தட்டிவிட்டது. 'நல்ல கொழுத்த நீண்ட கயல்மீன் வெண் நுரைக் குவியல்களிலே சுற்றிச் சுழன்றாடும் கண்கள் மரியாளுக்கு'' என்று அவர் எண்ணுவார். இன்றைக்குப் புறத்தே பரவிவரும் கடும் குளிரைப் போலத்தான் அவள் தண்மையானவள். தெளிந்த நல்ல நல்லெண்ணையை உடம்பு பூராவும் பூசினாற் போன்ற மினுமினுப்போடு - சீ-நாய் அவள்-அதற்குமேல் அவர் எண்ணவில்லை. இன்பமான எண்ணங்களை நசுக்கி அவருக்கு அவள் மேல் அந்த எண்ணங்கள் இன்னும் பலிவாங்கித் துடிக்கப் பண்ணி விடவேண்டுமென்ற வெறியைத் தான் கிளப்பின.

''பார்க்கப் போனால் என்னைப் பற்றிப் படரவேண்டிய கொடி - எல்லாம் அப்பன் செய்த வினை'' என்று கலங்கினார் சம்மாட்டி. லூசியனுக்கு வீட்டில் எப்பொழுது இடம் கொடுத்தாரோ அன்றைக்கு தன் வாழ்க்கை அஸ்தமித்து விட்டது மாதிரித்தான். இன்றைக்கு நாவாந்துறையின் புறவீதியில் பெரிதாய் அமைந்து கிடந்த அந்த மீன் சந்தை மண்டபத்தில் ஒதுங்கியிருந்த போது அவருக்குப் பட்டது - எல்லாம் மாறி லூசியன் இப்போது அவர் சிந்தையில் வந்து மிதந்தான்.

இன்றைக்கு அவன் தொழிலுக்குச் சம்மதித்துக் கிளம்பியிருந்தால், எப்படியும் அவன் மீண்டிருக்க மாட்டான். மரியாள் விதவையாக விம்முவாளே என்று எண்ணினார். இன்றைக்கும் மரியாள் எவ்வளவு கேவலமாகப் பேசினாள். அன்றைய சம்பவங்கள் நினைவிற்கு வந்தன.

உற்றம் சுற்றம் என்கிற பந்தங்கள் அற்று ஆழமான கடலில் சுதந்திரமாய் வாழும் திமிங்கிலம் போன்றவன் லூசியன். எப்படியோ அவன் திறமையைக்

கண்டு இன்றைய சம்மாட்டியார் அவனைத் தன் வீட்டில் ஏற்று மகனைப் போலத்தான் பார்த்தார். புதிய செதிகளோடு அவன் நன்றாக வளர்ந்தும் விட்டான்.

அப்போது தான் இன்றைய சம்மாட்டியார் வெறிக்கும் துன்பத்திற்கும் காரணமான காட்சியைக் கண்டார். 'நல்ல பழம் தனக்கே சொந்தம்' என்று அக்கறையற்றுக் கிடந்த அவர் மனதிலே 'உனக்கில்லை. அநாதையான உன் மாமன் மகள் உன் வீட்டில் வளர்ந்தால் உனக்குச் சொந்தமாகிவிடுமா-அது வலிமையான இன்னொரு அநாதையை அணைத்துக் கொண்டு விட்டது', என்பதை அவருக்கு உணர்த்தியது.

வெளியே மழை சோனாவாரியாகக் கொட்டிக் கொண்டிருந்தது. இடையே மழையை முறித்து 'ஊ' என்று கடும் காற்று வீசியது. அவரது உடம்பு நடுங்கியது. புறத்தே பரவியிருந்த வலிமையான குளிர்தான் அந்த வலிய உடம்பை நடுங்கப்பண்ணியதா? இல்லை. அந்தக் கொடிய சம்பவந்தான் அதற்குக் காரணம். அழகான சிப்பி ஒன்றைப் பார்த்து வியந்து கொண்டு அதை மரியாளுக்கும் காட்டி அனுபவிக்க வேண்டுமென்ற வேகத்தோடு ஓடிய சம்மாட்டியாரின் சிந்தனையைப் பிளப்பது மாதிரிக் குரல் கேட்டது.

``லூசியா உன் கயிற்றில் தொங்கும் யேசுநாதர் படம் பதித்த வெண்கலத் தகட்டை நீக்கி என்ரை படத்தைப் பதித்துப் போடுகிறாயா?''

யேசுநாதரை ஆயிரம் தடவை மன்னிப்புக் கேட்டுக் கொண்டே அந்தக் கேள்வியைக் கேட்டாள் மரியாள்.

``என்ன மரியாளே என்னம்மா வார்த்தை. நான் பட்ட கஷ்ட நஷ்டங்களுக்கு இனிமேல் இல்லை என்கிற விடிவளித்து - உன்னையும் என்னுடையவளாக்கப் போகிற யேசுநாதர் படம் பதித்த தகட்டையா நீக்கச் சொன்னாய்'' லூசியன் பதில் மரியாளுக்கு அழுகையை வெடிக்கப் பண்ணியது. கேட்போம். கட்டாயம் 'ஓம் இதோ' என்று கழற்றி வீசுவார். அப்போது நாம் அதைத் தடுத்துவிட்டுக் கொண்டு சிரிக்க வேண்டுமென்று எண்ணிக் கேட்டவளுக்கு இது வேதனையாகவும் பலத்த அடியாகவும் இருந்ததால் அவள் விம்மி அழுதாள்.

``லூசியா இவ்வளவுதானா உனது அன்பு. பிரிய மெல்லாம் யேசுநாதர் மேற்தான், இல்லையா?''

லூசியன் பொறுக்கமாட்டாதவனாய் `டக்'கென்று மரியாளை அணைத்துக் கொள்கிறான்.

-இவ்வளவும் அவருக்குப் போதுமென்றாகிவிட்டது. அதற்குப் பிறகு லூசியனை அழித்துவிட எத்தனையோ சந்தர்ப்பங்களை அவர் எதிர்பார்த்தார், இன்றைக்கு நடந்தது போலத்தான் அவையும் போய்விட்டன. அவர் கடைசியாகச் செய்த சூழ்ச்சி அவர்களை இறுக்கமாகப் பிணைத்துவிட்டது.

வழக்கமாகப் போகிற தூரத்திற்குக் கூட லூசியனும் சம்மாட்டியாரும் வத்தையில் போய்விட்டார்கள். இறங்கி வலையை ஏற்றுகிற போது முரல்

மீன் ஒன்று பாய்ந்து லூசியனை கிழிக்கிறது. கருங்குருதி பீறிட்டுப் பாய்கிறது. எட்டி ஒரு மாதிரி லூசியனை அமுக்கிய பின்னர் சம்மாட்டியார் வேகமாக வத்தையைத் திருப்பிக் கொண்டு வந்து விட்டார்.

எப்படியோ லூசியனை வேறு வத்தைக்காரர்கள் கரை சேர்க்கிறார்கள். லூசியன் ஆஸ்பத்திரியில் கிடக்கிறான். இரகசியமாக மரியாள் போய்ப் பார்த்து விட்டு வருகிறாள். திரும்பி வருகிறபோது அடக்க முடியாத ஆத்திரத்தோடு சம்மாட்டியார் கேட்டார். ``உனக்கென்னடி அந்த நாயிடம் இவ்வளவு பாசம்?'' அடக்க முடியாத ஆத்திரத்துடன் ``தூ'' நாயே - மனிதன் எல்லாம் நாயாகப் போகிறானாம். நாய்களெல்லாம் மனிதனாகப் போகுதுகளோ'' - லூசியன் கூறிய சம்பவத்தை நினைவிற் கொண்டு கத்தினாள். எப்படியோ சம்மாட்டியார் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டார். எப்படியும் இவளது பாசம் கொண்டவனைப் பிரித்து விட்டு - இவளைத் துடிக்கத் துடிக்கப் பார்க்கவேண்டுமென்ற அவரது எண்ணம் அன்றைக்கு வலிமை பெற்றது.

இந்தப் பதிலை இன்றைக்கு அந்த மண்டபத்தடியே இருந்து கொண்டு எண்ணுகிறபோது பெரும் வெறியாய் அந்த உணர்வு அவருக்கு நிறைந்தது. காலில் ஏறி ஊர்ந்த ஒன்றைப் பற்றி நசுக்கியபடியே சம்மாட்டியார் சிந்தித்தார்.

ஆஸ்பத்திரியில் இருந்து வந்த லூசியனை அவர் சந்தித்து மன்றாட்டமாக மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். அந்த நடிப்பிலே அவரது மனம் முரல் மீன் போல எவ்வளவு இளகியதாகவும் வளைவு கொண்டதாகவும் காட்டிக் கொண்டது. லூசியனும் நம்பினான். திருமணமும் செய்து வைத்தார். அந்தக் காரியங்களை ஆற்றுகிறபோது சம்மாட்டியாரின் இருதயத்தை யாரேனும் பிளந்து பார்த்திருக்கக் கூடுமானால், 'மரியாள் மணம் செய்து கொண்ட பிறகு கணவன் லூசியனைக் கொலை செய்து விட்டுக் கண்ணீரும் கம்பலையுமாக மரியாளைப் பார்க்கவேண்டும். மரியாள் படுகிற வேதனையைக் கண்டு கைகொட்டி நகைக்க வேண்டும்' என்ற வெறி கிடந்தது என்பதைக் கண்டிருப்பார்கள்.

புறவீதிக்கு அவர்கள் குடிவந்து விட்டார்கள். புதுக்குடித்தனம் ஆரம்பித்தும் இரண்டொரு மாதங்களாகிவிட்டது. தாம் நடத்திக் கொண்டிருந்த விடலைத் துறையிலே லூசியனுக்கு நூற்றைம்பது ரூபா முற்பணம் கொடுத்து அமர்த்திக் கொண்டார். சந்தர்ப்பங்கள் இன்னும் வரவில்லை. இன்றைக்கு வந்த சந்தர்ப்பங்களைக் கூட, அந்த மரியாள் தடுத்துவிட்டாளே! அவருக்கு மூளை கலங்கியது.

ஏமாற்றங்களின் கொதிப்பு, அவரை வெறியனாக்கியது. வெளியே சோனாவாரியாக மழை பெய்து கொண்டிருந்தது. இடையே முறித்து முறித்துக் காற்று ஓலமிட்டது. இடையே நின்று நின்று பெய்த மழையின் ஓலம். இவற்றிற்கெல்லாம் மேலாய் அவரது நெஞ்சு ஓலமிட்டது! 'சம்மாட்டியாரே சந்தர்ப்பங்கள் நீர் எதிர்பார்க்கிற மாதிரி வராது. நீரே உருவாக்கிக் கொண்டும் பயனில்லை. துணிந்து போம்-பலமான கைகள் இருக்கிறதே போதாதா?'

வெறி கொண்டு ஓடினார் சம்மாட்டியார். இடையே வீசுகிற பல

மானகாற்று அவரை எற்றியது. மரங்களையும் கம்பங்களையும் பிடித்துக் கொண்டு மண் குடிசையையை நோக்கி ஓடினார் சம்மாட்டியார் பயங்கரமாக இடி இடித்தது! மின்னல் மின்னியது!

மண்குடிசையை அண்மித்து விட்டார். எட்டிப் பார்த்தார். அவர் செவியில் லூசியன் கத்துவது கேட்டது.

''மரியாள் சம்மாட்டியார் கொடியவராக இருக்கலாம். நீயும் நானும் அவரது உப்பைத் தின்று வளர்ந்தவர்கள். வேகமாக எற்றி வீசுகிற இந்தப் புயற் காற்றிலே அவரது வத்தைகள் சின்னாபின்னாமாகிப் போவதை நான் அனுமதிக்க முடியாது. போதாதற்கு நாளைக்கு விரைவாகக் கிளம்ப வேண்டுமென்பதற்காக உலர்த்தி வள்ளத்திலேயே போட்டிருந்த மீன் வலைகளும் குச்சிகளும் அழிந்து போவதை நான் அனுமதிக்க முடியாது யேசு என்னை மன்னிக்கவே மாட்டார்!''

வேகமாகத் தென்னை ஒன்று சரிந்து விழுவது மூவருக்கும் கேட்டது! லூசியன் பாய்ந்து ஓடினான். 'லூசியா கவனம்' என்று மரியாள் கத்தினாள். லூசியன் கேட்டதற்கு அடையாளமாய்க் கரங்களை ஆட்டினான். சம்மாட்டியார் ஒதுங்கிக் கொண்டார்.

இப்போது சம்மாட்டியாருக்குப் பழைய வெறியில்லை. லூசியன் வார்த்தைகள் அவரைப் புற உலகத்திற்கு இழுத்திருந்தது. லூசியன் வார்த்தைகள் அப்போதுதான் அவருக்குப் புரிந்தது. 'தமது வத்தைகள்' என்ற எண்ணம் அவரைப்புற உலகத்திற்கு இன்னும் இழுத்தது. லூசியனை எண்ணினார். அவர் மண்டபத்தில் இருக்கும் யேசுநாதர் போல அவன் படிப்படியாக அவரது நெஞ்சத்திலே உயர்ந்து நிறைந்தான்.

வத்தைகள் கட்டப்பட்டிருந்த இடத்தை நோக்கி ஓடினார் சம்மாட்டியார். அவரைச் சுற்றிச் சுழன்று எற்றி எற்றி வீசியது கோரக் காற்று. தள்ளாடித் தள்ளாடி ஓடினார். எப்படியோ மண்டபத்தை அடைந்து விட்டார். பளீரென்று பிரகாசமாக வீசுகிற மின்னலிலே கரிய குரங்கொன்று நெளிந்தும் வளைந்தும் நங்கூரத்தில் வத்தைகள் பிணைக்கப்பட்ட கயிற்றுடன் போராடுவது மாதிரி இருந்தது.

வேகமாய், இன்னும் வேகமாய் காற்று வீசியது. நாலாபுறமிருந்தும் ஒரே குவியலாய்க் கொண்டு வந்த நீர் எம்பி மேலே தூக்கி எற்றி எறிந்து, இடி இடித்தது. பிரளய காலம் போல எங்கும் நிலை குலைந்தது! பளீரென்று மின்னல் ஒன்று பாய்ந்தது. 'மரியாள்' என்ற வெறிக் கத்தல் பிறந்தது.

சம்மாட்டியாருக்கு உடம்பு வேகமாக நடுங்கியது. அவர் விக்கி விக்கி அழுதார். ''லூசியா! யேசு உன்னை அமரனாக்கி விட்டார். என்னை மன்னிக்கவே மாட்டார்''. என்று வெறி பிடித்துக் கத்தினார். பல ஆண்டுகளாய் நெஞ்சின் உள்ளே புரையோடிக் கிடந்த கொடுமைகள் எல்லாம் கரைந்து நீராய் அவர் கண்களிலிருந்தும் ஓடியது.

*–கலைச் செல்வி*

*ஜனவரி 1964*

# சந்திரிகை

மேலே சற்றே ஏறிப் பளிச்சென்று பிரகாசிக்கும் வெண் சங்கின் முதுகுப் புறம் போல், நெற்றி - அங்கு மிங்குமாய் அலைப்புண்டு கிடந்தது. இளம் கூந்தல். அழகான உருண்ட வெண் முத்துக்களை இரு பக்கமும் பதிய வைத்தாற் போல அந்தச் சிறிய மூக்கின் இரு பக்கமும் நாசித் துவாரச் சதைப் பிடிப்பு எடுப்பாக இருந்தது. இளமையின் முழு ஈர்ப்பும் இதமாகச் சொரிந்து கொண்டு...........

ருதுவாகி இன்னும் இரண்டு வருடம் ஆகவில்லை. அதற்குள் மொழு மொழுவென்று எப்படித்தான் வளர்ந்து நிற்கிறாள் இந்தப் பெண்.

கதிரையை இழுத்துப் போட்டுக் கொண்டே உல்லாசமாக வார்த்தையாட ஆரம்பித்தேன் நான். எனக்கு முன்னால் இருந்த பிரம்பு நாற்காலியில் முன் பக்கத்தில் விசிறி மாதிரி அகன்று கிடந்த சட்டையின் முகப்புக்களை ஒதுக்கிவிட்டுக் கொண்டே என்னைப் பார்த்தாள்.

அந்தப் பார்வையில் ஏதோ காலம் காலமாகப் பெண் இனம் ஏங்கித் தவிக்கிற - ஒரு ஏக்கத்தின் மெல்லிய கோடுகள் பதிந்திருந்தன. நான் கொஞ்சம் திடுக்கிட்டேன்.

''பார்த்தது போதும். பதில் சொல்ல மாட்டாயா?''

மீண்டும் பதில் இல்லை. மௌனம். தன் கால் விரல்களைப் பார்ப்பதும் - சாயம் பூசிய தன் வெண் விரலின் நகங்களைப் பார்ப்பதும் - விட்டத்தைப் பார்ப்பதும், சாயம் பூசிய தன் வெண் விரலின் நகங்களை, பார்க்காத அதிசயத்தைப் பார்ப்பது போல உற்று உற்றுப்பார்ப்பதுமாக அவள் நேரம் போக்கினாள். இருந்தாற்போலிருந்து அந்த அந்த இடங்களில் பதிந்த பார்வை என்னை நோக்கிப் பதியும். அந்தப் பார்வையில் எதையோ

ஏங்கித் தவித்து அந்தத் தவிப்பை விடுகிறாற் போல அந்த அழகிய இமைகள் [illegible] [illegible] வென்று நடுங்கும். இமை ஓரம் நிலவு சொரியும்.

அந்தப் பார்வை ஏதோ இனம் தெரியாத ஒரு இன்பத்தினை என் நெஞ்சத்தே கிளறி அவை பல்கிப் பெருகி ஊர்ந்து மயிர்க் கால்தோறும் சில்லிட்டு நிற்கும். நெஞ்சம் எகிறிக் குதித்து விடுகிறாற் போலப் பட படவென்று துடிக்கும். அவற்றிடையே ஓர் அதிர்ச்சி.

கால் முதல் தலை வரை அவளை நான் பார்த்தேன். மொழு மொழுவென்று செதுக்கப்பட்டது போல அவள் இருந்தாலும் அவளை எனக்குத் தெரியும். அதிகம் கூடினாற் பதினான்கு வயதிருக்கும். போன தவணை வீட்டிற்கு வந்திருந்தபோது ''சந்திரா - 'அப்பா', எழுத்துக்கூட்டு வியோ'' என்று நான் பரிகாசம் பண்ணியது எனக்கு ஞாபகம் இருக்கிறது. அவ்வளவில் பனித்துளி போல அவள் இமை ஓரத்திலே நீர்த் துளிகள் பிறந்தன. ''ஏழாவது வயதிலே தான் நான் பள்ளிக்கூடம் போனேன்'' என்று அழுது அழுது அப்பொழுது சொன்னாள்.

ஆனாலும் கூடப் படிப்பு என்ற பிசாசு அவள் வரையில் தொற்றிக் கொண்டு - அவள் எடுக்கிற 'புள்ளிகளைக்' கண்டு பயந்து போய், எப்பொழுதோ ஓடிவிட்டது என்ற சங்கதியும் எனக்குத் தெரியும். என்னத்தைத்தான் உலகம் இவளிடம் சேர்ப்பித்திருக்கிறது. கொழும்பு நகரத்திலே, ஒட்டாமல் - இருதயம் கலவாமல் வாழ்ந்து பழகுகிற மனித மனங்கள் இந்தச் சிறுமியிடம் - இந்தக் குழந்தையிடம் என்ன ஞானத்தைச் சேர்ப்பித்திருக்க முடியும். 7-ம் கிளாஸ் சரித்திரப் புத்தகம் போதிக்கிற அலெக்ஸ்சாந்தரும் - சிந்து நதி நாகரிகமும் இவளிடம் - இந்தக் குழந்தையிடம் என்னத்தை முகிழ்வித்திருக்க முடியும்...... 'சந்திரா உன் பார்வைக்கு - உன் வளர்ச்சிக்கு - உன் இதயத்துக்கு ஒத்துக் கொள்ளாத குழந்தை நீ', என்று நான் எண்ணமிட்டேன்.

''என்ன தான் யோசிக்கீறீர்கள்?'' இப்பொழுது தான் வாயைத் திறந்தாள். கேட்டதற்குப் பதில் இல்லை. அவளே கேள்வி கேட்கிறாள். கேள்வியா அது? என் சிந்தனையின் மையமாய் சுழன்றடித்த கருப்பொருளையே தகர்த்தெறியும் சூழ்ச்சி மாதிரியாகவல்லவா அந்தக் கேள்வி இருக்கிறது.

''உங்களைப் பற்றித்தான், மாமாவின் பெண்ணானாலும் - தொட்டும், சீண்டியும் விளையாடி வேடிக்கை பண்ணக்கூடாது. 'அவள் வளர்ந்தவள்' என்று இயற்கை அவளுக்குக் கொடுத்திருந்த - நான் நம்பாத பெரிய மனுஷி தோரணைக்கு அஞ்சி மதிப்புக் கொடுக்கிற மாதிரி 'ங்கள்' என்று உஷாராகச் சொன்னேன்.

ஏமாற்றமும் - இன்னும் என்ன வெல்லாமோ - தெரியப் பார்த்தாள். அந்தப் பார்வையை அப்படியே நீக்கிவிட வேண்டும் போலவும் - அந்தப் பார்வையிலே கனத்துக் குமைந்து கொண்டிருந்த வருத்தத்தைப் போக்கடித்துவிட வேண்டும் போலவும் என் உள்ளே - அந்தரங்கமானதோர் எண்ணம் உருவாகி நிறைந்தது........ ஆனால், 'அவள் குழந்தை' என்று

மனம் ஆசைக்கு அணை போட்டது.

அவள் குழந்தை என்ற எண்ணம் கச்சிதமாக - கொதித்துக் கொண்டிருக்கிற ஈயநீரை அச்சில் வார்த்துவிட்டதும் இறுகிப்போகிறமாதிரி - அந்த எண்ணமும் என்னகத்தே இறுகியிருந்தது. அது முந்திக் கொண்டு வந்தது.

''நீ ஒரு குழந்தை என்று எண்ணிக் கொண்டிருந்தேன்''. என்றேன்.

அவள் கழுத்துத் தொங்கி விட்டது. நீண்ட நேரத்திற்குப் பிறகு அவள் நிமிர்ந்த போது அந்த இமை ஓரம் மெல்லக் கசிந்து ஈரம் பரவி நிற்பதாகப் பட்டது. முகத்திலே பழைய ஒளியில்லை. தூக்க நோயால் செத்த மொழியின் பூ கறுத்துச் சூம்பிப் போவதைப் போல அவள் வதனமும் கூம்பிப் போயிருந்தது.

மீண்டும் பழைய நிலை. ஆனால் முன்னர் போல் இருந்தாற் போலிருந்து பார்க்கிற பார்வையில்லை. எனக்கு என்னவோ போல இருந்தது. வந்த இடத்தில் எதற்காக இப்படிக் காரியம் பண்ணிக் கொள்ளவேண்டும் - கொஞ்சம் மனதை ரம்மியமடையப் பண்ணலாமென்று 'சந்திரா' - என்றேன்.

நிமிர்ந்தாள். பழைய ஒளி இல்லை. என்றாலும் வேணுடுமென்றே வருவித்துக் கொண்ட புன்னகை - நல்ல கரிய இருட்டில் சிறிய ரோட்ஸ் லையிட்டைப் பாய்ச்சினால் தோன்றும் அமைப்பு மாதிரி - அந்த வதனத்திற்கு - அதில் அப்பிக் கிடந்த சோகத்திற்குக் கொஞ்சம் விடிவு கொடுத்தது. உன்னிப்பாய்க் கொஞ்ச நேரம் நோக்கிவிட்டு ''விளாம் பழம் பறித்துத் தருகிறீர்களா?'' என்றாள். எப்படியும் தன்னை - அல்லது என்னை விலக்கிவிட்டு முற்றாக ஏதோ சிந்திக்க விரும்புகிறவள் போல அந்த வேண்டுகோள் இருந்தது. விளாங்காயில் பிரியப் பட்டுக் கேட்கிற இருதயத்தின் சுவை அந்தக் குரலில் இல்லை.

'மாட்டேன்' என்று எப்படிச் சொல்வது? அடுக்களையில் அம்மா சமைத்துக் கொண்டிருக்கிறாள். கொழும்பில் இருந்து விடுமுறைக்காக இன்றைக்கு வந்தவர்கள், பம்பரமாக ஓடுகிற பெரிய நகரத்திலே வேண்டாத மனிதர்களோடு கலந்து பழகுகிறாற் போல காட்டி மோசம் செய்து விட்ட நமது அந்தராத்மாவுக்கு விமோசனமளிக்க, வந்தவுடனேயே மற்றவர்கள், தெரிந்தவர்கள் வீட்டிற்கு நழுவி விட்டார்கள். இவள் மட்டும் போகவில்லை. இன்றைக்குப் பலமான விருந்துதான். வயிற்றைக் கொஞ்சம் காலியாக வைத்துக் கொண்டு கம்மென்று மூக்கைத் துளைக்கிற இந்த உணவைச் சாப்பிடுவதை விட்டு........

''குழந்தைக்கு எதற்கு விளாங்காய்'' என்று தயங்குகிறாற்போல என்ன சிந்தனையோ! ஒரு சொல் சொல்வதற்குள்ளே ஒரு மணி நேரம் சிந்தனை. எப்படித்தான் உங்களுக்குக் கடவுள் இருதயங்களைக் கொடுத்திருக்கிறாரோ?''

'குழந்தை' என்ற பதத்தில் அவள் ஒரு அழுத்தம் கொடுத்தாள்.

அந்த வதனத்தில் மேலும் மேலும் சுமையை ஏற்றிவிட நான்

விரும்பவில்லை.

டக்கென்று எழுந்தேன். கிணற்றடியில் குவிந்து கிடந்த கற்களில் கொஞ்சம் பொறுக்கிக் கொண்டே வளவிற்குப் பின்புறம் நகர்ந்தேன். அது வீட்டின் பின்புறம். பின்புறமானாலும் வீட்டின் பின் சுவரை ஒட்டி நீண்டு கிடந்தது காணி. ஏறக்குறையக் கொய்யாமரங்களும் - மாமரமும் - விளாமரமுமாக ஒரு குறுங்காடு போலக் கிடந்தது. வீட்டில் அம்மா தான் தனித்திருக்கிறாள். தானே நகர்ந்து நடமாடுவது பரமபிரயத்தனம் என்று ஓலம் வைக்கிற ஜடம். இந்த நெடிய பிரதேசத்தைத் துப்பரவு பண்ணப் பொழுதேது. மாரிகாலத்தில் குவியல் குவியலாக வந்து சேருகிற ஈசலைப் போல விடுமுறைகள் வந்து சேருகிறபோது மட்டும் எட்டிப் பார்க்கிற சலுகைதான் எனக்கு. இந்தமட்டில் ஒய்யாரமாக உட்காராமல் அரிவாளும் கத்தியும் கொண்டு இந்த வேலையை யாரால் ஆற்ற முடியும்.

திரும்பிப் பார்த்தேன், அவள் வரவில்லை. கொஞ்சம் எனக்கு ஏமாற்றமாகத் தான் இருந்தது. விளாங்காயைப் பறித்துக் கொண்டு கையில் கொண்டு வந்து கொடுக்கச் சொல்லுகிறாளா? கல்லை விசி விசி எறிந்து விளாங்காயைக் கொண்டு வந்து நீட்டுகிறபோது நான் பட்ட சிரமம் தெரியாமல் நாவைச் சுவைக்கப் பண்ணப் பார்க்கிறாளா? இவளா குழந்தை? என்று எண்ணினேன்.

எப்படியோ அவளில் எனக்கு அன்பு. அந்த அன்பு தெய்வ பக்தனின் புனிதமான அன்பைப் போல என்று என்னால் தாளம் போட்டுக் கொள்ள முடியவில்லை. அந்த அன்பில் ஏதோ ஒரு எதிர்பார்ப்பு - ஐக்கியப் படத் துடிக்கிற ஒரு இருதயத்தின் சீரான உள் ஒலி, இருந்தது. வஞ்சகத்தின் கலப்போ, குடிபோதைக்காரனுக்கு எழுகிற விசித்திரமான அன்பின் சாயலோ அதில் இல்லை. அவள் வளர வேண்டும். அவள் குழந்தை என்ற எண்ணம்தான் அப்போதைக்கு என் மனதில் இருந்தது.

அதனால் சிரமத்தைப் பாராது நகர்ந்தேன். உச்சிப் பொழுது நாலா புறமும் நீண்டு படர்ந்திருந்த மரங்களிடையே ஊடுருவி வெய்யில் பொட்டுப் பொட்டாய்த் தெரியும், கொதிக்கிற வெய்யில் இல்லை. மார்கழி மாதப் பகுதி. பெருவாரியான பழங்கள் ஒழிந்து போயிருந்தன. விளாமரமும் இலைகளை உதிர்த்துவிட்டு வெறும் தடிகளோடு தளிர்விடுகிற புதிய இலைகளோடும் நின்றிருந்தது. இடைக்கிடையே தமிழனின் பழம்பெருமையைப் பறைசாற்ற நான்கு ஐந்து காப்பியங்கள் இருப்பது போல வற்றிப்போன அந்த விளாமரத்திலும் அதன் பழம் பெருமையைப் பீற்ற நான்கு ஐந்து விளாங்காய்கள்!

வேகமாகப் பலம் கொண்ட மட்டும் கற்களை வீசினேன். இளமைக் காலத்தில் பொடியன்களோடு சேர்ந்துக் கொண்டு அணிலொன்றுக்குக் குறிவைத்த போது அது பொத் என்று செத்து விழுந்தது. அத்துடன் எறிபத்த நாயனார் என்ற பட்டமும் எனக்கு ஒட்டிக் கொண்டது. அந்தப் பழைய எறிபத்த நாயனாராகி நானே வந்தாற் கூட இந்த விளாங்காயை விழுத்தி விடலாம் என்ற நம்பிக்கை எனக்கில்லை.

அந்த முகத்திலே கரிக்கோடு இழுத்தாற் போலச் சோகம் வந்து கவிவதை என்னால்தாள முடியவில்லை. இன்னும் இன்னும் முயன்று பார்த்தேன் - கற்கள் விளாங் கொம்பிலே கூடப் பிடிக்கவில்லை.

'ஐயோ கை நிரம்ப நோவுமே. இனி எறியவேண்டாம். விளாங்காயே வேண்டாம்' இப்படி அவள் கூறமாட்டாளா?. என்று மனம் ஏங்கியது. ஏதோ ஏங்கித் தவியாய்த் தவித்தது. எதையோ இல்லாத அன்பை எல்லாமே வெளிக்கிடுத்துகிறாற் போலப் பார்த்தாயே - அந்தப் பார்வை அதைவிட எவ்வளவோ, சொல்லிற்றே....... எண்ணத்தின் நடுவேயே எனக்குச் சிரிப்பு வந்தது. அந்தப் பார்வையிலே நானே அப்படி ஒரு தன்மையை ஏற்றிக் கற்பனையை வளர்த்து விட்டேனோ?

சற்று முன்னால் குழந்தை என்று தான் கருதினேன். இப்போது மட்டும் - இந்தக் கால் மணிப்போதுக்கிடையில் அவள் மனம் குழந்தைத் தன்மையில் இருந்தும் நழுவிப் போய் நாலும் தெரிந்த, ஞானப் பெண்ணாகிக் கொள்ள முடியுமா? என் உள் மனதுகளிலே தவியாத் தவித்துக் கொண்டிருந்த இருதய ஒலியின் பிரதிபலிப்பை நானே கற்பனை பண்ணிக் கொண்டு ஏங்கிக் கொள்கிறேனோ?

சிந்தனையை வெட்டிவிட்டு மீண்டும் ஒரு கல்லை எடுத்தேன்.

கல கலவென்று சிரிப்புச் சத்தம் கேட்டது. நெஞ்சு திக்கென்றது. இது என்ன? என் உள்ளத்து உணர்ச்சிகளை உணர்ந்து கொண்டாற்போல இவள் சிரிக்கிறாளா, பன்னலைப் பார்த்தேன். அவள் - அவளே தான். பன்னலை ஒருக்களித்துச் சாத்தியிருந்த இரகசியம் இப்போதுதான் எனக்குப் புரிந்தது. அந்தச் சிரிப்பு - அந்த நேரத்திலே எனக்குப் பிடிக்கவில்லை. நான் பட்ட சிரமங்களை ரசித்துக் கொண்டு - பார்த்துக் கொண்டு - சை, இவளா குழந்தை!

வெறுப்பை அடக்கிவிட்டுக் கொண்டே கடைசி முயற்சியாய்க் கல்லைவீச முயன்றேன். 'நில்லுங்கள்' என்றாள். அவளையே பார்த்தேன். உதடுகள் பிரிவதே தெரியாமல் பிரிந்தன.

''என்னில் அன்பானால் நீங்கள் இந்த விளாங்காயை விழுத்துவீர்கள். இல்லை. எல்லாம் தெரிந்துவிடுகிறது.''

பரிதாபத்தோடு நான் அவளைப் பார்த்தேன்.

ஏதோ இனம் தெரியாத ஒரு தயக்கம் கூட என் நெஞ்சத்தில் ஏறியது. கல்லை வீசினேன். சுழன்று சுழன்று போய் விளாங்கொம்பொன்றில் பிடித்துப் 'பொத்' என்று ஒரு விளாங்கனி வீழ்ந்தது. நெஞ்சில் ஏதோ இனம் தெரியாத குதூகலம் நிறைந்து ததும்பி வழிந்தது.

நான் அந்த விளாங்கனியோடு பன்னலண்டை சென்றேன். அவள் முகத்தை என்னால் பார்க்க முடியவில்லை. அந்த முகத்திலே வார்த்தைக்குள் அடங்காத மகிழ்ச்சியின் பிடிப்புக்கள் கவிந்து கவிந்து என்ன மாதிரித்தான்

அவள் ஜொலித்தாள். அது அழகா - இல்லைத் தெய்வீகமான புனித நிறைவின் பிரதிபலிப்பா?

யன்னலுக்கிடையே அவள் கைகள் நீண்டன. அவள் கரத்தில் அதை வைத்தேன். என் விரல்களையும் சேர்த்துப் பிடித்துக் கொண்டாள். அவள் விரல்கள் நடுங்கின. இமையோரத்தே நீர் மல்கியது.

'சந்திரா - நீ ஒரு குழந்தை.......' என் இதயத்தில் ஊர்ந்து கொண்டிருந்த ஏதோ ஒன்றில் நான் கத்திவிட்டேன். நீட்டிய கரம் தளர்ந்தது. விளாங்கனி நிலத்தில் விழுந்து உருண்டது. அவள் போய்விட்டாள். அதை ஏற்க வரவேயில்லை.

சாப்பாட்டிற்கு இலையும் போட்டாயிற்று. அம்மாதான் பரிமாறினாள். அந்தத் தொய்ந்து போன உடலிலே அன்றைக்கென்று வேகமாகப் பாய்ந்து ஓடிய இரத்தம் அவளைப் பம்பரமாக ஆட்டிற்று. எல்லோரும் உட்கார்ந்துவிட்டார்கள். நானும் கையலம்பி உட்காரும் சமயம்.

வெளியே தபால்காரன் குரல் கேட்டது. மணி ஒன்று. இப்பொழுது தான் வருகிறானே? என்று சபித்துக் கொண்டே படலைக்குச் சென்றேன்.. அது தந்தி, ''அக்கா மத்தியானம் யாழ்தேவியில் வருகிறாளாம்''.

அம்மா துரிதப்படுத்தினாள். எனக்கு மனமேயில்லை. மணந்துகொண்டு பசியைக் கிளப்புகிற இந்தச் சாப்பாட்டை விட்டு - அம்மாவுக்கு எப்பவுமே அவசரம்தான் என்று திட்டிக்கொண்டே சாப்பிடாமலே கிளம்பினேன்.

நான் அக்காவோடும் குழந்தைகளோடும் வருகிறபோது மணி மூன்றுக்கு மேலாகிவிட்டது!

வந்ததும் வராததுமாய் தரையில் உட்கார்ந்தேன். அப்போதுதான் சந்திரா வந்தாள். தானும் இலையைப் போட்டு உட்கார்ந்தாள்.

''அப்போது சாப்பிடவில்லையா?''

''இல்லை''

''இலையில் உட்கார்ந்தாயே''

''உட்கார்ந்தேன். வாந்தி வருகிறதென்று எழுந்துவிட்டேன்''

''ஏன்''

''அப்பா சாப்பிடாமல் எங்கள் வீட்டில் அம்மா சாப்பிடுவதில்லை''

அவள் குழந்தையா? சந்திரா குழந்தையா?

ஈழநாடு

*09–02–1964*

# ஆத்மீகத் தேர்தல்

பொழுது இன்னும் புலரவில்லை. மெல்லிய இதமான இளம் கறுப்பையும் காலை வெய்யிலின் மனோகரமான பிரகாசத்தையும் கலந்து கண்ணுக் கெட்டிய தூரம் வரையும் வார்த்துவிட்டதாய் ஒரு அமைப்பு. நல்லூர்க் கந்தசுவாமி கோவிலின் காலைப் போதின் பூஜைக்கான ஆயத்த மணியின் நாதம் அந்தப் பேரமைதிப் பெரும் போதைக் கிழித்துக் கேட்கிறது. பக்கத்தே உள்ள பிள்ளையார் கோவிலில் எழுகிற மணி ஓசை கந்தன் கோவில் மணி ஓசைக்குத் தாளம் போடுவதாய் ஒரு அமைப்பு.

முன் விறாந்தையில் சிந்தனையில் கிடந்த கனகரெத்தினம் எழுந்தார். உருவமற்ற ஆயிரம் விதமான அறக்கோட்பாடுகளே ஒரு உருவமற்ற உருவமாய் எழுகிறமாதிரி இருந்தது. பின் கிணற்றடிக்குச் சென்று குளித்தார். தோய்த்துப் போட்ட ஈர வேஷ்டியை உடுத்திக் கொண்டு படையாக அப்பிய திருநீற்றுப் பூச்சுடன் 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்' என்ற தேவாரத்தை முணு முணுத்துக் கொண்டே வெளியே வந்தார். கோயிலை இவர் இரண்டெட்டில் அடைந்ததும் பூஜை தொடங்குகிறது. பூஜை செய்பவர் - கடமை தவறாத அன்புருவான குருக்கள். இவர் நெறி வழுவாத பக்தர். அவருக்கு அந்த மோகனச் சூழ்நிலையில் இவர். இவருக்கு அவர். இரண்டு பேருக்கும் பிள்ளையார். எவரும் விழாக்காலம் தவிர அப்படி வருவதுமில்லை.

தீபம் குருக்களின் கையில் ஏறிச் சுழலுகிறது. கனகரத்தினத்திற்குப் பக்தி எழவில்லை. கொஞ்ச நாளாய் அவருக்கு இப்படித்தான் இருக்கிறது. பயிற்றிய புலன்கள் கட்டுடைத்து என்ன என்னவோ எண்ணுகின்றன. பிள்ளையாரைக் கும்பிட்டுக் கொண்டிருக்கிறபோதே அவருக்கு ஒரு கற்பனை எழுகிறது.

'கனகரெத்தினத்திற்கு ஜே-கனகரெத்தினத்திற்கு ஜே' 'ஜே-ஜே' என்று மக்கள் உற்சாக மிகுதியால் கத்துகிறார்கள். வெள்ளம் போல் நிறைந்து நிற்கிற அந்தப் புனிதமான ஆத்மாக்களின் குரலை அவர் மௌனப் புன்னகையுடன் ஏற்கிறார். ஆயத்தங்கள் அவரை அறியாமல் நடந்து முடிகின்றன. நூற்றுக் கணக்கான கார்களும்- மலைகளும் தயாராயிருக்கின்றன. இவரைக் குண்டுக் கட்டாய்த் தூக்கி முன் திறந்த காரில் அமர்த்த முனைகிறார்கள். இவரது வெற்றி உற்சாகம் தேய்கிறது. உணர்ச்சி மிக்க மனிதர்களைக் கட்டுப்படுத்திக் கொண்டே அவர் சிரமப் பட்டு ஒரு உயர்ந்த இடத்தில் ஏறிக் கத்துகிறார். இது சாதாரண வெற்றியில்லை. ஆத்மீக வெற்றி. அதைக் கொண்டாட இந்த ஆரவாரம் வேண்டாம். ஆத்மாவால் அனுபவியுங்கள். கீதையைப் பற்றியும் விவேகானந்த - இராமகிருஷ்ணரைப் பற்றியும் பேச்சு நடக்கிறது. அவரைச் சுற்றி-அந்த இடத்தைச் சுற்றிப் புனித அலைகள் பரவுகின்றன.

குருக்கள் கையால் திருநீற்றையும் அர்ச்சனை இலையையும் மலரையும் வைத்தபோதுதான் அவருக்குத் தன் எண்ண ஓட்டம் அறுந்தது. மிகவும் வெட்கியவராய் வீட்டை அடைந்தார். பழையபடி 'ஈஸிச் செய' ரில் படுத்தார்.

''விஜயா - விஜயா'' என்று கூப்பிட்டார். உள்ளேயிருந்து குரல் எழவில்லை. 'தரித்திரம் பிடித்த கழுதை' என்று முணுமுணுத்தார். ஊரெல்லாம் மேலான தத்துவங்களை உணர்ந்து கொண்டு தம்மைச் சுற்றிக் கவிந்து, பொய்களையும் வஞ்சனைகளையும் துடைத்து விடத் துடிக்கிற போது நிற்கின்ற தம் மனைவி மட்டும் பேயிருளில் துயில்வதாய் அவருக்குப்பட்டது. நேற்றைய சம்பவமும் நினைவிற்கு வந்தது. மிக்க வெறுப்போடு அதை எண்ணினார்.

வெளியே காரியமாகப் போய்விட்டு இரண்டு மணிக்கு மேலாகத் தான் அவர் சென்றபோது அவர் மனைவி வரவில்லை. இலையைப் போட்டு நீர் தெளித்துக்கொண்டிருந்தபோது தான் அவள் வந்தாள். அமுதைப் படைத்துக் கொண்டிருந்தபோது அவள் கேட்டாள். ''எதற்காக மாரடிக்கிறீர்கள். நாயாக அவதிப்படுகிறீர்களே. உங்களுக்கு ஒரு வோட்டாவது கிடைக்குமா?''

ஏறக்குறைய இருபத்தி ஐந்து வருடமாய் தன் லாப நஷ்டம் சுக துக்கம் என்பவற்றில் பங்குகொண்டு நின்ற தம் மனைவியை மிக்க வெறுப்போடும் அருவருப்போடும் பார்த்தார். கவனமாகத் தாம் பழக்கிய பெருந்தவக் கோட்பாடுகளில் இவளுக்காக அவர் எவ்வளவற்றைத்தான் விட்டிருக்கிறார்? குளிர்மையான சுதந்தர நினைவுகளிலே தாம் உத்தியோகம் பார்த்த காலத்தில்-பிற இடங்களில் மலைநாடுகளில் பூமித்தாயின் சௌந்தர்யமான செந்தழிப்பில் கிறங்கி நின்று- கையும் கையும் மனமும் மனமும் கலந்து.... ஏன் தாம் பேணிவந்த பிரமச்சரியத்தையே அவளுக்காகத் துறந்தாரே? மனைவி என்பவள் வெறும் சதைப் பிண்டம் தானா? இரத்தம் இருக்கும் வரையும் ஓட்டும் மூட்டைப் பூச்சியா? ஆத்மாவையும் அதன்

அகப் புறப்பிரகாசங்களையும் அறிந்து கொள்ளும் அளவிற்கு உயர முடியாத ஜடமா? -ஏனோ கஸ்தூரிபாயை எண்ணினார். கண் கலங்கியது. சாப்பிடாமலே எழுந்துவிட்டார்.

'நடப்பதைக் கவனிப்போம்' என்று முணுமுணுத்துக்கொண்டே கட்டில் அறையை அடைந்து தாமாகத் தேநீர் தயாரித்துக் கொண்டு ஈஸிச் சேயரில் வந்து படுத்தார்.

***

கனகரெத்தினம் ஒரு மாஜி ரிடையோர்ட். இரண்டாவது உலக மகாயுத்தத்தில் பாதுகாப்புப் பகுதியில் பெரும் பொறுப்பான பதவிகளை வகித்த பிறகு காலஞ்சென்ற பிரதமர் ஆரம்பித்த குடியேற்றத்திட்டம் சம்பந்தமான பகுதியில் பெரும் பொறுப்பை வகித்தவர். யப்பான்காரர்கள் கொழும்பில் குண்டுபோட்ட காலத்தில் மரணம் தன் கூரிய கொடும் கரங்களால் எட்டிப் பிடித்துத் தழுவிக் கொள்ள மோகவெறிகொண்டு திரிந்தபோது அவற்றிற்கு அஞ்சாமல் நீச்சல் போட்டவர். பாதுகாப்பு இலாகாப் பகுதியை விட்டு உணவு விவசாயப் பகுதிக்கு மாற்றலாகிறபோது தம் நாட்குறிப்புக் கொப்பியில் அவர் எழுதினார் - 'கீதை போதிக்கும் மரண பயமற்ற வலிமை மிக்க ஆத்மாவை நான் இங்கே இந்தப் பதவியில் இந்தச் சூழ்நிலையில் பெற்றேன். பதவி மாறுகிற போது மீண்டும் எனக்கு மரணபயம் வருமா? சாத்தியமில்லை. நான் வலிமை பெற்று விட்டேன்".

கோகேலது கண்களைப் போல அவரது கண்கள் இருக்கும். பெரியமுகம். மெய்ஞான அறிவின் விளக்கமாய் முகமெங்கும் பிரகாசம். சதுரமான உடலமைப்பு. நல்ல நீண்ட உருவம். வயது அறுபது ஆகிவிட்டது. யாரும் அப்படிச் சொல்லிவிட முடியாது. அதற்குக் காரணமும் இருந்தது அவருக்கு ஒரு இலட்சியம். அந்த இலட்சியம் அவரை இயக்கியது. உற்சாகத்தைக் கொடுத்தது. வலிமையைக் கொடுத்தது. அதற்காக. அதற்காகவே தான் அவர் வாழ்ந்தார். பென்ஷன் பெற்றதும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தித் தேர்தலுக்குப் பணத்தையும் கட்டினார்.

அவருக்குக் காசைக் கட்டிப்போட்டு வருகிறபோது ஒரு மாலை கூட விழவில்லை. தன்னுக்குள் அப்போது அவர் சொல்லிக் கொண்டார். 'இது ஆத்மீகத் தேர்தல்-ஆத்மா அழிவில்லாதது. செல்லாத போலி ஆரவாரம் அதைச் சாகடித்துவிட முடியாது.'

காசைக் கட்டிவிட்டு வந்த போது என்ன எண்ணங்கள் அவருக்குத் தோன்றிற்றோ அந்த எண்ணங்கள் நெஞ்சு கொள்ளாக் கற்பனைகள்.

அந்த ஈஸிச் செயரில் இப்போது படுத்துக் கிடக்கிற போதும் அவருக்கு ஏற்பட்டன. 'காந்தி மகாத்மா வந்தார். சமயத்தின் அடிப்படையில் நான் ஓரளவு அரசியலை உருவாக்க முயன்றேன். நீ அதை முற்றுப் பெறச் செய்யப்போகிறாய்' விவேகாநந்தர் வந்தார். 'அழிவில்லை. சமாதானமே. உலகத்திற்கு இந்து தர்மங்களின் மேம்பாட்டை உயர்த்த இதுவே தக்க சமயம். நீர் வாழ்ந்துகொண்டிருக்கிற சமுதாயத்தில் சமயத்தின் அடிப்படையில் அரசியலை அமைக்க இதுவே தக்க சமயம். வெல்க நீர்'. என்று வீர முழக்கமிட்டார். அவை கனவுகள் அந்தக் கனவுகளைத் தான் இந்த அதிகாலையிலும் அவர் கண்டு கொண்டிருந்தார். அவர் வரையில் அவை கனவுகள் தாமா? வெறி பிடித்த நாய்ச் சமூகத்தில் காலம் காலமாய் எப்படியோ தப்பி வந்திருக்கிற தருமங்களை உருவாக்க முயலும் ஜீவன் ததும்பிய கற்பனைகள்.

இப்போது இருள் முற்றற விலகிவிட்டது. காலைக் கதிரவனின் செழிப்பான இளம் கதிர்கள் விறாந்தைக்கு முன்னால் அமைந்து கிடந்த மலர்களில் - மரங்களில் - மண்ணில் புரண்டு, புரண்டு தழுவுகிறது. கற்பனைகள் நழுவுகின்றன. நாளை மறுநாள் தேர்தல் அவர் இதுவரையிலும் எந்த ஆயத்தங்களும் செய்யவில்லை. நகரமே அடிபடுகிறது. 'பாராளுமன்றத் தேர்தல்' என்றால் சும்மாவா? எதையோ எண்ணிக் கொண்டவராய்த் துண்டை எடுத்து உதிறிக் கொண்டே வெளியே நடந்தார்.

தன் வட்டாரத்தில் இருக்கிற சுருட்டுக் கொட்டில்களை அடைகிறார். வலிமை மிக்க பேராற்றல் மிக்க ஞானஒளி அவரை இயக்குகிறது. உள்ளத்தின் உண்மை ஒளிக்கு ஏற்றவாறு சொற்கள் பாய்ந்து விழுகின்றன. புடமிட்ட சொற்கள். காலம்காலமாய் மெய்ஞானத்தைத் தோய்த்துக் கொண்டிருக்கிற சொற்கள்.

''நீ அறிவிலி இல்லை. உன் ஆத்மா அறியாதது எதுவுமில்லை. வலிமையும் ஞானமும் சேர்ந்த உன் ஆத்மா உனக்குத் தெரியாமல் கிடைக்கிறது. அதை விழிப்புறச் செய். பிரிக்க முடியாது. வாழ்க்கையோடு இணைந்து போய்க் கிடக்கிற அரசியலுக்கு அதைப் பயன்படுத்து. உன்னைச் சுற்றிச் சொர்க்கத்தைக் காண்பாய்....''

அவர் உணர்ச்சி வசப் பட்டுப் பேசுகிறார். தனிமனிதன் - கூட்டான மொத்தத் தொகையான மனிதர்கள் என்ற பாகுபாடு அவரிடம் இல்லை. அவர் ஆத்மாவைப் பற்றிப் பேசுகிறார். எல்லாவிடமும் நிறைந்து நிற்கிற புனிதமான சக்தியை உணர்ந்து நிற்கிற ஆத்மா தனிமனித ஆத்மாவானாலும் எதையும் அசைக்கும் எல்லாருக்கும் கேட்கும் என்பது அவரது நம்பிக்கை.

அவர் பிரசாரம் செய்கிறார். வார்த்தைகள் நறுக்கிய துண்டுகளாய் விழுகின்றன. ''இது தேர்தல் இல்லை. இது ஆத்மீகத் தேர்தல். மெய்ஞானத்தை வலிமை மிக்க ஆத்மாவை நாம் புத்தகம், கோயில், மேடைகள் என்ற கூட்டிற்குள் இருந்தும் விலக்கிப் பரந்த அளவில்

செயல்படுத்தப் போகிறோம். அவ்வளவுதான் இது ஆத்மீகத் தேர்தல்....."

கள்ளுக் கொட்டில் சந்திகள் எதையும் அவர் விட்டு வைக்கவில்லை. புயலைப் போல அவர் நடமாடுகிறார்.

ஜனங்கள் நிரை நிரையாய்த் தொகை தொகையாய்க் கூடுகின்றனர். இறுதி நாளில் பிரசாரத்தின் இறுதிக் குரலாய் அவர் குரல் ஒலிக்கிறது.

''....ஆத்மா என்பது மற்றவனிடமிருந்து-பிற நாட்டிடமிருந்து கடன் வாங்கும் பொருளன்று. உன் உள்ளே நீயேயாய் எரிந்து கொண்டிருக்கிற ஞானதீபம். எதனாலும் அழிக்க முடியாத வச்சிரப் பொருள். மூட்டிவிட்டால் மாளாது ஓங்கி ஓங்கி வளரும் தீ. இந்தச் சமூகத்திற்கு - ஒரு பாவமுமறியாமல் குருக்கள் ஒருவர் தீயிடப்பட்டு வெந்து மடிந்தாரே - நூற்றுக்கணக்கான மக்கள் துடி துடிக்க விம்மி அழுத சோகக் குரல்கள் எழுந்ததே? பிறனொருவனால் தெய்வத்திற்கு நிகரான பெண்களின் கற்பு சூறையாடப்பட்டதே? பேதைமையையே அரசனாக முன் நிறுத்திக் கொண்டு அந்தப் பேதைமையையே தம் கவசமாய் இறுமாந்து நிற்கிறதே இந்தச் சமூகம்-இந்த நாடு. இந்த நாட்டின் ஆத்மாக்கள் தூங்கிக்கொண்டிருந்தன. அவ்வளவுதான். இந்த நாட்டின் கூட்டான புனித ஆத்மாவைத் தட்டி இதோ பார் - இனம், வர்க்கம், காலம், மொழி, சமயம் என்ற வேறுபாடில்லை. தெய்வத்தோடு நிகரான குற்றமற்ற புனித ஆத்மாக்கள் நாம். என்று சொல்வார் யார்? தூங்கிக் கொண்டு கிடக்கிற இந்த நாட்டின் புனித ஆத்மாவைத் தட்டி எழுப்புவார் யார்? இந்தத் தேர்தல் ஆத்மாவின் புனிதப் பிரசாரம். நாடெங்கும் மடிந்து கிடக்கும் பொய் மாயப் பிடிப்பைத் துகள் துகளாய்த் தட்டி எறிந்தது-இந்தத் தூசிகளா நம் உயர்ந்த ஆத்மாவைப் பிணித்துக் கொண்டிருந்தது என்று பரிகசிக்கப்போகும் தேர்தல்......"

சுற்றி நிற்கிற ஜனங்கள் பைத்தியக்காரப் பார்வை பார்க்கின்றனர். தம்மிடம் நிரம்பி வழிந்த ஏதோ பொய்யான மடமைத் தனங்கள் கழன்று கொண்டே தம் கண் முன்னால் ஓடிவிட்ட மாதிரி அவர்களுக்கு ஒரு நம்பிக்கை பிறக்கிறது. அவர் யாரையும் சட்டைசெய்யாமல் வீட்டை அடைகிறார். அன்றக்கிரவு அவர் தன் நாட்குறிப்புக் கொப்பியில் எழுதினார்.

'வெறி........ வெறி....... மற்றெதையும் காண விடாத பொய் மாயத்திரையைக் கிழிக்கத் தொடங்கிவிட்டேன். நூற்றுக் கணக்கான ஆத்மாக்கள் விழிப்புறத் தொடங்கிவிட்டன. இனி வெறியில்லை. பலியுமில்லை. சமாதானமே. நான் மூவாயிரம் வோட்டுக்களால் வெல்லுவேன். அதைத் தடுக்க முடியாது. ஆத்மாவுக்குக் கட்டுப்பாடுகள் இல்லை. அதை அழிக்கமுடியாது. இந்த வெற்றி என்னுடைய வெற்றியில்லை. 'எங்கெங்கு தர்மங்கள் அழிந்து அதர்மங்கள் மேலிடுகிறதோ அங்கெல்லாம் நான் பிறப்பேன்', என்ற பகவான் கிருஷ்ணனின் வெற்றி. விழிப்புற்ற புனித ஆத்மாக்களின் வெற்றி......"

விடிந்தால் தேர்தல். பொல்லாத இரவும் விடிந்தது. யாழ்ப்பாண நகரம். லண்டன், பாரிஸ் முதலான பெரு நகரங்களைப் போல் அடிபடத்

தொடங்கியது. ஒவ்வொரு சிறிய உயிரும் எதையோ எதிர்பார்த்து நிற்கிற சாயலில் அமைதி - குமுறல் என்றவற்றோடு நிற்கிறது. நகர வீதிகளில் படிந்து கிடந்த தூசுகள் எழும்பிக் காற்றுடன் கலந்து படிகின்றன. அவையும் எதையோ எதிர்பார்த்து மேலே எழுகிற மாதிரி இருந்தது.

அன்றைக்கும் அவர் வெளியே வரவில்லை. இந்த ஆரவாரத்தில் அவருக்கு நம்பிக்கை இல்லை. மாலை வந்தது. வாக்குகள் எண்ணப் படும் இடத்தை அடைந்தார். நேரம் ஓடியது. அவர் தகர்ந்தார். இருபத்து ஐந்து வோட்டும் அவருக்குக் கிடைக்கவில்லை.

வென்றவர்கள் வெற்றி ஓலம் எழுகிறது. மனிதர்களின் கூட்டான அருமையான கூட்டுணர்ச்சிகள் சுண்டப் பட்டுவிட்டன. விடிந்தால் அவற்றின் விளைவுகளை இயலுமானால் பேப்பரில் படத்துடன் பார்க்கலாம்.

தள்ளாடித் தள்ளாடி வீட்டை அடைந்தார். தம் அறையில் போய் காந்தி மாகாத்மா - விவேகானந்தர் - இராமகிருஷ்ணர் படத்தின் முன்னால் கிடந்தார். வெறி பிடித்துக் கத்தினார். 'உலகம் பொல்லாதது. மகாத்மாவே உலகம் பொல்லாதது. நீங்கள் வீடுதோறும் பிறந்தாலும் எங்கோ ஒரு மூலையில் வெறியும் பித்தலாட்டமும் கொடுமைகளும் கயமைகளும் வாழ்ந்து கொண்டு தான் இருக்கும். புனிதமான ஆத்மாவின் வலிமை மிக்க சக்தியோடு வளர்ந்து கோடி, கோடி, கோடியாய்ப் பல்கிப் பெருகித் தழைத்து நிற்கிற கயமைத்தனங்கள் செத்து மடியப் போவதில்லை......!

அவருக்கு அன்றைக்கு உறக்கம் பிடிபடவில்லை. வெடித்து வெடித்து அழுதார். அந்த அழுகை, தான் வெற்றி பெறவில்லையே என்ற ஆதங்கத்தால் பிறந்த அழுகையில்லை. வெறிபிடித்த ஒரு சமுதாயத்தில் புனிதமான ஆத்மாவை-மெய்யுணர்வுகளை விழிப்புறச் செய்ய முடியவில்லை - அது வெல்ல முடியவில்லை - என்ற ஆற்றாமை கண்ணீரைப் புரட்டிப் புரட்டிக் கொட்டியது.

அவரது மனைவி வந்தாள். தயங்கித் தயங்கிச் சொன்னாள். ''உங்களை எனக்குத் தெரியும். உங்களது புனிதமான உணர்ச்சிகளையும் எனக்குத் தெரியும். அவை இந்த உலகத்தை எட்டாது என்றுதான் தடுத்தேன்''.

மனிதர்கள் மாற மாட்டார்கள். மாறுவதாயிருந்தால் புத்தன் யேசுவிற்குப் பிறகு காந்தி மகாத்மா தோன்ற வேண்டிய அவசியம் இருந்திராதே.....''

மனைவியை அவர் பார்த்தார். தெய்வம் போல் அவள் உயர்ந்து நின்றாள்.

***

பொழுது புலரவில்லை. வழக்கம் போல் அந்தப் புலராப் போதில்

களரும் மணி ஒலிகளின் நாதம் அவரை மயக்குகிறது வழக்கம்போல் அவர் பிள்ளையார் கோவிலுக்குப் போகிறார். குருக்கள் பூஜை செய்கிறார். கனகரெத்தினத்தின் கண்கள் அந்தக் கோயிலின் முகட்டு வளையைப் பார்க்கின்றன. சலனமற்று நிலை கின்ற பாம்பொன்று அரைவாசி விழுங்கிய எலியோடு நிற்கிறது. அதன், எலியின் வால்-கருமையாய்த் தொங்குகிறது.

தெய்வச் சந்நிதியில் அவன் படைத்துவிட்ட உயிர்கள் ஒன்றை ஒன்று விழுங்குகிறது. தெய்வத்திற்குக் கொதிக்கவில்லையோ? அவன் தெய்வமில்லையா? கேள்வி தொங்கி அவருள்ளே சுழலுகிறது. தெய்வம் - ஆத்மா - தான் நம்பி வாழ்ந்த அடிப்படைக் கோட்பாடுகளே தகருகின்றன - அவரே தளர்ந்துபோகிற சமயம், குருக்கள் அர்ச்சனைப் பொருட்களை வைத்தார். அவர் கண்களில் நீர் முட்டி மோதிக் கக்குகிறது.

''கனகரெத்தினம், பாம்புக்கும் பேய்க்கும் கூட, ஆத்மா இருக்கிறதுதான். ஆனால், அவற்றை விழிப்புறச் செய்ய முடியாது. அவை பரிணாம தத்துவத்தின் படி - தெய்வத்தின் நியாயப்படி வளர்ந்து தாமாகவே தேடித் தேடி அலைந்து ஒளி பெற்று விழிப்படைய வேண்டியவை. நாமாக விழிப்புறச் செய்ய முடியாது. கவலைப்படாதே கனகரெத்தினம். வெறி பிடித்த வெறியைத் தவிர - வெறியை நோக்கிச் செல்வதைத் தவிர வேறெதையுமே செய்யாத நமது சமூகப் புத்திலே பாம்புகள் தான் இருக்கின்றன. அவர்கள் தாம் செய்யும் கீழான பாவங்களையும் தம் மனத்தையே ஏமாற்றும் கயமைத் தனங்களையும் உணரும் காலம் வரும். அப்போது அவர்கள் ஆத்மா விழிப்படையும். விழிப்புற்ற தூய ஆத்மாவின் முன்னால் வஞ்சனையில்லை பொய் இல்லை-கயமை இல்லை. சின்னத் தனங்கள் இல்லை....''

கனகரெத்தினம். புனித அலைகளில் மிதந்தார்.'குருக்களே நீங்கள் சொன்னது உண்மை. அதற்கு முன்னால் ஆயிரம் ஆத்மீகத் தேர்தல் நடந்தாலும் இந்த உலகம் மாறாது'' என்று கத்தினார்.

சௌந்தர்யத்தின் பிறப்பிடமாய், மெய் ஞானத்தின் உறைவிடமாய் அவருக்கு அந்த நேரத்தில் பிள்ளையார் தென்பட்டார். பாம்பைப் பார்த்தார். அது விம்மிச் சுருண்டு கிடந்தது.

*சுதந்திரன்*
*15-03-1964*

# பிரவாகம்

சுமார் 80 வருடங்களுக்கு முன்னால் ஒரு கத்தோலிக்கக் கோயிலாலும் அதன் பிரசித்தி பெற்ற விழாக்களாலும் அந்தப் பிரதேசத்துச் சைவ மக்கள் மதம் மாறி வருவதைப் பலர் கண்டனர். பிரான்சு நாட்டில் கியூறிறொட்சுக்கும், பியூறிட்டன்சுக்கும் நடந்த கொடுமையான உள்நாட்டு மதப் போர்களைப் போல், சுமார் 80 ஆண்டுகளுக்கு முன்னால் ஓட்டுமடப் பிரதேசத்திலும் நாவாந்துறை, அராலி, வட்டுக் கோட்டை முதலாய இடங்களிலும் கத்தோலிக்கனுக்கும் சைவனுக்கும் பெரும் போர் மூண்டு கிடந்தது. அடிதடி குத்து, வெட்டுக்கள் மலிந்தன. அந்தக் காலவரையறையில் ஒரு சமரச நோக்குடைய இந்துப் பெண் தோன்றினாள். தன் ஞானப் பேராற்றலாலும் பிரசாரங்கள் வாயிலாகவும் வாழ்ந்து காட்டிய முறையினாலும் வெறியைத் தணித்து அமைதியை ஏற்படுத்தினாள். வரலாற்றில் இடம் பெறவேண்டிய பெண், நினைவு தப்பிப் போகிற வயதை அடைந்த இரண்டு மூன்று பெரியவர்களின் நெஞ்சிலும் வயது போன பெண்களின் கதையிலும் தான் நின்று உலவுகிறாள்.

இது முழுக்க முழுக்கக் கற்பனைக் கதையன்று. வாழ்ந்த உத்தம இந்துப் பெண்ணின் கதை. 1884ம் ஆண்டு கார்த்திகை மாதம் காக்கை தீவுக் கடல் பெருக்கெடுத்துத் தற்போதைய ஓட்டுமடச் சந்தியளவிற்கு வத்தைகளையும் தள்ளிக் கொண்டு வந்தது என்பதை நேரிற் கண்டவர்கள் இருக்கிறார்கள். சுமார் 80 வருடங்களுக்கு முன்னால் செபத்தியார் கோவில், ஓலையால் வேயப்பட்டு இருந்ததென்றும் தீச் சேதம் ஏற்பட்டே முன்னாலய மண்டபம் பிற்காலத்தில் கல்லால் கட்டப்பட்ட தென்பதற்கும் ஆதாரமுண்டு. செபத்தியார் கோவிலில் உள்ள சிலுவையும் தொலைந்து மீட்கப்பட்டது என்பதும் உண்மை. இவற்றைச் சைவர்கள் செய்தார்கள் என்பது மனவருத்தத்திற்குரிய வேலையே.

1931 - ஆம் ஆண்டு நடந்த வெள்ளக்கடல் கொந்தளிப்பை தெய்வப் பெண் நாகமுத்து வாழ்ந்த காலத்தோடு பொருத்திக் கதையைப் பின்னியிருக்கிறேன். காக்கை தீவிற்கு இப்பால் நெல்வயல் பிரதேசமாகக் கிடப்பவை 80 வருடங்களுக்கு முன்னால் நான் வர்ணித்தபடி தான் இருந்தது.

நாகமுத்து என்ற பெண்ணைச் சிலர் கிறிஸ்தவப் பெண் என்றும் கூறினர்.)

***

மழை ஆரம்பித்துச் சரியாக ஒரு கிழமை முடியப்போகிறது.

நாளை விடிந்தால் ஒரு கிழமை பூர்த்தியாகிவிடும். வரலாற்றில் இடம் பெறவேண்டிய நிகழ்ச்சி ஒன்று அந்தப் பிரதேசத்தில் நடந்து கொண்டிருக்கிறது. ஓங்காரக் குரலிட்டு வான் குமுறிக் கக்குகிறது. வெறி பிடித்து அதன் ஒப்பாரியில் அந்தப் பிரதேசம் நடுநடுங்கிப் பீதிக் குரல் எடுத்து அலறியபடி இருந்தது. ஆறாவது நாள். வெறி பிடித்த வானின் ஓங்காரம் ஓயவேயில்லை. காக்கை தீவுக்கடல் பாம்பு ஊர்ந்து வருவது போல நகரத் தொடங்குகிறது. பின் வான் முட்ட அலை எறிந்து ஆர்ப்பரித்துத் தாளம் போட்டுப் பம்பி எழுந்தது. 1884ம் ஆண்டு கார்த்திகை மாதத்தின் பிற்பகுதியில் நடந்த கொந்தளிப்பு. வத்தைகளும் - மரங்களும் - மிருகங்களுமாய் மிதக்கத் தொடங்கின.

அதோ பொழுது புலரத் தொடங்கி விட்டது. வான் கரு நீலம் பாய்ந்திருந்தாலும் பகல் போது ஆரம்பித்துவிட்டது, என்பது தெரியத்தான் தெரிந்தது. வெறிபிடித்து நிற்கிற அந்த மழையிலே நனைந்து கொண்டே ஒரு பெண் ஓடுகிறாள். துடிதுடிக்க அலறுகிறாள். பைத்தியக்காரி போல விழிக்கிறாள். 'தெய்வங்களே, உங்களுக்கும் பேதமா, மனிதர்கள் அறியாமையால் அடிபடுகிறார்கள் உங்களுக்குள்ளுமா பேதம்' என்று ஓலமிடுகிறாள்.

அதோ கரையை அண்டி நின்ற மனிதர்களின் ஒப்பாரி, சாகப்போகிற பிணங்கள் செத்த பிணங்களைக் கண்ட இரக்கத்தோடு கூடிய ஒப்பாரி மழை ஓலத்தையும் விஞ்சி எழுகிறது. பிணங்கள் கரையை அண்டி வந்து சேருகின்றன. மக்கள் அவற்றைப் புரட்டிப் பார்க்கிறார்கள். 'உடையார் சின்னத்தம்பி' - 'எங்கே அவன்' - 'அவன எங்கே?' செத்த பிணத்தைக் கண்டுமே அவர்களின் வெறி அடங்குவதாயில்லை. அந்தப் பெண் ஓடி வருகிறாள்.

'சின்னத்தம்பியா? எங்கே அந்த ஈனமான இந்து மதத்தவன்' - 'ஐயோ சிலுவை எங்கே' - அவள் சுருண்டு விம்மி அழுகிறாள். மற்றவனை வெளியே இழுக்கிறார்கள். அவனோடு இழுபட்டுவரக் கஷ்டப்படுகிறது

ஒரு வஸ்த்து. நெம்பி நெம்பி வெகு பிரயாசைப்பட்டு அவனை மேலே தூக்குகிறார்கள். அவள் வேஷ்டியில் கட்டிவிட்ட மாதிரிச் சிலுவை சிக்குண்டு வருகிறது. அவ்வளவு தான். 'தாயே - நாகமுத்துத்தாயே' என்று அவள் கால்களில் வந்து விழுகிறாள்.

விந்தையிலும் விந்தையாய் மழை நின்றுவிட்டது. நாகமுத்துவையும் சிலுவையையும் தூக்கிக் கொண்டு மக்கள் செபத்தியார் கோவிலை நோக்கி நடக்கிறார்கள்.

உடையார் சின்னத்தம்பியும் நாட்டாண்மைக்காரன் நாகமணியும் கவனிப்பாரற்று உப்பிப்போய் நாற்றமெழுகிற வாசனையோடு கிடக்கிறார்கள். உங்களுக்கு இவை புரியாது. புரிய வேண்டுமானால் செத்துப்போன அந்த மனிதர்களுக்கு நாம் உயிர் கொடுத்து உலவவிட்டு நடந்து போன நிகழ்ச்சிகளோடு நாம் ஓடியாகவேண்டும்.

***

சென் செபத்தியார் என்ற கத்தோலிக்க மெய்யன்பரின் ஞாபகார்த்தமாக எழுந்த கோயில் அது. கோயில், பாரகக அததனை வேலைப் பாடானதாக இல்லை.கோயிலின் பின்னால் நீண்டோடுகிறது பந்தல். மூவாயிரம் கிடுகுகளால் வேயப்பட வேண்டிய பந்தல். கார்த்திகை மாதத்தில் தான் அந்தக் கோயிலில் விழா நடப்பது வழக்கம். பரதவர்கள் தாம் அந்த விழாவை ஏற்று நடத்துவார்கள். கத்தோலிக்க மதத்தவர்கள் நாடெங்கிலுமிருந்து வந்து கூடியிருப்பார்கள். பாதிரிமார்களின் புனித ஜோதியும் யேசுவின் உண்மை ஒளியும் பிதேசமெங்கும் நிரம்பி வழியும். தூர தூரங்களுக்குக் கடலில் சென்ற பரதவர்கள் அந்த வருடத்தில் தமக்குக் கிடைத்த அழகான கடலின் திரவியங்களை வந்திருப்பவர்களுக்கு வழங்குவார்கள். பெரும்பாலும் இந்து மதத்தவர்கள் உண்மைப் பக்தி மேலீட்டால் நெஞ்சம் விம்மி மனம் கசிந்து உருகுவார்கள். இரவில் வாண வேடிக்கைகள் நடக்கும். வான் திரையில் நிற்கும் கோடிக்கணக்கான நட்சத்திரங்கள் ஒளி மங்கி மறைய வான் எங்கும் வர்ணத் துகள்கள் எழும்பி நர்த்தனமிடும். அது பட்டத்து இளவரசனுக்கு முடி சூட்டப் போகும் தறுவாயில் நடக்கும் கோலாகலம்போல, அந்தப் பிரதேசமெங்கும் இன்பத் திரைகள்-புனித அலைகளை அள்ளி எற்றும் விழாவாக இருக்கும்.

உடையார் சின்னத்தம்பி பழுத்த சைவர். நெற்றியில் அழகாய்ப் பளிச்சிடும் பளிங்கு போன்ற வெண்ணீறு. அதுவும் அவரே தயாரித்தது. கழுத்தில் உருத்திராக்க மாலை. நாள் தோறும் கசக்கிக் கட்டிய உடை. வாயில் சிவ நாமம். உடையார் வம்சங்களில் சாதாரணமாகக் காணப்படும் மிடுக்கும்

கம்பீரமும் அவர் அகமெங்கும் வியாபித்து நிற்கும். அவருக்கு அந்தக் கோயிலைக் கண்டால் வெறுப்பு. பரந்த அளவில் ஆடம்பரத்துடன் இந்தக் கோயில் விழாவை நடத்துவதன் வாயிலாக அந்தப் பிரதேசத்து மக்கள் மதம் மாறுவதற்குக் காரணமாய் இருப்பதாய் அவர் நம்பினார். அவரால் சகிக்கக் கூட முடியவில்லை. என்ன? காலம் காலமாய் நின்று, தப்பி, ஓங்கி வளர்ந்து நிற்கும் இந்து தர்மங்களை மக்கள் புறக்கணித்து விட்டு, நெறிமயங்கி ஆசார அனுட்டானங்களைக் கைகழுவி விட்டுக் கொண்டிருப்பதை அவர் கண்டு கொப்புளித்தார். கனன்று கனன்று குமைந்தார். அதற்கு வழியும் காணத் தலைப்பட்டார்.

***

இன்றைக்கு வட்டுக் கோட்டைக்கு ஓட்டுமடச் சந்தியில் இருந்தும் நேராய் ஓடுகிற நெடுஞ்சாலை அப்போதில்லை. பிரயாணம் செய்வதாக இருந்தாலும் நால்வராகப் பலத்த பாதுகாப்புடன் தான் செல்வார்கள். ஒரு ஒற்றையடிப்பாதை தான் இருந்தது! இருமருங்கிலும் நெடிதாய் ஓங்கி வளர்ந்து தாறுமாறாய்க் கிளைகளை நீட்டிப் பரந்து நிற்கும் விருட்சங்களும் அவற்றில் படர்ந்து நிற்கும் கொடிகளும், தாழை மரங்களும், புதர்களுமாய்ப் பெரும் பயப்பிராந்தியை ஊட்டிய வண்ணம் அந்தப் பிராந்தியம் இருந்தது. முயல்களும், நரிகளும், பாம்புகளும், அவற்றில் குடியிருந்தன. சிறிய புலி ஒன்றும் இருந்ததாக அந்தப் பெரியவர் சொன்னார்.

அமாவாசை இருட்டு அந்தக் கொடிய பிரதேசத்தைத் தழுவி நிற்கிறது. வலிமையிலும் வலிமையாய் இருளும் - பயங்கரமும் பின்னி மனதைக் கிடுகிடுக்க வைக்கிறது! அந்தப் போதில் நெடிதோங்கிய ஆலமரத்தின் அடியில் மூவர் காலத்தை எதிர் நோக்கிச் சம்பாஷித்துக் கொண்டிருக்கிறார்கள்.

மீசையை உருட்டிவிட்டுக் கொண்டே கனல் கக்கக் கர்ச்சித்தார் - உடையார் சின்னத்தம்பி.

''அந்நியர்கள், சனாதனமான நமது இந்து மதத்தை மோகம் காட்டி மாய்க்கப் பார்த்தார்கள். சுயநலமற்ற பக்தர்களாலும் தமிழ்மொழியாலும் அது தப்பி விட்டது. இப்போது அவர்களது ஆட்சியிலும் செயலிலும் நன்மை கண்ட சில சுயநலமிகள் மேலும் மேலும் தம் பொய்யாரவாரத்தால் இந்தப் பிரதேசத்தில் வாழுகிற இந்து மதத்தவர்களை மதம் மாற்ற முனைந்து நிற்கிறார்கள். நாட்டாண்மைக்காரரே இது சத்தியம். இந்தப் பாய்ச்சா உடையான் சின்னத்தம்பி இருக்கும் வரையும் பலிக்காது.......''

விண் என்று அமைதியும் குழப்பமும் எக்காளமிடுகிறது.

''நாங்களும் தான் உடையாரே. இது இலேசுப்பட்ட காரியமா? பரதவப்

படுவாக்கள் அவ்வளவிற்குத் துணிந்துவிட முடியுமா?"

மற்றவன் அமைதியோடிருந்தான். கருத்துத் தடித்த அவன் கொடியத்முகம் இடைக்கிடையே மின்மினிப் பூச்சியின் ஒளியால் தெரிகிறது.

குசு குசுவென்று அவர்கள் ஏதோ பேசுகின்றனர். 'தீ' என்ற வார்த்தை மட்டும் பெரிதாய் எழும்பி நிறைகிறது. பாம்பு ஊரும் சத்தம் இலையின் சரசரவெனும் ஓசையில் எழுகிறது. ஆந்தை நெடிதாய்க் குரலெடுத்துப் புலம்புகிறது. உடையார் சின்னத்தம்பி எழுந்தார் - 'தில்லைக் கூத்தனே நீ தான் உதவ வேண்டும்' என்று கூறிக் கொண்டார். மூன்று 'கண்ட கோடரி'களை மூவரும் எடுத்துக் கொண்டே ஒற்றையடிப் பாதையை விலக்கிய வண்ணம் வெளியே வந்தனர்.

''பரலோகத்தையும் பூலோகத்தையும் படைத்த பிதாவாகிய சருவேசுவரனை விசுவசிக்கிறேன். அவருடைய ஏக புத்திரனாகிய் யேசுக்கிறிஸ்துவை நான் விசுவசிக்கின்றேன்...."

பாதிரியார் லத்தீனில் மந்திரங்களை உச்சரிக்கிறார். மந்திரங்களை 'லத்தீன்' பாஷையிலேயே உருப்போட்டவர்கள் அப்படியே உச்சரிக்கின்றனர் அந்த மந்திரச் சொற்களுக்குக் கட்டுப் பட்டே நேரே புனிதமான தேவன் இறங்கி வந்து நின்று ஞானப்பார்வை பார்ப்பதாய்' அவர்களுக்கு நம்பிக்கைகள் பிறக்கின்றன. 'உலக ரட்சகனே' 'யேசுவே. எல்லாம் வல்ல யேசுவே' - தெய்வீகம் ததும்பிய புனித இடம். நுண்மையான மனித உணர்ச்சிகள் கரைந்து நழுவிப் பாகாய் ஓடுகிறது.

எங்கிருந்தோ குரல் ஒன்று வெடித்தது! 'தீ'. ஐயோ தீ' நாலாபுறமும் அடர்ந்து படர்ந்து பாய்ந்தது தீ. வெறி பிடித்து மக்கள் பாய்ந்தனர். அடிபட்டனர், குத்துப்பட்டனர், திண்மையான தெய்வீக உணர்வுகள் சுக்குச் சுக்காய்ச் சிதறிவிடப்பட்டன...... அவர்களை வெறி ஆட்டத் தொடங்கியது. ஆடினார்கள். அப்படி ஆடினார்கள். சைவர்கள் தாக்கப்பட்டார்கள். கத்தோலிக்க பக்தர்கள் பலர் நெருக்குண்டு தவித்தார்கள். 'உடையார் சின்னத்தம்பி - எங்கே அவன், அவன் எங்கே?' என்று பலர் கத்தினார்கள். புயல், குமுறல். யேசுவைக் கவனிப்பார் யாரும் இல்லை. எந்தப் பாவங்களைக் கண்டித்தானோ யேசுநாதன், அந்தப் பாவங்களை அவன் குழந்தைகள் செய்து கொண்டிருந்தார்கள்.

இந்த நேரத்தில் ஒரு பெண் ஓடிவருகிறாள். அவளை விட்டு நாம் பழையபடி அந்த ஆலமரத்தடிக்கு ஓடிப்போவோம். அவர்கள் வெகுவேகமாக ஓடி விட்டார்கள். நாற்புறமும் கத்தோலிக்க வெறிபிடித்த இளைஞர்கள் நிற்கிறார்கள். அவர்களைக் கடந்து போனால்........ அதோ தீக்காயங்களோடு கிடக்கிறார் உடையார் சின்னத்தம்பி. நாட்டாமைக்காரர் நாமணி - மற்றவனைக் காணவில்லை. அவர்களுக்குப் பக்கத்தில்.... ஐயோ இதென்ன செபத்தியார் கோவில் சிலுவை? அவர்கள் ஆறட்டும். இனிமேல் அவர்கள்

தம் இருப்பிடத்திற்குப் போக விரைவில் யோசிக்கமாட்டார்கள். ராஜதந்திரப் புத்தியுடையவரான உடையார் தம்மைப் பிடிக்க எத்தனை ஆயிரம் பேர் வெளியே காத்துக் கொண்டிருப்பார்கள் என்பதைக் கூட உணர மாட்டாதவரா?

செபத்தியார் கோவிலில் ஒரு புனிதப் பெண் கண் முன்னால் நடந்து கொண்டிருக்கும் அல்லோல கல்லோலத்தைக் கட்டுப்படுத்தி ஞானப் பிழம்பாய் நிற்கிறாள். அவளைப் பற்றி நாம் நிச்சயம் அறியத்தான் வேண்டும். தெரிந்து கொள்ள நேரமும் வந்துவிட்டது.

வயது இருபத்து மூன்று ஆன மங்கை. முகமெங்கும் ஞானத்தின் புனித சோதி பிரகாசிக்கிறது. கண்கள் சுழலுகிறபோது காதலைப் பேசவில்லை. அன்பும் அருளும் நுரை கக்கிச் சொரிகிறது. ஒவ்வொரு அங்கமும் கோடி காலத்து மகோன்னதமான சௌந்தர்யங்களில் தோய்த்தெடுத்த அழகு. அவள் தெய்வீகப் பெண். அளவிலாத சைவப் பக்தி கொண்டவள். நல்ல சைவப் பழம். அவளுக்கு அதை அவள் பிறந்த வீடு கொடுத்திருந்தது. நூல் கட்டவும், மந்திரிக்கவும், வாழ்த்துப் பெறவும் இளைஞர்கள் கூட அவளிடம் சதாகாலமும் வருவார்கள். 'தாயே சௌக்கியமா' என்று தான் கேட்பார்கள். அப்படிக் கேட்கப்பண்ணும் - அவள் தெய்வீக அழகு.

ஒரு நாள் இதே போலத் தான் கலகம் மூண்டு கொண்டிருந்தது. வாக்கு வாதமாய்த் தொடங்கிக் கைகலந்து உயிரைமாய்க்கும் வெறி கொண்ட கட்டம்.

'யேசு தோற்கிறான்'

'ஆடும் எம்பிரான் வெளுக்கிறான்'.

'அந்நியனான யேசு வெல்கிறான்'.

'யாரடா அது?'

'உலக நாயகனான யேசுநாதனை, உமையின் நாயகன் வெல்கிறார்'

'தூ நாயே உமைக்கு நீயாரடா புருஷன் பிடிக்கிறது?'

மனிதவெறி, பேய்வெறி, உணர்ச்சிகளில் கொடிய மதவெறி கோரமாய்ப் பாய்ந்து விட்டது. தனித்தாரம்பித்த யுத்தம் கூட்டத்துடன் கலந்து மனித இரத்தத்துடன் கலந்து சிந்தத் தொடங்கிவிட்டது.

அப்பொழுது தான் அந்தத் தெய்வீகப் பெண், நாகமுத்து ஓடிவந்தாள்.

'போதும் இனிமேற் போதும். அதோ, யேசுவின் கரங்களைச் சிவன் பற்றியபடி உங்கள் வெறியாட்டத்தைப் பார்த்து நகைப்பதை நீங்கள் காண வில்லையா? அதோ, அருவியின் இழுமென்ற ஒலி இசையாய் அவர்கள் குரல்கள் ஐக்கியப் பட்டுக் கேட்கின்றனவே?'' எல்லோரும் திரும்பிப் பார்க்கின்றனர். அவள் தெய்வப் பெண். நாணத்துடன் முகத்தைத் தொங்கப் போடுகின்றனர்.

''தெய்வத்திற்குப் பாஷை வித்தியாசமில்லை. நாட்டு வித்தியாசம் இல்லை. நிறவித்தியாசமில்லை. ம்........ சொல்லுங்கள். குழந்தைகளே சொல்லுங்கள். 'எம் பிரான் கருணையால் நாம் உயிர் வாழ்கிறோம். அவனே நான். சிதம்பரத்தில் கூத்தாடும் சிவனின் பாதங்கள் என் நெஞ்சில் ஒலி எழுப்புவதை நான் உணருகிறேன்'.

''கன்னி மேரியின் வயிற்றில் உதித்த யேசுநாதன் என் வயிற்றில் உதித்த தெய்வம்''. யாரும் மூச்சுவிடவில்லை. கத்தோலிக்கன் சைவன் என்ற பாகுபாடின்றி அவர்கள் முறை முறையாய்க் கூறுகின்றனர். சாந்தமும் அமைதியும் நிலவுகிறது.

அந்தத் தேவதை தான் அந்தத் தேவாலயத்தின் முன்னால் தூண்டிற் புழுவெனத் துடிக்கிறாள். மெய்யெல்லாம் தூசுபடிய உருண்டு புரண்டு அலறுகிறாள். ஏதோ உறுதி கொண்டவள்போல எழுந்து கத்துகிறாள்.

''சநாதனமான இந்துமத பக்தன் இந்த வேலையைச் செய்திருப்பதை என்னால் சகிக்க முடியாது. ஆம், என்னால் சகிக்க முடியாது. மனமும் உடலும் மெய்ஞானத்தோடு லயப்பட்டுச் சிவனின் புனித நாமத்தை உச்சரிக்கிறவன் இந்த வேலையைச் செய்தால் அதற்கு மன்னிப்பே இல்லை. தயக்கம் ஓலமிட்டலறுகிறது. அவள் குரல் உள்ளத்தில் தெய்வம் உண்டானால், தெய்வத்திற்குக் தெய்வம் பேதமில்லை என்பது உண்மையானால் இந்த நாளிலிருந்து ஏழாம் நாள் இதற்குத் தீயிட்டவனை நான் காண வேண்டும். தொலைந்து போன இந்த தேவாலயத்தின் சிலுவையை என் கைகளால் புனிதமான யேசுவின் பிரார்த்தனையுடன் நெஞ்சை உருக்குந் தேவாரத்துடன் திரும்ப நாட்டவேண்டும். கட்டாயம் ஏழாம் நாள் நடக்கும். அல்லது, இதிலேயே நான் செத்து மடிவேன். அதுவரையும் நீர் கூடத் தொடமாட்டேன்''.

கனத்துக் குமைந்து புழுங்குகிறது. அப்பொழுதே ஆரம்பித்த மழைதான். இப்பொழுது தான் ஓய்ந்திருக்கிறது.

பெண்ணில் தெய்வீகப் பெண்ணாய், வலிமையற்ற மெலிந்த உடம்பும் அளவில்லாத அன்பும் ஆத்ம பலமும் கொண்ட தெய்வப் பெண்ணின் சின்மயமானதோர் ஒளிப் பிரகாசம் வெகு வேகமாகப் பரவத் தொடங்கிவிட்டது. பேய்த்தனமான வெறியில் கிடந்து தவிப்புண்டு தவிப்புண்டு இரத்தத்தையும் துன்பத்தையும், கண்டதைத் தவிரத் தெய்வத்தைக் காணாத மக்கள் இப்பொழுது தான் தெய்வத்தைக் காண ஆரம்பித்தார்கள். நெஞ்சின் உள்ளே கொழுந்து விட்டெரிந்த சமரசத் தீ நெடிதாய் நீண்டு எரிகிறது. அது அழிக்காது. பிரகாசம்தான் உண்டு.

அதோ உலகம் தண்மை நீங்காக் காலைப் போதுபோல் மயக்கமும் பேரின்பமும் தருகிறது. புறத்தே சில் என்று பரவியிருந்த கொடுங் குளிர் மண்ணின் சதக் சதக் என்று ஈரப்பிடிப்பு, கூடிநின்ற ஆயிரக்கணக்கான

மக்களை வருத்தவில்லை. ஞானப்பெண் மெல்ல எழுகிறாள். கருமுகில் கூட்டத்திற்கு மேலாய் நழுவி ஓடும் வெண் முகில் போல் அவள் தோற்றமளிக்கிறாள். அது உருவத்திற்கு அப்பாற் பட்ட பேரழகு. காலமும் மனிதரும் தீண்ட முடியாத பேரழகு. அவள் வாயிலிருந்தும் யேசுவின் மந்திரங்கள், பிரார்த்தனைக்குரிய வாசகங்கள் ஓடி வருகின்றன. அவளே யேசுவைப் பற்றிச் சொந்தமாகப் பாடுகிறாள். புனிதத் தேவராங்களை தன் நெஞ்சை உருக்கி நெக்குருகிப் போகும் படி ஓதுகிறாள். யாரும் தடுக்கவில்லை. தடுக்கும் பொய் மாயைகள் சிதறி ஓடி விட்டன.

ஜனம் முழுவதும் நீர் மல்க அவளைப் பார்க்கிறது. சிலுவையை உரிய இடத்தில் வைத்தாயிற்று........ பேரமைதி.

மெதுவாக உடல்சோர அந்தக் கூட்டத்தின் முன்னால் வருகிறாள். கைகாட்டிப் புனித மந்திரங்களையும் தேவாரங்களையும் பாடும்படி கூறுகிறாள்.

ஜனங்களுக்கு ஞானப் பித்தேறிவிட்டது. கட்டித் தழுவி மெய்ஞான கீதங்கள் பம்மென்று பரவி எழுகின்றன. அதை மகிழ்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருந்த அவள் மயங்கிச் சோருகின்றாள். உயிர்ப்போய் விட்டது.

அந்தத் தேவதையின் ஆத்மா எங்கும் பரவிவெறியைத் தணித்துவிட்டது. சிலுவையில் சிவபெருமானைக் கும்பிட்டான், இந்து மதத்தவன். சிவனில் யேசுவைக் கும்பிட்டான், கத்தோலிக்க யேசு பக்தன். என்றும் கண்டிராத படி அந்தப் பிரதேசம் அமைதிக் கோலம்பூண்டு பொலிவுற்று நின்றது.

*ஈழநாடு*

*08-03-1965*

# வெறுமையில் திருப்தி

மாசி மாதத்துப் பனிப் போர்வையின் சுகத்தை நிலமும், நீரும், வானும், இன்னும் நீக்கிடவில்லை. முன் விறாந்தையில் ஈஸிசெயரில் படுத்திருந்தபடியே, பனி தழுவி நிற்கிற இந்த உலகத்தைப் பார்க்கிற போது பிரபஞ்சம் கண்ணுக் கெட்டிய தூரம் வரையும் மனோரம்மியமாகத்தான் தெரிகிறது. கருமை சூழ்ந்த பனியில் தோய்ந்துதெடுத்தாற் போன்ற பசிய முகிற் கூட்டத்தின் நடுவே பின் நிலவின் வட்ட நிலா-முத்தமிடப் பட்ட பின்பு கன்னிப் பெண்ணின் கன்னத்தே மிளிரும் நாணம் பூத்த பசிய அழகுபோலப் படருகிறது. நிலவின் கதிர்கள் பனியோடிய சுற்றுப் புறத்தின் ஊடே நழுவி மண்ணில் விழுகிறபோது அவை விழுந்த இடந் தோறும் புத்துயிரின் கசிவு விதம்விதமாய் அந்தக் காலத்தில் பள்ளித் தோழிகளிடம் பெற்று வந்த செவ்வரத்தை மரங்கள்-எவ்வளவு கசிவோடு அவை வகை வகையாய் இதழ் விரிக்க முயல்கின்றன. மணம் மட்டும் அவற்றிற்கு இருந்திருந்தால் மண்ணுலகத்துப் பாரிஜாத மலர்களாகி விடாவா?

பொழுது நகர நகரக் கண் முன்னால் தெரிகிற இந்தப் பிரபஞ்சம் அவற்றின் தாலாட்டில் மௌனமாய்ச் சிணுங்கும் கண்ணின் நேரடிப் புலனுக்குப் புலனாகாத சிற்றுயிரும் பேருயிரும் கவிதை நிரம்பியதாய் - நளினமும் - புதிய கனவும் - உயிரும் பெற்று நிற்பதாய்த் தெரிகிறது.

ஆனால் வாழ்க்கையோ?

ஏனோ ''வாழ்க்கை என்பது போராட்டம்'' என்று யாரோ எப்பொழுதோ சொன்ன வார்த்தைகள் பளிச்சென்று நெஞ்சகத்தே வந்து பதிகின்றன. வாழ்க்கை என்பது போராட்டம் தானா?

பார்க்கப் போனால் பொழுது புலர்ந்ததன் பின்னால் இந்த விறாந்தையின் முகப்பில் நின்று பார்க்கின்ற பார்வையாளன் கண்களிலே மலர்ந்து விட்ட இந்த விதம்விதமான செ:‘வரத்தை மலர்கள் பனியில் தோய்ந்து நிற்கிற அழகில் கவிதைகளைக் கொட்டலாம். வார்த்தைக்கு வார்த்தை யதார்த்தம் நிரம்பியதாய் ஜீவன் ததும்பியதாய் எடுத்துப் புதிதாய்ச் சொல் பதிக்க முடியாத வேகமாய் அவன் கவிதைகள் மிளிரலாம். கன்னிப் பெண்ணின் நாணமோ? அழகோ? கண்களோ? எதுவோ? அழகுகளைப் பார்க்கிறபோது அழகுகளே உவமானமாய் வருகிறாற்போல அவன் புலம்பிக் கொள்ளலாம்.

ஆனால் வாழ்க்கையோ.

‘வாழ்க்கை என்பது போராட்டம்’ என்பதை யாரேனும் மறுத்துக் கொள்ள முடியுமா? மொத்தமாய் பலருடனோ சிலருடனோ - தனி மனிதன் தன்னுடனோ நடத்துகின்ற போராட்டம். முடிவு! உயிர் தோற்றுத் தான் போய்விடுகிறது. போராட்டத்தின் உச்சியில், அந்த விழிப்பில் தான் எவ்வளவு ரசம் ததும்பி நிற்கிறது ‘உயிர் அழிகிறதில்லை’ என்று விஞ்ஞானியும், ஆத்மா புதிய ஆடைகளை உடுத்துக் கொள்கிறதென்று ஆத்மீகியும் எவ்வளவு நம்பகமாய்த் தான் சொல்லுகின்றான். அவனோடும் இவனோடும் அது தீர்ந்து விடுகிறதில்லையே? நேற்றைய உயிருக்கு முள்ளுக் குத்தினால் நோகத்தான் நோகிறது. இன்றைய ‘புதிய ஆடை’’க்கு மட்டும் நோகாமல் இருக்கிறது?

கண் முன்னால் தெரிந்த இந்தப் பிரபஞ்சம் நொடிப்போதுக்கிடையில் எவ்வளவு வெறிச் சோடிப் போய்க் கொடுமையாய் மாறிவிடுகிறது? எவ்வளவு போராட்டம்? நுண்ணிய அணுக்கள் பற்றிப் பல்கிப் படருவதற்குத் தமக்குரிய சூழ் நிலையை உருவாக்க நோக்கி ஓடும் வேகம். மலர் மரங்களின் அகத்தும் புறத்துமோ - ஜீவாதாரமான உணவைப் பெற்றுக் கொள்ள நடக்கும் போராட்டம்.

சை, இது என்ன உலகம்? போராட்டம் - போராட்டம் - போராட்டம், பிறகு என்னதான் இந்த உலகத்தில் இருக்கிறது? உயிர் அரும்புகிற போதே போராட்டமும் ஆரம்பித்து விடுகிறதா? வளருகிற போதே - போராட்டமும் ஆரம்பித்து விடுகிறதா? வளருகிற போதே - போராட்டமான வாழ்வின் பிரச்சினைகளும் வளர்ந்து மலர்ந்து தானே தன்னதன் சூழ்நிலையை வளமையுடையதாக்கி உயிர்களை நசுக்கிவிடுகிறதா?

ஒரு காலத்தில் சிறுமியாய் நான் இருந்த போது - ‘வாழ்க்கை என்பது போராட்டம்’ என்று யாரேனும் கூறியிருந்தால் நிச்சயம் நம்பியிருப்பேனா? பாவாடையின் இரு எல்லை முகப்புக்களையும் விரல்களால் இழுத்துப் பிடித்தபடியே பம்பர மாடிச் சிரித்திருக்கமாட்டேனா?

வாழ்க்கைதான் எவ்வளவு வேகமாய் ஓடிவிடுகிறது? சிறுமியாய் இருந்த காலம் போய் சுற்றம்-தெரிந்தவர் என்கிற வழமையான உறவுகளுக்கு அப்பால் மனம் நகர்ந்து - முற்றும் தெரியாதவர் என்கிற ஒருவருக்காய் மனம் உருவி நிற்கிற பருவத்தை அடைந்து நிற்கிற போது தான் பெண்ணின்

வாழ்வுப் போராட்டம் ஆரம்பிக்கிறதா?

அந்த நினைவுகளை மீட்கிறபோதே நெஞ்சு எவ்வளவு ஏங்கிக் கசிகிறது. பார்க்கிற இடமெல்லாம் 'நெஞ்சு இடம் கொள்கிறவர்' மிதித்த இடங்கள் - கண்ட இடங்கள் - தொட்டும் நீவியும் மகிழ்ந்த இடங்கள் - என்று வெறுமையாய் மனம் கசிந்து பரவசமான நினைவு ஓட்டங்களிலே மிதக்கிற போது வாழ்க்கைதான் எவ்வளவு பேரின்பமாய்ப்பட்டது. அந்த நினைவுப் போதையிலே அந்தப் பருவத்து வாழ்க்கை தான் எப்படிச் சுடர் விட்டது!

வெறுமையிலே - சின்னதும் பெரியதுமான வாழ்வின் மனம் சம்பந்தமான காதற் கற்பனைகளிலே மிதக்கிறதிலே எவ்வளவோ சுகம்! அந்தச் சுகத்திலே ஒரு இங்கிதம்.வெறுமை நீடித்துவிட வேண்டுமென்கிற தவிப்பு, இரக்கம், அந்த வெறுமையிலே எல்லா உலகின் நளினமும் - கற்பனைகளும் - வண்ணமும் - உயிரும் கலந்த நிறைவு.

நேரம் இப்போது நான்கு மணிக்கு மேலாகியிருக்கலாம். அதோடு ஹோலில் இருந்து 'அவர்' விடும் சிகரெட்டின் கசப்பான நாற்றம் பனிப் புகாரைப் போல் படர்ந்து வருகிறது. அது குளிரின் வேதனை. அந்த வேதனையில் கூட, ஒரு சுகம். இதிலே நரகத்தின் நாற்றம். எப்போது அது ஓயும், என்று சொல்லலாமா? தாம்பத்ய வாழ்வின் ஆரம்பத்தில் இருந்தே- 'அவர்' விடுகிற சிகரெட்டின் புகை ஓயவில்லை. பொசிந்து கருகிப்போகிற அந்தப் புகையிலை கூட ஏதோ ஒரு வகையில் திருப்தியுற்றிருக்கலாம். ஆனால் அவருடன் வாழ்ந்த நானோ? கேவலம். என்னைக் கூடச் சிகரெட்டாய்த் தான் கருதி ஊதினார். ஆனால், பெண்ணின் நளினமும் - சுகங்களும் - தாய்மையும் படருகிற நெஞ்சிலேயல்லவோ தீயை மூட்டிப் புகைத்தார்.

'பொருத்தமான கற்பனை தான்' - தாய்மை மனம் சிந்தனைக்கிடையிலும் மகிழ்ந்துபோகத் தான் செய்கிறது. கேவலம் இந்த அற்பமான மனதிற்கு மட்டும் துணிவிருந்தால் - ஆற்றிவிடுகிற துணிவிருந்தால்......?

நடு ஹோலில் இருந்தும் இன்னும் விசித்திரமான ஒலிகள் வரத் தொடங்குகின்றன. அவை 'அவரின்' வாயிலிருந்தும் தான் வருகின்றன. யாரேனும் பார்வையாளன் கண்களுக்கு - போதை தரும் மயக்கத்தில் வேகமும், துடிப்பும் நிரம்பியதாய்த் தோன்றும். பென்னம் பெரிய கண்களை - நயனங்களின் கீழ்ப் புறத்தை சுமையாய்த் தாங்கியபடியே நிற்கிற கன்னச் சதைப்பிடிப்பை - பல்ப் வெளிச்சத்தில் நரைத்தும் நரைக்காமலும் உலைந்துபோய் நிற்கிற மயிர்கற்றையை கைகளையும் கால்களையும் ஆட்டிநிற்கிற உணர்ச்சி வெறியைப் பார்க்கிறபோது அவன் என்னென்ன கற்பனை வளர்த்துக் கொள்வானோ?

வாழ்க்கை எவ்வளவு ரசமாய்த் தெரிகிறது. வாழ்வின் வேதனையை மொத்தமாயோ, தனித்தோ பார்க்கிற போது - பார்வையாளன் கண்களுக்குக்

கவிதையாய் - கதையாய் - ஓவியமுமாய் - கனிந்து போய் கலையாய்ப் படுகிறது. வேதனையின் ரசத்தில் கூட மனிதன் அடிபட்டுக் கொள்கிறானே? யதார்த்தமான வேதனை, யதார்த்தமற்ற வேதனை என்கிற மூடவிசாரத்தில் பிறக்கிற வேதனை-ஆனாலோ, பார்வையாளனே வேதனையின் கனமாய் நின்று பாார்க்கிற போது மட்டும் அவன் வாழ்க்கையை வேறுவிதமாய்ப் புரிந்து கொள்கிறானோ? வேண்டுமானால் பயிற்றிய புலனும் - கலைமனதின் நுட்பமான சிறு பொறிகளும் அதையும் அற்ப நேரம் 'பிரபஞ்ச ரசமாயத் தோற்றச் செய்யலாம். பிறகு? அவனாகவே தான் கத்துகிறானே. முள்ளுக் குத்தினால் நோவை மூட முடியுமோ?

பார்க்கப் போனால் - எட்டி நின்று பார்த்தால் அவரின் அமைப்பும் தோற்றமும் ரசனையாகத்தான் தெரிகிறது. நெருங்கிப் பார்த்தால் தாம்பத்திய வாழ்வின் இந்தப் பதினாறு வருடங்களில் அது ரசனையாய்ப் படவில்லை. வேறுவிதமாகத்தான் படுகிறது. விதி, மர்மமாய் மென்மையான எனது இருதயத்தின் நளினமான ஆசைகளும், கனவுகளும் பிறந்து படர்ந்த நூலிழைகளை அறுக்கும் விஷமாய்த்தான் படுகிறது. ஆம், அவருக்கு வெறி - வெறி.

உலகம் புதிய உயிரையும் புதிய நம்பிக்கைகளையும் சேர்த்துப் பார்க்கிற ஆசையோடு விடிகிறபோதேயா என்று உலகம் பார்க்கிற பார்வையின் ஊடே நிற்கிற சந்தேகமான கேள்விகளை என்னால் பார்த்துக் கொள்ள முடியத்தான் முடிகிறது? அதைப் பற்றி எனக்கு அக்கறையில்லை. வாழ்க்கையை யாரேனும் இப்படி என்று விளங்கிப் புரிய வைக்கமுடியுமா? பட்டுத்தான் அறியவேண்டும்.

'பழையனவும் புதியனவும் ஆன' எதையும் லட்சியம் செய்யாமல் தன்னை அவர் ஆக்கிக் கொள்ளத் தொடங்கிவிட்டார். அவர் குடிக்கத் தொடங்கிவிட்டார். அதற்கு அந்தி சாய்ந்து - அவர் சாய்கிற வரையும் ஓய்வில்லை. பதினாறு வருட இந்தத் தாம்பத்ய வாழ்வில் அதற்கு இன்னமும் ஓய்வில்லை. அது மட்டும் ஓய்ந்திருந்தால்.......?

என்னையே பார்த்துச் சிரித்துக் கொள்ள வேண்டும் போலத் தான் படுகிறது. என்னையே அளவுகோலாய் வைத்துப் பார்க்கிற போது - 'வாழ்க்கை என்பது போராட்டம்' என்று மட்டும் சொல்லி விடுவதற்கு இயலாதுதான். எட்டி நின்ற படியே பார்க்கின்ற பார்வையாளனைப் பற்றி அவன் விமர்சனத்தைப் பற்றிக் கவலைப் பட எனக்கு விருப்பம் இல்லை. ஆனாலோ? நெருங்கி நின்ற படியே 'பெண்மை வாழ்க வாழ்க என்று கூத்திடுவோமடா' - என்று பாடுகிற மகாகவியைப் பற்றி நினைக்கிறபோதோ சிரிப்புத்தான் வருகிறது.

நடு ஹோலில் குழந்தை வீரிட்டு அலறுகிறது. வயது பத்துக்கூட இல்லை. பட்டும் பட்டும் தகப்பனோடு தான் படுத்துறங்குவேன் என்று அடம்பிடித்த அந்தக் குழந்தைக்கு இது கிடைத்துத்தான் ஆகவேண்டும்.

'அவர்' - 'அவரே தான்' - தன் மயக்கத்தில் அந்தக் குழந்தையை அப்படிப் பாடாப் படுத்துகிறார். எழும்பிப் போய் தடுத்துவிடவேண்டும் என்று உத்வேகம் எழுகிறது. தாய் மனம் மறுகி மறுகிக் கசிகிறது. இந்த அவலத்தை எதிர்பார்த்த படியே கிடக்கும் மூத்த குழந்தை, யமனை எதிர்பார்த்த படியே கிடக்கிற நோயாளனின் கண்களைப் போல - அதையெல்லாம் போக்க யாரால் முடியும்? தந்தை - மகன் - மனைவி என்கிற ஒட்டுறவுகள் தடம்புரண்டு போய் முற்றும் வெவ்வேறான - முக்கோணத்தில் நடம்புரிகிறபோது -முக்கோணமாய் மனம் போராட்டம் ஆடுகிற போது, என்ன தான் செய்து கொள்ளமுடியும்!

இந்த உலகம் அங்கேதான் கொடுமையைச் செய்துவிடுகிறது. பெண், பெண் என்று இல்லாத மேன்மைகளைக் கொடுத்தும் கெடுத்திருக்கிறது. ஆனாலோ இயற்கை மிக மோசமாய்ப் பெண்ணை வஞ்சித்து விட்டது.

இது ஆடவனது உலகம். பெரும்பாலான ஆடவன் வாழ்க்கை என்பது பெண்ணுக்குப் போராட்டமானது என்பதை மட்டும்தான் உணர்த்திக் காட்டிக் கொண்டிருக்கிறான். அவனிடம் தான் பெண்ணின் தாரதம்மியத்தை எடைபோடுகிற மேதாவிலாசமும் இருப்பதாய்ப் பெண்மையே நம்பிக் கொண்டிருக்கிறது. அது மாறாது. மாற்றங்கள் இயற்கையின் இயல்பான அச்சில் நுழைவதில்லை. கொலை செய்கிறவனே நீதிபதியாக நிற்கிறபோது பெண்ணின் குடும்ப வாழ்க்கை போராட்டமாக மட்டும்தான் நிற்கும்!

பொழுது புலர்ந்துவிட்டது. பனிப்புகார் மறையவில்லை. சற்றுப் பொழுது போனால் அவை மறைந்துவிடும். வாழ்வின் ஜீவநாதம் மாற்றத்தின் மத்தியில் தான் நெகிழ்ந்து நகருவதாய் இயற்கை போதிக்கத் தான் போதிக்கிறது. மனித மனம் மட்டும் நெகிழ்விலே நடக்கிறதா? பிரபஞ்சம் எவ்வளவு புதிராய்த் தெரிகிறது! அதோ காகம் கரைகிறது. சேவல் நெடிதாய்க் குரல் எடுத்துக் கூவுகிறது. அதற்கு விடையாய்ப் பிறிதொன்று. கறவைக் காய்க் காத்து நின்ற பசு சுமையை நீக்கிவிடத் துடிக்கும் கத்தல். விடிவை நோக்கித் தாய் மடிமீது புலனாயிருந்த கன்றின் கத்தல். என்ன சுகம். உயிரிலேயும் குரலிலேயும் தான் என்ன இங்கிதமான நெகிழ்ச்சிகள். மலர்ச்சிகள்.

எனக்கு மட்டும் வாழ்க்கை ஏன் தான் இப்படிப் போக வேண்டுமோ? தாம்பத்ய வாழ்வின் ஆரம்பகாலம் தொடக்கம் இதேமாதிரி ஏன்தான் அமைந்ததோ? எங்கோ - எதற்கோ - எதற்காகவோ என் சுகங்கள் யாராலோ வேண்டுமென்றே தடைபோடப்படுவதாய்ப் படுகிறது.

வாழ்க்கை என்கிற நீண்ட போராட்டத்தின் முடிவு சுகமாகவே அமைந்து கொள்ள முடியுமா? அது சாத்தியமில்லைத்தான். ஆனாலோ, தாம்பத்ய வாழ்வு போராட்டமாய் அமைந்து விடுகிறதிலே - ஈவிரக்கமற்ற நெகிழாத போராட்டமாய் அமைந்து போகிறபோது - எச்சமாய்ப் பெண்ணுக்கு எதுதான் தேறி விடுகிறது.

விடிவை நோக்கிச் சற்று முன்னால் மகிழ்வுடன் கத்திய கன்றின் கத்தலில் நிரம்பித் ததும்பிய வாழ்வின் வேகம் எனக்கு மட்டும் எதற்கு இல்லாமற் போயிற்றோ?

பொழுது நன்றாகத்தான் விடிந்துவிட்டது. எழுந்து போய் நான் ஆற்றிவிட வேண்டிய கருமம் தான் கொட்டிக்கிடக்கிறதா? அடுக்களைக்குப் போனால் 'அது இல்லை - இது - இது இல்லை' என்கிற சங்கதி எனக்குத் தெரியத்தான் தெரியும் - தெரிந்து கொள்வதற்காகப் போவதா? தெரிந்து கொண்டு மனத்தோடு மனம் அழுவதைத் தவிர வேறு என்னதான் கிடைக்கப் போகிறது? 'இல்லை இது தேவை'. என்கிற வார்த்தையை நான் சொல்லிக் கொள்ளத் தான் முடியுமா?

ஆடவன் மனம் அன்பாய் இருக்கிற போது பெண் கேவலமாய்க் கூட நெகிழ்ந்து போகலாம்! கயமைத்தனமாய் இருக்கிற போது நெகிழ்ந்து போகலாமா?

ஆகா! அவரும் நானும் நடத்திய தாம்பத்ய வாழ்க்கை இருக்கிறதே..... அதற்காக ஏங்கித்தான் என்ன செய்ய முடியும்? அந்தரங்கமான உயிரின் பிணைப்பு இருக்கிறதே - அது வாழ்வின் தெய்வீகம் பொருந்திய இணைப்பல்லவா? அந்த இணைப்பே மனித மனத்தை இழந்து மிருக மனமாய் நிற்கிற போது - கேவலமாய் நிற்கிற போது - கேவலமாய் அசிங்கமாய் மாறிவிடுகிறது. மிருகத்தனமான ஆடவர்களிடம் என்னை ஒத்த எத்தனை பெண்கள் நெற்றிக்கு நேரே அவலட்சணமாய் நசுங்கி மிதிக்கப்படுகிறார்களோ?

ஒரு காலத்தில் அவரும் ஆசிரியராய் இருந்தார் என்கிற நினைவிலே தான் எவ்வளவு சிரிப்பு வருகின்றது. படிப்பித்த அழகை மட்டும் கண்டிருந்தால் அந்தக் கேலிக் கூத்திற்காகவே மீண்டும் இந்தப் போராட்டமான வாழ்வுச் சகதியில் இவருடனேயே வாழ்ந்து கொள்ளலாமே?

இடையே முறித்துக் கொண்டார். குடிக்கவே நேரம் போதாத போது அவர் என்ன தான் செய்ய முடியும். பென்ஷன் வருகிறது. இன்னும் இருந்ததும் - கிடந்ததும் ஆக விற்று, விற்றுத் தவறணைக்குப் போகிறது. காணிகள் ஒரு பகுதி கூட, ஈடாய்ப் போய் விட்டது.

இந்த வாழ்க்கையிலே கூட. ஒரு சுவையிருக்கத்தான் இருக்கிறது. சாராயம் - சிகரெட்டுமாய்க் குடித்தபடியே மிருகத்தனமாய் நடந்து கொள்கிற மனிதர் - நாலு பேர் மதிக்க வேண்டுமென்பதற்காய் எவ்வளவு கேலிக் கிடமாய்ப் பல சமயங்களில் நடந்து கொள்கிறார்!

ஹோலைவிட்டு அவர் நடந்து வருவது நன்றாகவே கேட்கிறது. அவர் என்னை அண்மியபோது நடக்கப் போவனவற்றை என்னால் கற்பனை செய்து கொள்ள முடிகிறது. நடுச்சாமத்தில் 'அவரின்' துன்புறுத்தலுக்காய் அஞ்சி நடுங்கியபடியே வெளி விறாந்தையில் பல சமயங்களில் இந்த

ஈஸிச்செயரில் படுத்ததுண்டு. நேற்று மிக மோசமாக நான் திமிறியபடியே வந்துவிட்டேன். அதன் விளைவுகள் இப்போது கண் முன்னால் நடந்து கொள்ளத்தான் போகின்றன.

'அவர்', 'அவர்' - சிரிப்புச் சிரிப்பாய் வருகிறது. சிரிப்புச் சிரிப்பாய் வருகிறது. இந்தப் பெண்ணினம் இருக்கிறதே நெஞ்சங்களில் கனவுகளைச் சுமந்தபடியே - யாரோ ஒரு 'அவருக்'காய் கசிந்து உருகுகிறதே - அந்த நெஞ்சங்கள் 'இந்த இவரை' மட்டும் இப்போது பார்க்கக் கூடுமானால்.....! மயிரைப் பிடித்தபடியே அடிக்கிறார் உதைக்கிறார், கன்னக் கதுப்புக்களை கிள்ளுகிறார். நெற்றியைச் சட்டத்தோடு மோதுகிறார். எனக்கு நோகவேயில்லை. நோகவே கூடாது. அவர் கணவரல்லவா? நோகவே கூடாது என்பதற்காகவல்லவா காவியங்களில் தமிழ்ப் பெண்ணுக்கு வடிவு சமைத்திருக்கிறது ஆண் சமூகம்?

நான் அசையவில்லை. அசைந்துதான் என்ன ஆகிறது. இன்று நேற்று நடைபெறுகிறதா, சில நினைவுகளை மீட்டிக் கொள்ளவே நடுக்கமாய் இருக்கிறதே? திடீர் என்று அறைக் கதவை நான் அறியாமலே சாத்திவிட்டு எதிரியை உதைப்பதுபோல உதைக்கிற 'அவர்' - பசிய குழந்தைகளை காரணமில்லாமல் ஈவிரக்கமின்றி உதைக்கிற 'அவர்' - கணவன் அல்லவா?

அவர் பிடியை நகர்த்த வில்லை. பத்து வயது நிரம்பாத அந்தக் குழந்தை அலமலக்க வாயிற் படியண்டை நின்ற படியே விம்மி விம்மி அழுகிறது. அந்தக் குழந்தையின் மனதில் என்னென்ன நினைவுகள். அரும்புமோ? மூத்தவன் கூட, நிற்கிறானே! அவன் கண்களில்......!

அசுரத்தனத்தின் சாயல் மனதிற்குத் தெரிந்துதான் ஆகிறது? ஆனால் என்ன? தடுத்துக கொள்வதற்கு முன்னால் தான் விபரீதங்கள் நடந்துவிடுகின்றனவே? எவ்வளவு நேரமாய் பன்னிரண்டு வயது நிரம்பாத அந்தக் குழந்தை நிற்கிறதோ?

''விடு கையை - கையை விடடா?'' அவன் தான் என்னமாய்க் கத்துகிறான்.

அதன் விளைவு!

நான் சுருண்டு விழுகிறேன். தீமைக்கு முடிவேது. வாழ்வுப் போராட்டத்திற்குத்தான் முடிவேது?

'பேப்பர் வெயிட் உருண்டு விழுகிறது. நெற்றியைப் பிடித்தபடியே சொட்டுகிற குருதியோடு புலியாய் மாறிவிட்டார் அவர். எவ்வளவு கோரமாய் முடிந்துவிட்டது.

அவன் குரல்-அந்தப் பாலகனின் குரல் கேட்கவிலலை. தொண்டைக் குழியில் உதைத்த உதையில் நசுங்கி அடைபட்டுப் போய்விட்டதோ? இனிமட்டும் அது கேட்கமுடியுமா?

ஊரெல்லாம் கூடி பேரொலி எழுப்பி அழுகிறது. உலகம் மலர்ந்து விடிகிற போது - உலகத்து உயிரின் புதியதும் - அரியதுமான ஆசைகளை நான் கேட்கத்தான் முடிந்தது. ஆனால், உலகம் போராடிக் கொண்டே, இழந்து கொண்டிருக்கிறது என்கிற உண்மையின் சொரூபமாய் மரண ஓலம் என் வீட்டில் எழுந்தது.

பொலிஸ் வந்தது. நான் தான் என்று ஒப்புக் கொண்டேன். உண்மை வெளியாகித்தான் விடும். உண்மை வெளியாகி விடாமல் நானே அந்த மாபாதகத்தை ஆற்றிவிட்டேனென்று நம்பப்பண்ணி - அதன் காரணமாக தண்டனைகளை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்கிற வெறி உசுப்புகிறது.

காலம் காலமாய் மொத்தமான ஆண் சமூகம் கயமைத் தனமாய் - சின்னத்தனமாய் இனிமேல் இல்லை, என்கிற மிருகத்தனமாய் - பெண்ணைக் கசக்கிவிட்டு உயிர் மூச்சான அவளின் தாம்பத்திய வாழ்வை - நரகமான நீண்ட போராட்டமாக்கி விட்டு-மன மயக்கத்தில் காவியத்திலும் - ஓவியத்திலும் 'அவர்' என்கின்ற உயிரில் தமிழ்ப் பெண் கொண்டிருக்கிற விசுவாசத்திற்கு எது எதுவோ புலம்பிவிட்டு நகர்ந்து விட்டார்கள். தமிழ்ப் பண்பாடும் - கலாச்சாரமும் - இலக்கியமும் 'பெண்' என்கிற தன்மைக்குக் கொடுத்த போதையில் அவள் வெற்றியின்றியே போராடிப் போராடி இழந்து கொண்டிருக்கிறாள்!

அந்தப் 'போதையில்' என்னைப் போல் எத்தனை பெண்கள் தாம்பத்திய வாழ்வு என்கிற போராட்ட வெறுமையில் திருப்தியுறுகிறார்களோ?

ஜீப் நகருகிறது. வெறுமை விரிகிறது. வெறுமையில் திருப்தியும் மலருகிறது.

*ஈழநாடு*
*14-03-1965*

# சத்தியத்தின் குரல்

சத்தியத்தின் குரல் என் செவிப் புலனில் தெளிவாய் விழுகிறது. சிற்றாறு ஒன்று வெண் மணற் பரப்பின் மருங்கே படிந்து நிற்கும் வெள்ளிய கற்களிலே இதமாய்த் தன் சின்னஞ்சிறு அலைகளால் மோதுகிற போது இதமாய்க் குலுங்கி எழும் ஒலி போலக் கேட்கிறது. அதனோடு ஒட்டி அந்த ஒலியின் இழுப்பில் தன்னிச்சையாய் இழுபட்டு அச்சத்தியத்தின் பூரணப் பொலிவோடு கிறங்கி அதுவே நானாய் நிற்க முடியத்தான் இல்லை.

கால வெள்ளத்தில் நீந்தி இந்த நூற்றாண்டுக்கும் நகர்ப் புறத்திற்கும் உரியதாய் விரவி நிற்கும் கயமைத் தனங்களும் சின்னத் தனங்களும் போட்டி பொறாமைகளும் என்னையும் பற்றிக் கொண்டு தான் நிற்கின்றன. காலை மாலை என்கிற இயற்கையின் பரிசுத்தம் நிரம்பிய எல்லைக்கோடுகளுள் மறைந்தும் மறையாமலும் தெரிகிற அக உணர்வுகளைத் தொட்டு உலுப்புகிற இயற்கையின் தோற்றக் கிறக்கத்தில் சகலதையும் மறந்து நான் என்கிற தனித்துவமான உணர்வு கழன்று போகச் சத்தியத்திற்கே நிற்க முனைகிற போது எங்கிருந்தோ என் கயமைத்தனங்கள் சொல்லிக் கொள்ளாமல் தலையை நீட்டுகின்றன. அவற்றின் முகிழ்வில் புனிதத்தன்மை கழன்று போய் வீதியில் இறங்குகிறபோது அவனோ - அவளோ அப்போது தங்கள் புனிதமான அக உணர்வின் சத்தியத்தை மறந்துவிட்டு எதிர்ப்படுகிறார்கள். பிறகு? எது எதுவோ நடந்துவிடுகின்றன. நடப்பின் முடிவில் மனம் அவலமாய் பிளிறுகிறது. சத்தியத்தின் சுவடு கூடத் தெரிகிறதில்லை. அழத்தான் முடிகிறது. அழுது அழுது உயிர்க் கூட்டில் சத்தியத்தின் குரலை மீண்டும் ஏற்றுகிறபோது ஒரு கணம் ஒளி மயமாய்த் தெரிகிறது. செய்த தவறுகளுக்குரியவன் நானல்ல என்கிற இறுமாப்பு இருள்மயமாய் நிற்க அவற்றின் இடையே

சத்தியமாய் நிற்க முயலுகிறேன் என்கிற ஒளியின் பிரகாசத்தில் நான் மேலே மேலே மிதக்கிறேன்.

பிறகு, விடிந்து வீதியில் இறங்கினால் சத்தியம் நெகிழ்ந்து போய் விடுகிறது. கதோ உபநிஷத்தில் வருகிற நசிகேசனைப் போலச் சத்தியத்தை நோக்கி சத்தியமாகவே சரிந்து இடறுப் பட்டு விழாமல் நடந்துபோகிறதென்பு மட்டும் இருக்குமானால் - நசிகேசன் எங்கே நான் எங்கே? திரும்புகிற இடமெல்லாம் புனித வேள்வியில் ஆத்மாவை மலர் விக்க முயன்று, ஆத்மீக அடி நாதமாய் அனைத்துலக மனிதனை நோக்கி ஞானிகள் பேசியும் பாடியும் மெய்ப்பித்து வந்த அனைத்துலக மனித காலம் எங்கே?

நெஞ்சு வரண்டு போகிறது. காரண ரீதியாய் தொட்டு விளக்கிக் காட்ட முடியாத அக உணர்வுகளின் நம்பிக்கையில் புறவாழ்வின் சுகங்களைத் துறந்துவிட்டு உலக மெல்லாம் தனது என்று நின்ற அந்தத் துறவிகள் அவர்களது ஆத்ம போதனைகள் எல்லாம் தெரியத் தான் தெரிகின்றன. கண் முன்னால் நான் தொட்டும் தடவியும் விழுந்தும் புரண்டும் மகிழ்ந்தும் போன யாழ்ப்பாண நகர்ப் புறத்து மண்ணும் தெரியத்தான் தெரிகிறது.

நானும் கூடப் புறவாழ்வின் சகல படிகளையும் தோற்றுவிட்டுத்தான் நிற்கிறேன். எதனாலோ எப்போதோ தோற்கப்பட்ட ஒரு தோல்வியின் வித்திலிருந்து வெடித்துக் கிளம்பிய அக உணர்வு ஒன்று வலிமையுடையதாகி, அதுவே நானாய் மாறிச் சத்தியத்தின் குரலிற்காய் என் செவிப்புலனை மலரவைத்துக் கொண்டு தான் நிற்கின்றேன். இப்போது அந்த தோல்வியின் முடிவில் உள்ளத்தில் ஆழமாய் பதிந்து போன வடுக்களின் நிழல்கூட இல்லை. சத்தியத்தின் நிழல்கள் தெரிகின்றன. எப்பொழுதோ எங்கிருந்தோ இன்னிசையாய்க் கேட்கும் அந்தக் குரலில் சகலதையுமே துறந்து சகலதுக்குமே அரசனாய் நிற்கலாம் என்கிற இறுமாப்பும் சுகமுமே நானாய், என் உள் மலர்வித்து வளர்த்துக் கொண்ட உலகம். அந்த உலகத்தினுள்ளே சத்தியத்தை நோக்கிச் சதா ஓடிக் கொண்டிருக்கும் இருதயத் துடிப்பு சங்கீதமாய் இருக்கிறது. அந்த இன் ஒளி வெறும் தோற்றம் தான். அது தோற்றம் தான் என்கிற சங்கதியைப் பல தரம் இடறுப்பட்டுப் புரளுகிற போதுதான் உணர முடிகிறது.

புலன்களை மதுவுக்கு விற்றுவிட்டு மனித மனங்களோடு தொடர்பு கொள்கிறபோது சத்திய இருதயத்தின் இன்னொலி மாறி அவலக் குரலாய் எழுந்துவிடுகிறது. பிறகு உலகத்தின் பரிகாசமான சிரிப்பு. அந்தச் சிரிப்பின் ஒலி, என் உள் புகுந்து சத்திய உலகத்தின் கதவுகளில் மோதி உடைந்து வெறுமனே படிகிறது. சத்திய உலகத்தின் இருதயத்தில் உள் புகுந்து நின்று ஜீவனைத் தொடுகிற குரல் அந்த உலகத்து மனிதர்களின் பரிகாசச் சிரிப்பில் இல்லை. மோதிய ஒலி முற்றும் முழுதான வேகத்தோடு புறப்பட்டு வெளியே உலவுகிறபோது, அது, அந்த ஒலி சிரித்தவனையே சிரிக்கிறது.

சத்தியம் என்பது அடி மனதின் அடியில் கிளர்ந்தெழும் புனித உணர்வுகள். அவை வெளியுலகத்தில் குழந்தைத்தனமாயும் வேடிக்கையாகவும் வெளியே புறப்படுகிறபோது - அந்த உணர்வுகள் உருவாக்கும் செயல்கள் சத்தியத்தின் செயல்களாய் நின்றாலும் சத்தியத்தின் குரலைக் கேட்கிறவன் செய்கிற செயல்களல்ல. அது இந்த மண்ணில் நிற்கிற மனிதர்கள் காணுகிறதாயும் கற்பிக்கிறதாயும் கேட்கிறதாயும் சொல்லப்படுகிற தவறுகள்.

நெடு நேரமாய் என்னையே என் மனம் அளந்து பார்க்கிறது. அந்தப் பார்வையில் ஆண்டுக்கணக்காய் என் உள் சமைந்து நின்ற ஒரு உலகத்தின் மௌனமான ஒலிகள் தேங்கிக் கேட்கின்றன. சமாதானமாக அன்று.. நித்தியமான சத்தியத்தை நோக்கி நடைபயில்கிற போது எதனாலோ இடறுண்டு நிகழ்ச்சிகள் ஒலி மயமாய்க் கூடிச் சிரிக்கின்றன.

நான் சத்தியமில்லை. அது எனக்குத் தெரியத் தான் தெரிகிறது. என்றோ ஒரு நாள் சத்தியமாகிவிடுவேன் என்கிற நம்பிக்கையில் சத்தியத்தின் உணர்வில் மட்டும் இழுபட்டு நிற்கிற மனிதன் நான். வெறுமனே மனிதன். கோடி கோடியாய்ப் பிரபஞ்சத் தொட்டிலில் தம் பெயர்களைப் பதிக்காமல் கவிதை எழுதிக் கொண்டேயிருக்கும் உயிர்த் தொகுதிகளைக் கண்டும், அவை தரும் பேரின்ப சுகத்தில் கிறங்கி நின்றும் அவற்றிற்கு உருவம் கொடுத்தும் அவற்றால் புகழ் சம்பாதித்துக் கொள்ள முனைகிற வெறும் மனிதன். ஆனாலும் சத்தியத்தின் குரலை, இடையீடற்ற அந்தக் குரலை வெறும் நம்பிக்கையின் பேரிலாவது கேட்டுக் கொண்டிருக்கிற மனிதன்.

அந்த வெறும் மனிதனான என் உள் சத்தியமான ஓர் உருவத்தின் குரலையும் சத்தியமான ஓர் உருவத்தையும் கண்முன் கண்டுவிட வேண்டும் என்று என் நெஞ்சு துடிதுடிக்கிறது. நமது உபநிஷத்தின் ஏடுகளிலே தெரிகிற சத்தியமான வார்த்தைகளையும் அவ்வார்த்தைகளின் உள்ளே சத்தியமாய் நிற்கிற இருதயங்களையும் இரவு பகலாய்ப் பல சந்தர்ப்பங்களில் நான் கண்டதுண்டு. அவை வெறுமனே உணர்வுகளும் உணர்வுகளும் பேசிக்கொள்கிற சக்திகள். அவற்றிற்கு இந்த உலகத்தில் எந்த மதிப்பும் இல்லை, என்கிற உண்மையும் எனக்குத் தெரியும். எங்கோ வெகுதூரத்துக்கப்பால் நிற்கிற மனிதனின் வியாக்கியானம். வெறுமனே எழுந்து வெறுமனே தேய்ந்து விடத் தான் வேண்டியிருக்கிறது.

இந்தப் போதில் என் உள் ஓர் உணர்வு முகிழ்கிறது. புதியதாய் முகில் கருநீலம் போர்க்கிறபோது, இடையே இடி நகை ஒலி செய்கிற போது நடைபாதை தவிர்ந்த இருண்ட பிரதேசங்களில் வெடித்துக் கிளம்பும் காளான்போல அன்று. எல்லையற்ற கருநீலப் பரப்பில் சதா மாறி மாறி உருண்டும் புரண்டும் போகிற அலைபோன்ற உணர்வுதான். எப்படியோ அவற்றை ஆண்டும் அடக்கியும் துரத்தியும் விட்டுச் சத்தியத்தின் தடத்தில் கால் பாவி நிமிருகிறபோது, நானே காரணமில்லாமல், நானே என்னை

இடறி விட்டவை போக என் உள் உள்ளான எதுவோ அவலமாய்ப் புதுக் குரல் எழுப்புகிற அநுபவம்..... சத்தியத்தின் தடத்தில் நடக்கிற எவன் செவிப் புலனிலும் அந்த அனுபவத்தின் துன்ப மயமான ஒலி கேட்கத்தான் கேட்கிறது.

இப்போது அந்தக் குரல் புதிய உணர்வின் அலறல்.

பிரிபடாத மௌன சுகத்தில் தேங்கியபடியே சத்தியத்தின் தடத்தில் கால் பாவ முனைகிறவன் இதன் ஒலியைத் தாங்கிக்கொள்ள முடியாதுதான். பிரிபடாத அவனது அந்த மௌனத்தை வெட்டி வெறும் ஒலிகளின் ஓசையாய் நிரப்பி அந்த வெறும் ஓசையினுள் அவனை நிறுத்திவிட்டு வெகு தூரத்திற்கப்பால் தான் மட்டும் பிரிபடாத மௌனமும் பேச்சுமாய்ச் சத்தியம் தன் அமுதமயமான இன் ஒலியைப் பிறப்பித்துக் கொண்டிருக்கும். செவிப் புலனில் பட்டும் படாமலும் நிற்கிற அதன் குரலில் எது எதுவோ இல்லாததும் பொல்லாததுமான குழப்பங்களாகி நிமிருகிறபோது நெஞ்சின் அடிவாரத்தில் எங்கிருந்தோ இடையீடற்றுச் சங்கிலிருந்தும் வீறிட்டு வருகிறாற் போலப் படும். ஒலி எழுப்புகிறவனும் ஒலியும் பிரிபட்டு நின்று அது அதுவே தன் தன் தடத்தில் சத்தியத்தின் ஒலியைத் தோய்த்து விடுகின்றன. எட்ட எட்டச் சத்தியத்தின் குரலுக்காய் ஓடுகிறவன் இரண்டு ஒலியும் ஒலி செய்கிறவனுமாய் மாறி அவையே இவையாய் இவையே அவையாய் மலர்ந்து விடுகின்றான்.

நான் பழைய மனிதன்.

வித்தை காட்டும் சத்தியத்தின் குரலுக்கு என் செவிகளை நிமிர்த்தியபடியே நெஞ்சில் ஊரும் உணர்வுகளின் தாள லயத்தையும் குழைத்துப் பிடித்து நிமிர்ந்து நிற்கிற துணிபு எனக்கு இருக்கிறது. என் உள், உள்ளின் உள், அகமும் புறமுமாய் வீறி எழும் அசிங்கங்கள், சின்னத்தனங்கள், கயமைகள், கொடுரங்கள் என் உள் நோக ஏற்றிய வேதனைகளின் சாரத்தில் புத்தம் புதிய உயிர்ப் பூவின் இதழ்களெல்லாம் நளினமாய் நிமிருகிற போது அவை நிறமற்ற பூக்கள் தாம். என்றோ எப்பொழுதோ நிமிர்ந்து நிற்கிற இதழ்களில் சத்தியத்தின் குரலில் தெரியும் வண்ணங்கள் படிந்து விடுமோ?

ஆனலோ இந்தப் புதிய உணர்வின் அலறல் பழையனவற்றின் அவ நம்பிக்கையில் கிளர்ந்தெழுந்ததன்று. புதியனவாய்ச் சத்தியத்தின் உருவத்தைப் பார்த்துவிட வேண்டுமென்கிற துடிப்பில் பிறந்த உணர்வு. சமாதானமாய் எது எதுவோ பிறக்கின்றன.

கதோ உபநிஷத்தில் வருகிற நசிகேசன் காற்றிற்கு அலைபாயாத தீபமொன்றை ஏந்திய படியே நடந்து போகிறாற்போல நெற்றிக்கு நேரே தெரிகிறது. தீபத்தின் கதிர்களை அலைத்து அலைத்து அவிக்கச் சுற்றுப்புறமெங்கும் புயல்வீசக் கருக்கூட்டிக் கொண்டுதான் இருக்கிறது. ஒரு சமயம் மங்கி அதன் ஒளிக் கற்றைகள் பக்கென்று அவிந்து போக அவை திரண்டு நிமிர்ந்து நின்றாலும் அக ஒளிக் கற்றைகள் சத்தியத்தின்

மங்காத இரகசியத்தைப் பேசிய படியே நிற்கின்றன.

''நசிகேசா''

''நசிகேசா''

''நசிகேசா''

எனக்கோ சிரிப்பு மூளுகிறது.

நேற்றைய உலகத்தின் செய்திகள், இன்றைய மனிதனின் செய்திகள் போலும், வறுமையும், பற்றுக்கோடும் அற்ற வாழ்க்கையுமாய் நிற்கிற பல மனிதர்கள் நாடும், மொழியும், நிறமும், உருவமும் முற்றற வேறுபட்ட மனிதர்கள் என் உள் . இது தான் நாங்கள். இதுதான் பிரத்தியட்ச உலகம். அது பரிகாசமாய்ச் சிரிக்கிற சிரிப்பில்லை.

வெகு தூரத்திற்கு அப்பால் நிற்கிற அந்த மனிதன் 'மனிதர்கள் நாங்கள்' என்ற ஒற்றுமையின் அடிச் சக்தியில் தனக்காய் 'என்ன செய்தாய், செய்கிறாய், செய்யப் போகிறாய்' என்று கேட்க முனைகிறபோது..... கண் முன்னால் உருவெளித் தோற்றமாய்த் தெரிகிற நசிகேசனை, அவன் அமரத்துவமான ஆத்மாவை, உபநிஷத்தின் மேம்பாட்டை, அதன் இன் ஒளியில் நான், என் உள் தோற்றும் - தோற்றும் விழுந்து புரண்டும் மலர்விக்க முயன்றும் முயன்றதையும் இதோ உனக்காய் முன்னும், இப்போதும், என்றும் தர முயன்று கொண்டிருக்கிறேன் என்கிற என் மனநிலை அவலட்சணமாய்த் தான் தெரிகிறாற்போல இருக்கிறது.

கண் முன்னால் உருவெளித் தோற்றமாய்த் தெரிந்த நசிகேசன் மறைந்து விட்டான், இப்போது இந்த உலகத்து மனிதன் நிற்கிறான்.

மலசலகூடம் துப்பரவு செய்கிற தொழிலாளி.

''பசிக்கிதா இந்த வெள்ளெனவா?''

எனக்கே தெரியும், அர்த்த மற்ற கேள்விதான். அவன் அவனாய் நிற்பதற்கு நம்மில் பலர் அப்படி அந்த ரகத்தில் கேள்வி மேல் கேள்வியாய்க் கேட்டுக் கொண்டு நிற்கிறது தான் காரணம் என்கிற சங்கதி என் உள்ளத்தே சரேலென்று வீங்கி எழுந்தது.

நசிகேசனையும், அக உணர்வுகள், சத்தியத்தின் குரல் சகலத்தையுமே துறந்து விட்டுக் குசினிக்குப் போனேன். காலை உணவிற்காய் அடுப்பில் அவிந்து கொண்டிருந்த இடியப்பத்தில் ஒன்றை எடுத்துப் பிசைந்த படியே வெளியே வந்தேன்.

''இந்தா''

கைகளில் இடியப்பத்தைப் பிசைந்து போட்டேன். அப்போது சடுதியாய் என் கைகள் பின்னுக்கு நகர்ந்தன. அவன் கைகளில் மிகச் சிறிய இடத்தில்

மலத்துண்டொன்று ஒட்டிக் கொண்டிருந்தது.

''அதைக் கொட்டு''

அருவருப்புடன் என் குரல் பிறந்தது.

''எதை?''

''உன் கையிலிருப்பதை''
''ஏன்?''

''உனக்குக் கண் குருடா? அங்கை பாரேன்?''

அவன் சிரித்தான். சிரித்த படியே அந்தப் பிசைந்த இடியப்பத்தை விழுங்கினான்.

நான் அருவருப்புடன் பார்த்தேன்.

அவன் முணுமுணுத்தான். ''ப்பூ, இந்தச் சுத்தத்தைப் பார்த்தா காலமே கடையிலே திங்கவேணும். கடையிலே திங்கக் காசு வேணும்''.

அவன் எழுந்து போய்விட்டான்.

அவனையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

நசிகேசன் போய்விட்டான்.

வீதியில் மல வண்டியின் சத்தம் எழுந்து கொண்டிருந்தது. சத்தியத்தின் ஒலி என் செவிப் புலனில் தெளிவாய் விழுந்தது.

*ஈழநாடு*
*20-08-1965*

# அம்மா

பங்குனி மாதத்தின் அனலாய்க் கொதிக்கின்ற வெய்யில் 'சுரீர்' - 'சுரீர்' என்று உறைக்கிறது. பார்க்கின்ற இடமெல்லாம் வெய்யிலில் வெதுங்கிப் புழுங்கி வியர்த்துக் கொட்டுகிறாற் போல மயக்கம். வானே கூசிக் குறுகிறாற் போல ஒரு தோற்றம்.

தார் றோட் உருகிப் 'பளீர்' என்று தார்க் குளம்பு பளிச் சிட்டுக் கசிகிறது. குழம்பாய் நெளிந்தோடிய அந்த றோட்டில் அவ்வப்போது ஓடிய கார்களின் ரயர்கள் படிந்த 'தடங்கள்' - மனோமயக்கத்தில், உருவச்சிலை பிடிக்கும் கலைஞன் மனத் தடத்தில் பிசைந்தப்பிய உருவங்கள் போலத் தெரிகின்றன. அரசடிச் சந்தியில் - நான்கு ரோடுகளும் சந்திக்கும் இடத்தில் அடிபருத்திருந்த அரச மரத்தின் முடி கொய்யப்பட்டு நிற்கிற காட்சி மனதைக் கொய்கிறது. அதன் நுனியில் அங்கொன்றும் இங்கொன்றுமாய் அரும்பியிருந்த தளிர்கள் சுடு வெய்யிலின் பூச்சில் பொன் பூசிய தளிர்கள் போலப் பள பளவென்று மின்னுகின்றன. அவற்றின் நரம்புகள் கூடத் துலக்காய்த் தெரிகின்றன. வெய்யிலில் பிறந்த மகிமைக்காய் யதார்த்தமாய் அவையே நேரடியாய் வாழ்த்திக் கொள்கிறாற்போலப் படுகிறது.

அரசமரத்தின் அடியில் நெளிந்தோடும் பருத்த வேர்க் கம்புகளின் இடையே எப்போதோ ஒரு பக்தன் அவதியாய் நட்ட வயிரவ சூலம். காலத்தின் மகத்துவமான அவசரத்தில் அதுவும் துருப்பிடித்தும் - தேய்ந்தும் - தீய்ந்தும் மங்கிக் கரையத் தொடங்கி வெகு காலமாகி விட்டிருந்தது.

அரச மரத்திற்கு மேற்கே பத்தடி தள்ளி அமைந்திருந்த தட்டித் தேநீர்க் கடையில் - அனுபவித்த திருப்தியில் உயிர் போகிற போது ஒருவரின் முகத்தில் பரவியிருக்கும் வெறுமை கலந்த அமைதி போல - ஒரு அமைதி பரவியிருக்கிறது. தலை நரைத்துப் போன அந்தக் கடையின் நல்ல முதலாளி, 'கலாசாலையில்' இருந்தும் எவராவது 'ரீ' என்று வந்து நிற்கானா?' என்று ஆசை ஆசையாகப் பார்க்கிறார்.

அரசடி றோட்டின் இருமருங்கிலும் நெடிதோங்கியிருந்த தென்னை மரங்களின் இடையே கள்ளுக் கொட்டில்களின் அடையாளங்கள் தெரிகின்றன. கொதிப்பேறிய கள்ளின் வாசனை 'கம்மென்று' மூக்கில் ஏறுகிறது.

அங்குமிங்கும் பார்த்துக் கொண்டே கள்ளுக் கொட்டிலொன்றில் நுழைகிறேன் நான். மனம் நடுங்கிச் சோருகிறது. கற்ற நூல்களின் ஆழமான பொருட்கள் தெளிவும் - தெளிவற்றும் சிந்தையில் சில கணங்கள் நடம் புரிகின்றன. சுற்றுப் புறங்களிலும் - அயலிலும் வெறி கொண்ட மனங்களோடு' - அவர்களுக்குத் தெரிந்தவர்கள் - சொந்தக் காரர்கள் - சமூகத்தவர்கள் படுகிற அவலட்சணமான சம்பவங்கள் அவ்வப்போது நான் நெஞ்சுக் குழியில் ஏற்றிக் கொண்ட வலிமை மிக்க தீர்மானங்கள் - மிகமிகப் பெரிய மனிதனாய் - சமூகத்தின் ஆழமான பிரச்சனைகளுக்கு விடிவு காணத் துடித்த இருதயத்தின் அப்பட்டமானதும் - சுத்தமானதுமான சிந்தனைகள்? ....... அவை எல்லாம் செத்து மடிந்து விட்டனவா? நான் செத்துப் போய் விட்டேனா?........... இல்லை நான் சாகாமல் இருப்பதற்காகத்தான் வந்திருக்கிறேனா?..........?

'தம்பி வாரும்'

கள்ளுக் கடையின் முதலாளியின் அழைப்பு-தாயின் அழைப்பில் ததும்பி நிற்கும் பரிவை விட எவ்வளவு மதுரமாய் ஒலிக்கிறது? அது மதுரமா? அவன் தரப்போகிற தித்திப்பான பனங் கள்ளைவிட அவனது வார்த்தைகள் மதுரமானவையா? அல்லது இவற்றிற்கு மேலதாய் நான் கொடுக்கப் போகும் பணம் மதுரமானதா?

தயக்கம் தெளியவில்லை. சுற்றி, முற்றும் அந்தக் கொட்டிலைப் பார்க்கிறேன். வெய்யிலின் வெம்மை சுரீரென வீசிக் கொள்ள முடியாத படி மேலே பசுந் தகடுகளை கீறி கீறிப் போர்த்தியிருக்கின்றாற் போலத் தென்னை மரங்களின் ஓலைகள் அடர்ந்திருக்கின்றன. கொட்டிலின் பின் புறத்தே பூசணிச் செடி வளர்ந்திருந்த அடர்த்தி கண்ணிற்குப் படுகின்றது. அதன் சுனைப்பிற்கு காரணமான முரமுரப்பான வெண் நுனிகள் வெய்யிலில் தொகுதி தொகுதியாய்ப் பளிச்சிட்டுத் தெரிகின்றன.

சுற்றுப் புறத்தின் இயற்கை நிகழ்ச்சி அப்போது அதிகமாய் மனதில் பதியவில்லை. தெரிந்தவர் எவராவது இருக்கிறாரா என்கிற 'மன அவசரத்தில்' கண்கள் சடாரெனத் திரும்புகின்றன. திரும்பி அவை சுழலுகின்றன. திரும்பி அவை சுழலுகிறபோது........?

''புதுப் பழக்கம் போலை.. பத்திக்குள்ளே போமன்...... மறைவாயிருக்கும் குடுத்தனுப்பிறன்.......''

கள்ளுக்கடை முதலாளியின் வார்த்தைகள் சுரீரென நெஞ்சில் தைக்கிறது. என் மானத்தை, என் கௌரவத்தை, என் அந்தஸ்தைக் காப்பதில் - முதலாளிக்கிருந்த அக்கறை என்னை வெறுப்படையச் செய்கிறது. போலித்தனமான சம்பிரதாயத்தில், ஒரு நஞ்சை விற்று விடுவதற்கு. ஒரு வாடிக்கைக் காரனைப் பிடித்து விடக்கையாளும் சாமர்த்தியம்.

என் நீண்ட இடையீடற்ற மௌனத்திற்கு அவன் என்னென்ன அர்த்தங்களைக் கற்பித்துக் கொள்கிறானோ? அவன் பேசவில்லை. அவன் பார்வையில் அப்போது காதலனைச் சீண்டிவிட்ட காதலியின் கண்களில் பளிச்சிடும் பரிகாசக் குறும்பு சுடர் விடுகிறது. அவன் நூற்றுக் கணக்கான 'புதுசுகளை'க் கண்டிருக்கலாம். ஒளித்தும், மறைத்தும், 'புதுசுகள்' வெருண்டடித்துக் குடித்து நழுவுகிறபோது அவன் மனதில் எவ்வளவு ஏளனமான நினைவுகள் எழுந்திருந்தனவோ?

நான் புதுசு மட்டுமில்லை. மனதில் - வாழ்க்கைப் போக்கில் - தோற்றத்தில் எல்லாமே புதிதுதான். என்கிறதை அவன் உணர முடியுமா?

சடக்கென்று - இரும்புக் கொழுக்கியில் மாட்டியிருந்த பிளாக்களில் ஒன்றை நான் எடுக்கிறேன். இயல்பாய் எதையும் நுட்பமாயும், கூர்மையாயும் பார்த்து இருத்திக் கொள்ளும் கண்கள் அந்தப் பிளாவை நோட்டம் விடுகின்றன. பனைக் காம்புகள் பழுத்து, சருகாய்ப் போன இலையின் மஞ்சள் நிறமடித்து-கள்ளின் நனைப்பில் மின்னுகின்றன. அவற்றின் கீழும் மேலும், பரந்திருந்த பிளாவின் ஓலைப் பகுதியிலும் அந்த மஞ்சள் தன்மையும் பள பளப்பும் போகவில்லை.

பிளாவை இரு கைகளாலும் பிடித்தபடியே அவனிடம் நீட்டுகிறேன். தேய்த்து அழகாய்ச் செதுக்கப்பட்ட ஒரு சிரட்டையில், கரும் பானையில் தள தள வென்று பசுமைத் துடிப்போடு மின்னிய கள்ளில் எடுத்து வார்க்கின்றான். 'ஒரு போத்தல்' என்று அவன் வாய் வார்த்தையை உதிர்க்கிறது.

பிளாவும் கையுமாய் - கொட்டிலில் குறுக்கும் நெடுக்குமாய் போடப்பட்டிருந்த தென்னம் குத்திகள் ஒன்றில் அமருகிறேன். அமருகிறபோது நெஞ்சு நடுங்குகிறது. என் பார்வை பிளாவை ஏந்தியபடியே சுற்றியிருந்தவர்களைப் பார்க்கிறது. அந்த நொடிக் கண் சுழற்சியில் அங்கிருந்தவர்களைக் கண்கள் அளவெடுக்கின்றன.

அவர்கள் பார்வையில் இவன் 'புதிது' - 'முற்றும் புதிது' என்கிற ஏளனம் தெரிகிறதாக. எனக்குப் படுகிறது. யார் இவர்கள்? நரைத்த தலையும் நரைத்த தாடி, மீசையோடும் - குழி விழுந்த கண்களுமாய்த் தெரிகிற அந்த மனிதன். வயது எவ்வளவு இருக்குமோ? அவனுக்குப் பக்கத்தே - கைவண்டிலை விறகோடு வெளியே நிறுத்திவிட்டு அவசரம் அவசரமாய்க் குடித்துக் கொண்டிருக்கிற தொழிலாளி......... இலேசாய்ச் சிரித்தபடியே சுருட்டுப் புகையைப் 'பக்' கென்று ஊதிக் கொண்டிருக்கும் அந்தச் சொத்தி மனிதன்........ இவர்கள் எதற்காக இங்கு வந்திருக்கிறார்கள்? வயதை நகர்த்தி விட்டு - அவற்றின் தனமாய் சமூகத்திடமும் - தம்மிடமும் பெற்று விட்ட குரூரங்களை மறப்பதற்காக? வாழ்வு முற்றும் துன்பமே தானா? 'துன்பத்தை மறப்பதற்காய்ச் சகித்துக் கொள்வதற்காய்ச் சிறிதளவு குடிப்பதில் தவறில்லை' என்று ஏஞ்சல்ஸ் சொல்லவில்லையா?

அப்படியானால் நான் குடித்துத் தான் ஆக வேண்டும். சிறிதளவல்ல.

கொஞ்சமாக அல்ல. முட்டி முட்டியாய்க் குடித்தபடியே என் துன்பங்களை - என் தாயின் துன்பத்தை - எதனாலோ மற்றவன் படுகிற நரகவேதனையை மறப்பதற்காய்க் குடித்துத்தான் ஆகவேண்டும். அதை மாற்ற முடியாது.

பிளாவில் வாய் பதிகிறது, 'விசுக்...... விசுக்' என்று பனம் கள்ளு உள்ளே ஏறுகிறது.

'இன்னும் ஒன்று'

சுற்றியிருந்தவர்களும் - கள்ளுக் கடைக்காரனும் வியப்போடு பார்க்கிறார்கள். அவர்கள் பார்வையில் தாம் ஏமாந்து விட்டோம் என்கிறாற் போல அசடு வழிகிறது. 'இவன் புதிதல்ல' - 'புழுத்த குடிகாரன்' என்கிற முத்திரை பதிகிறது. அந்த முத்திரையை அப்போது என்மனம் முடிசூடா வெற்றியாய் ஏற்றுக் கொள்கிறது.

'தம்பி நாளைக்கு வருவியளா? எப்ப வருவியள்?'

அவன் வினாவிற்கு என் மனம், மனதிற்குள் விடை சொல்லுகிறது. 'பேயே - நான் சாகிறவரையும் என் உணர்வுகளைச் சுட்டுப் பொசுக்கும் துன்பங்கள் மாறிவிடுவதாய் எனக்கு நம்பிக்கையில்லை. அந்த நம்பிக்கை இருக்கும் வரையும் உன்னிடம் நான் வருவேன்'.

'அவனுக்கு கேட்டிருக்குமா?'

***

முன் விறாந்தையில் மாட்டப் பட்டிருந்த கடிகாரத்தின் நாக்கு மணி பத்தாகி விட்டது என்பதை அறிவிப்பதற்காய் அவசரம் அவசரமாய் அடித் தோய்கிறது. அதன் நாதம் கணக்கிட்டு வகுக்க முடியாத காலப் பின்னத்தின் ஒரு பின்னத்தை நிலை நிறுத்தி அறிவிக்கிறேன் என்கிற விம்மிதத்தில் கணீர் என்று பரவுகிறது. பங்குனி மாதத்து இரவின் புழுக்கம் உடம்பை வாட்டுகிறது. அங்கம் அங்கமாய் யாரோ பிடித்து நெடு நேரமாய் அமுக்கிக் கொண்டிருந்து விட்டாற் போலத் தேகமெங்கும் அலுப்புப் படிந்திருக்கிறது. தேகத்தின் அலுப்பை ஒட்டி மனமும் மூளையும் கூட அலுப்படைந்து நெடிய சிந்தனைகளுக்குரியதாய் அமையாமல் சோருகிறது.

பகற்போதில் கொட்டிலிலிருந்தும் வெளியேறி வீடு வந்து சேர்ந்ததற்கிடையில் நடந்த நிகழ்ச்சிகள், பிறகு வீட்டிற்குத் தள்ளாடி வந்து சோற்றுக் கோப்பையைப் படீல் என்று போட்டுடைத்த பிறகு வாந்தியும் கொடிய நெடியுமாய்க் குப்புற வீழ்ந்து உருண்ட நிகழ்ச்சிகள், ஏதோ நெடுங் காலத்திற்கு முன்பு கண்ட கனவின் மறக்க முடியாத நினைவுப் பின்னமாய்த் தெரிகிறது.

அவை கனவுகள் தாமா? மேலாய், திக்பிரமை பிடித்தது போலப் பேயைக் கண்டது போல அம்மா என்னைக் கண்டவுடன் சோர்ந்து உட்கார்ந்து விட்டாளே? அந்த உள்ளத்தின் அப்போதைய வேதனைக்காய் நான் தூக்குப் போட்டுச் செத்துக் கொள்ளக் கூடாதா? அவை கனவுகளா? கனவுகள் - அவை எவ்வளவு இங்கிதமாய் இரவின் தூக்கத்தில் வந்து போய் விடுகின்றன? அவை நடந்து ஆடி ஓடிய வேகத்தின் நினைவுகள் மங்கலாய்க் கூடக் காலையில் நினைவில் நிற்பதில்லையே? இது புழு ஊருகிற மாதிரி, ஊசி நோக நோக ஏறுகிற மாதிரி எவ்வளவு வேதனையாத் தெரிகின்றன? இவை கனவில்லை? கனவில்லை.

வீட்டு முகப்பிற்கு நேரே நாட்டப் பட்டிருந்த 'லயிட் போஸ்ரில்' தொங்கிய மின்சார லாந்தரில் இருந்தும் ஒளிக் கற்றைகள் பாய்ந்து கொண்டிருக்கின்றன. இந்த மாதத்தில் இயற்கையின் சில அவசியமான தேவைகளுக்கு உந்தப் பட்டு வீதி நாய்கள் - கடிபட்டும் - குரைத்தும் முரமுரத்தும்-பிணைபட்டும், ஊளையிடுகின்றன. பக்கத்து வீட்டின் நெடிதோங்கிய வேம்பு கோரமாய்த் தெரிகிறது. இலைகளை முற்றாக உதிர்த்து நிற்கிற அதன் கிளைகள் - கள்ளால் மதிமயங்கிப் பசுமையான நினைவுகளை உதிர்த்து நிற்கிற மனித மனங்களின் கூட்டுத் தொகுப்புப் போலப் படுகின்றன.

எனக்குப் பக்கத்தே படுத்திருந்த 'அம்மா' வாய் புலம்பிக் கொள்கிறாள். அந்தப் புலம்பலிலும் என்னுடைய தவறின் கொடிய நினைவுகள்.

'உன்னை நல்ல பிள்ளை என்றிருந்தேன். நம்பியிருந்தேன். நீ கூட இப்படிப் போயிட்டியா? மற்றவங்களை நம்ப முடியுமா?"

'அம்மா..... அம்மா' என்று மனம் அழுகிறது. அந்த அழுகைக்கு வார்த்தைகள் இல்லை. என்னையே, என் இருதயத்தையே இருதயம் கசக்கிப் பிழிகிறது. அந்தப் பிழிவில் கொடூரமான மிகக் கொடூரமான - அவலட்சணத்திலும், அவலட்சணமான நினைவுகள் பிறக்கின்றன? சேற்று நீர் கண்களின் வழியே ஊற்றுண்ணுகிறாற் போலக் கண்களிலிருந்தும் கடகடவென்று நீர் வழிகிறது.

அம்மா உன்னுடைய மகன் நல்லவனா? அம்மா - 'தாய்மை' என்கிற வணக்கத்திற்குரிய பார்வையை விட்டு நீ என்னைப் பார்த்திருக்கக் கூடாதா? அப்போது மட்டும் நீ நம்பியிருப்பியா?

என்னையே மனம் புரட்டிப் பார்க்கின்றது. இருதயத்தின் அசிங்கமான நினைவுகள் சீறியடிக்கின்றன. அவற்றிற்குச் சென்ற காலங்களில் வலிமையில்லை? - இனி? - இனி? - அவை புரண்டு மாறுமா?

உரும்பராய்க் கிராமத்தின் இயற்கைச் சூழ்நிலை இன்றைக்கே நேரே காணுகிறாற்போலக் கண்முன்னே தெரிகிறதே? இயற்கையின் அந்தச் சூழ்நிலையில் உன் மகனை நீ மறைந்திருந்து பார்த்திருக்கக் கூடாதா? இப்போதாவது பார்க்க முடிகிறதா? பார்த்துத்தான் நீ ஆகவேண்டும். கடந்து விட்ட காலப் பெருவெள்ளத்தில் நீ பெற்ற புத்திரனின் சின்னத்தனங்களை நீ பார்த்துத்தான் ஆக வேண்டும்.

நிலவும் இருளும் பின்னியிருக்கும் அற்புத நேரம். மூன்று மணியை அடுத்துத் தொடுத்திருக்கலாமா? உரும்பராய்க் கிராமத்தின் செழிப்பான மண் வளத்தில் வேரூன்றித் தேவையைப் பெற்றுப் 'பார்' என்று ஓங்கி நிற்கும் இலுப்பை மரச் சோலை. அதன் தடித்த பசுமையான இலைகள் - நிலவின் மங்கலான ஒளியில் - இருளின் மெலிதான வீழ்ச்சிக் கிறக்கத்தில் - பின் நிலவின் மங்கலான ஒளியில் - இருளின் மெலிதான வீழ்ச்சிக் கிறக்கத்தில் - பின் நிலவின் ஒளியில் - என்ன இரகசியங்களைப் பேசிக் கொள்கின்றன தெரியுமா?

மண்ணைப் பிறாண்டிப் பிறாண்டிப் பின்னங் கால்களை நகர்த்தியபடியே ஊளையிட்டும், கடிபட்டும், குரைக்கும் அந்த நாய்கள் - கிராமப் புறத்து நாய்கள் கூட, எவ்வளவு அழகாய்த் தெரிகின்றன?

அதோ அவள். திருமண மாப்பிள்ளை ஊர்வலத்திலிருந்தும் பிரிந்து போய் வந்து கொண்டிருக்கிறாள். பின்னால் நீண்டோடி, இறுதியில் குஞ்சமாய்ச் சரிந்து கொஞ்ச, சௌந்தர்யப் பேரெழில் போல் கிறங்கி ஒசிய நடந்து வருகிறாள். மஞ்சள் சட்டையும், இருகலரோடு கூடிய பட்டுப் பாவாடையுமாய் .......... மலரே மலர்மேல் நடக்கிறாற் போல......

அம்மா? எதற்காக உன் கண்கள் கலங்கிக் கசிகின்றன. உன் மகன் நெஞ்சில் அந்தச் சம்பவம் எவ்வளவு ஆழமாய்ப் பதிந்து விட்டது என்கிற வெறியா? 'தாய்மை' என்கிற ஒரே பெண்ணைத் தவிரச் சொந்தம் கொண்டாடக் கூடாத பக்குவத்தில் - பருவத்தில் - கிறங்கிப், பயித்தியக் காரனைப் போல நடு நிசியைத் தாண்டி விட்ட இந்தப் போதில் நிற்கிறானே என்கிற வெறியா? அம்மா? எதற்காக நீ கண் கலங்கிச் சோருகிறாய்? தாய்மை ததும்பி நிற்கும் உன் திரு விழிகளில் 'வெறுமையின் சாயைகள்' படியத் தொடங்குகின்றனவே? அந்தப் பார்வை இனியும் வேண்டாம்? அந்தப் பார்வையின் உள்ளே - உன் உள்ளத்தில் புரையோடி உன்னை உருக்குலைக்கத் தொடங்கியிருக்கும் கவலைகளை அடியோடு மறப்பதற்காய்த் தானே 'கள்ளை' நான் தஞ்சமடைந்திருக்கிறேன்?

அம்மா சகிக்க முடியாத வேதனைகள் என்னைக் கசக்கிப் பிழிகின்றன. அந்தப் பிழிவின் மத்தியில் உன் 'வெறுமையான' பார்வையைத் தற்போது என்னால் தாங்கிக் கொள்ளவும் முடியும். பார்வையை மட்டும் நீ மாற்றாமலே உன் மகனை - உன் உதிரத்தெழுந்த குருத்தை நீ பார்.

இராப் போதுகளில் நெடு நேரமாய் உறக்க மின்றி உன் மகனை வாட்டி உதைப்பதற்கு உன் மகனுக்குத் தெரிந்த நூற்றுக் கணக்கான குடும்பங்களின் சோகக் கதைகள் நெஞ்சை அரித்துக் கொண்டே கிடக்கின்றன என்கின்ற உண்மையை நீ கண்டு கொள்ளக் கூடுமா?

முஸ்லீம் தெருக்களில் அடர்த்தியான அந்தக் குடிசனப் பிரதேசங்களில் கிடந்து தவிக்கின்ற முஸ்லீம் குழந்தைகளின் கண்களில் வாழ்க்கை வரட்சி தெரிகிறதே அம்மா? நாவாந்துறைப் பிரதேசங்களில் துர்நாற்றமான காற்றை நுகர்ந்தபடியே வாழ்ந்து கொண்டிருக்கிற கரையூர்ச் சமூகம் - அதன்

இளம் கன்றுகள் மேலாடையும் கீழாடையுமின்றி எதற்காக அப்படி ஒதுக்கப்பட்டு அலைகின்றனவோ? அந்தக் குழந்தைகளின் கண்களில் வெறும் நம்பிக்கை வரட்சி மட்டுமா தெரிகிறது? அப்பாவித்தனமும் தெரிகிறதே? நகரத்தின் நடுப்புறமான பெரிய தெருக்களில் கூனும், குருடும், முடமுமாய் நித்திய ஒப்பாரியில் மற்றைய மனிதனின் இரக்க உணர்ச்சியைத் தேடித் தேடித் திரியும் அவர்கள் மட்டும் மனிதர்களில்லையோ? இரவு நகர்ந்து, இரவு முதிருகிற போது முற்ற வெளிகளிலும் கோட்டைப் புறங்களிலும் 'நாகரிகமான' நகரத்து இளம் பொடியன்கள் - எவற்றை இழந்து கொண்டேயிருக்கிறார்கள் என்கின்ற கசப்பான மனிதனுடைய நிலைமையை நீ புரிந்து கொண்டதுண்டா அம்மா?

அம்மா - இந்தப் போதில் உன் திரு விழிகளில் மங்கல தீபத்தின் ஒளிக் கற்றைகளெனச் சுடர் விட்டுப் பாயும் ஒளியை என்னால் புரிய முடிகிறது. 'மற்றவன் படுகிற துன்பத்திற்காய் உன் மகன் இரங்குகிறான்' என்கிற நினைப்பில் நீ துள்ளுகிறாய் - ஆனாலோ?

அம்மா - உன் மகன் வாழ்வின் முன்னேற்றங்களை மிக ஆழமாய்த் தோற்று விட்டுச் சமூகப் பிரச்சினைகளில் ஆழ்ந்து நிற்கின்றான், என்பதை நீ ஏன் பார்க்கவில்லை? நாளைக்கு உனக்கும் எனக்கும் பசிக்கப் போகிறதே? தாயின் 'பசி' என்கிற வெறியை உன் வயிற்றிற்காய் உணவிடத் துடிக்கும் நெஞ்சு எனக்கு வேண்டாமோ? அம்மா? - அதற்கு என்னிடம் என்ன தராதரம் இருக்கிறது?

என் சொந்த வாழ்க்கை சீரழிந்தே நகரட்டும் - உலகத்தின் எந்தப் பிரசையாவது சித்திரவதைப் பட்டுக்கொண்டே சாகட்டும். அதை வேடிக்கையான பார்வையாளனைப் போல நான் பார்த்துக் கொண்டு கைதட்டிச் சிரிக்கவும் தயார் - ஆனால்.........?

உன்னை மறந்துதான் நான் ஆக வேண்டும்.

கண்களைச் சுழற்றுகிறதே அம்மா.

இதற்குப் பெயர் தான் தூக்கமோ?

***

சுட்டுப் பொசுக்கும் வெய்யிலும் நகர்ந்து - செம் பொன்னின் ஒளிக் கற்றை எனச் சுடர் விட்டுப் பாயும் மாலை வெய்யிலும் மறைந்து - இளம் கருந்திரை இலேசாய்ச் சுற்றுப் புறத்தைக் கவ்விக் கொள்ளத் தொடங்கியிருந்தது.

நெஞ்சில் நெருஞ்சி முள் ஏறித் தைத்தாற் போல் வேதனை எழுகிறது. வீட்டை விட்டு வெளியேறிவிட்ட இந்த 'ஏழு' 'எட்டு' மணித்தியாலங்கள் என்ற காலத்தைத் தளமாகக் கொண்டு அன்பின் திருவுருவமான என்

தாயின் நெஞ்சில் எத்தனை கொடிய வேதனைகள் எழுந்திருந்தனவோ? படலையில் பாசத்தை முன் வைத்த படியே திருவிழிகளால் என்னைப் எதிர்பார்த்துக் கொண்டிருப்பாளே?

'அம்மா.... அம்மா' என்று மனம் கதறுகிறது.

உடம்பின் மயிர்க்கால் தோறும் அசுரன் ஏறிச் சித்திரவதை செய்து கொள்கிறாற்போல் வலிப்பும், அலுப்பும் பிழிகிறது. கால்கள் வேகமாய் ஆனைக் கோட்டை ஒழுங்கைகளில் குதிபோட்டும் தாண்டியும் நடை பயில்கின்றன.

தட்டா தெருச் சந்தியை அடைகிற போதே 'கள்ளின் மயக்கத்தில் பிறந்த அந்தரமான சுகங்கள் தீய்ந்து போய் விட்டன'. 'பெருமீனை' விழுங்கிவிட்டுச் சுகமாய்ச் செதில்களை ஆட்டியபடியே நீரில் சுகம் கண்டு கொண்டிருந்த மீன், வெளியே வரண்ட நிலப்பரப்பில் தூக்கி எறியப்பட்டுத் துடி துடிக்கின்றாற் போல மனம் துடி துடிக்கின்றது.

தெரிந்தவன், தெரியாதவன் என்று 'நாலு பேர்கள்' வந்து செய்தி செய்தியாய்ச் சொல்லுகிறார்கள். ஏளனப் பார்வைகள், பரிகாசப் பேச்சுக்கள், இவற்றினிடையே நழுவி நான் வீட்டை அடைகின்றேன்.

ஒழுங்கையே கூடி நிற்கிறது. அன்றைய மாலைப் போதிலே தம் மனதை மகிழ்விப்பதற்கு ஒரு சுவாரசியமான நிகழ்ச்சியாய் நான் குடித்து விட்டு வந்திருக்கின்றேன் என்கிற சந்தோஷம் தவிரக் கூடி நிற்கிறவர்கள் கண்களில், முகங்களில் வேறு சாயையேயில்லை.

'எப்படியிருந்த பொடியன்' 'உந்தத் தகப்பனுக்குப் பிறந்தவனா? அணைத்து அணைத்து வளர்த்தார்களே' வார்த்தைகள் என் காதுகளில் விழுகின்றன. மனம் வெறியாய்க் கத்தி அழுகிறது.

அம்மா வார்த்தை எதுவும் பேசவேயில்லை. அந்தக் கண்களைப் பார்த்துக் கொள்கிற துணிவும் இல்லை.

நடு அறையில் பாயைப் போட்டு விட்டு நான் படுத்துக் கொள்கின்றேன். வீட்டில் சா வீட்டின் அமைதி நிலவுகிறது. ஊர் அடங்கத் தொடங்கி விட்டது. வெளியே காலலம்புவதற்காய் நான் வருகிறேன். தூணோடு சாய்ந்தபடியே அம்மா அழுது கொண்டிருக்கிறது கண்ணில் படுகிறது. அந்தக் கணநேரத்தில் நெஞ்சு வேதனையால் பிழிகிறது. என் மேல் அருவருப்பு, இந்த உலகத்தின் மேல் அருவருப்பு. சுட்டுப் பொசுக்கி விட வேண்டும் போல் வெறி. தயங்கிய படியே வெகு நேரமாய் நான் நிற்கிறேன்.

'அம்மா..... அம்மா......... அம்மா.......'

அம்மா...... 'ம்' - கூடக் கூட்டவில்லை. மெதுவாய் அவள் முன்னால் உட்காருகிறேன். அவள் கண்களை, நிமிர்ந்து நான் பார்க்கிறேன். அழுகை ஓயவில்லை. விம்மி விம்மி அவள் அழுகிறாள்.

நெடு நேரம் கழித்து அவள் பேச ஆரம்பிக்கிறாள், அந்த வார்த்தைகளில்

கோபம் இல்லை. வேகம் இல்லை. நெஞ்சின் ஆழத்தில் மாற்ற முடியாததாய், மிக்க ஆழமாய்ப் பதிந்து விட்ட வேதனைகளின் சாரமாய் அவை வெளிவருகின்றன.

ஒரு மணிக்குப் பிறகு அவள் தேட ஆரம்பித்திருக்கிறாள். வருகிறவர்கள் - போகிறவர்கள் - தெரிந்தவர்கள் - தெரியாதவர்கள் என்று எல்லோரிடமும் கண்ணீர் விட்டபடியே கதறிக் கேட்டிருக்கிறாள்.

'குடிகாரனின் தாய்' என்கிற வெறுப்போடு அவளைப் பார்த்தார்கள். கீழ் மகன் ஒருவனுக்கு அவள் உதரம் இடம் கொடுத்திருக்கின்றதென்ற அருவருப்போடு பார்த்திருக்கிறார்கள். ஏளனமாய், உள்ளுக்குள்ளே சிரித்தபடியே ஒப்புக்கு உபசாரமாய்ச் சம்பிரதாய வார்த்தைகளால் பேசிக் குத்தியிருக்கிறார்கள். - 'நக்கல்' அடித்திருக்கிறார்கள்.

அணு அணுவாய் என்னைக் காணுகிற வரையும் அவள் மிதிப்புண்டும் நசியுண்டும் செத்திருக்கிறாள்.........

திடீரென்று அம்மா என் கைகளைப் பிடித்தபடியே கெஞ்ச ஆரம்பிக்கிறாள். மகனே 'எனக்கொரு சத்தியம் செய் எந்தக் காரணத்தைக் கொண்டும் இனிமேல் மதுபானத்தைத் தொடுவதில்லை என்று..........'

மனம் மறுபுறம் தடம் புரண்டு ஓடுகிறது. அம்மா அது முடியவே முடியாது. இந்த உலகத்தின் நினைப்புக்களை மறந்து உன்னை மறந்து - எனக்குத் தெரிந்த நூற்றுக்கணக்கான மனிதர்களின் வாழ்க்கைத் துன்பங்களை மறந்து நான் நிம்மதியாய் இருக்கவேண்டும். மது தருகின்ற நிம்மதி எனக்கு வேண்டும். என் நரம்புகள் தளருகின்றன. நெஞ்சில் ஆற்றாமையும், கோழைத்தனமும் ஏறிக்கொள்ள ஆரம்பிக்கின்றது. நான் கொலைகாரனாய்த் திரிவதை விடப் பையித்தியக்காரனாய்த் திரிவதை விடக் குடிகாரனாய் மாறிவிடுவது மேலானது.

என்னை வற்புறுத்தாதே.......

வெறி இன்னும் முறியவில்லையோ என்ற சந்தேகத்தில் அம்மா பார்க்கிறாள். பேயறை பட்டவள் போலத் துடித்து நிற்கிறாள். நான் போய்ப் படுக்கையில் விழுகிறேன். சிந்தனைகள் சீறி வெடிக்கின்றன.

இந்த மனிதர்கள் யார்? என்னைத் தூற்றுகிற என் காரணமாய் அம்மாவை ஏளனமாய்ப் பரிகாசமாய்ப் பார்க்கின்ற இந்த மனிதர்கள் யார்? தம்மை ஒரே ஒரு தரம் திரும்பிப் பார்த்தால் அவர்களுக்குத் தம்மைவிட மிகக் கீழ்த்தரமான சின்ன மனிதர்கள் எந்தச் சமூகத்திலுமே பிறந்திருக்க முடியாது என்பதை நொடிப் போதில் உணர்ந்து கொள்ள மாட்டார்களா?

அவர்கள் புத்தர்களோ - யேசுக்களோ - மகாத்மாக்களோ அல்ல - பரிதாபத்திற்குரிய சின்ன மனிதர்கள். 'தம்முடைய குரூரங்களைத் திரும்பிப் புரட்டிப் புரட்டிப்' பார்த்து' உணர்வுகளைப் புதுப்பித்துக் கொள்ள அவர்களுக்குத் தெரியாது. தெரிந்தாலும் 'கால அவசரத்தில்' எப்படியும் எதையும் பற்றிக் கொண்டு வேகமாய், அவர்களைப் போலச் சமூகத்தில்

முன்னுக்கு வந்த 'நாலு மனிதர்கள்' - மதிக்கவேண்டுமென்கிற 'உடம்பு அவசரத்தை'த் தவிர, வேறு தெரியாதவர்கள்? மனித மனத் தகட்டில் எப்பொழுதோ செத்துப் போன பிரகிருதிகள்........?

இவர்கள் தூற்றுகிறார்களே என்பதற்காய் இந்த அம்மா இப்படிப் புலம்பிக் கொள்ளலாமா?

இந்த நிமிடமே மதுவை நான் தஞ்சமடைய வேண்டும். நான் குதூகலமாய் உலக நினைப்பற்று - உன் நினைப்பற்று இருந்துவிட வேண்டும்.

அந்த நிமிடமே எழுந்து ஓடிவிட வேண்டுமென்ற வெறியில் நான் எழுந்து கொள்கிறபோது சடுதியாய் அம்மா வந்து என் தலை மாட்டில் தலை வைத்துப் படுத்து விட்டாள். இனி..? இனி......? ஓயாத மன வேதனை தானா? விடியும் வரையும் மனதிற்கு வேதனையே தானா?

***

பங்குனி மாதத்துப் பின் பனியில் வீச்சுச் சுள்ளென்று முள்ளம் தண்டில் ஏறுகிறது. பாதங்கள் இரண்டும் பொசுங்கிக் குளிர்கிறது. பக்கத்தில் குழப்பமாய்க் கிடந்த போர்வையை எடுத்து இறுக்கமாய்ப் போர்த்துக் கொள்கின்றேன். பாதங்களும் கைகளும் இலேசாய் அசைய அசைய அலுப்போடு கூடிய சுவாரசியமான அதிகாலைத் துயிலும் இடை வெட்டிப் பின்னுக்கு நகருகிறது. பக்கத்தே அம்மாவைக் காணவில்லை. அதன் மையமாய் எழுந்து மூளையில் சடுதியாய்ப் பிரவேசித்த எண்ணச் சிறு பொறியில் அடியோடு நித்திரை கலங்கி விடை பெறுகிறது.

போர்வையை உதறிவிட்டு வெளியே நான் வருகிறேன். குசினிக்குள் இருந்து புகை வருகிறது. எட்டிப் பார்க்கிறேன். அம்மா பிட்டவித்துக் கொண்டிருக்கிறாள். எட்டிப் பார்த்ததை அவள் கண்டு கொண்டு விட்டாள். அந்த முகத்திலிருந்து எதுவும் தெரியவில்லை. அம்மாவிற்கே உரித்தான ஒன்றுமறியாக் கரவற்ற மதுரமான வார்த்தைகள் பிறக்கின்றன.

'இரவும் சாப்பிடவில்லை. பசிக்குதா? எனக்குத் தெரியுமே - முகம் அலம்பிவிட்டு வாவன்......'

வேல் நெஞ்சில் பாய்கிறது. கதறிக் கதறி அழ வேண்டும் போல வேகமெழுகிறது. மனம் விழிப்புற்று அழுகிறது.

அம்மா - இந்த அதிகாலையில் உன்னைப் பார்க்கிறபோது மெய்யானதும் மேலானதுமான தத்துவங்கள் நெஞ்சக் குழியில் குதிபோட்டு நடை பயில்கின்றன. தேகம் புல்லரிக்கிறது. மயிர்க்கால் தோறும் மகிழ்ச்சிப் பிரவாகம் புகுகிறது?

அம்மா இந்த மேலான அன்பை நான் குடித்துவிட்டு நிற்கிறபோது புரிந்து கொள்ள முடியுமா? உன் துன்பத்தை மறப்பதற்காய் - என்னைக் காப்பதற்காய் நான் மதுவைத் தஞ்சமடைதல் கேவலமான சுய நலமேயல்லவா? இந்தக் குடும்பம் என்கிற சிறு கூட்டில் உன்னைப் பகுதி பகுதியாய்ப் பார்க்கிற போது - விசித்திரமான கவலைகளால் நீ அழிந்து கொண்டிருப்பதை - நோயில் நெரியுண்டு போவதை - இவற்றின் மத்தியில் குடும்பத்திற்காய் அழிவதை நான் 'மதுவைக்' குடித்து மறந்து விடுவதிலே என்ன சுகம் இருக்க முடியுமோ அம்மா? 'உன் நினைவில் நான் அழிந்து போய் விடுவேன்' என்கிற உணர்விலே பிறக்கிற சுகம் எவ்வளவு மனோகரமான சாந்தத்தை இப்போது ஏற்றுகிறது?

உலகத்துத் துன்பங்களை மறந்து கொண்டு ஓடுவதிலே தான் என்ன சுகம் பெறமுடியும் அம்மா? நீ அழிந்து கொண்டே 'குடும்பம்' என்கிற இந்தச் சிறு சமூகத்திற்காய் வாழவில்லையா? 'இந்தச் சிறு சமூகத்தின்' - மிக மிகச் சாதாரண உணர்வுகளையும் நீ மதித்து நிறைவேற்றிக் கொள்ளவில்லையா? அவற்றை நிறை வேற்றிக் கொள்கிற போது நீ மேலும் மேலும் அழிந்து கொள்கிறாயே?

மொத்தமான வெளியுலகத்தின் துன்ப ஓலத்தை மறந்து மதுவிடம் ஓடிக் கொள்வதிலே நான் காக்கப்படலாம். அந்தக் 'காப்பு' என் சுய நலத்திற்காய் என் நல்ல உணர்வுகளைக் கொன்ற காப்பேயல்லவா?

'அம்மா' என்று நான் அழைக்கிறேன்.

அந்த அழைப்பில் பிறந்த கனிவில் அம்மா சடாரெனத் திரும்பிப் பார்க்கிறாள். என்னத்தை எண்ணினாளோ. நீர் முத்துக்கள் அவள் கண்களில் மின்னுகின்றன? அவள் பாதத்தடியில் நெடும் சாண்கிடையாய் விழுந்து நான் வணங்கிக் கொள்கின்றேன். அதில் பூரணமான நிறைவு பூரித்துச் சொரிகிறது.

என் வாய் முணு முணுக்கிறது.

'அம்மா - மகாத்மாக்கும் - ரோல்ஸ் ரோய்க்கும் தான் மேலான 'ஆத்மா' விழித்துக் கொண்டதென்பதில்லை. மிக மிகச் சாதாரண உணர்வுகளை மதிக்கவும் காக்கவும் - அவற்றின் வாயிலாய்ப் பிரபஞ்ச தத்துவத்தை உணர முடியாத சாதாரண மனிதனுக்கும் கூட ஏதோ ஒரு சிறு நிகழ்ச்சிப் பொறியில் - அவனுள் அடங்கியிருக்கும் ஆத்மா விழிப்படைந்து விடுகிறது. அந்த ஆத்மீக விழிப்பில் - அவன் உடனே 'மகாத்மாகவோ - ரோல்ஸ்ரோயாகவோ' மாறி விடுகிறான் என்பதில்லை. 'உள்ளுணர்வுகளின் விழிப்பில்' - 'ஆத்மீக விழிப்பில்' அவன் அவர்களுக்குச் சமானமாகிறான்..........

'அம்மா?'

'இந்த நிமிடத்தில் உன் மகன் அவனுக்குச் சமானமானவன்'...............

அம்மாவிற்குப் புரிந்திருக்குமா?

# ஆணிவேர்

இலட்சியமே உருவான இளைஞன். பார்வையில், பேச்சில், சிரிப்பில் அங்க அசைவில் எல்லாமே அவன் 'தான்' என்று நிமிர்ந்து நிற்கிற தனித்துவம் தெறித்து விழுகிறாற் போல இருக்கும். நேரியமிக நேரிய, உரிய பார்வையில் பார்வை பதிகிறவன். நெஞ்சில் இலட்சியக் கனலைக் கொழுந்து விட்டெரியச் செய்யும் சக்தி. அவன் ஒரு தீ. அவன் புலன்களிலும், நாடி நரம்புகளிலும் தீயின் ஒளி, வேகம். தீயின் உயிர் உடல்.

பல நூறு ஆண்டுகளுக்கு முன்னால் காலப் பேரேட்டில் நினைவொன்றைத் தன் அடிச்சுவட்டைப் பதிப்பிக்க அவன் வேகமாய் நடந்து கொண்டிருந்தான். அது நடையா? வேகம். வேகம். ஒரே வேகம். எதனையோ நிர்மாணித்துவிடத் துடிக்கும் பரிதவிப்பு. வேகம் தான்.

சுற்றி அவனோடு நின்ற மனிதர்கள் நூதனப் பார்வையோடு அவனைப் பார்த்துச் சிரித்தனர். இவன் என்ன மனிதனா? சாத்தானா தான் பழகிக் கொண்டவற்றிற்குள்ளும் - புறமும் இடிபட்டோ, நசியுண்டோ, போராடிக் கொண்டே இழந்து போவதில் அந்த மனிதர்களுக்கு ஒரு ருசி - சுவை. அதற்கு முரணாய் ஒரு சொல், ஒரு சைகை பிறந்து விட்டால் அவன் சாத்தான், பேய். உலகத்தை நாசவழிப் படுத்த வந்த பிரதிநிதி. அசுரர்களால், சாத்தான்களால் அனுப்பப்பட்ட அவன் தான் - அந்த இளைஞன். அந்தத் தீ. அப்படித்தான் அந்த மனிதர்கள் எண்ணி அவனைத் துரத்தி விட்டனர்.

அந்த வேகத்தோடு, சமூகம் அவன் வார்த்தைகளின் படி 'வெறும் பிசாசுகள்' - ஒதுக்கிவிட்ட குமுறலோடு, வெறியோடு, தீயின் வேகத்தோடு அவன் இன்னும் தான் நடந்து கொண்டிருந்தான். வெகு தூரம் அவன் நடந்திருந்தான். எதற்காகவோ அவன் கால்கள் அந்த இடத்தில் நின்றன. அவன் நின்ற இடத்திற்கு நேரெதிரே - தூரம் தள்ளி அற்புதமான காட்சிகள் விரிந்து கொண்டிருந்தன. ஓங்கி நிமிர்ந்து நின்ற மலை,

அதிலிருந்தும் 'இழுமென்ற' நீரின் சலசலப்பு, எதை அவன் எண்ணினானோ? கம்பீரமான அந்த மலையின் தோற்றத்தைத் 'தான்' என்று நிமிர்ந்து நிற்கிற அதன் பொலிவைப் பார்த்துக் கொண்டேயிருக்கக் கூடியதாய்..... 'இது நல்ல இடம்' என்று அவன் வாய் முணு முணுத்தது.

தானே தனியாய் அந்த இடத்தில் அவன் ஒரு வீடு ஒன்றைக் கட்டினான். அற்புதம் தான். அவன் ஆசைகள் - பரிணமித்தபடி, பொங்கியபடி ததும்பி வீசியபடி அவன் சித்திரங்கள் தீட்டினான். எங்கெங்கிருந்தோ விதம் விதமான கடற்சிப்பிகள் - முத்துக்கள் - கங்குகள் பதித்தான். பேரெழில் பூத்து நிற்கும் மண்டபம்.

ஒரு நாள் மாலை நேரம் தன் மண்டபத்தின் தூணருகே சாய்ந்தபடி வெளி உலகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான்.

எங்கிருந்தோ வேகமாய், மிக வேகமாய்க் காற்று வீச ஆரம்பித்தது. காற்றா அது? மண்ணை வாரி வாரி இறைத்தது. மரம் செடிகளை அள்ளி எற்றியபடியே வந்து மோதிற்று. வெகு நேரம், வெகு நேரம் அந்த இயற்கை யுத்தம் நடந்து கொண்டிருந்தது. பிறகு மழை பிடித்தது. சோனா வாரியாகப் பெய்தது. அது மழையா, என்னமாய் வீசுகிறது. மழைச்சரமே இரும்புக் கம்பிகள் போல, மண்டபத்திற்குள்ளே தான் அவன் இருந்தான். வெகு நேரம் கழித்து எல்லாம் ஓய்ந்த பிறகு அவன் வெளியே வந்து பார்த்தான். அவன் மண்டபத்திற்குத் துளிகூடச் சேதமில்லை. அவனுக்கும் தான். சிரித்த படியே நின்றான். மமதை தலைக்கேறியது. சற்று முன்பு கேட்ட பிரளய காலச் சத்தங்களைத் தோற்று விடுகிறாற் போலப் பலமாகச் சிரித்தான். சத்தமிட்டான்.

தன்னை ஒதுக்கிவிட்ட மனிதர்களின் நினைப்பு எழுந்தது. வேகமாய் ஓடினான். அவர்கள் அங்கேயில்லை. மிகச் சிலர் தான் இருந்தனர். நெருங்கிய வரைப் பறிகொடுத்த அழிவில் துடிக்கின்றனர்.

காற்றுச் சாடியதால் சின்னாபின்னமாக்கப்பட்ட மரக்கம்புக் குடில்கள் - பறண்கள் - புற்கொட்டில்கள் - மனிதப் பிணங்கள் - மண் மூடுண்டும் மூடுண்ணாமலும்.... அவனுக்குக் களிப்பு மிகுந்தது. இருக்கிற சிலருக்குத் தன் இலட்சியங்களைக் காட்டவும் உணர்த்தவும் இதுதான் சமயம் என்று அவன் மனம் எண்ணியது.

அவர்களை இழுத்துக் கொண்டு தான் கட்டிய வீட்டை, அழகான மண்டபத்தை நோக்கி நடக்கிறான். அந்த மண்டபத்தை - கிஞ்சிற்றும் சேதமில்லாத அந்த மண்டபத்தைப் பார்க்கிற போது அவர்களுக்கு அந்த இளைஞன் ஒரு தேவனாய்ப்பட்டான். வெகு நேரமாய் அவன் அவர்களுக்கு எது எதுவோ கூறுகிறான்.

பிறகு அவர்கள் ஒன்றாய்க் கூடினர். ஊர் ஊராய் நடந்தனர். வெறியோடும் வேகத்தோடும் நடந்தனர். காணுகிற மனிதர்களிடம் அவர்கள் கூறினர். 'மனித சக்திக்கு அப்பாற் பட்டதெதுவுமில்லை. மனிதனே தன் சிருஷ்டி கர்த்தா. புறச் சக்தி இல்லை. அகச் சக்தியில்லை. எதுவுமில்லை.

மனிதனே தனது சக்தி - இயற்கையில்லை. மழை - காற்று - வெய்யில் அவை வழமையற்றன'.

காலம் ஓடுகிறது. மிக வேகமாக ஓடுகிறது. அந்த ஓட்டத்தின் இடையில் மனிதன் மிகத்தூரம் முன்னேறிவிட்டான்.

இப்பொழுது பார்த்தால் வீடுகள் - வீடுகள் - வீடுகள். நல்ல வளமையதாய் அழகியதான வீடுகள்.

மீண்டும் அதே புயல் அதே மழை. கோர தாண்டவம். உயிர்ச் சேதம்.

எதுவுமில்லை. மனிதன் ஆர்ப்பரிக்கிறான். வெற்றி வெற்றி என்று முழங்குகிறான். 'மனிதனே தன் சிருஷ்டி கர்த்தா'.

***

இளைஞன் தோற்றுவித்த இயக்கம் படருகிறது. வேகமாய்ப் படருகிறது. நாலாபுறமும் மனித சக்தியின் தனித்துவக் கூப்பாடு.

இளைஞனும் அவன் சகாக்களும் இப்போது புதிது புதிதான ஆராய்ச்சிகள் செய்கிறார்கள். நாட்கணக்காய் அவர்கள் பேசுகின்றனர். ஆராய்கின்றனர். காடு காடாய் அலைகின்றனர். பச்சிலைகளைப் பிடுங்குகின்றனர். அரைக்கின்றனர். சாறு பிழிகின்றனர். அவர்களது வாழ்க்கைக் களிப்பும் அலுப்பும் நிரம்பியதாய் ஓடுகிறது.

அதோ ஒரு மனிதன் அலறித் துடித்துக் கொண்டிருக்கிறான். 'ஆ- சாத்தான், பேய் - பேய் - என்னமாய்க் கொல்லுகிறது? என்னமாய் வலி எடுக்கிறது? எதைப் பலியிட? ஆடா? கோழியா? மாடா? இரத்தமா? பசிப்பிண்டமே - இரத்த வெறி பிடித்த பைசாசமே? நோகுது - நோகுது - ஊ - ஊ'

இளைஞர் கூட்டம் பரபரப்பாய் ஓடி வருகிறது.

சாறுகள் பூசப்படுகின்றன. சாறுகள் கொடுக்கப் படுகின்றன.

சற்றுப் போதுக்கிடையில் தான் அந்த மனிதனின் முகத்தில் என்ன மலர்ச்சி, நோய் தீர்ந்து போய் விட்டது. பிசாசும் இல்லை. சாத்தானுமில்லை. மனிதனைத் தவிர ஒன்றுமில்லை. மனிதனுக்கு மேற்பட்டது ஒன்றுமில்லை, என்கிற உணர்வு பிறக்கிறது.

சில ஆண்டுகளுக்கிடையில் மருத்துவமனைகள் நிர்மாணிக்கப்பட்டுகின்றன. மனிதன், என்கிற தனித்துவ உணர்ச்சி, அவனை விட மேலானதில்லை என்கிற தனித்துவ உணர்ச்சி வேகம் - வேகம் - தீயின் வேகம்.

***

பாதுகாப்பான இடம். நோயற்றல். இவற்றின் மத்தியில் புலன்களின் ஆர்ப்பாட்டங்கள் - தேவைகள் - தேவைகள் இளைஞனும் அவன் சகாக்களும் பம்பரமாய் நடக்கின்றனர்.

சில ஆண்டுகளுக்கிடையில் பூமித்தாய் சொரிந்து சொரிந்து தள்ளுகிறாள். பார்க்கிற இடமெல்லாம் உணவின் செழிப்பு. உற்பக்தி - உற்பத்தி என்று மண் கதறுகிறது. மனிதன் அதன் அசுரப் பசிக்குக் கூட்டுறவாய்ச் 'சமாளிப்பு' நடத்துகிறான். பசி என்கிற பதமே இல்லை.

புதிய மதம் 'மனிதனின் தனித்துவம்' என்கிற மதம் வளர்ந்து செழித்து விட்டது. அது செழிப்பா? என்னமாய் ஊன்றிப் பதிந்து போய் நிற்கிறது?

***

சில ஆண்டுகளுக்குப் பிறகு அந்த இளைஞன் - இப்போது நரை தட்டிப் போன கிழவன் - தான் நிருமாணித்த 'மனிதனே முக்கியம்' என்கிற சமுதாயத்தை - உலகத்தைப் பார்ப்பதற்காய் நடக்கிறான். அவன் கண்களில் தான் என்ன சாந்தி? என்ன ஒளி? என்ன மலர்ச்சி? துள்ளி நடக்கிறான்?

அவன் கண்கள் வீதி வீதியாய்ச் சின்னத் தனங்களைக் கண்டபடியே துடிக்கின்றன? எவற்றைக் காண வந்தானோ அவை இல்லை. இல்லவேயில்லை. நம்பிக்கையற்றுக் கேவலத்திலும் கேவலமாய் வாழ்ந்த மனிதனை உயர்த்தினான். அவர்களுக்கு 'மனிதனே முக்கியம், என்கிற தனித்துவமான மதத்தையும் கொடுத்தான். மிக வேகமாய் அவர்கள் முன்னேறினர். அது முன்னேற்றமா? பின்னேற்றமா?

நெற்றிக்கு நேரே மனிதனை மனிதன் வெட்டினான். பகிரங்கமாய் இரத்தம் சொட்ட நின்ற கத்தியைப் பார்த்தபடியே பலமாகச் சிரித்தான்.

கிழவன் கேட்கிறான் 'இது என்ன கோலம்? என்ன தேவையை நோக்கி நீ அவனைக் கொல்கிறாய் மனித 'தேவை' கள் சகலத்தையும் நான் தீர்த்துவிட வில்லையா? இது என்ன சின்னத்தனம்'

'கிழவா நீ மனிதனின் தனித்துவம்' என்ற மதத்தையல்லவா? கற்பித்தாய்? கிரந்த கர்த்தாவாகிய உனக்கு நீ எழுதிய முதல் வேதம் மறந்து விட்டது? ஞாபகமூட்டவா?

'நீ ஒரே ஒரு தடவைதான் பிறக்கிறாய். உன் உணர்ச்சிகள் கோபமோ, காமமோ? நல்லதோ? கெட்டதோ? எதுவோ நீயிருக்கிற போதுதான் அவற்றின் வாழ் நாளும் இருக்கும். அதனை இழப்பது, எதன் பேரிலாவது அதீத சக்தியின் பேரில் தெய்வத்தின் பேரில் அதன் வழிகளான சமயத்தின் பேரில் - மூடத்தனம் அவற்றை அடைவதே உனது இலட்சியம், போராடு. வெற்றி பெறுவாய்'.

கிழவன் திகைக்கிறான். மறு வீதியில்.

பெண் நெற்றிக்கு நேரே - நெற்றிக்கு நேரே துடிததுக் கொண்டே கயவர்களால் சித்திரவதைப் படுகிறாள். கிழவன் வெறி பிடித்து ஓடுகிறான்.

தன் மண்டபத்தின் தூணருகே சாய்ந்தபடியே சிந்திக்கிறான்.

'தனி மனிதன் வாழ்க்கைத் தேவைகள் முற்றற உயர்ந்து தான் நிற்கின்றன உணவு உடை உறையுள் ஏதாவது - இவற்றில் எதாவது குறையிருக்கிறதா? பிறகு எதற்காக ஒருவனை ஒருவன் வெட்டுகிறான். ஒருத்தியைக் கற்பழிக்கிறான்? தனி மனிதன் வாழ்க்கைத் தேவைகள் முற்றற உயர்த்தப் படுகிறபோது அவனுக்கு இயல்பாய் அடங்கிய வெறித் தனங்கள் தேய்ந்து போய்விடுமா? யதார்த்தத்தில் இன்னும் அவை கூடுமேயல்லவா? தனி மனிதனின் இந்தத் தேவைகளைப் பூர்த்தியாக்க எதனால் முடியும் முடிந்தாலும் பூர்த்தியாக்கலாமா? பிறகு நாடும் சமூகமும் உலகமும் என்ன மாதிரி இருக்க முடியும்.

ஏதோ ஒரு அடிப்படை இல்லாத தனது சமூக அமைப்பை இப்போது உணர்ந்தான். பளிச் சென்று அவனுக்கு அது தெரியவாரம்பித்தது.

தனி மனிதனின் அந்தத் தேவைகளைப் பூர்த்தியாக்கவே முடியாத கட்டுப்பாடுகளும் கொடிய சட்டங்களும் அவற்றிற்கு மறை முகமாகவே வளமையைக் கொடுக்கும் 'பகிரங்கமாக' நடக்காமல் இருப்பதற்கு உதவி செய்யும் காலம் காலமாய் மெய்ஞானிகள் ஆரம்பித்த 'மதமே' அவற்றிற்குத் தடைகள். 'ஆத்மீக' அத்திவாரத்தில் எழும்பும் மனித - சமூக - உலக முன்னேற்றமே உண்மையான முன்னேற்றம். அது அற்றது. சின்னா பின்னமாய்ச் சிதறுண்டு மாயும்.

கிழவன் முணு முணுத்தான்.

உலக முன்னனேற்றத்தின் சமூக பொருளாதார அரசியலமைப்பின் ஆணிவேர் 'ஆத்மீகம் தான்'.

அந்த முணு முணுப்பு வெளியே ஓங்காரமாய் முழங்கி ஒளிக்கீறானது போலவும் இருந்தது!

*சுதர்திரன்*

*2[illegible]-06-1966*

# உரிமை

ஆலடியின் இடிந்த மதிலோரத்தில் சாய்ந்த படியே பக்கத்தில் உள்ள இடுகாட்டையும் சுற்றுப் புறத்தையும் பார்க்கிறபோது இயற்கையின் நுட்பமான பேசாச் சங்கதிகளே தேவனைப் பற்றிய பேரறிவு என்பதாக எண்ணம் எழுகிறது. மேற் கோடியின் நிதான உயரத்தில் சந்திர வட்டம் ஒளி பீய்ச்சுகிறது. பிசிறற்ற மங்காத பொற் தகட்டை உலகெங்கும் பரப்பி விட்டாற்போல அழகிய தோற்றம் அது. ஆலடியின் மதிலடியின் கீழ், நீரோடைகால் வகுக்க மாரிக்கால அடை மழையில் அள்ளுண்டு வந்த 'யப்பான் குஞ்சுகளும்', பனை உரஞ்சி மீன்களும் துள்ளி நெளிகின்றன. மழை நீரின் பசுமைத் துடிப்போடு உழவனின் திருக்கரத்தில் முறுகி நெற்றிப் பொட்டில் சிந்திய வியர்வைத் துளியில் வளர்ந்த நெற் கதிர்கள், கதிர் கக்காத கன்னிமையின் தாப அழகொடு நடனமிடுகின்றன. அழகுகளை, எல்லையற்ற நீலப் பரப்பில் கலம் மிதக்கும் அழகிலும் பெண்ணின் தாய்மைக் கோலத்திலும் பிறவற்றிலும் தேக்கிப் பிடிக்க முயன்ற ஆங்கிலக் கவி டேவிட்டின் பேதமையை அறிவுறுத்துகிறாற் போல ஆயிரவித அழகுகள் எல்லா இடத்திலும் பிறக்கின்றன. அழகு சார்ந்து நிற்கிறபோது பிறக்கும் அழகும், அழகு பிறிதொன்றையும் சாராமல் நிற்கிறபோது பிறக்கும் அழகின் தனித்துவமும் போட்டி போட்டுத் தெரிகின்றன.

தூரத்தே சலனமற்ற அமைதியை இலேசாய்க் கிழித்தபடி மாட்டின் சதங்கை ஒலி பிறந்து வளர்ந்து கொண்டிருந்த, சுற்றுப் புறமே கால் பெயர்த்து நடனமிட முயலும் பெயர்ப்பில் பிறக்கிற ஒலியின் பிரமை உணர்வு. என் கடமை என்னை உந்திற்று. வரும் வழி பார்த்து நின்றேன். மானிப்பாயிலோ அதனை அடுத்துப் பரந்திருக்கும் கிராமப் புறங்களிலிருந்தோ வருகிற மாட்டு வண்டிலாகத்தான் இருக்கும் என்று மனம் முடிவு செய்தது. சந்தேகமென்ன? மாட்டின் சதங்கை ஒலிதான். பேசாச் சதங்கை பேசுகிறதே? நகர்ப் புறத்தில் மாடுகளின் உணர்வுகளை மதிக்கவும் செல்லமாய்

அதன் அருமையை உணர்ந்து பேணவும் மூட்டை முடிச்சுக்களையும் விறகு கட்டைகளையும் ஏற்றும் வண்டி ஓட்டிக்கு மனமேது? குழந்தையின் அரை ஞாணிலோ, காற்பாகத்திலோ சதங்கை கட்டி அது சிறு அடி பெயர்க்கிற போது பிறக்கும் ஒலியில் மகிழும் தாய் போல மாட்டின் சதங்கை ஒலியில் மகிழக் கிராமப் புறத்து உழவனைத் தவிர வேறு யாருக்குத் தெரியும்? மாடும் வண்டியும் கண்ணிற்குப் புலனாகவில்லை. நான் இராக் காவலாளன். உள்ளிலிருந்தும் பிற இடத்திலிருந்தும் கால் நடைகள் போய் வராமல் காக்கும் வேலைதான்.

ங்......... ங்........... ங்.......... என்று சதங்கை ஒலி மட்டும் தூவானமாய் பரவிக் கொண்டிருந்தது.

புலன் சகலதையும் செவிப்புலனில் லயப் படுத்திக் கேட்டேன். விடாமல் தொடர்ந்து கோவில் மணி நாக்குப் பெய்யும் ஒலி சடுதியாய் நிற்கவும் முன்னதன் நாத அலைகளின் ஒலி புதிதாய் முதல் குரலெடுக்கும் சில் வண்டின் ஒலிபோலச் சலங்கை ஒலியும் தேயத் தொடங்கி மறைந்தது. இராக் காவலிற்காய் நிற்கும் நான் பலரும் உதறிவிட்ட இந்த மிருகக் காவற் பகுதியின் நோய்த் தடுப்புத் தற்காலிக வேலையை என் ஆத்ம பலத்தினை மட்டுமே நம்பி எடுத்திருந்தேன். அதற்கு இது சவாலோ?

ஆலடியில் இராக் காவல் உத்தியோகம் பார்க்கப் போகிறேன் என்று நான் வீட்டில் வார்த்தை பிறப்பித்தபோது அம்மா சொன்ன வார்த்தைகள் நினைவில் உந்தின. ‘கெட்ட இடம். பிசாசுகள் உலா விற இடம் பருவம் பருவமில்லாமல், அடங்கியும் அடங்காமலும் ஆன பிடிப்புக்களோடு உருசிகள் போயிருக்கும்... அதுவும்..... அதுவும் இரவிலே....... என்னவோ விரும்பினாப்போ?..... ஆண் எண்டா நாலு இடமும் அடிபடத் தான் வேணும்’.......

என்னவோ பயம் இலேசாய் ஏறிக்கொள்ள ஆரம்பித்தது. இடு காட்டின் காவலாளி இராப்போதில் சுடலை, வயிரவர் வெள்ளை வேட்டியோடு உலாவுவதைத் தான் கண்டதாகக் கூடச் சொன்னாரே....... சடுதியாய்ச் சுற்றுப் புறத்தின் அழகிய காட்சி மங்கிற்று. பயம் எழுந்தது. பிசாசுகளின் நடனம். பிசாசுகளின் ஒப்பாரி. மரண ஓலம். உயிர் அவஸ்தை. ஜீவனின் சுருதி தப்பிய ஒலிகள்......

‘... ஆத்மா என்பது அழிவில்லாதது. என் உள் வழிமுறையாய் வந்த ஆத்மாவின் பலம் இருக்கிறது. மனிதனும் அவனால் தோற்றுவிக்கப்பட்டனவும் எதுவும் தொட முடியாத ஆத்மா? நான் அதன் பிரதிநிதி. நான் ஆத்மா. ஆத்மாவே தான் நான். தூரத்தூர ஓடு பயமே. நான் அழிவில்லாதவன். நான் ஆத்மா....’

வேத காலத்தில் வேள்விப் புகைபரவ உச்சாடனம் செய்யும் ஆத்மீகிகளைப் போல நான் உரக்கவே நான் பயிற்றி வளர்த்த மந்திரத்தைச் சொல்லிக் கொண்டேன்.

பயம் அகன்று விட்டது. பயமெனும் உணர்வு அழிய அறிவு எழுந்தது. அறிவின் கூர்மையில் என்னுள் கணநேரத்தில் எழுந்த விசித்திர மனோ உணர்வுகளை நான் எடை போட முயன்றேன். இந்து சமயத்தைப் பின் பற்றிய சந்ததிகள் மனோ உணர்வோடும் பிறவற்றோடும் ஆழமாய்க் கண்ட உண்மைகளைத் தாமே பரிகசித்துக் காறி உமிழ முயன்ற போது ஐரோப்பியர்கள் விரும்பிக் கற்றும் போற்றியும் தம் விஞ்ஞான அறிவோடு அதன் துணையோடு நமது உணர்வுகளையும் தத்துவங்களையும் உள நூற் பாங்கில் நிருபணமாக்கி விட்டார்கள். நாம் இன்னும் கூட....? பிரார்த்தனையும், உள்ளமும் உடலும் சம்பந்தமாய் ஐரோப்பியர்கள் எழுதிய ஆழம்மிக்க கட்டுரைகள் நினைவில் மோதின.

மதகடியின் நீரோடைக் கரையில் இறங்கிக் கோரைப், புல்லின் சணல் துண்டை ஒரு சேரப் பிடித்தாற் போல இருக்கும் பூவைத் திரட்டி அவற்றின் கம்பைக் கோர்த்துப் பிடித்து அழகு பார்த்த படி நின்றேன். காம்பும் பூவும் ஒரே நிறத்தில் இருந்ததால் அதன் அழகு மனதைக் கொள்ளை கொள்ளவில்லை. தூர அவற்றை வீசிவிட்டு மேலேறினேன்.

நிமிருகிறபோது இடுகாட்டின் உள் சரசரப்புச் சத்தம் எழுந்தது. மனதின் சங்கதிகளை மனதோடு போராடுபவன் மட்டும் தான் உணர்ந்து கொள்ள முடியும். பயம் பிரார்த்தனையையும் விஞ்சி மீண்டும் எழ முயன்றது. பயத்தை ஓட்டிவிட முயன்றேன். சரசரப்புச் சத்தம் காரணமாய் மனம் எது எது பற்றியோ அலை பாய்ந்து இழுத்து வலிய முடிய முனைந்தது. பக்குவப்படாத தன்மையில் அலைப்புறும் ஆவியின் ஒலியோ? நாகப்பாம்பு தன் இமை நோக்கிப் பாயும் வேக ஒலியோ?...... ஒரு சமயம்...... காவலாளியின் வார்த்தைகளே நினைவில் இறுகிற்று. சுடுகாட்டு வயிரவர்...? அந்த நினைவு இனித்தது. அந்தத் தேவனின் உருவைக் காண கூடுமானால் மனிதனின் விசித்திரமான ஆசைகளை யாரால் புரிய முடிகிறது. சடுதியாய்ச் சுடுகாட்டின் கம்பிக் கதவைத் தாண்டி உள் இறங்கி விட்டேன்.

சந்திர வட்டத்தில் இருந்தும் ஒளியின் கற்றைகள் இலையும் கிளையுமாய் மூடியிருந்தது. ஆலப் பரப்பில் நுழைய முயன்று சிதறி வயது தளர்ந்த மனிதனின் முக ஒளிபோல மங்கிற்று.

அந்த மங்கிய ஒளியில் நெற்றிக்கு நேரே தெரிந்த காட்சி என்னை உலுப்பிற்று. ஆலமரத்திற்குப் பக்கத்தே உள்ள சுடலை வயிரவர் கோயிலின் உண்டியலைத் திறந்தபடி இருந்தார் அவர்.

அவரை வெகு நாட்களாகவே எனக்குத் தெரியும்.

மெல்லிய உருவம். சிற்றின்பத்தின் புலன் அழிப்பில் ஆட்பட்டு, ஆட்பட்டு மோதி மோதி, உயிரின் ஜீவனை இழந்து விட்ட மெலிவு இல்லை. மேற் காற்றில் மிதந்து, மிதந்து செல்லும் சருகு கீழிறங்கி மண்ணில் படிந்து மண்ணாகி மீண்டும் அதன் ஆரம்பத் தோற்றத்திற்காய் ஏங்கி நிற்கும் துடிப்பை உணர்ந்து, அந்தத் துடிப்பினைச் சருகின் அலைப்பில் உணர்ந்து

கசிந்து மெலிந்த உடம்பு. இறைச்சிக் கடைகளிலேயும் பிறவற்றிலும் உயிரினை இழந்து தொங்கும் பரிணாம வளர்ச்சியில் தேங்கி விட்ட சிற்றுயிர்களின் உயிர் ஓலத்தைக் கேட்டுக் கேட்டு மெலிந்த மெலிவு அது. இருதயத்தின் நாளங்களில் இருந்தும் நாடி நரம்புகளிலிருந்தும் கருணை வெள்ளமே பாய்கிறாற்போல் அவரது இயக்கம். கண்களில் தொலை நோக்கு. மலரின் இதழ்களில் சிறுகச் சிறுக நிறம் தீட்டும் நளின மென் விரல்களின் பொலிவையும் அது அழிவைத் தொடும் அவலத்தைப் பார்க்குமாப் போன்ற பார்வை. உலகின் இரண்டுவிதமான வேறுபாடுகளையும், அந்த முரண்பாடுகளின் பிறப்பிடமாய் நிற்கும் தோற்றங்களின் இயக்கத்தைப் புரியாமல் நிற்கிறோமே என்கிற ஆதங்கம் எதற்கோ முயன்று முயன்று தோற்றுப் போய் அந்தத் தோல்வியே நம்பிக்கையாய் மின்ன அந்த அனுபவங்களின் துணையோடு நிற்கும் ஆண்மை.

சீலைப் பேனும் அழுக்கும் ஈறெலாம் புகுந்து நிற்கும் நான்கு முழத்துண்டை அரையில் தொடுத்தபடி யாழ்ப்பாணத்து வீதிகளில் உலவுவார். நடந்துகொள்கிறபோது, துணி பிரிகிற போது, துடையெங்கும் அடர்ந்திருக்கும் மயிர்கள் பனம் சிராம்புகள் போலத் தெரியும். கையில் ஒரு பழங்குடை, அதன் முனை வீதியோரத்துப் பழம் பேப்பர் சருகுகள் என்னுமிவற்றில் பட்டுப் பட்டு முன்னேறும்.

அவர் பார்வை கிடுகு வேலி ஒன்றில் பதிகிறது. கதிகால்களில் அதன் முடியில் படர்ந்திருக்கும் தழைகளில் மேவிப் படிந்து நிலைகுத்திற்று. முள் முருக்கங் கொம்பர் ஒன்றிலிருந்தும் நூலிழை பெருகிப் பெருகி முற்றுத் தரிப்பற்று நீண்டது. அதன் முனையில் இளம் சிலந்தி ஒன்று நடுங்கிற்று. விழுங்கியும் கக்கியும் ஏறி இறங்கித் தொங்கிற்று. அவர் கண்களில் காவிய அழகின் நயங்கள் சொட்டிற்று. சின்னம் சிறிய அதன் உடலும் விரல்களும் அசையும் அசைவு அவர் மனதில் எதனையோ முகிழ்ப்பித்தது. கைகளைக் கொட்டிய படியே ஒலி எழாதவாறு சிரித்தார். இதழ் வழியே அமுதம் சிந்தினாற் போல இருந்தது.

வெகு நேரமாய் அதனையோ பார்த்தபடி நின்றார். சடுதியாய் நூலினடி அறுந்து சிலந்தி நிலத்தில் விழுந்து அதிர்ந்தது. அதன் இதழ்கள் கோணிச் சுருங்கிற்று. குனிந்து விழுந்து கிடந்த சிலந்தியை எடுத்துக் கதிகாலின் கொம்பரில் எப்படியோ விட்டார். மாறி மாறிப் பெரிதாய் சில நிமிடங்களின் இடையே நேர்ந்த அதிர்ச்சிகளில் ஸ்தம்பித்து இசையில் அசையாது நின்றது சிலந்தி. சந்தேகத்தோடு அதனையே பார்த்தபடி நின்றார். நேரம் கருகி உதிர்ந்து கொண்டிருந்தது. சிலந்தி சற்றே பெயர்ந்தது. அவர் நடை ஒலியும் பிறந்து வளர்ந்தது.

அவர் யாருக்கும் புரியாத மனிதர். அவர் நிற்கிற போது நின்று, நடக்கிற போது நடந்து அவரை நான் புரிந்து கொள்ள முயன்றிருக்கிறேன். அவருள் புகுந்து அவரை 'இன்னார்' என்கிற புதிரை அவிழ்த்துவிட்டு, சிருஷ்டியின் நிர்வாணமாய்ப் பார்த்து விட வெறும் இலக்கிய உணர்வு

போதுமா? மாலை பிறந்து விட்டால் அவருக்குப் புதிய உலகம் முகை அவிழும்.

அரசடி றோட்டில் இருக்கும் நெடிதோங்கிய அரச மரம் சலனமற்றிருந்தது. வெழுத்த மேற்தோலின் வெண்மை படிந்துவரும் சுற்றுப்புற இருளில் பளீரென்று துலங்க முயன்று தோற்றுப் பகைப்புலத்தில் சமைந்தது. அரசமரத்தின் அடியில் சிமெண்டால் செய்யப்பட்ட வயிரவ கோவிலின் உள் திரிசூலத்தில் நானாவித மலர்கள் சிதறுண்டு கிடக்கின்றன. 'குப்பி' விளக்கில் சுடர் ஒளிபரவிற்று.

அவர் அந்த வயிரவ சூலத்தின் முன்னால் நிற்கிறார்.

மெலிதாய்ச் சுடர் விட்ட தீபம் படபடவென்று ஆட்டம் ஆடி அச்சிமெண்ட் அறையின் உள்பெரிதாய்ப் படர்ந்து ஒளிவெள்ளமாய் மின்னும் பிரமை. அந்த ஒளித்துகள் ஒன்றிப் புகை நீங்கிய பொற் தகட்டின் முனைபோல் அலகுகள் இறங்கிற்று. தீப்பொன். அரச மரம் மறைந்தது. திரிசூலம் மறைந்தது. பரவிக் கிடந்த நறுமலர்கள் அகன்றன. தீயின் நாக்குகள் சுருண்டு சுருண்டு வேகத்தோடு புரண்டு புரண்டு தழுவின. அவற்றின் தழுவலில் தீத்துணுக்குகள் பொறி கக்கிப் படீரென்று வெடித்துத் தீப் பொட்டாய்ப் பொல பொல வென்று உதிர்ந்தன. தீயின் மலர்கள் பொன் மலர்கள். திரிசூல நுனி பெயர்ந்து அங்கும் இங்கும் எங்குமாய் ஆடிக் கிறங்கிற்று.

அது அவரது உலகம். அந்த உலகத்து உணர்ச்சிகள் அவர் வரையில் நித்தியமானது. நெற்றிக்கு நேரே காணுகிறாற் போன்ற தரிசனம். இந்து சமயத்தைப் பின்பற்றுகிறவன் தமிழன் என்கிற உற்சாகத்தோடு தன்னைப் பற்றிப் படர்ந்திருக்கும் காவிய அழகின் துலக்கமான பிரபஞ்சத்தின் ஒன்றல் தத்துவத்தை உணர முயன்றவன் அவரின் உணர்வுகளை ஓரோர் சமயம் உணர்ந்திருக்கக் கூடுமோ என்னமோ? காலையில் உறக்கத்தில் இருந்தும் விழித்துக் கொண்டு நேற்றைய முந்தைய நினைவின் சுமைகளை உதறி மனம் மறந்திருக்கும் பாங்கில் நெஞ்சரங்கில் சதிராடும் உணர்வினையாவது உணர்ந்திருக்கும் மனிதன் அவரை உணர்ந்துகொள்ள முடியும். அது சாத்தியம்தான்.

***

ஒரு வருடத்திற்கு மேலதாய் நான் அவரைச் சந்தித்ததில்லை. அசிங்கமான காரியமொன்றைச் செய்யத் துடிக்கின்ற முனைப்போடு இதே சூழ்நிலையில் அவரை சந்திக்க முடியும், என்று நான் கனவிற் கூட கருதியதில்லை. மனம் நம்ப மறுக்கின்றவையும் மனம் வெறுக்கின்றவையுமே

பல சமயங்களில் வாழ்வில் வந்து தேய்ந்து விடுகின்றன. இந்தச் சூழ்நிலையில இந்த மனிதரின் சந்திப்பும் அதுதான்.

என்னை உலுப்பிவிட்டு அவன் கைகளைச் சடுதியாய்ப் பற்றிப் பிடித்தேன்.

'கள்ளா...... ஊரை ஏமாற்றினாயே'?
'யார் கள்ளன்'?

'நீ.. இந்தக் காவி வேஷம்'

'பொய்'

'எது பொய்'? நான் கைகளை நெருடி அறைய முயன்றேன்.

வேகமாய் அவன் சொன்னான்.
'உனக்கென்ன. அவனிட்டை எடுப்பன் - நீ யார் கேக்க'?

'என்ன'?

'அவனிட்டை எடுப்பன்..... உனக்கென்ன'?

ஸ்தம்பித்து நின்றேன்.......... கைகள் தானாய்ச் சோர்ந்தது. எனக்குப் புரிந்தது அவனுக்குப் புரிந்ததோ என்னமோ? அவன் போய் விட்டான்.

சலங்கை ஒலி எழுந்து தெருவைத் தொட்டது.

*சுதந்திரன்*
*06-03-1966*

# துறவி

ஆச்சிரமத்தின் சுற்றுப் புறத்தைச் சுற்றி மென்மையிலும் மென்மையான கரு நீலத்துணியைப் போர்த்தியிருக்கிறாற் போல ஒரு அழகு பரந்து நிற்கிறது. கீழ்த்திசையில் மெது மெதுவாய்க் கதிரவன் எழுகிறான். விரிவானில் நட்சத்திரங்கள் கதிரவனின் பிரகாசமான சிறைக் கூடத்தில் அடைபடப் போகிற வேதனையால் புழு நெளிகிறமாதிரியான வேதனையின் தோற்றம் போல் மனதைக் கலக்கிக் கவ்வுகிறது. ஆச்சிரமம் அமைந்து கிடந்த வில்லூண்டிப் பிரதேசம் அற்புதமான அழகோடு பொலிய ஆரம்பிக்கிறது. அழகையும் அழகோடு பொருத்திப் பார்க்கிறபோதுதான் அழகின் நுட்பமான இரகசியங்கள் - இதழ் இதழாய் மலரும் மலர் போல் நெஞ்சில் மலர்ந்து நிறைகிறது. வில்லூண்டிக் கேணியின் எல்லையற்ற 'மௌனத்திற்கும்' - அந்த ஆச்சிரமப் பிரதேசத்தில் அர்த்தம் கற்பிக்கிறாற் போல அந்த மங்கிய பொழுதில் பட்சி ஜாலங்கள் குரல் கொடுக்கின்றன. வில்லூண்டியின் மேற்குத் திசையில் முன்னூறு யார் தள்ளி நீண்டு பரந்து ஓடுகிற நாவாந்துறைக் கடல் - வில்லூண்டிக் கேணியிலிருந்தும் 'வடி காலால்' அதை நோக்கி ஓடிய நீரின் மெல்லிய ஓசை நீர் கடந்து வந்த பாதையில் அந்த இடத்திற்குரித்தாய் நின்ற - இலைகளற்ற கரு மரங்கள் - எல்லாமே அற்புதமானதொரு மனமயக்கத்தை உண்டாக்கிக் கொண்டிருந்தன.

துறவி பரமேஸ்வரனார் எல்லையற்ற அந்தப் பேரெழிலில் மெய் மறந்து நிற்கிறார். எப்பொழுதோ படித்த தாகூரின் கவிதையை அந்தப் போதில் அவர் எண்ணிக் கொண்டார். இல்லை, ஜீவன் ததும்பிய அந்தக் கவிதையடிகள் தாமாகவே அவர் நெஞ்சத்தில் வந்து மிதந்தன.

'இரவு பகலாய்ச் சதாகாலமும் வருகிறானே அவன்? அவனது பாதங்கள் நடந்து வருகிறபோது எழுகிற மெல்லிய ஒலியை நீங்கள் கேட்கவில்லையா? அவன் வருகிறான். அவன் வருகிறான். சதாகாலமும் வருகிறான். பரமேஸ்வரருக்கு நெஞ்சு புல்லரித்தது. சலனமில்லாத அந்தப் பேரமைதிப்

போதில் - அவருக்கு ஆண்டவன் நடந்து வருகிறாற் போலவும் அந்த அற்புத நடையின் ஒலி சுற்றுப் புற மெங்கும் சங்கீதத்தின் இனிமை போலக் கனிந்து நிற்கிறாற் போலவும் பட்டது. மயிர்கள் சில்லிட்டு நிற்க அவர் நெடுநேரமாய் நின்றார். நாள் தோறும் அப்படி அதிகாலைப் போதில் அந்த அழகில் கிறங்கி நின்றாலும் - அலுப்புத் தட்டாமல் தான் - இப்பொழுது நிற்கிறார். பின்னர் வில்லூண்டிக்கு அருகாமையில் உள்ள கிணற்றண்டை சென்று தோய்கிறார். தோய்கிற போது அவர் எண்ணிக் கொள்கிறார்.

'மனிதர்கள் மிகவும் மோசமானவர்கள். அற்புதமான இந்தக் குளிர் நீர்க் கேணியை எவ்வளவு மோசமாக்கி விட்டார்கள். ஒரு கட்டுப்பாடில்லை. குஷ்டரோகியும் குளிக்கிறான். அதற்குள் துணி அலம்புகிறான். சளியைச் சிந்துகிறான். போதாதற்கு சிறுநீர் கூடக் கழிக்கிறான். பொதுச் சொத்து என்று அவனுக்கு நன்றாகத் தெரியும். பொது நலன் என்பது தான் அவனுக்குத் தெரியாது. பொது நலன் என்பது வளராமல் பொதுச் சொத்து என்கிற சிலரது மோட்ச சாம்ராச்சிய நல்ல கனவுகள் முற்றும் நிறைவேறி விடாது என்பதற்கு இதை விட நல்ல உதாரணம் ஏது? பார்க்கப் போனால் இந்த நாட்டின் மத்திய அரசாங்கமும் - நகரசபைகளும் அருமையாகச் சில நன்மைகளைச் செய்து கொண்டே பல மோசமான தீமைகளை வளரவிட்டுக் கொண்டிருக்கின்றன.

'சை இந்தப் போதில் இது என்ன சிந்தனைகள்? 'என்று வேகமாக அவற்றை ஒதுக்கி விட்டுக் கொண்டே - உடம்பைத் துவட்டி விட்டு - ஆச்சிரமத்தின் நடு முற்றத்தில் சம்மாணம் கொட்டி அமர்கிறார். அவர் கண்கள் நிமிட நேரத்தில் நிலை குத்தி நிற்கின்றன. அவர் வரையில் அந்தப் போதுதான் கவலையற்ற அற்புதமான உலகம். அந்தச் சூழ்நிலையால் அவர் நிலை நிறுத்தியிருந்த மோனத் தவம் சுற்றுப் புறமெங்கும் நொடிப் போதில் பரவி 'உலகம் உறங்கிக் கொண்டிருக்கிற போது யோகியானவன் விழித்துக் கொண்டிருக்கிறான்' என்கிற கீதையின் அற்புத வாசகத்தை முணு முணுப்பதாய் ஒரு மயக்கம் எழுகிறது. அவர் எவ்வளவு நேரம் - அந்த மௌன நிலையில் - பேரின்பலயத்தில் கயமைத்தனங்களும் சின்னத்தனங்களும் படிந்த இந்த உலகத்து - அவரை இடையறாது அலைத்துக் கொண்டிருக்கிற - நினைப்புகளற்று நிற்பாரோ?

ஆத்மீகம் என்று பார்க்கிறபோது மனிதனின் விடுமுறை நாட்கள் கூட, எவ்வளவு கேலிக் கிடமாய்ப் படுகிறது. புதிய புதிய 'தளைகளைப்' பற்றிக் கொள்வதற்காய் - விடுமுறையன்றே ஓடுகிற காலத்தில் ஒரு விடுமுறையைச் சமைத்துக் கொண்டுடிருக்கிறான் மனிதன். ஆனால், அந்த ஆச்சிரமத்தை ஒட்டிப் பார்க்கிற போது அது பொருள் பொதிந்த விடுமுறையாகத்தான் படுகிறது. சமூகத்தின் பென்னம்பெரிய உத்தியோகத்தர்கள் - அந்த அதிகாலையிலே அந்த ஆச்சிரமத்தை வந்தடைந்து விட்டார்கள். நான்கு முழ வேஷ்டியோடு 'அன்னியம்' என்கிற சகலத்தையும் துறந்து அவர்கள் நிற்கிறபோது - அவர்கள் கூட - 'நாவில்' மேலை நாட்டு மொழியும், மனதில் அந்த மொழி கொண்டிருக்கிற பண்பாடுமாய் நிற்கிற அவர்கள் கூட - தமிழிற்கே உரித்தான - அது பிறந்து வளர்ந்து கொண்டிருக்கிற

மண்ணிற்கே உரித்தான ஒரு அழகோடு நிற்கிறாற் போலத் தெரிகின்றதே? அவர்களோடு அவர்களது செல்லக் குழந்தைகளும் அவர்களது மேலதிகாரிகளான மனைவிமார்களும் நிற்கிறார்கள். பார்க்கிறபோது - அந்தப் பெண்களின் - மேலதிகாரிகளின் - மேல் அதிகாரிகளான அந்தப் பெண்களின் கண்களில் ஆச்சிரமத்திற்கு ஒத்துக் கொள்ளாத முற்றும் வேண்டாத - ஒரு அகம்பாவம் விரவி நிற்கிறதே? தாம் பிறந்த சமூகத்திற்குரித்தான நன்னடத்தைகளையும் - பழக்க வழக்கங்களையும் - புரிந்து கொள்ளாத அந்தக் குழந்தைகள் மட்டும் ஆச்சரியமும் பரிவும் கலந்த பார்வையால் துறவியாரைப் பார்க்கின்றன.

துறவியின் கண்கள் மலருகின்றன. அப்படி மலருகிற போதே அவர் இதழ்களும் மலருகின்றன. நறுமணம் மிக்க மலர் மலருகிறபோதே தன்னுள் பொதிந்து வைத்திருக்கிற நறுமணத்தைக் காற்றில் 'குப்' என்று அள்ளி நளினமாகப் பரப்புகிறாற் போல அவர் இதழ்களும் மலருகிற போதே சுந்தரமான தேவார அடிகளை ஓதியபடியே மலருகின்றன. அந்தச் சூழ்நிலை கணப் பொழுதில் மாற்றமடைகிறது. பலர் அவர் பாதங்களில் பரவி எழுகின்றனர். வழக்கமாக அச்சமயங்களில் தூர விலகிக் கொள்கிறாற் போலத்தான் அப்போதும் அவர் விலகியபடியே 'உன்னையே நீ வணங்குகிறாய்' என்கிற ஆழமான வாக்கியத்தைக் கூறுகிறார். பாலையும் பழத்தையும் அவர் முன்னால் குழந்தைகள் வைக்கின்றனர். ஆச்சிரமத்தின் சுகந்தச் சூழ்நிலையை மேலும் சுகந்தம் ஆக்குகிறாற் போலக் குழந்தைகள் இனிய குரலில் பாடுகின்றனர். அவர்கள் கண்டத்திலிருந்தும் - பெரியவர்கள் கண்டத்திலிருந்தும் பிறந்து சுற்றுப் புறத்தை மனோரம்மியமாக்கிய தேவாரப் பாடல்களில் - சுருதி பேதத்தோடு கசப்பான மண்ணின் தீமைகள் கலந்திருக்கிறாற் போலவும் - இல்லைப் போலவும் பட்டது. துறவியார், அவர்கள் ஒவ்வோர் சமயங்களிலும் தமக்குக் கொடுத்த மான் தோல்களை நிலத்தில் விரிக்கின்றார். அவர்கள் அமர்ந்து கொள்கின்றனர். அவரும் கொஞ்சம் தள்ளிக் குழந்தைகளோடு அமர்கிறார். அவர் பாடப்பாட அவர்களும் பாடுகின்றனர். பிறகு அவர் தியானத்தில் ஆழத் தொடங்குகிறார். அவர்களையும் அப்படிச் செய்யும் படி கைகளால் காட்டியபடியே சுற்றுப் புறத்தை மறக்கிறார்.

''சாமி''

''சாமி! சாமி!'' என்று யாரோ அவரை உலுப்புகிறார் போல துறவியார் நிஷ்டை கலைந்ததும் - 'என் முகத்தில் விழிக்க வேண்டுமென்பதையும் - அவர் என்ன வாக்குக் கொடுப்பாரோ என்பதையும் நெஞ்சில் நிறுத்திய படியே இமைகளை மூடிக் கொண்டிருந்த அவர்களுக்குப் படுகிறது. அவர்கள் விழி மலர்த்திப் பார்க்கின்றனர்.

அவன் உலுப்பலும் - கோரலும் நீளுகிறது. துறவியார் அசையவில்லை. அவன் மட்டும் அசைந்து மல்லாக்காய் விழுகிற சத்தம் எழுகிறது. இருவர் மூவராய் அவனை அடிப்பதையும் - அந்தப் பத்தினிப் பெண்கள் - தமிழில் திட்டினால் அந்தப் பாஷைக்கு இருக்கிற அளவற்ற இனிமையால் - அந்தத்

திட்டும் வாழ்த்தாய்ப்படும் என்கிற பயத்தாலோ - என்னவோ ஆங்கிலத்தில் அவனை மோசமாகத் திட்டினர். 'பஸ்ராட்' என்கிற பதம் மட்டும் - சுந்தரக் கண்களோடு நின்ற ஒரு பெண்ணின் வாயிலிருந்தும் முழுதும் வெளிவருவதற்கு முன்னால் - மற்றவர்கள் அதைத் தாம் சொல்ல முன்பு அவள் சொல்லிவிட்டாளே என்கிற ஏக்கமும் கலந்து, சிரித்த சிரிப்பால் அவ் ஒலி மங்கி மறைகிறது.

துறவியின் நிஷ்டை கலைந்து போய் விட்டது. ஆச்சிரமத்தின் சூழலும் முற்றற மாறி விட்டது. சுற்றுப் புறச் சூழலில் படிந்து நின்ற ஒரு எல்லையற்ற பேரெழில் சொல்லாமல் ஓடி விட்டாற் போல பயங்கரமானதோர் வெறுமை படிந்து நிற்பதாய் பட்டது. யாரோ அங்கு வந்திருந்த மேலிடத்துப் பக்தன் கொண்டு வந்திருந்த மேல் நாட்டு நாய் நம் நாட்டு மலிபன் பிஸ்கற்றையும், மாட்டையும் தின்று மேலை நாட்டுக் குரலில் முழங்கி கொண்டிருந்தது. அந்த வெறுமையைச் சுற்றிக் கண நேரத்தில் சுழன்ற துறவியின் கண்கள் மிக்க பரிதாபத்தோடு சிரித்தன. அவர் இதழ்களும் அவலமாய் நடுங்கின. அங்கு நடந்திருப்பதை ஊகித்துக் கொண்ட துறவியார் அவனைப் பார்த்தார்.

வயது பத்தொன்பது இருக்கலாம். உளவளமையின் ஒளி கண்களிலும் இதழ்களிலும் பூத்து நின்றாலும் அவன் கோலத்தில் ஒரு வறுமை விரவி நின்றது! அவன் உடுத்தியிருந்த மோசமான துணியின் கோலமும் சோர்ந்து போயிருந்த முகமும் அடர்ந்த சிகையும் அவர் கண்களில் ஒரு கணம் கரைகாணாச் சோகத்தைப் பூசியது' வலிந்து 'சுற்றுப் புறத்திற்காய் ஒரு பொய்மையான கடமையைக் கண்களில் நிறுத்தியபடியே 'நீ யாரோ' என்று துறவியார் கேட்டார்.

சில கணங்களுக்கு முன்னால் தனக்கு நேர்ந்த மோசமான அவமரியாதையைக் கிஞ்சித்தும் மனதில் கொள்ளாதவன் போல் ஒன்றை உறுதியாய் அவன் மெதுவாகக் கூறினான். 'நான் - நான் தங்களைப் போலத் துறவியாய் உலகப் பற்றற்று - அவற்றை எள்ளி நகையாடிய படியே மோனத்தில் இருக்க வந்தேன்.''

துறைவியின் கண்கள் மிக்க கொடூரமாய்ச் சிரித்து நடுங்கின கனன்று சிவந்தன. நெற்றி நரம்புகள் புடைத்தன. அவர் கத்தினார்.

''ஓடு - ஓடு அவனைப் பிடித்து வெளியே தள்ளுங்கள்''

அவன் மாதிரிச் சமூகத்தைச் சேர்ந்தவன் இந்த ஆச்சிரமத்தில் உதவாதவன் என்று நிறுத்தி முணு முணுத்தார். ஏற்கெனவே அவனை வெளியேற்றியவர்கள் வெற்றிப் பெருமிதத்துடன் - துறவியையும் - தம் பத்தினிமாரையும் - காதலும் வீரமும் வழிய நோக்கிய பின்னர் தம் சமூகத்தோடு கிஞ்சித்தும் தொடர்பில்லாத அந்தக் கீழ் வர்க்கப் பிராணியை வேகமாக வெளியேற்றினர். போவதற்கு முன்னால், அந்த இளைஞன் துறவியைப் பரிதாபத்தோடு பார்த்தான். அந்தப் பார்வையில் அவன் என்ன கண்டானோ?

துறவியின் முகம் பேயறைந்தாற் போலப் பொலிவிழந்து நின்றது. மிகவும்

சிரமத்துடன் அவர் அமர்ந்திருக்கிறார். நேரம் நழுவுகிறது. அவர்களும் அவர் பாதங்களில் வில்லங்கமாகப் பரவிய படியே எழுகின்றனர். கார்க் கதவுகளைத் திறந்தும் - பக்கத்தில் மனைவி மாருடன் அமர்ந்தும் - வேகமாக அவற்றை அடித்துச் சாத்தியதும் - அவர்கள் சிரிப்பும் பேச்சும் கூட - அவர்கள் சமூகத்திற்கே உரிதான ஓர் அந்தரங்கமான வேகத்தையே துறவிக்கு இப்போதும் காட்டிற்று. பணமுடையவனும் - மேல்வர்க்கத்தினனும் - சாமி - துறவி - பக்தி என்பவற்றையும் தமது அலுத்துப் போன நடவடிக்கைகளுக்கு மாற்றமானதோர் பொழுது போக்காய்த்தான் இன்றைக்கும் கருதிக் கொள்கிறாற் போலத் துறவியாருக்குப் பட்டது.

மாலை நேரத்தில் மறைகிற சூரியன் அற்புதமானதோர் காட்சியை விரிவானில் விரிக்கிறான். அவன் மறைவுக்கு வருந்துகிறாற் போல - சுற்றுப் புறமெங்கும் - ஒரு சாவீட்டின் உள்கொந்தளிப்போடு கூடிய மௌனம் நிலவுகிறது. துறவியார் அங்குமிங்குமாய் நடந்து கொண்டிருக்கிறார். இந்நேரம் அவர் சுற்றுப் புறத்தை மறந்து விடுவது வழக்கம். இன்றைக்கு அவரால் அப்படிச் செய்து கொள்ள முடியவில்லை. பெரிதும் முயன்று பார்த்தார். 'வாழ்வு முற்றும் கனவு...... கனவு' என்றவர் மனம் ஓலமிட்டலறிய போதிலும் - அதிலும் மோசமாய் அவரது உள் மனமோ? அவருக்குத் தெரிந்த - அவர் மறைத்துக் கொண்டிருக்கிற மிக மோசமான உண்மைகளைக் கண்ணீருடன் கலந்து கொட்டிற்று. கண்ணீர் விட்டபடியே அவர் சிந்தித்தார். தன் கனவுகளை எண்ணினார்.

துறவி பரமேஸ்வரனார், பரமேஸ்வரன் என்கிற சாதாரண அனாதையாகத்தான் முப்பது வருட காலமாய் இந்த உலகத்தில் வாழ்ந்தார். அவர் ''வாழ்ந்த உலகமும்'' - அந்த உலகம் ஆடம்பரத்திற்காய் பொது சன நூலகங்களில் எடுக்கிற கனமான புத்தகங்களும் அவருக்கு மிக மோசமான உண்மைகளைக் கற்பித்து விட்டன. நீண்ட இரவுகளிலே அவர் தூக்கமின்றிச் சிந்தித்தார். சமூகத்தில் 'மேலானவர்களாய் நிற்கிற இவர்களது அகப்புற அசைவுகளை - விஞ்ஞானியின் ஆசையும் - நுட்பமும் கலந்த நோக்கோடு பார்த்தார். அப்படிப் பார்க்கிற போது - தான் வாழ்ந்து கொண்டிருக்கிற சமூகத்தில் மிக மோசமான அருவருப்பூட்டுகிற பெலவீனங்கள் இருப்பதைக் கண்டார். அன்றே அந்தத் தீராத ஆசை அவருக்கு எழுந்தது. கனவாய் மலர்ந்து வர்ண பேதம் காட்டிச் சிரித்தது. அவர் இடையறாது சிந்தித்துச் சிந்தித்து பாடமாகிப் போனாற் போன்ற அந்தக் கருத்துக்கள் இப்போதும் அவர் மனதில் பட படவென்று ஓடின. அவை நெஞ்சத்தில் நகருகிற போது - துறவியார் - அழுகிறார் - ஏளனமாகச் சிரிக்கிறார் - முணு முணுக்கிறார் - அவரையறியாமலேயே அவை நடந்து கொள்கின்றனவோ?

'ஒவ்வொருவரும் தத்தம் மக்களுக்குச் சொத்துச் சேர்த்து வைத்துப் போக ஆசைப்படுகின்றனர். ஆனாலோ தாம் வாழுகின்ற, நாட்டிற்கும், தம் மொழிக்கும் ஒரு வருங்காலத்தையாவது தேடிவைக்க ஆசைப் படுகிறார்களில்லை'. துறவி பரமேஸ்வரனாரின் தீர்மானம் இப்படித் தான்

வந்து நின்றது. முப்பது வயதில் - இளமை மதர்த்துச் செழித்த காலத்தில் அவர் இந்தச் சமூகத்தை வாள் முனையால் மாற்றக் கனவு கண்டார். ஆனால், வாளின் கூரான முனைகள். மென்மையான இருதயத்தில் இரத்தத்தைச் சொரியப் பண்ணுமே தவிர முடிந்த முடிபான நல்லெண்ணங்களை ஒருகாலும் உருவாக்கி விடாது என்றும் கருதினார். உடனே துறவியானார்.

தெய்வத்திலும் அவனுக்கு நம்பிக்கையில்லை என்பதும் அவருக்குத் தெரியும். 'கோயிலின் கர்ப்பக் கிரகத்தில் ஆண்டவன் இல்லை. வெளியே உழுகிறவனில் இருக்கிறான்' என்றால் மிகக்கோரமாகச் சிரிக்கிறான். இந்த நூற்றாண்டிலும் - இமயமலையைப் போல உயர்ந்து நிற்கிற சமயத் தலைவர்கள் கண்ணுக்கு முன்னால் காட்டிய போதிலும் கூட, அவன் 'சமய அறிவில், - விவேகானந்தர் சொன்னது போலத்தான் நிற்கிறான். அவனோடு ஒட்டி நின்று - அவனுக்குத் தன்னில் அளவற்ற மந்திர வலிமைகள் இருப்பதாகக் காட்டி அவனைத் திருத்திவிடக் கருதினார், துறவி பரமேஸ்வரனார். இடையே அவருக்கு அதிகாலைப் போதில் தன்னிடம் வந்து 'சீடப் பிச்சை' கேட்டு நின்ற இளைஞன் நெஞ்சில் வந்து நின்றான். அவனை நெஞ்சில் நிறுத்தியபடியே மிக்க சோகத்தோடு அவர் புலம்பத் தொடங்கினார்.

இரவு வெகுவேகமாகப் பரவுகிறது. மெல்லிய இளம் துணியைப் போல உலகத்தை போர்த்தியிருந்த இருள் - தற்போது - நமது சமூகத்தில் - இந்தக் காலவரையறையில் மிக மோசமாக - ஒவ்வொருத்தனுக்கும் தெரிய வேண்டிய 'மொழி - நாடு' சம்பந்தமான முன்னேற்ற அறிவுகளை மறைத்துக் கொள்கிற சமூக அறியாமைகளைப் போலத் தான் விஞ்சி விஞ்சி இறுகுகிறது. இமைக்கிடையே மேல் வர்க்கத்தினனுக்கு எழுகிற சமுதாய நல்லுணர்வுகளைப் போல வான் திரையில் நட்சத்திரங்கள் மின்னுகின்றன. அவையும் தொழில் - பணம் - வசதிகளுக்கு அடிமைப்பட்ட - பற்றுக்களால் மூடி மறைக்கப் பட்டாற் போல அவையும் கருந்திரைகளால் மூடப்படுகின்றன.

துறவியார் மெல்ல எழுகிறார். காலைப் போதில் அவர் காதில் விழுந்த குரல் இப்போதும் அவர் செவிப் புலனில் வீழ்வதாய் அவருக்குப் படுகிறது. நொடிப் பொழுதில் அந்தக் குரலுக்குரியவனை அடையாளம் கண்டு கொண்டே - உண்மை ஆசைகள் - உள் மனதில் உண்மை நினைப்புக்களையும் புரிந்து கொண்டு விடும் என்று முணு முணுத்துக் கொண்டே அவனை இறுகத் தழுவிக் கொள்கிறார். காலம் கடந்து வந்திருக்கிற இரண்டு புனிதமான அன்புச் சக்திகள் ஒருருக் கொண்டு தழுவிக் கொள்கிறாற் போல அது இருந்தது. அணைத்த கைகள் சோருகின்றன. வாய் மட்டும் வேகமாகப் பிரிந்து - வலுவோடு சொற்கள் பிறந்து, சுற்றுப் புறத்தைப் 'பிரமிப்போடு' நோக்க வைக்கின்றது.

''மகனே இந்த உலகம் என்னைப் பணக்கார வர்க்கத்தின் துறவியாய்க் கதைத்துக் கொள்கிறதைப் பார்க்கிற போது என் நெஞ்சு சாம்பித் தீய்கிறது.

மோசத்திலும் மோசமானவன் பணமுடையவன். அவன் சதா நல்ல வற்றைக் கொன்று கொண்டே மிக மோசமானவற்றைத் தேடித் தேடிப் பெறுகிறான். அவன் இழந்து கொண்டேயிருக்கிற - இனம் - மொழி - நாடு, என்கிற பற்றுக்களை - மிக மேலான ஜீவன்களை அவனுக்கு நான் காட்ட விரும்பினேன். மகனே அதில் தோற்றுத்தான் போனேன். மகனே அதில் நான் மிகவும் மோசமாகத் தோற்றுத்தான் போனேன்? அவனுக்குத் தெய்வ பக்தியும் ஏறவில்லை - அதனைச் சாக்காகக் கொண்டு - அவனுக்கு நான் ஏற்ற விரும்பிய பற்றுக்களும் ஏறவில்லை.

மகனே - உலக நினைப்பற்று - உன் நாட்டு நினைப்பற்று - உன் மொழியின் நினைப்பற்று - நீ மோனத் தவம் இருக்க ஆசைப்படாதே. நல்லவர்கள் எல்லாம் சுற்றுப் புறத்தின் மோசமான 'வாடை'க்குப் பயந்து அன்றும் இன்றும் ஆச்சிரமங்களிலும் - தனியிடங்களிலும் ''சமாதிச் சுகம்'' கண்டார்கள். எங்கோ எனக்கெட்டிய வரையில் விவேகானந்தத் துறவி மட்டும் - 'மாஸஸ் - மாஸஸ்' என்று கீழ் மக்களுக்காய் கண்ணீர் விட்டார். நாட்டின் விடுதலைக்காய் உருகினார். மகனே - ''தன் மொழி - தன் நாடு - பிறகு உலகம்'' என்கிற பற்றற்று வாழ்வது ஒரு வாழ்க்கையா? நெற்றிக்கு நேரே தெரிகிற இந்தத் தெய்வங்களை (பற்றுக்களை) விட்டுத் துறவி ஓட வேண்டுமா?

இடையே நெடிதாய்த் தயங்கினார், துறவியார். அந்தத் தயக்கம் - அந்தத் தயக்கத்தை மேல் பூச்சாகக் கொண்டு அவர் உள்ளத்திலே நடந்து கொண்டிருந்த சில நிமிட நேரப் போராட்டங்கள் இவை பற்றி அந்த இளைஞனுக்குத் தெரியாது. அது இருள். அந்தத் தயக்கத்தையும், சுற்றுப் புறத்தையும் பிளந்து அவர் குரல் முடிவான தீர்மானமாய் ஒலிக்கிறது.

'மகனே - நீ துறவியாக ஆசைப்படுகின்றாய். அந்த ஆசை - நுட்பமான உன் 'இளமைத் துடிப்போடு கூடிய' புலன்களின் ஆசையாக அமையட்டும். அதில் மோசமில்லை. ஆனாலோ அந்தப் பற்றுடைய துறவியாய் மட்டும் இரு. 'துறவு' என்கிற வார்த்தைக்குப் பொருந்தாத உன் துறவுக் கோலத்தை - ஊரும் - உலகமும் லௌகீகத் துறவி என்று தூற்றட்டும். ஆனால் அப்படித் தூற்றுகிற ஊரும் - நாடும் - உலகமும் உன் தெய்வமேயல்லவா? - போ மகனே - லௌகீகத் துறவியாய் நீ வாழ்ந்து விடு.

*~ விவேகி*

*ஜூன் ~ 1966*

# மேவுவர் தீக்கொண்டு
# தோழரே!

அழகினில் மயங்கி அழகாலே ஓடுகிற ஒரு வாழ்வின் சுகம் அவர் வரையில் தீர்ந்து போய்விட்டது. அரசியல், சமூகம், பொதுசேவை என்னும் நானா திசைகளிலும் கலையின் அழகு வியப்பை மட்டுமே முன் நிறுத்திப் பார்த்த 'ஒஸ்காவையில்ட்' என்னும் மேதையின் வீழ்ச்சியை நன்றாகவே உணர்ந்திருந்தார். இவர் வாழ்வின் சகல துறைகளையும் சமய உணர்வோடு பார்க்க விரும்பினார். அந்தப் போராட்டத்தில் மரணத்தின் ஜீவகளை உள்ளோட்டமாகவும் வெளியாயும் ஓடிற்று. இப்போது அது அவரை அழுத்திற்று.

குழப்பந்தான்.

விறாந்தையின் முகப்பில் அடர்ந்தும் - படர்ந்தும் நின்ற வேப்ப மரத்தில் அவர் பார்வை பதிந்தது. ஆவணி மாதத்து வேப்பமரம் அது. இலை கொள்ளாமல் வேப்பம்பழம் தொங்கிக் கொண்டிருந்தது. வேப்ப மரத்தின் இலைகளிலும், கொம்பர்களிலும், அதன் சகல அசைவாட்டத்திலுமே குழந்தையீன்ற முதல் பிரசவப் பெண்ணின் தாய்மைப் பொலிவும், அது தொடுக்கும் அமைதியான மௌனம் கலந்த சோர்வும் படிந்திருப்பதாய் அவர் கண்களுக்குப் பட்டது.

ஒரு நிமிடம்தான், அலாதியான ஒரு சுகம். நெஞ்சு கொள்ளாமல் அசிங்கங்களையும், குரூரங்களையும், ஏலாமைகளையும், ஆற்றாமைகளையும் சுமந்து அலை அலையாய் எழுந்து மீண்டும் படிந்து அதுவேயாய் எழுகிற இந்த மண் உலகத்து மனித வாழ்வின் நினைவுகளில் இருந்து அவர் நெடுந்தூரம் போய்விட்டார்.

வாழ்வின் அழிவின்மையும், ஆத்மாவைத் தொடுகிற சுகமும் அழகின் மத்தியில் மட்டுமே பிறந்து தேய்வின்றி மரணத்தின் அழுத்தலுக்கு ஆட்படாமல் காலத்தையும் வென்று நிற்கிற தீரத்தோடு நடம் புரிவதாய் அவருக்குப் பட்டது.

எங்கோ எப்போதோ ஒரு இந்தியத் துறவியின் 'பரவச நிலையின்' தோற்றம் பற்றி ஐரோப்பியன் ஒருவன் எழுதிய நூல் ஒன்றில் ஓடிய சம்பவம் ஒன்று அவர் கண் முன்னே வரிவரியாய் எழுந்து நின்றது.

'இருமருங்கும் செழுமையின் பயனோடு கம்பீரமான நாணத்துடன் அடர்ந்திருந்த நெல் வயல்களிடையே அந்தத் துறவி நடந்து கொண்டிருந்தார்.

தான் புறப்படுகிறபோது தன் ஆடையுள் போட்டு வந்த அரிசியைக் கொறித்த வண்ணம் மேலே பார்த்தார்.

கரிய மேகத்திரள் எழுந்து விரைவாய் பரவி விசும்பெங்கும் அதுவேயாய் மாறி நிற்கிறது. அந்தக் கரிய மேகத்திரளின் நுனியில் பனியின் வெண்மை படிந்த நாரைக் கூட்டம் எழுந்து பறப்பது போல மேலெழுந்தது.

அந்த அழகின் எதிரிடையில் அவர் ஆத்மா எங்கோ வெகு தூரத்திற்கப்பால் சென்று மிதந்தது.

அவருக்கு நினைவு தப்பியது.

இவருக்கு அந்தச் சம்பவங்களும் வரிகளும், ஆச்சரியமாகப்படவில்லை. இவரே வாழ்வின் பெரும்பகுதியை அந்த மன ஓட்டத்தின் மருண்ட நிலைகளிலும் தெளிந்த நிலைகளிலும் பல தரம் கண்டிருக்கிறார்.வாழ்வின் சகல நிலைகளிலும் அவர் தன் சின் முத்திரையைப் பதித்துப் பார்த்திருக்கிறார்.

வீதியோரத்தில் அண்ணார்ந்தபடியே கிடக்கும் காக்கைகள், அவற்றைச் சுற்றி 'நொய்....... நொய்......' என்று ரீங்காரமிடும் பெரிய நீலம் போர்த்த இலையான்கள், சாரை சாரையாய் ஊர்ந்து வரும் எறும்புகள், புரட்டாதி மாதத்தில் பொல பொலவென்று கோர்வையாய் நோய் பிடித்து மடிந்து வீதியில் இறக்கை வேறாய், தலை வேறாய்க் கிடக்கும் கோழிகள், புதைப்பதற்கு வேண்டிய பண வசதியில்லாமல் செல்லமாய் வளர்த்த தம் பசுமாட்டை வீதியில் 'யாருடையதோ?' என்று இழுத்து வீதியில் விட்ட செத்த மாடுகள்.. இழுபட்ட அவற்றின் சங்கிலிக் கோர்வை போன்ற குடல்கள், பிணவாடை..... உயிரை உருக்கப்பண்ணும் குரலோடு தலையிலும் மார்பிலுமாய்ப் பட படவென்று அடித்து நிற்க வீணையின் நாதமாய்க் கிளம்பித் தேய்ந்து சூனியமாய்க் கலந்துவிட்ட மனித இருதயத்தின் இசை மங்க........ எழுந்து ஓடிவிட வேண்டும் போல அவருக்கு வேகம் எழுந்ததில்லை. அந்த மரண முத்திரையைச் சமய உணர்வோடு நெஞ்செல்லாம் நெறியின் இசை பொங்கி வழிய அவர் வேறாய் நிற்பார்.

மாலை மங்கி இலேசாய் இருள் கவியத் தொடங்கச் சுற்றுப் புறமெங்கும் இருளை வா வாவென்று கூவி அழைக்கும் அபஸ்வரங்கள் அவர் வரையில்

இன்னிசைதான். இடுகாட்டு மண்ணில் ஓங்கிப் படரும் புற்களின் நுனியில், மாங்கொம்பரின் நுனியில், பசுமையைக் கொட்டிக் கூட்டி நிமிர்த்தி விட்டாற் போல இருக்கும். கமுகம் ஓலையின் நுனியில், குழியில் இருந்தும் மரணம் கிலிமூட்டி உயிரை ஈர்த்துவிடச் சிலிர்க்கும் இடுகாட்டுச் செழுமையின் வெறிச் சிரிப்பு அவருக்குச் சமய உணர்வை முன் நிறுத்திப் பார்க்கிறபோது, மதுரமாய்ப்படும்.

வேப்ப மரத்தின் தொடுவாய் எங்கோ வெகு தொலைவில் அலைந்த மனதை இழுத்து நிறுத்தி, பசிய மலரானாலும் வகுத்தும் - தொகுத்தும் பகுத்தும் - பார்க்கின்ற விஞ்ஞானியின் பார்வையோடு, மனப்பாங்கோடு தன் நினைவுகளைக் கூறுபோட முயன்றார்.

'ஈரவாடை இரைந்தொலி செய்கிறபோது, தென்னையின் கீற்றில் மின்னும் ஒளிச்சுடரில் அதன் மீது உட்கார்ந்து இறகு கோதும் காக்கையில் அதன் கரிய நிறத்தில் - எல்லாமே அழகின் வழிபாட்டை நிறுத்தி. நெகிழ்வில்லாத தன் அடிமனம் சொல்லுகிற வழிபாட்டை நமது மகாகவி பரவசமாய் நின்று நந்தலாலாவை அனுபவித்துத்தான் இருக்கின்றான். 'சுந்தரமான இசையின் ஒலியில் வாழ்வின் இசை பேதங்களை மறந்து லயம் பட்ட ஐக்கியத்தில' வங்க மகாகவியும் அழகைச் சமய உணர்வோடு வழிபட்டுத் தான் இருக்கிறான். பார்க்கப் போனால் இவர்களை விட அவர் ஒரு படி மேலாகவே இருந்தார். அவர் நெஞ்சில் ஒரு வித்தியாசமும் உறைக்கத்தான் உறைந்தது. வாழ்வின் சகல துறைகளையும் சமயத்தையும் அழகின் ஆர்ப்பரிப்போடு பார்க்கத் துடிக்கவில்லை. வாழ்வின் கசப்பான முன்னேற்றப் படிகளில் சமயத்தின் வரண்ட தத்துவத்தின் இயலாமையை அவர்கள் பகிரங்கமாய் அறிவிக்கத்தான் அறிவித்தார்கள். அவர் அந்த மன ஓட்டத்தில் அந்த இரண்டு மகா கவிகளோடும் முரண்படவே செய்தார்.

அவருடைய குழப்பத்திற்கு விடிவு கிடைக்கும் போலக் கூட இருந்தது.

அந்தக் குழப்பத்திற்கான நினைவு அவர் உள்ளத்தில் தொட்டது.

அவர் 'ரியூசன்' சொல்லிக் கொடுப்பதற்காய் அதி காலையில் அந்த வீட்டிற்குப் போனார்.

அதிகாலைத் தூக்கத்திற்கென்றே இருக்கின்ற அலாதியான சுகத்தை அந்தக் குழந்தைகளுக்கு விட்டுக் கொடுக்க விருப்பமில்லை. உட்கார்ந்து வெகு நேரமாயும் அவர்கள் எழும்பவில்லை. சட்டென்று - தாய் விழிப்பு வந்தாற் போல ஒரு கோடி அறையிலிருந்து எழுந்து வந்து அவர்களை விழிப்பில் நிறுத்தப் போனாள்.

சடுதியாய் விம்மல் ஒலி எழுந்தது. சற்றே அடங்கி அடங்கி மீண்டும் மீண்டும் எழுந்து கொண்டிருந்தது.

அதிகாலையில் சுருதி பிசகாமல் தட்டுகிற இன் ஒலி போல அவருக்குப் பட்டது.

பையன்கள் வந்துவிட்டார்கள்.

அவர் எதையோ தொட்டு எதையோ இழுத்து உட்புகுந்து கேட்டுவிட்டார்.

அது என்ன சத்தம்?

அந்தக் குழந்தை சரமாரியாகப் பொழிந்து விட்டான். அவன் சிறிய இதழ்கள் அந்தப் பென்னம் பெரிய வாழ்வின் இரகசியங்களைக் கூறுகிற போது அவன் முகம் பாவங்களில் பிறந்து பாவமாய் மாறிமாறி நின்றது. கலை வல்லவன் சொற்களை ஆளுகிற அழகில் நயம் சொட்டுகிறாற் போல அவன் தொட்டும் தொடாமலும் பேசினான். பின்னால் பலவற்றை அவரே தெரிந்து கொண்டார்.

வயதையும் அழகையும் முன் நகர்த்தி வளர்ந்த ஒரு பெண். பெண்ணின் இயல்பான பெலவீனங்களின் பெலவீனத்தில் ஒரு சமயம் ஆட்பட்டு நின்றாள். சாதாரண முனிசிப்பல் ரோட்டுச் சந்தியில் நின்றாலும் தன்னை ஆளப்போகிறவனை ஒரு தரம் உள்ளமெல்லாம் நெகிழப் பார்க்கிறபோது வெண்ணிலவில் குளிர்ச்சியாய் நடந்து போகிறாற் போல இருந்தது. அந்தக் குளிர்ச்சியை நமது முந்தைக் கவிகள் 'காதல்' என்று சொன்னார்கள். நமது கவி பாரதியும் 'தெய்வீகக் காதல் அன்ன வாழ்கவே' என்றான். நமது தற்போதைய 'மகா கவிகளும்' காதல் என்பதைத்தான் சொல்லுகிறார்கள்.

அவன் ஆண்மகன். அவன் அதைப் 'பெண்ணின் பெலவீனம்' என்று கௌரவமான அர்த்த புஷ்டியுள்ள தத்துவச் சொற்களைப் போல் உள்ளும் புறமும் நயம் வைத்துச் சொன்னான். வெளியில் கேட்கவில்லை. கேட்டிருந்தாலும் ஒன்றுமில்லை.

''அத்தான் இந்தப் பெலவீனமே உங்களை வெல்லுகிற பெலமாய் விட்டதே'' என்று அழகாகப் பேசியிருப்பாள். அப்படிப் பெண்ணைப் பேச வைக்க வேண்டுமென்பதற்காகவே, அடிநாளிலிருந்து இல்லற வாழ்க்கை, காதல், பெண் என்கிற உலகத்தின் மையப் பொருட்களுக்குப் பொதுவாக நமக்குள்ளே முன்னவர்கள் எழுதிவிட்டுப் போனவற்றைப் 'பண்டிதர்களிடம்' என்று ஒதுக்கிவிட்டு, அப்படி ஒதுக்கிவிட்டதிலே ஒரு பரிகாசத்தை அனுபவித்துக் கொண்டு, சந்தியிலும், பஸ் ஸ்ராண்டுகள், ரெயில்வே பிளாட் போம்ஸ்சிலும் பெண்ணை ஆபாசமாய் நிறுத்திவிட்டு 'அவள் கண் பார்வையில் கனவுகள் பொங்குகின்றன' என்று காதல் தலைவிகளை உருவாக்க நாம் முயலுகிறோமே?

பிறகு அவனால் அவள் ஆளப்பட்டாள். ஆண்மகன் கம்பீரமான ஆண்மையோடு தன் கற்பைக் காலமெல்லாம் காத்து நின்ற பெருமையோடு அவன் ஆளுகிறபோது ஆளப்படுகிற இனத்திற்கே உரித்தான வேதனையைப் பெண்வர்க்கம் பல சமயங்களின் கம்பீரத்தன்மையில் ஆடலாயும் ஊடலாயும் கூடலாயும் மறந்து விடுவார்கள். அல்லது அந்த வேதனைகளையே வாழ்வின்

நினைவு ஏடுகளால் இன்பத்துடன் சுமந்து விடுவார்கள். ஆனால் அப்படி நடக்கவேயில்லை.

அவள் வரையில் ஓயாதும் ஒழியாதும் முயன்றாலும் அது இனிக்கிடைக்காத கனவு. கனவும்கூடப் பல சமயங்களில் அழுத்தமாகிவிடுகிறது. மயக்கம் தான்.

நமது கலைக் கோயில்களில் அதன் அழகான நிர்மாணத் தூண்களாய் நிற்கிற கதாநாயகிகளின் அற்புதமான அழகிலும், காதலிலும், கற்பிலும் வாழ்விலும், கலந்து நெடுங்காலமாய் கலைஞனின் ஆக்க சக்தி நின்று விட்டது. நமது மகாகவிகள் 'பெண்மைக்கு நிகரேது' என்று வீரமுரசு கொட்டிவிட்டார்கள். அந்த முரசு ஒலிகள் பழையனவற்றின் கம்பீரத்தையே தான் ஒலித்தன. நாடும் நகரமும் சூழலும் பெண்ணின் சமூகரீதியான மாற்றமும் அவர்கள் கண்களுக்கு இன்றும் உயிரோட்டமாய்ப் படவில்லை. இந்த முரண்பட்ட வாழ்வின் திருப்பத்தில் தமது பழைய காப்பியத் தலைவிகள் வீதியில், குடும்பத்தில் பரிதாபமாகப் பல்லை இளித்துக் கொண்டிருக்கிற நெஞ்சைக் கொதிக்கப் பண்ணவில்லை. இடையீடற்று இந்த இருண்ட நேரத்தில் அந்த மனோபாவ மகாகவிகள் குமுறியிருந்தால் ஒரு வேளை இந்தப் பெண்ணின் கதை - இப்படி விம்மும் படியாகவும், எதிலோ முடிய வேண்டிய சோக ரசத்திலும் நிற்க வேண்டிய தேவை எழாதிருந்திருக்குமோ?

நேற்றுத்தான் அந்தச் செய்தியை அவள் கேள்விப்பட்டாள். தன்னை ஆண்டவன் தன் இதய பூர்வமான - உள்ள நெகிழ்ச்சியில் சுரக்கப் பட்டவனல்லன். பெண்ணின் தேவைகள் கீழ்த்தரமாய்ப் போகிறபோது அவற்றைச் சந்தர்ப்பங்களாய்ப் பயன் படுத்துகிற ஆண்மகன்.

அவருக்கு அவளின் கதை ஆத்மாவை உலுப்புகிற கதை ஒன்றுமாய்ப் படவில்லை. எல்லையற்ற அழகாய்ப்பட்டது. 'தேள் கொட்டிய அனுபவப் புதுமையில் தேளின் கொடிய விஷ உறுத்தலின் வேதனை அற்பமாய்ப் பட்டதாக' எங்கோ எப்போதோ எவனோ ஒருவன் சொன்னாற் போல அவரும் வாழ்வு கற்பித்த அந்தப் புதிய அனுபவத்தைப் பார்த்தார்.

இரண்டு வாரங்கள் ஊர்ந்தன.

அந்தப் பெண்ணின் நினைவு அவரை அரித்தது. சமயத்தை முன் நிறுத்தி அந்தப் பெண்ணின் கதையைப் பார்த்து அதன் 'வாழ்க்கை ஒரு லீலை' என்கிற எண்ண அழகிற்காய் ஒரு சமயம் வியந்து நின்றது. கீழ்த்தரமான, இனிமேல் இல்லை என்கிற ஆபாசத்துள் ஆபாசமான நினைவாய்த் தெரிந்தது.

அழகை முன் நிறுத்திப் பார்த்த ஆஸ்கார் ஒயில்ட் எவ்வளவு மன நலக் கொள்கையில் கீழிறங்கிப் போனானோ அதை விட மோசமாய் அவள் கீழிறங்கி விட்டதாக உணர்ந்தார். மகாகவியும், வங்கக் கவியும், நமது வினோபாஜியும் ஒத்துக் கொண்டது போலச் சமயத்தின் இந்து

தத்துவத்தின் கொள்கைகள் பல இன்றைய சமூக வாழ்வின் பல பிரச்சினைகளுக்கு விடிவு காண முடியாமல் இருப்பதை அவர் உணர்ந்தார். அவலமாக முடிந்து விட்டது. இந்தப் பெண்ணின் கதையை எதற்காக இந்துமத தத்துவத்தால், எந்தச் சமயத்தின் பேரால் தூக்கிவிடமுடியும்? சமூகரீதியின் மையமான பிரச்சினைகளின் ஆரம்பமும் தேய்வுமான இந்தப் பெண் ஒரு சமூகப் பிரச்சினை இல்லையா?...... பிறகு..... மகாகவியும், வங்கக் கவியும், வினோபாவும்......... ஒருவேளை அந்த மகான்கள் சொல்வது சரியா இருக்குமோ? சமூகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இன்று மதம் பெலமற்று விட்டதா?

அந்த உணர்வில் பிறந்த குழப்பம் அவரை உலுப்பிற்று.

அதற்கு இப்போது அவரிடம் விடையும் வந்தது.

‘நீ திருடாதே - பொய் சொல்லாதே - தீமையைச் செய்யாதே’ என்று சொன்னவன் பெரியவன் தான். சமய உணர்வும் சமயப் பாங்கும் நன்மை தீமைகளில் பற்று மிக்க ஒரு சமூகத்திற்கு அவன் வெகு காலத்திற்கு முந்திச் சொன்னான். அந்த வார்த்தைகளை, திரண்ட செல்வத்தைத் தம் பின்னால் ஒதுக்கி விட்டு, ‘நீ திருடாதே’ என்று ஆரம்பிக்கிற அர்த்த புஷ்டியுள்ள நெறிகளின் ஆசாரத்தைத் தன் சுய நலத்திற்காய்க் குலைத்துவிட்டு நிற்கிற மனித மனங்கள் இந்த நூற்றாண்டில் பெருகிவிட்டன. அதைச் சொன்ன சங்கரரிலிருந்து இராமகிருஷ்ணர் வரையும் ஓட்டையும் பொன்னையும் ஒப்பு நோக்கிய பெரிய மனிதர்கள் தாம் இந்த நூற்றாண்டு மந்தைகளின் கூட்டம். சமயத்தைச் சாம்ராச்சியங்களோடும், கோர யுத்தங்களோடும் இணைத்து மதத்தின் புனிதத் தன்மையை மாசுபடுத்தி விட்ட மந்தைகளின் கூட்டம். வாழ்வின் பல பிரச்சினைகளுக்கும் சமயத்தை முன் நிறுத்திப் பார்க்க முடியாத தன்மை சமயத்தின் பெலவீனம் அன்று. அதைப் பின்பற்றிய மனித மனங்களின் பெலவீனம்.

சமயத்தைக் கொடிய அரசியலோடு பிணைத்து அந்த அரசியலுக்கு ஆதாரமாய் யேசுவையும் அல்லாவையும், சொறோ ஆஸ்றரையும், கீதையையும் காட்டி, நாட்டிலும் நகரிலும் விம்மி விம்மி விம்மிச் சோரும் மக்களின் துன்பத்தில் பெற்ற குழந்தையை எருவாக்கி ரோஜாப் புஷ்பத்தை மலர்வித்துக் கொண்டவர்களின் கயமையால் நாமே நம்முள் வலிமை மிக்க பெலவீனங்களை உருவாக்கிவிட்டோம். சமூகத்தின் உலகத்தின் அவலட்சணமான பலயீனங்கள் ‘தம்மை ஆத்மீக வாதிகள்’ என்று சொல்லிக் கொண்டதால் பாரதியும், வங்கக் கவியும், வினோபாவும் சமயத்தின் பல அம்சங்கள் சமூக வாழ்வின் பல பிரச்சினைகளுக்கு மருந்தாகாது என்று துணிந்து சொல்லும்படியாகி விட்டது. உலக சரித்திரத்தின் பல்வேறு நிலைகளிலும் பெலவீனங்களையும் ஆபாசங்களையும் கண்டு கம்பீரமாய் நின்ற இந்த மகான்கள் கூட, இந்தப் பெலவீனத்திற்கு அடி பணிந்து விட்டார்கள்.

இரத்தக் கொதிப்பு ஏற்பட்ட மாதிரி அவருடம்பு கொதித்தது. இருதயத்தின் இலேசான பகுதியில் குளிர் சந்தனம் தோய்வது போலவும் இருந்தது.

தம் நீண்ட குழப்பத்திற்கு அற்புதமான விடிவின் விடையாய் எதையோ கண்டு பிடித்துவிட்டாற் போலவும் இருந்தது. தம் மகிழ்ச்சி வெறியில் அவர் உரக்கவே கத்தினார்.

நாட்டிற்கு நாடு வீட்டிற்கு வீடு அரசியல் கலப்பற்ற இந்து மத தத்துவத்தை, போலிகளால் மூடப்பட்டு இருண்டு நிற்கிற இன்றைய இந்துமத தத்துவத்தின், உண்மை ஒளியைக் காவிக் கொண்டே செல்வோர் யார்?

தம் கண் முன்னால் ஆண்மையும் வீரமும் மிக்க இளைஞர்கள் 'இதோ இதோ' என்று கிளம்புவது போல இருந்தது. அந்த உரு வெளித் தோற்றத்தில் மயங்கி அவர் உரக்கக் கத்தினார்.

'மேவுவீர் தீக்கொண்டு தோழரே'.

*கலைச்செல்வி*
*1966*

# வரையறை!

படலையை அடிக்கொரு தரம் திறந்து வீதியை எட்டி எட்டிப் பார்க்கிறாள் புவனம். யாரைப் பார்க்கிறாளோ இந்த வேளை கெட்ட வேளையில்? அயலிலும் சுற்றுப் புறத்திலும் இரவு இரவாய், அவள் தன் உடலை விற்பதற்காய் எவர் எவரையோ பார்த்தபடியே நிற்பதாகத்தான் சொல்லுகிறார்கள். அதை அறிந்து விட வேண்டுமென்ற உந்தலில் இரவு பகலாய் மனம் கிடந்து தவித்துக் கொள்ள, எப்படியும் ஊர்வதந்தியின் தவிப்பை நசுக்கிவிடத்தான் வேளைகெட்ட வேளையில் நானும் அவளையும், அந்த வளவையும் பார்த்தபடியே எனது வீட்டுக் கோடியறையின் யன்னலைப் பிடித்தபடி நிற்கிறேன்.

நிலவு ஒரு சுகத்தோடு அந்த வளவில் விழுந்து புரண்டு கொண்டிருக்கிறது. கிணற்றோரத்தே செழுமையுடன் ஓங்கி நின்ற வாழையிலைகளிலே நிலவின் கதிர்கள் படுகிறபோதெல்லாம், மெல்லிய காற்றசைப்பில் அவை இலேசாய் ஆடுகிறபோதெல்லாம், சலனமற்ற நீர்ப்பரப்பில் மிதக்கும் நங்கூரம் பாய்ச்சிய வத்தைகள் மெது மெதுவாய் இடைக்கிடையே எற்றும் நீரலைப்பில் ஆடுகிறாற் போலத் தெரிகின்றன.

ஓங்கி நிமிர்ந்து நின்ற பொன்மயமான குருத்துக்களிலே நிலவு தோய்கிறபோதெல்லாம் தங்கக் கம்பியையே நீட்டி நிமிர்த்திச் சொருகியிருக்கிறாற் போலப் படுகின்றன. தெற்குப் புறத்தே வீதியை ஒட்டிக் கிடுகு வேலிக்குக் கொஞ்சம் தள்ளி உட்புறமாய்ச் சிமெண்டு பதித்து நாட்டப் பட்ட வயிரவ சூலத்தின்மேல் உதிர்ந்து கிடந்த வாடிய திருவாத்தி மலர்கள் கூட, நல்லவைகள் அழிகிறபோதும் பிரகாசமாகத்தான் இருக்கும் என்கிறாற்போல ஒரு உண்மையை உணர்த்த முனைகின்றன. அதனை அடுத்து ஓங்கிக் கிளைகளை நீட்டிப் பரந்திருந்த திருவாத்தி மரம் மௌன பாஷையில் சிரித்துச் சிரித்துக் குளிர்ச்சியாய்ப் பேசிக் கொண்டிருக்கிறது.

வளவின் மத்தியில் புவனம் வாழும் ஓலைக் கொட்டில், நிலவில் அது தான் எவ்வளவு அழகாய்த் தெரிகிறது!

நேரம் பன்னிரெண்டு மணிக்கு மேலாகத்தான் இருக்கும். ஒரு மணியிருக்கலாமா? நிச்சயமாய்ச் சொல்லிக் கொள்ள முடியவில்லை.

இப்போதும் அவள் படலையண்டை நின்.று பார்க்கிறாள்.

அவளை இப்போது நன்றாக உற்றுப் பார்த்தேன். அத்துணை வாளிப்பான உடல் அல்ல. கவிதாகூர் சொல்லுகிறாற் போல 'ஆணின் கற்பனைகளின் உருவமே பெண்'என்று அவளைப் பார்த்தால் சொல்லத் தோன்றவில்லை. மொத்தமாய் மிக மிகக் கள்ளமாய், நஞ்சுத்தன்மையும் வெறித் தன்மையும் பொதுக்கி நெஞ்சில் வைத்தபடியே எடை போடுகிற ஆண்வர்க்கப் பிரதிநிதிகள் மனதிலே பார்த்தவுடனே நெஞ்சைப் பற்றிக் கொள்ளவோ, அனுபவித்து விடவோ தூண்டுகிற போதையோ, அழகோ எதுவும் அவள் தோற்றத்தில் இல்லை. நமது கவிகள் 'பரிபூரணமான அழகு, கும்பிடத் தூண்டும்' என்கிறாற் போலவும் அவள் தோற்றம் உணர்த்தவில்லை.

சதைப் பிடிப்புக் கன்னக் கதுப்புக்களிலே வற்றியிருக்கிறது. நயனங்களிலே ஏதோ ஒரு திருப்தி. சுத்தமாய்ப் பரிபூரண சுத்தமாய் இந்த மண்ணில் கால்பாவி நிற்கிற துறவிக்குக் கூட ஏற்படாத ஒரு திருப்தி. வெறுமை மட்டும் மின்னுகிறது. மஞ்சள் ரவிக்கையும், மஞ்சள் பாவாடையோடும் தான் நிற்கிறாள்.

சோர்ந்து போய் அவள் திண்ணையில் உட்காருகிறபோதே படலையண்டை நின்றபடியே யாரோ ஒருவன் குரல் கொடுக்கிறான். அந்தக் குரல் அவளை இயக்கத் துள்ளிய படியே படலையண்டை ஓடுகிறாள். குரல் கொடுத்தவன் மெதுவாய் வருகிறான். அவன் உள் பதற்றத்தின் துள்ளலும் விசும்பலும் உடம்பிலே பட்டுத் தெறிக்கத்தான் தெறிக்கிறது.அவன் கண்கள் நேரடியாய் அவளைப் பார்க்கவேயில்லை. அங்கும் இங்கும், இங்கும் அங்குமாய் தொட்டும் தொடாமலும் மேயும் வெள்ளாட்டைப் போல அவன் கண்கள் சுழலுகின்றன. அவை பட்ட இடத்தின் தோற்றப் பொலிவு எதுவுமே நயனத்தின் வாயிலாய்ப் புகுந்து உள்ளத்தைத் தொட்டு முகத்தில் எண்ண அலைக் கீற்றை உருவாக்கவில்லை.

அவள் கண்களில், குரல் கேட்டு ஓடிவருகிறபோது காணப்பட்ட குளிர்ச்சியில்லை. ஏமாற்றமே தெரிந்தது. அந்த ஏமாற்றத்திலும் ஏதோ விபரிக்க முடியாத திருப்தியின் பூச்சு.

நெடு நேரமாய் அந்த மௌனபாஷை பேசப்படுகிறது. அது மௌனபாஷையா? பிரபஞ்சத் தொட்டிலில் எங்குமாய் எவையுமாய் இயற்கையின் சிறு துகள்களாய்த் துகள்கள், உயிர்கள் - பேருயிர்கள் பேசுகிற மௌன பாஷையா? உயிரின் வழியே புகுந்து ஜீவனை உலுப்பிப் பொலியச் செய்யும் மௌன பாஷையா? இது வேறு முற்றும் வேறுதான்.

பார்த்தால் தான் அப்பட்டமாய்த் தெரிகிறதே? அவன் புதிதுதான். யாருக்கு இவளுக்கோ? அல்லது தன்னை, தன் ஆத்மாவை இழக்கிறதற்கே புதிதுதானா? என்னமோ? புதிதுதான். அந்தப் பயமும், குழப்பமும், நடுக்கமும், மகிழ்ச்சியும் சுழற்சியும்.....?

அணுவிலிருந்து பேரணு வரையும் இயக்கும் சங்கமத்தின் சாயல்களை யாருக்கேனும் கற்பிக்கிறார்களா? புதிது பழையதாய் விட பழையதே புதிதாய் - புதிதே பழையதாய் மாறிவிடுகிறதே?

இப்போது அவர்கள் இல்லை உள்ளே, ஓலைக் கொண்டிலின் உள்ளேதான் அவர்கள். தூங்குகிறார்களா? விழித்திருக்கிறார்களா? அழிகிறார்களா? மலருகிறார்களா? எதைச் சொல்ல? ஆத்மா விழித்தபடியே தூங்குவதில்லையா? தேய்கிறதில்லையா? அழிகிறதில்லையா? ஆத்மா அழிகிறதா? இல்லை. அது எடுத்த உடம்பு அதன் நேரடிப் பார்வையிலேயே தேய்கிறதே?

ஊரின் வதந்தி நினைவைத் தொட்டது.

கிராமப் புறத்து வயல்களிலே அவள் வளர்ந்தவள். மண்ணின் அற்புதமான பாஷை பயிர்களிடையே பேசுகிறபோது தெளிவாய்க் கேட்டவள். விரிவானம் மாறி மாறி மாறி உதிர்க்கும் சங்கதிகளைக் கன்னி கழியாக் குமரிப் பருவத்தில் செவிமடுத்தவள். நாற்று நடுகிறபோது, களை பிடுங்குகிறபோது - அரிவு வெட்டுகிறபோது, தேய்ந்தும் அழிந்தும் பிறந்தவள்.

அவள் இருதயமும் ஒரு நாள் காதலைப் பாடிற்று. கட்டற்ற பிரபஞ்சத் தொகுதியில் அவள் தேய்ந்தும் அழிந்தும் உயிர்த்த இடங்களிலே கட்டற்ற தன்மையுடன் மண்ணும் நிலமும் வானும் மீனும் பேசியதைத் தான் அவளும் பேசினாள். பாவம் அவை வாழ்க்கையில்லை என்கிற சங்கதியை அவளுக்கு உணர்த்த யாரும் இருந்துவிடவில்லை பேதைப் பெண். அரிவு வெட்டுகிற இந்தியாக்காரனோடு ஓடிவந்தாள். விழுந்தவள் சுத்தமான நயவஞ்சக நகர்ப்புறத்து மண்ணிலே விழுந்தாள். எழுந்திருக்க அவளால் முடியவில்லை. தூக்கி நிறுத்தவும் அவளைக் கூட்டி வந்தவன் இல்லை. அவன் யாருடன் ஓடினானோ?

இயற்கை போதித்த சமாச்சாரத்தை அவள் இப்போதுதான் கண்டாள். வாழ்க்கை மண்ணோடு ஒட்டிய மனிதர்களோடு வாழுகிறது. மண்ணிலே தான், ஆனால், மண்ணின் தாய்மை நிறைவோடு, களங்கமற்ற புனிதத் தன்மையோடு அல்ல என்கிற சங்கதியை, அவள் உணர்ந்து கொண்டாள்.

பிறகு அரிவு வெட்டவும் களை பிடுங்கவும், நாற்று நடவும் நகர் புறத்திலே வேலை இருக்கிறதா? வயிறு மட்டும் சும்மா இருந்து விடுகிறதா? பசித்தது.

பெரிய இடத்து மனிதர்களின் வீடுகளிலே நெல்லுக் குத்தி கொடுத்தாள், மா இடித்தாள், மிளகாய்த்தூள் இடித்தாள். கூலி அது மிகவும்

மோசமாகத்தான் இருந்தது. அந்த வீடுகளிலே இருக்கிற பெரிய தனம் படைத்த பெரிய பொடியன்கள் ‘கூலி’ கொடுக்கத் தயாராக இருந்தார்கள்.

உருளத் தொடங்கிய கதி உருளத் தான் செய்கிறது. தடுத்து நிறுத்துவதற்கு நகர்ப்புறத்தில் நல்ல மனதுகள் ஏதாவது இருக்கிறா? அவள் உருளத் தொடங்கிவிட்டாள்.

பிறகு....... பிறகு என்ற? எல்லாமே அதுதானே? தேய்வும் - அழிவும் - பிறப்பும் - உயிர்ப்பும்..... எல்லாமே அதுதானே?

சடுதியாய் என் கண்கள் படலையண்டை நோக்குகின்றன.

அவளைப் பார்க்கிறபோது ஏதோ ஒரு வகை வெறுப்பு நெஞ்சில் முட்டி மோதுகிறது. ஆண்டுக் கணக்காய்க் கண்ட முகம். நாளும் பொழுதுமாய்த் தூற்றப்பட்ட உருவம்.

அவளைப் பார்த்துக் கொண்டிருக்கிறபோது எத்தனையோ அவலமான பெண்களின் கதைகள் - கன்னிகழியாப் பெண்ணின் கதைகள் அலை அலையாய் உள்ளத்தில் எழுகின்றன. கண்களில் நீர் முட்டுகிறது. ஆணை நம்பி நம்பித் தேய்ந்து போகிறது. இந்த நிர்மூடமான பெண்களின் கூட்டம் இருக்கிறதே அவர்களுக்கு எதிலேதான் நிறைவு இருக்கிறதோ? வெறியர்கள், நெஞ்சிலும், நாவிலும், முகத்திலும் வலை வீசுவதற்குச் சாமர்த்தியங்களைத் தெய்வம் கொடுத்திருக்கிறபோது, கூசாமல் கொடுத்திருக்கிறபோது அவர்கள் என்னதான் செய்ய முடியுமோ?

இயற்கையின் பலவீனமே அது தானோ? புரியத்தான் இல்லை. புரியவேயில்லை. உயிரின் பிறப்பின் முன்னால் சின்னதும் பெரிதுமாய் அறிவும் அறிவற்றதுமான பெண் வர்க்கம் - ஆடோ, மாடோ, கோழியோ, நாயோ, மனிதப் பெண்ணோ? எவ்வளவு தேய்ந்து போகின்றனர். அந்தத் தேய்வைப் பயன்படுத்தி இறுமாந்து நிற்கிற ஆண்களுக்குள் மிருக ஜாதிக் கழுகுகள்..........., அது அவர்களது வெற்றியா? தேய்வா? புரியத்தான் இல்லை.

‘‘புவனம்’’

‘‘புவனம்’’

‘‘புவனம்’’

குரலிற்கு ஈடு இல்லை. வெகு நேரம் வெகு நேரமாகிவிட்டது. அங்கும் இங்குமாய் வந்தவன் வெறிக்கப் பார்த்தபடியே நிற்கிறான். உள்ளக் கொதிப்பின் வெம்மை அவன் உடம்பில் பிறப்பித்த நடுக்கத்தின் சூடு தெள்ளத் தெளிவாய்த் தெரிகிறது. கைகளைப் பிசைகிறதும் பற்களை நற நறவென்று கடிக்கிறதும். கையையும் காலையும் ஆட்டுகிறதும்.. இரத்தச் சிவப்பாய் மாறிவிட்ட கண்களோ?

சோர்ந்து போய் அவர்கள் வருகின்றனர்.

புதிதாய் வந்தவன் வந்தவனை வெறிக்க நோக்குகிறான். பளீர் என்று பாய்ந்து அறை விழுகிறது. அவன் ஓடுகிறான். அது ஓட்டமா?

அவன் நிமிர்ந்து அவளை வெறிக்கப் பார்க்கிறான். அவளோ நடுங்கிய படியே நின்றாள்.

'புவனம்'

அவள் பேசவில்லை

''நாய், திமிர் பிடித்த கழுதை'' அவள் குரல் வளையை நெரித்தபடியே அவன் கத்துகிறான்.

''உனக்குக் கற்பிருக்கிறதாடி நாயே? எனக்குச் சம்மதம் சொல்லி, நேரங் காட்டி வரச் சொல்லிப் போட்டு, இன்னொருத்தனோடை கூடிக் குலவிறியே? நாயே உனக்கு கற்பிருக்கிறதாடி''

அவள் தேய்ந்து கொண்டிருக்கிறாள். இல்லை அவள் மலர்ந்து கொண்டிருக்கிறாள். முந்தி அவள் தேய்ந்து கொண்டிருந்தாள். அந்தத் தேய்வில் அவள் ஆத்மா மலரவில்லை. குரல்வளையை நெரித்த படியே கிடைக்கிற உடம்பின் தேய்வில் ஆத்மா விழிப்புற்று வெளியே போய் வேறு உடம்பில் அடைபடத் தொடங்குகிறதோ? இது தேய்வா? மலர்ச்சியா?

அந்த மலர்ச்சிக்கு அறிகுறியாய் அவள் திமிறிப் பிடியில் சோருகிறாள்.

அவள் இதழ்கள் சிரமப்பட்டு அசைகின்றன.

பெண்ணின் கற்பிற்கு மொத்தமாய் இந்த ஆண்வர்க்கம் கொடுக்கிற வரையறை இது தானே......... 'நேரம் காட்டி....... உனக்குக் கற்பிருக்கிறதாடி... நாயே?'

அவன் ஓடிவிட்டான்.

*கலைச்செல்வி*

*1965*

# பிரபஞ்சப் பூ

நிறமற்றுப் பேதமற்றுக் கலப்பற்று நின்ற உயிர் ஒன்று, ஆத்மா ஒன்று தன் தூயதும் அகண்ட விசாலத் தத்துவத்தையும் மயிரிழையாய் அதனிலும் இழையாய்ச் சுருக்கி அவள் வயிற்றில் புகுந்து நின்று அதுவே அவளாய் மாறிச் செழித்து மலர்ந்தது.

உயிர்ப் பூ

தொட்டிலிற் கிடந்த குழந்தை சிரித்தது. பனியில் தோய்ந்து நிற்கிற செம்ரோஜாவின் மெத்தென்ற இதழ்கள் போல் குழந்தையின் இதழ்கள். கவி பொதுவாய்க் காணுகிற பரிசுத்தம் நிரம்பிய தெய்வத் திருவிழிகள். கைகளும் கால்களும் மண்ணில் நிற்கிற மயக்கங்களின் சுவடு பிடிபடாமல் நிற்கிற பரிசுத்தத்தில் தெய்வத் தன்மையோடு நிற்கின்றன. புதிதாய் அடைபட்டுப் போன 'ஆத்மா' தனக்கே உரித்தான ஒளியை அங்கமெலாம் செலுத்திக் கிறங்கிக் கொண்டிருந்தது.

'வீல்'........... முதல் குரல் இல்லை இது பழைய குரல். தப்பித் தப்பி எங்கெங்கோ பிறந்து எதனாலோ ஆண்டும் ஆளப்பட்டும் அனுபவித்தும் அனுபவிக்கப்பட்டும் நிற்கிற ஒரு சக்தியின் பழைய குரல். மனிதனின் குரல்.

தொட்டிலின் முன்னே வியப்பையும் தன் அணுவொன்றின் பிரதிபலிப்பையும் பார்த்தபடியே நின்ற அவரின் கண்களில் எதெதுவோ பிறந்தும் தேய்ந்தும் போய்க் கொண்டிருந்தது. அவர் சிரித்தபடியே தனது விரல்களால் மெதுவாய்த் தொட்டார். குழந்தை சிரித்தது.

'சாந்தினி...... சாந்தினி'

........ அந்தப் பெயரின் இதத்தை நெஞ்சில் நிறுத்தி அணு அணுவாய்ச் சுவைத்தபடியே சிரித்தார்.

பக்கத்தே கட்டிலில் கிடந்த சத்தியபாமா கேட்டாள்.

''என்ன பெயர் வைக்கப் போகிறீர்கள்?''

'சாந்தினி தேவி'

'எந்தச் சாந்தினி தேவி' அவள் ஆச்சரியத்துடன் கேட்டாள்.

மரமாயும் மலராயும் நீராயும் நிலனாயும் தோன்றும் உயிர்க் கருவறையில் இருந்தும் கணந்தோறும் அரும்பவிழும் பல நூறு சாந்தினிகள் தான். உடல் சேர்க்கும் பற்றற்று உயிர் தூண்டும் உணர்வின் நெகிழ்வில் கசியும் பற்றோடு பார்த்தால் எல்லாமே இவள் தான். இவளில் எல்லாம். ஞானிகள் பேசுகிறாற்போல எல்லயற்றுப் பாயும் உயிரின் ஊற்றின் கரு 'இவளுள்ளும் தான் ஓடுகிறது........' பிறகு....... நீ.

அவள் தேம்பி அழுதாள்.

அவளுள் பொறி தட்டிற்று. அவருக்கு நோய் என்பதாக அவள் எண்ணம். ஒவ்வொருவனும் போட்டி போட்டுக் கொண்டு அதையும் இதையும் எதையும் சம்பந்தா சம்பந்தமில்லாமல், பொருத்தம் பொருத்தமில்லாமல் வறுகிக் குமிக்க நினைக்கிறபோது இந்த மனிதர் மட்டும் அந்த நாளையிலிருந்து இன்று வரையும் இந்த மாதிரித்தான் பேசிக்கொண்டிருக்கிறார். இது ஒரு நோயில்லாமல் பிறகென்ன?

அவள் மிரள மிரள விழித்த படியே பார்த்தாள்.

தொட்டிலில் குவிந்த அவர் விழிகள் ஒவ்வொன்றாய் நெஞ்சில் தேங்கிச் சுவைத்த படியே அவள் பார்வையை நோக்கிப் பதிந்தது. அவள் கண்களில் எதனாலோ ஒரு நாணம். கூசியும் குறுகியும் பார்க்கிறாற் போலக் கூடப் பட்டது.

'சாந்தினி'

அவள் பிரமை நீங்கிற்று. மண்ணின் சம்பந்தத்தை தான் என்கிற தனித்துவமான மனிதர்களின் பந்தத்தை நிலை நிறுத்துகிற பெயர். எப்படியிருந்தாலும் அவரும் மனிதர் தான். மண்ணோடு சம்பந்தப் பட்ட ஆசைகள் அவருள்ளும் தான் இருக்கிறது.

''பாமா, உனக்குப் பெயர் பிடித்திருக்கிறதா?''

அவள் பிரமை முற்றாய் நீங்கிற்று.

இலேசாய்க் குறும்பாய்ச் சிரித்தாள்.

''நீ ஒரு குழந்தை. குழந்தைக்குக் குழந்தை. குழந்தை என்கிற படியைக் கடந்தும் குழந்தையாய் நிற்கிற குழந்தை'' சிரித்தபடியே அவர் தொடர்ந்து சொன்னார். 'உன்னில் அவள். அவளில் நீ, நான்......'

அவள் மீண்டும் விம்ம ஆரம்பித்து விட்டாள்.

அவர் தொட்டிலைப் பார்த்த படியே நின்றார்.

அவளோ தன் நினைவுத் தொட்டிலைப் பார்த்தபடி நின்றாள்.

***

அவள் எதையும் ஏட்டில் கற்றுக் கொண்டவளல்ல. கண் முன்னால் தெரிகிற எதையும் நிலை நிறுத்தி அசைபோட்டு அதன் சாறான உயரிய ஞானத்தையும் ஏற்று நிற்கிற ஞானப் பெண்ணுமில்லை. ஒரு பகுதி ஓங்கி ஒரு பகுதி தாழ்ந்து நிற்கிறதுதான் மனித அறிவு. அந்த அறிவு இருதயத்தைத் தொடுகிறபோதுதான் ஆத்மீகம் பிறக்கிறது. அந்த ஆத்மீக கீதத்தின் லயம் பட்ட அமுதமயமான உள் ஒலி எல்லோருக்கும் எப்போதும் கேட்டுக் கொண்டேதான் இருக்கிறது. அந்தக் கீதத்தின் ஓசை அலைகள் மிதந்து பிரபஞ்சத்தின் தோற்றப் பொலிவில் தொட்டும், தொடாமலும் நிற்கிறபோது, பார்வையாளனின் பார்வையினூடே படுகிற 'புரியாப் புதிர்கள்' அதைச் சீண்டி விடுகின்றன. பிறகு இசை லயம்.

அவள், சத்திய பாமாவிற்கும் ஒரு நாள் அது கேட்டது.

மலரொன்று இதழ் விரித்து மலர்ந்தது. மாலையில் அது வாடி உதிர்ந்து நின்றது. மறு நாள் புலருகிறபோது நேற்றுப் பூத்த கிளையில் புதிதாய் ஒன்று. நேற்றிருந்தாற் போலத்தான். மாற்றமேயில்லை. அவளுள் ஒரு கேள்வி. எதிரிலிருந்தும் எது பிறந்தது. நேற்றைய பூவிலிருந்து இன்றைய பூ மலர்ந்ததா? அதே அழகு அதே உயிர், நேற்றைய பூவின் வாடிய மலரின் 'ஆத்மா' அழகு இன்றைய இந்த மலரில் ஒட்டிக் கொண்டதா? எதிலிருந்து எது பிறந்தது. இந்த மலர் நேற்றைய மலரா, இன்றைய மலரா, முந்திப் பல நூறு ஆண்டுகளுக்கு முன்னால் பிரபஞ்சத்தில் பூத்த புத்தம் புதிய முதல் மலரா? எது?

அது அவளுக்குப் பைத்தியமாகிவிட்டது. அதுதான் பேச்சு. அதுதான் நினைவு. பார்வை எதனிலும் பதிகிறதாக இல்லை. நேற்று - இன்று - நாளை இவற்றில்தான் உலகம். இதன் உயிர் ஒன்றா பலவா? அவளுக்கு 'அவருக்கு எந்த நோய்' என்று விம்முகிறாளோ - அந்த நோய் அப்போது பிடித்திருந்தது.

அவள் வீட்டின் முன்னால் ஒரு தொண்டர் நிலையம். அவளுக்கு அதில் எல்லாம் நம்பிக்கையில்லை. உலகத்திற்கு ஒரு மாதிரிக் காட்டி விட்டுப்போன ஞானிகளது புறத் தோற்றத்திற்குப் பூப் போட்டுக் கொண்டிருக்கிறவர்கள் என்பதாக அங்குள்ள துறவிகளைப் பற்றிய அவள் எண்ணம். உண்மையும் அதுதானே. பார்க்கப்போனால் வாழ்வு முழுமையும் நெஞ்சோடும், உள் ஒலியோடும் நம் ஆத்மீகத் துறவிகள், சங்கரரிலிருந்து

இராம கிருஷ்ணர் வரை, பேசியும் அனுபவித்தும் வந்த மௌன பாஷைகளை யாரேனும் கேட்டுவிட முடியுமா? பிரசாரம் பண்ண முடியுமா? சார்ந்தும் போற்றியும் வாழுகிறவர்கள் மகான்களின் வாய்மொழிகளுக்குத் தத்துவ விளக்கம் செய்யத் தானே முடியும்.

சத்திய பாமாவிற்குத் தன் குழப்பத்தை - அந்த நோயைத் தீர்ப்பதற்கு அங்கு போவதைத் தவிரவும் வழியில்லை.

இரவு ஆடலும் பாடலும் நறுமணங்களின் பொலிவுமாய் அறையில் விரிந்து கொண்டிருக்கிறது.

அன்று சிவராத்திரி நாள்.

நடராச விக்கிரகம் பளிச்சென்று அறையில் நிற்கிறது. சுற்றவரப் பலர் ஆடுகின்றனர். பேயாட்டம் எதனுள்ளோ அவர்கள் புகுந்து புகுந்து குடைந்து, குடைந்து ஆடுகின்றனர். அலுப்பில்லை, சலிப்பில்லை, மலர்ச்சி, மலர்ச்சி.

அவள் அறையின் வாயிற் படியணடை நின்று வெகு நேரமாய்ப் பார்த்தபடியே நின்றாள். அவள் மூளை குழம்பிற்று.

'ஆடுவோர் யார்? ஆட்டப் படுவோர் யார்? எவர்? எவருள் எவர்? வெறும் குழப்பந்தான். மண்ணில் பிறந்த இரு உயிர்கள் வளர்ந்த போது வார்த்தைகள் பிறக்கவில்லை. சைகை தான் பிறந்தது. அந்தச் சைகைதான் நடனமா, நடனம் சிவனின் நடனம். முதல் உயிர்களின் நடனம். முதல் பாஷை. காலப் பெருவெள்ளத்தில் நீந்தி நிற்கிற இந்த மனிதர்கள் தேவனின் நடனத்தைத்தான் இன்றைக்கும் ஆடுகிறார்களா? முதலுயிர்களின் நடனமா? யார்? யார்? என் உள் நீ - சிவன் சிவனின் எல்லாமேயா?

அப்போது அவள் வீரிட்டுக் கத்தினாள்.

இப்போதும் அவள் கண்டத்திலிருந்தும் அந்தக் குரல் பிறந்து விட்டிருந்தது.

அவர் தொட்டிலை விட்டு வேகமாய் அவள் படுத்திருந்த கட்டிலை அடைந்து அவளைத் தொட்டுப் பார்த்தார். அவள் விழித்தாள். அவருள் ஒரு நினைவு பூத்தது.

***

அறை வாயிற் படியண்டை நின்றபடியே வெகுநேரமாய்ப் பார்த்துக் கொண்டிருந்த அவளை அவரும் இமை கொட்டாமல் பார்த்தபடி நின்றார். அவளின் தோற்றம் அவரை உலுப்பி விட்டபடியேயிருந்தது. சமயத்தைப் பற்றி - 'றிலியஸ் புறப்பென்சீற்றிஸ்' என்று சொல்லுகிற சமய மனோபாவங்களைப் பற்றி ஐரோப்பிய ஞானிகள் எழுதிய நூல்களை

அவர் படித்திருக்கிறார். அப்போதிருந்த அவள் தோற்றம் மேற்கத்திய ஞானிகள் 'காரணரீதியாய்' உருக் கொடுக்க முடியாத பேருருவாய் நிற்கிறாற் போல இருந்தது. 'மேற்கத்திய சிந்தனைகளோடு கீழைத்தேயத்துத் துறவியின் மனோபாவங்களைச் சித்திரிக்க முடியாது' என்கிற றொமெயின் றோலன்டின் ஆழ்ந்த கூற்றும் அவருள் எழுந்தது.

சமய வாழ்வை ஏற்றுக் கொண்டு ஒரு விவேகானந்தத் துறவியாய் வரவேண்டுமென்கிற தீராத வெறியில் உந்தப் பட்டு அவர் துறவியாய் அந்த மடத்தில் சேர்ந்தார். நாள் போனால் அவர் காணுகிற துறவிகளின் உச்சமான சமாதி நிலையில் அவர் கண்டறியாத ஒரு அலாதியான ஆழ்ந்த இசைலயம் கனிந்த மௌனமும் அவளின் வெறிமயமான தோற்றத்தின் ஊடே புகுந்து நிற்பதையும் அவர் கிறங்கி நிற்கிறபோது தான் அவள் வீரிட்டுக் கத்தினாள்.

சடாரென எழுந்து அவளைத் தொட்டுப் பிடித்தபடியே எதனாலோ தாழ்வாரத்தடிக்கு வந்துவிட்டார் அவர்.

பிரிபடாத மௌனம் கவிந்து வெகு நேரமாய்ப் பரவிக் கொண்டிருந்தது. உள்ளே பாட்டும் கூத்தும் நடந்து கொண்டிருந்தது.

பிரிபடாத அந்த மௌனத்தை அவரே முதலில் பிளந்தார்.

"நீ யார் என்று நான் அறியலாமா?"

அவள் சிரித்தாள். சிரித்தபடியே சொன்னாள்:

"என்னை அறிய நீ யார். நான் தான் முதல் உயிர். பிரபஞ்சத் தொட்டிலில் பூத்த முதல் பூ. உயிர்ப் பூ. அதில் நீ, நான் பல்கிப் பெருகிச் சுமை சுமையாய் நிற்கும் இன்றைய உயிர்கள். எல்லாமே முதலுயிர். முதலுயிரில் எல்லாம். நேற்றைய பூ. இன்றைய பூ. நாளைய பூ. முதல் பூத்த முதல் பூ. அதில் நான், நீ............'

அவர் குழம்பிவிட்டார்.

மேற்கின் காரண ரீதியான முடிபுகளையும் கிழக்கின் உணர்வுமயமான முடிபுகளையும் அசை போட்டபடியே அவர் இப்போதும் அவளை நன்றாக உற்றுப் பார்த்தார். குழப்பந்தான் மிஞ்சியது. வெறும் குழப்பம்.

அவள் அவளே போலவும் அவளில்லைப் போலவும் இருந்தது. அவளுள் முதல் பூத்த உயிர்ப் பூவே தெரிகிறாற் போலவும் அதுவே வேறு போர்வை ஒன்றினுள் புகுந்து இன்று அவளாய்த் தோற்றம் காட்டிப் பேசுகிறாற் போலவும் அவருக்குத் திடமான நம்பிக்கையே பிறந்துவிட்டது. 'கீதைத் தத்துவம்' பூரணமாய் உயிர் பெற்று நிற்கிறாற் போலவும் பட்டது.

அவரின் சிந்தனையை அவள் கலைத்தாள்.

"உங்களுக்குத் தெரியாதா?"

‘‘எதைப்பற்றி?’’

‘‘நீ யார், நான் யார்?’’

அவருள் சடுதியாய் ஒரு முடிவு.

‘நீ என்றும் நான் என்றும் வேறு வேறு தோற்றத்தில் நிற்கிற உயிர்கள் ஒன்றாய்க் கலக்கிற போது நீயும் நானும் கலந்து விடுகின்றன. அந்தக் கலவையில் பிறக்கிற உயிர்ப் பூக்கள் நீயா? நானா? என் உள் மனித உயிர் தோன்றிய காலத்திலிருந்தும் உயிர் ஊற்றாய் ஓடிவருகிற பெருநதியின் கலப்பு இருக்கிறது. உன்னில் இருக்கிறது. பிறகு நீயா? நானா? நதியா? நீயும் நானும் என்று தேங்கி எதுவும் நிற்கிறதில்லை. நீயும் நானும் தேங்கி நிற்காமல் உலகம் முடியு மட்டும் ஓட்டுப்பட்டுக் கொண்டே ஓடுவதற்குத்தான் குழந்தைகள் பிறந்தபடியே இருக்கின்றன. அதில், நீயில்லை. நான் இல்லை. பெருநதி. அவற்றின் கலப்பு’.

‘‘புரிந்ததா?’’

அவள் தலையை ஆட்டினாள்.

ஒன்றுமே அவளுக்குப் புரியவில்லை.

அவள் போய்விட்டாள்.

***

அவர் தூக்கம் பிடிபடாமல் அன்றைய இரவு முழுதும் சிந்தித்தபடியே இருந்தார்.

காலம் காலமாய் இந்திய மண்ணில் தோன்றிய ஒளி முத்துக்களான ஆத்மீகத் துறவிகள் எதனையோ பற்றிப் பேச மறந்து விட்டதான அவருள் ஒரு நினைவு முகிழ்ந்தது. தெய்வச் சிருஷ்டியின் ஆண் பெண் என்கிற இரு உயிர்கள் பூத்துக் கொண்டேயிருக்கிறபோது ‘நீ, நான்’ என்கிற பாகுபாடுகள் இல்லை. என்று அவர் கருதினார். ஆண் பெண் என்கிற உயிர்களின் புனிதமான சகல உயிருமே’ நிறைந்துவிடுகிறதே? ‘நான் பிறப்பதுமில்லை, இறப்பதுமில்லை’ என்று பகவான் கீதையில் பேசுகிறாற் போல யார் இறக்கிறார்கள், யார் கலக்கிறார்கள், யார் பிறக்கிறார்கள்? முதலுயிர்தானே?

உயிர்ப் பூக்கள் உதயமாகிய திருமணத்தை எதற்காய் கீழைத்தேயத்தின் கம்பீரமாய், இமய மலை என நின்ற இந்தியத் துறவிகள் தூற்றினார்களோ? அவர்கள் ‘மாதிரி’ காட்ட வந்தவர்கள். அதைத்தான் அவர்கள் சொல்ல வேண்டுமென்பதற்காய்ச் சொன்னார்களோ? ஆற்றலும் வேகமும் நிரம்பியதான

ஒரு சமூகத்தைச் சிலரையாவது கொண்டு உருவாக்கி, இந்திய நாட்டின் பசியையும் பஞ்சத்தையும் அவ்வப்போது போக்கடித்து விட வேண்டுமென்கிற வெறியில் - கிளர்ந்த வெறியில் அந்தக் கொடிய விதியைச் சொன்னார்களோ?

எதுவோ 'அவர்' அந்த முடிவிற்கு வந்துவிட்டார்.

மறுநாள் பொழுது புலர்ந்ததும் அவர் சத்தியபாமாவின் வீட்டிற்குப் போனார்.

திருமணம் நடந்தது.

ஆண்டுகள் நகர்ந்தன.

சத்தியபாமா மாறிவிட்டாள். மண் உலகத்து ஆசைகளும், பற்றும் மனோபாவமும் நிரம்பிய பெண்ணாக மாறிவிட்டாள்.

அவருக்கு அது ஒரு நூதனமாகவே படவில்லை. பல சமயங்களில் பலருக்கு அந்த மாதிரியான 'சமய உணர்வு மனோபாவங்கள்' ஏற்படுகின்றன என்றும் - ஆழ்ந்தும் போற்றியும் வந்தாற்தான் அவை நிலைக்கும் என்பதும் அவருக்குத் தெரியும். 'ஒரு காலத்தில் அவள் பிரபஞ்சப் புதிரை அவிழ்க்கத் தொண்டர் நிலையத்தைத் தேடி வந்தவளா?', என்கிற ஐயுறவு அவருள்ளேயே பல சமயங்களில் எழத்தான் எழுந்தது.

அவர் மட்டும் மாறவில்லை. ஒரு விஷப் பரீட்சையை அவர் செய்தார். உயிர்களின் பேதமற்ற கலப்பில் அவர் ஒரு பேருண்மையைக் கண்டு விடலாம் என்கிற சடுதியான முடிவிற்கு வந்து செயல்பட்டுவிட்டார். 'அவரது பேருண்மைத் தத்துவம்' வெறும் உணர்வு மயமாய்ப் பார்க்கிறபோது பெரிதாயும் ஆழமாயும் தான் இருந்தது. நடைமுறையிலோ, மண்ணோடு சம்பந்தப்பட்டு முழுதும் மண்ணாய் நிற்க வேண்டிய அவசியங்கள் பிறந்து கொண்டேயிருந்தன. அப்போதெல்லாம் இராமகிருஷ்ண பரஹம்ஸருக்கும் சாரதா தேவியாருக்கும் இருந்த உணர்வு மயமான தொடர்பின் வலிமை மிக்க ஆத்ம சக்தி அவரைக் கொன்றது.

நெடு நாள் கழித்துக் குழந்தையும் பிறந்தது. தொட்டிலில் கால்களையும் மெதுவாய் ஆட்டியபடியே இதோ அழுகிறது.

'குவா.......... குவா...........'

***

அவர் கைகளில் அவள் சரிந்து வாடிய பூக்குடலைப் போலக் கிடக்கிறாள்.

'சாந்தினி'

'ஏன்' என்று அவள் கேட்டாள்.

அவர் பொறி கலங்கிப் போனார். ''உன் பெயர் அதுவா? குழந்தையின் பெயரை நினைவு தப்பிப் போய் உன் பெயர் என்று கூப்பிட்டால் நீ 'ஏன்' என்கிறாயே?''

அவர் உலகத்து மனிதராய்ப் பேசினார். அவருக்கு 'நோயில்லை'.

அவள் சிரித்தாள்.

முன்பு அவள் பையித்தியக்காரி போல இருந்த காலத்தில் பிறந்தாற் போன்ற சிரிப்பு.

''சாந்தினி...... இல்லை, இல்லை. சத்தியபாமா''.

''இல்லை........ இல்லவேயில்லை, நான்தான் 'சாந்தினி' நானே அவள். அவளே நான். நானும் நீயும் தேய்ந்து பிறந்தது குழந்தை. புதிய உயிர். அதில் நீயில்லை. நான் இல்லை. அதுதான் சாந்தினி. அதுதான் நான், நீங்கள், அதுவுமில்லை, முதலுயிர். மண்ணுலகத்தில் தோன்றிய முதலுயிர்.'

''நான் தான் 'சாந்தினி' '' சொல்லுங்கள்

''நீதான் முதலுயிர்''

அவள் சரிந்து விழுந்தாள்.

அவர் மண் உலகத்து மனிதராய் அழுதார்.

'நான் பிறப்பதுமில்லை, இறப்பதுமில்லை' என்கிறாற் போலத் தொட்டிலிற் கிடந்த குழந்தை சாந்தினி சிரித்தாள்.

*கலைச்செல்வி*
*1966*

# அழிவும் தேய்வும்

யன்னலுக்கப்பால் வானின் அழகிய துண்டு தெரிகிறது. அந்த முகிற் துண்டில் ஓராயிரம் சலனம். நூலிழைகள் பெருகிப்பெருகி அறுகின்றன.பொட்டுப் பொட்டாய்த் தெரியும் நீலப் புள்ளிகள். அவற்றின் மங்கிய ஒளியின் ஊடே ஒளி சிதற முனையும் சுடரின் அழகு. ஓங்கி வளர்ந்து நிற்கும் தென்னைமரம். காலத்தையே வரிகளாய்க் கொண்டு அந்தத் தேய்விலே அழகையும் பயனையும் சேர்த்து நிற்கும் அதன் கம்பீரம். இந்த உலகத்து நல்லனவற்றின் கம்பீரமாய்த் தெரிகிறது. ஓட்டின் வெம்மையைத் தவிர்ப்பதற்காய் விறாந்தையில் வேய்ந்த சீலிங் பலகையுள் எலிகளின் உலகம். ஒன்றைப் பற்றி ஒன்று ஓட இடையே புகுந்து இன்னொன்று ஓட, எது எது, எதன் எதன் இலக்கு என்று வரையறையற்ற உலகம். அந்த உலகத்தின் பசிகள். அந்தப் பசிக்கேற்றாற் போல ஓடும் ஓட்டத்தில் பிறக்கிற இப்போதைய ஒலிகள், நாராசமாய் வழிகிறது. உலகம் உறங்கிக் கொண்டிருக்கிறது.

பிரார்த்தனைக்கு மட்டிலுமே உரித்தான அமைதியும் அழகும் சேர்ந்த இந்தப் போதில், என் மனம் லயம் கெட்டுப் புரள்கிறது. பயிற்றிய புலன்களே, பயிற்றியவன் பயிற்றிய தன்மையில் எழுந்த ஆங்கார முனைப்பைப் பார்த்துச் சிரிக்கின்றன. அலையே அலையை ஓடிப்பிடிக்கிறாற் போல, அதுவும் இதுவுமாய்ச் சிதறுகின்றன. இருதய வீணையில் 'ஓம்' என்னும் நாதத்தை - பொதுவான இசையின் பெருக்கை அது உயிரைத் தொடுகிற சுகத்தை ஏற்றி, தான் சூனியமாய் - அந்தச் சூனியத்துள் அகண்ட விசால உயிர்த் தத்துவத்தின் அழகிய சுகங்களைச் சுரப்பிக்க முயன்று கொண்டேயிருந்த முனையே கருகிச் சாம்புகிறது. ஆரம்பப் படியில் நெற்றிப் பொட்டிலோ, மூக்கு நுனியிலோ கோவில் மணியின் நாத ஒலியிலோ குழந்தை மண்ணைத் தொடுகிற போது எழுகிற முதல் குரலிலோ லயம் பட்டுத் தேறிய படிகளே, எட்ட எட்ட நகருகின்றன. உற்றமும் சுற்றமும் சிரிக்கச் சிரிக்க இருக்கிற

போதும், நடக்கிற போதும், கிடக்கிற போதும், என் உள் உருவாக்க முயன்ற மண்குடிசை கலைகிறது. 'இவைதான்' நான் என்று என்னை மூக்கும் முழியுமாயும், அவை மண்ணில் கீறிய நல்லதும் கெட்டதும் உறங்கி நிற்க, நான் உறங்கவும், அந்த உறக்கத்துள் ஆட்படாது என்னைச் சுற்றியும், உள்ளேயும் அயலேயும் - அகமும் புறமுமாய் எதன் ஒளியின் கற்றைகள் சுடர் விட வேண்டுமென்று ஓடிக் கொண்டிருக்கிறேனோ, அந்த ஒளியில் ஓர் அணுவையும் இந்த மண் குடிசையின் மங்கலான தீபத்திரியில் ஏற்றிவிட முடியாமற் போகுமோ என்கிற நடுக்கம், அங்கமெலாம் தொற்றிக் கொள்கிறது. நினைப்புக்களை ஒடுக்கிவிடுகிற முனைப்பே நினைப்பின் வித்தாய்ப் பெருகுகிறது. மரணம் வந்து என் வாயிற் படியைத் தட்டிக் கொண்டிருக்கிறாற் போன்ற ஒலிகள் நிறைகின்றன.

மரணம்.........

மரணம்..........

மரணம்..........

ஓ.... அழகிய மரணம்.

'பிறிமிற்றிவ் ஏஜஸ்' என்று வரலாறுகள் வரையறுக்கிற காலத்தில், மனிதர்கள் வானையும் நீரையும், நிலனையும், ஒளியையும், காற்றையும் அவற்றைத் தனித்தனியாயும், அவற்றின் சேர்க்கையில் பிறந்த பிறிதொன்றின் தீரத்தையும் கண்டு, வழிபாடு செய்து கொண்டாற் போல, இந்த மரணத்தின் புகழ்பாடி அதன் தீரத்தில் இருந்தும் ஒதுங்கிவிட மனம் சடுதியாய் முனைந்தது. தெய்வத்தையும் ஏமாற்றும் போக்கில் தானே ஏமாந்து போவதில் மனம் படும் அவசம் இருக்கிறதே, அதை என்னவென்று சொல்வது?

சாயங்காலத்தில் கடலின் கரையோரத்தில் நின்று, எல்லையற்ற பெருவெளியில் கண்ணை மலர்த்துகிறபோது, கூட்டத்தை இழந்து ஒன்றே ஒன்றாய் நீந்தும் வெண் கொக்கின் இசையில் மரணம். மோதி மோதிச் சிதறும் சிற்றலையில், ஓயாமல் வீசும் வாடைக் காற்றில் நொடிப் போதில் அதுமாறிச் சோழகமாய்ப் பெயரும் பெயர்ச்சியில் - மரணம் அடி பெயர்க்கிறது. மாலையில் அழிவின் எல்லை தெரிகிறது. மழை நீங்கிய விரிவானில் தோயும் செம்பஞ்சுக் குழம்பில், உயிர் அழிவின் செங்குருதி ஓடுகிறதோ? அறிவும், உணர்வும், அழகும் தளர்ந்து நிற்கும் பெண்ணின் தரையில், குரலில், தோல் மடிப்பில், ஆணின் கம்பீரம் மங்கும் ஆண்டில்... எதிலும் மரணம்.

ஓ.... அழகிய மரணம்.

தன் உள் தானாய் நெகிழ்ந்து பரவும் அழகிய சிரிப்பு முகிழ்ந்து என் இதழ்வழியே கசிகிறது. 'பைத்தோக்கிறஸ்' என்னும் கிரேக்க தத்துவ ஞானியின் அழகிய வரிகள் நினைவில் மோதுகின்றன. 'ஓல் திங்ஸ் ஆர் நம் பேர்ஸ்' 'எல்லாமே எண்ணிக்கைக்கு அப்பாற் பட்டவை' என்னும் அவன் அழகிய

வார்த்தையில் எது தேறிவிட்டது? கடுங்கோடையில், தார்றோட்டின் கான் ஓரங்களில், உயிர்வற்றி உடல் சிதறியிருக்கும் புற்பரப்பைக் கிளறினால், உள்கிழங்கில் மட்டும் ஏதோ ஒரு உயிர் அணு ஒட்டிக் கொண்டிருக்குமே, அதுபோல பைத்தோக்கிறஸின் வற்றி உலர்ந்த பரிகாசத்திற்கே உரித்தான வார்த்தைகளில் கூட ஏதோ ஒரு உயிரின் பசுமை படிந்திருக்கிறாற் போலத்தான் இப்போது எனக்குப் படுகிறது. பிரபஞ்சத்தின் சகல வாழ்வின் இயக்கத்தையும் அது தரும் போராட்டத்தையும், நன்மை தீமைகளையும் யாரால் முற்றும் உணர்ந்து தேறிக் கனிந்து விடமுடிகிறது எல்லையற்ற பெருவெள்ளத்தில் மிதந்து மிதந்து போகும் வஸ்து, எதனோ ஒன்றில் சிக்குண்டு நின்று, தன் தேக்கத்தின் அவதியில், பெருக்கில் மிதந்து வரும் பல வற்றின் சேர்ப்பிடமாய் மாறி, அந்தச் சேர்ப்பைத் தன் தோற்றத்தின் தோற்ற மாய்க் காட்டிக் கொள்கிறாற் போலத்தான் ஞானமும் ஞானியும், பிறகென்ன? அவனவன் தன் அனுபவத்தையும், சுற்றுச்சார்பையும், நிலைக்களனையும், அவற்றின் கலப்பையும் பேசிவிடுகிறான். எது தேறிவிடுகிறது? ஞானமா? பைத்தோக்கிறஸைப் போல ஒவ்வொன்றையும் இது தான் ஞானம் என்று பேசிவிடுகிறானோ......? உலகம் அழகிய மரணமாய் மட்டுமே எனக்குப் படுகிறது. அழகிய மரணம் தான்.

என் மனதில் எழுந்த வார்த்தைகளை ருசுப்படுத்துமாப் போல எண்ணங்கள் பிறக்கின்றன. கர்ப்பப்பையில் உயிர் நெளிகிற போது ஏற்படும் உணர்வின் சுகத்தைத் தாய்மையில் கனிந்து நிற்கிற உயிர் மட்டுமேதான் உணர்ந்து கொள்ளமுடியும். செத்த குழந்தை உருவின் பிண்டத்தைச் சுமந்து நிற்கும் பெண்ணின் தாய்மையின் அழகும் உயிரும் ஒருசேரச் சொட்டுவதும் என்னவோ உண்மைதான். உயிர் ஊருகிற உணர்வின் சுகம்.....? மரண நினைவின் உயிர் உந்தலில் எது எதுவோ உணர்வுகள் பிறக்கின்றன.

எங்கோ வெகுதொலைவில் நாய் ஒன்றின் ஊளை, சன்னமாய்க் கேட்கிறது. யமன்..... மரணத்தின் ஒலியோ? இருண்ட தடித்த ஏரியோடு எருதும், பாசக் கயிறும், அழிவிலும் அழியாமல் நிற்கிற நிரந்தரத் தன்மையோடு யமன். உலகம் மாறிச் சுழல்கிறது. பயம் என்னைக் கப்பிற்று பக்கென்று வியர்த்தது. மரணத்தின் - யாரும் கணிக்க முடியாத அதன் வேகம் பின்னுக்கு அடி பெயர்த்துப் பார்க்காத அதன் கம்பீரம், நெகிழ்வு பற்றியும் நெகிழாத அதன் கொடூரம்...... இதன் வட்ட மாய் எழுந்த மரண ஒலிகள்.

ஸ்பரிச உணர்ச்சியைத் தோல் உணர்த்தித்தான் விடுகிறது. பிறக்கும் போதே மனிதன் தெய்வத்தின் தன்மைகளையும் நிரப்பிக் கொண்டுதான் பிறக்கிறானோ? அந்த மரண பயத்தின் அவசரத்தில் மனம் எதனையோ தூண்டிற்று.

புலன் சேர்ந்து - இருதயம் கசிந்து - இதழ் பிரிந்து - குரல் பிறந்தது.

‘ஓம்’

‘ஓம்’

‘ஓம்’

புதிய நயங்கள் சொட்டிற்று. புதிய அர்த்தங்கள் ஓங்கார ஒலியைச் சுற்றிப் பிறந்தன. ஒலியுள் ஒலியாகி எதனையோ பிடித்து உந்த முயன்றேன்.

ஓம்........ மரணத்தின் முற்றுப் புள்ளி. மரணத்தின் அகண்ட வெளி. வெளியே பனி பெய்கிறது. அனாலய் வெய்யில் வீசுகிறது. கருமுகில் திரள்கிறது. மழை சோ என்று பொழியப் போகிறது. கடல் குமுறப் போகிறது. புயல் ஊழிப் புயல் - நிமிடம் நிமிடமாய் உலகம் ஊழிப் புயலில் ஆட்பட நகரும் வேகம் தெரிகிறதே? குழந்தைகளே இந்தப் பெருவெளியில் இதமாய் இருக்க வாருங்கள், என்னும் அழைப்பின் குரல் மட்டும்தான் அந்த அழகிய ‘ஓம்’ல் பொதிந்து நிற்கிறதோ? உள்ளே போனால் யாரைத் தேடுவது? யார் என்பதும் எவர் என்பதும் ஏது? பவள மல்லிகையின் மணம் மட்டுமே நிரம்பிய பிணங்கள் காலமும் தட்பமும் வெட்பமும் வாழ்வு முறையும் போய் - பிணம் என்னும் தனித்துவத்தோடு மட்டுமே கிடக்கும் பிணங்கள் .... ஓம்..... ஓம். அழகிய மரணம் தோற்குமிடம்.

தோற்றம் எல்லாம் தோற்றம்தான். ‘கில்ஸ் ஆர் சடோஸ்’ மலைகள் என்பவை வெறும் நிழலுருவங்களே - என்று ஆங்கிலக் கவி ரெனிஸன் எங்கோ சொன்னானாமே? மலையே மலையில்லாத போது - மலையின் நிழலாய் இருக்கிற போது, தோற்றம் தோற்றமாகிவிட முடியுமா? கண் முன்னால் தெரிகிற சகலதும்.

நானும் நீயும் கூடப் பல வேறுபட்ட அணுக்களின் சேர்க்கைகள் என்று நவீன விஞ்ஞானம் சொல்லவில்லையா? பார்க்கப்போனால் நீயில்லை. நான் நானில்லை - மலர் மலரில்லை - நதி நதியில்லை - என்பதெல்லாம் வரண்ட தத்துவ உண்மைகள் அன்று. விஞ்ஞான உண்மையும் கூடத்தான் கண் முன்னால் தெரிந்த யமனின் உருவெளித் தோற்றம். மரணத்தின் உருவெளித் தோற்றங்கள் மறைந்து விட்டன. ‘ஓம்’ என்னும் எழுத்தின் ஓங்கார ஒலிகள் நிறைகின்றன.

உலகம் சலனமற்றிருக்கிறது. ஆழ்ந்த தூக்கத்தில் இருக்கிறதோ? தூக்கமாய் இருக்கிறபோது அங்கே எதன் அளவிலே விழிப்பும் இருக்குமோ? நிழல்வாடி மரங்களின் அழகிய இலைகள் கீழ் நோக்கிக் கூம்பி மௌனமாய் இருக்கின்றன. அதன் சாம்பர் நிறம் போர்த்த மேற் பசுமை வெளிறடைந்து இனிதாய்த் தெரிகிறது.

அறிவு, வினாவின் ஆரம்பமோ என்னவோ? உணர்வுகள் எழுந்து ஓங்கி ஆழமாய்ப் பதிந்து மறைகிற போது எதுவோ ஓர் உண்மையை உணர்த்திப் பதிந்து விடுகிறது. அறிவின் வினாவோடு உணர்வின் உண்மைகள் மங்குகின்றன. அறிவு என் உள் வினாவாய் எழுந்து, என் உணர்வுகளை

மங்கச் செய்தது.

புத்த தத்துவம் - உணர்வு சமைத்துவிட்ட உண்மையின் வினாவாய் எழுகிறது. உலகம் என்பது நித்திய மாற்றம். மாற்றங்கள் மாற்றங்களாய் மட்டுமே கண்ணிற்குப் புலப்படுகிறபோதுதான் மாற்றத்தின் தன்மை தெரிகிறது. பசுமைத் துடிப்போடு நிற்கும் முகை மலர்ந்து இலை அதன் நரம்புகள், காம்புகள் என்று விரிகிறபோதுதான் உள்ளம் ஏற்றுக் கொள்ளுகிறது. முகைக்கும் அதன் மலர்ந்து விட்ட வாழ்விற்கும் மாற்றங்கள் தெரியத்தான் இல்லை. நவீன விஞ்ஞானக் கருவிகளைக் கொண்டு பார்க்கக் கூடுமானால் நடக்கும் மாற்றங்கள் தெரியக் கூடுமோ, என்னமோ? நித்தியமாற்றமாய்ப் பிரபஞ்சம் இயங்குகிறபோது மரணம் என்பது ஏது. ஐரோப்பிய தத்துவ வரலாற்றின் அழகிய ஞானி ஸ்பயினோசாவின் தத்தவமும் ஒன்று கூடிற்று. ஒரு பொருளின் தன்மை அப்பொருளின் தன்மையில் இல்லை. ஒரு பொருளின் தன்மையைக் கொண்டு இன்னொரு பொருளின் தன்மையை அளவிடுதல் சாத்தியமில்லை. பார்க்கப் போனால் ஒரு பொருளின் மரணத் தன்மை பிறிதொரு பொருளின் மரணத் தன்மையோடு பொருந்தாதோ?

மரணம் என்பது என்ன? மாற்றமா? தேய்வா? பிறிதொன்றின் பிறப்பா?

தன் அறிவிற்கும் தன் பருவத்திற்கும் தெரியாமல் கன்னித்தன்மையைக் கழியாத பெண்ணின் அடிவயிற்றில் உந்திப் புரளும் உணர்வுகளை அவள் புதிய உயிரின் உந்தல்கள் என்று தீர்மானித்துவிடுவதில்லை. அந்த உயிர்ச் சத்தத்தின் உந்தலை உணரவும், அனுபவிக்கவும் பக்குவமான ஒரு சூழ்நிலையை இந்த உலகம் அழகாய் உருவாக்கி விட்டிருக்கிறது. இயற்கை அந்தச் சூழ்நிலையைச் சுற்றிப் படருகிறது. தெய்வத்தை நோக்கி ஓடுகிறவனும் அந்தக் கன்னியைப் போல தான் தெய்வத்தோடு கலக்கவும், அந்தக் கலப்பில் உயிர் பெறவும் உலகத்தின் சம்பிரதாயத்தின் திருமணச் சடங்கு இல்லை. பக்குவம் என்னவோ வேண்டித்தான் இருக்கிறது. அந்தப் பக்குவத்தைப் பிரார்த்தனையில் பெற்றுவிட முயன்ற என் முனைப்பு அடியோடு சேர்ந்து மரணம் என்னும் கேள்வியாய் நிலைத்துவிட்டது.

நெடு நேரமாய் உறக்கம் மரணம் என்னும் பயங்கரத்தை அதன் நானா விதமான தத்துவங்களை அலசிக் கொண்டேயிருக்க, யாரால் முடிந்து விடுகிறது. அலுத்துப்போய் தூங்கிவிட்டேன். எவ்வளவு நேரம் தூங்கினேனோ?

விடிகாலையில் வந்து அம்மா என்னைத் தட்டி எழுப்பினாள்.

‘‘தந்தி வந்திருக்கிறது’’. நூறு நூறாயிரம் கதைகள் பேசினாலும் எழுதினாலும் மனம் என்பது என்னமோ மனம் தான். துறவிக்கு மட்டுமே அதன் தொந்தரவுகளும் சேட்டைகளும் தெரியலாம். அலுத்துப் போய் அதை ஒரே சீராய் ஓடப் பண்ணிவிட அவன் முயன்று விடமுடியும். சாதாரண மனிதனுக்கு மனதின் சேட்டைகளும் பிரபலங்களும், அதன் கோமாளித் தனங்களும் இல்லாவிட்டால் வாழ்க்கை என்பது ஏது?

அம்மா எதையோ பற்றி அழுது தீர்த்தாள்.

தந்தியைப் பார்த்தேன். சாவீட்டுத் தந்தி.

நெஞ்சு இருண்டது.

‘‘என்னடா, என்ன’’

‘‘குமரேசனின் தாய் காலமாகி விட்டாளாம்’’

அம்மா ஏதோ இரண்டு நிமிடம் பேசினாள். அதன் பின் எதையோ எண்ணியவளாய்த் திரும்பி வந்தாள்.

‘‘நீ போறியா?’’

‘‘ஓம்’’

அழகிய கிராமப் புறமது. வழி நெடுகிலும் அழகும் பயனும் சேர்ந்த நெற் பயிர்கள் சரிந்து ஆடின. நிலம் எங்கும் அழகும் பயனும் தரும் சோலைகள். மனம் நண்பனின் தாயை எண்ணிச் சுற்றிற்று.

‘புருஷனுக்குப் பிறகு ஒன்றும் இல்லை’ என்கிற நிலை. தமிழ்ப் பெண்தான் அவளும். அவள் நிலையும் அதுதான். அதற்கு முந்தி ஏதாவது இருந்திருக்கலாம். நோய் வேறு உலுப்பிற்று. நிணம் அழுகி ஓடும் பயங்கர நோய் அது. தன் உதிரத்தெழுந்த குருத்தே அருவருத்து ஒதுக்குகிற நோய் அது.

வீட்டை அடைந்து விட்டேன். பிணத்தைச் சுற்றி இனிச் சாகும் பிணங்களின் ஓலம், எழுந்து பரவிக் கொண்டிருந்தது.

குமரேசன் என்னை உலுப்பி உலுப்பி அழுதான்.

மனம் நேற்றைய இரவின் நுனியில் தொங்கிற்று.

மரணம் என்பது தேய்வும் இல்லை. பிறப்பும் இல்லை. அதைச் சுற்றியிருக்கும் நூறாயிரம் தத்துவங்களும் இல்லை. மரணத்திற்கு வரம்பில்லை. தனக்கு நெருக்கமான உயிரின் பிரிவை உணர்ந்தவன் மட்டும் உணரும் இரகசியமோ? பாஷைகள் தோற்கிற இடமும் அதுதானோ?

நண்பன் விம்மலுக்கிடையில் அரற்றினான்.

‘‘பாயில் படுத்த படுக்கையாய்க் கிடந்தாலும் நிறைவு இருந்தது. இனி என்னடா?’’ கண்களை மெல்லத் துடைத்துக் கொண்டேன்.

ஈழநாடு
27-02-1966

# நிமிடப் பூக்கள்

பெண்ணே, உன் முகத்தில் காவியங்களின் அழகுகளைக் காணுகின்றேன். உன் விழிக் கோணத்தில் நிலவு வழியும் அழகினை உணருகிறேன். நிலத்தைப் பிளந்து புறப்படும் பயிரின் முனையில் துள்ளும் உயிரின் பொலிவு போன்ற உன் பொலிவில் ஆட்படுகிறேன். அழகுகள் உன்னில் இருந்தும் பிறந்து உன்னிலேயே சங்கமமாகி விடுகிற விந்தையில் என்னை இழந்து கொண்டிருக்கிறேன். ஓவியனின் நினைவோடே ஒட்டி ஒட்டித் தூரிகை சிதறும் நிறங்களின் அழகு போல உன்னை நினைக்க நினைக்க என் மனமாகிய தூரிகை அழகுகளைத் தூற்றுகிறது.

நெஞ்சில் மூட்டிய 'தீ' அவிந்து விட்டதா? நான் பைத்தியக்காரன் ஆகிவிட்டேனோ, பார்த்தசாரதி கோவிலில் போய் ஏழைகளை உயர்த்துவதே உங்கள் விரதமாய் ஏற்றுக் கொள்ளுங்கள் என்று விவேகானந்தர் யுவர்களுக்குக் கட்டளையிட்டாரே? அந்தக் கட்டளையை நெஞ்சின் அந்தரங்கமான காதல் நினைவைப் போல் போற்றிப் போற்றி நான் மகிழவில்லையா? இந்த நாட்டின் துடிப்புள்ள இளைஞர்களின் நெஞ்சங்களிலே கனலை மூட்டிவிட வேண்டுமென்று கனவு கண்டு கொண்டிருந்தேனே.......

எனது படிப்பறையில் மாட்டப்பட்டிருந்த சுவாமி விவேகானந்தரின் திரு உருவப் படத்தைப் பார்த்தேன். என்னால் பார்க்கவே கூட முடியவில்லை. கண்கள் சோர்ந்து சோர்ந்து தள்ளாடின. மதுவுண்ட கண்கள் எங்கும் நிலை கொள்ளாமல் நடுங்கிச் சோருகிறாற் போலத்தான் வாழ்வில் சலனங்கள் தாம் எத்தனை - என் வரையில்! அந்தச் சலனங்களிலெல்லாம் தப்பித் தப்பி ஆடிப் போய் விடாமல் கம்பீரமான அருளொளி கொழிக்கிற அற்புதமான விவேகானந்தரின் கண்களை நினைத்து நினைத்துத் தப்பி

வந்தேனே? இப்போது மட்டும்.............. பெண் ஒருத்திக்காய் நெகிழ்ந்து போய்க் கடிதம் எழுத ஆரம்பிப்பது என்று ஆகிவிடுமாப் போல் இருக்கிறது.

எழுதிய கடிதமும் தாளும் படபடவென்று நடுங்கின. துணிந்து இமை வெட்டாமல் அந்தக் கண்களைப் பார்த்தேன். அவரது கண்களின் வெண் விழிப் பரப்பில் ஒரு சமயம் என் கண்களில் இருந்தும் வீறிட்டுப் பெருகிய நீரும் கலந்தாற் போலிருந்தது.

மனம் அந்தச் சம்பவத்தை அவர் கண்களின் வழியாற் பார்க்கிறாற் போலத்தான் தோன்றிற்று.

வருடாந்த மகோற்சவ நாட்களின் பின்னர் கந்த சுவாமி கோவில் மங்கத் தொடங்கி விட்டிருந்தது. ஆனால், அன்றைக்கு கைலாய வாகனத் திருவிழா அன்று வீதியே கும்மாளம் மிட்டுக் கொண்டிருந்தது. பெருகி நிற்கிற ஜனத்திரளில் தெய்வமே அஞ்சிச் சோருகிறாற் போலப் பட்டது. கந்த சுவாமி கோவிலுக்குப் போகிற வழக்கமே எனக்குக் கிடையாது. உருண்டு கல்லும் முள்ளும் கீறக் கீற நாயனார் ஒருவர் போனாற் போல ஜனத்திரளில் ஏறியும் இறங்கியும் அந்தரத்திலும் போக யாரால் இலகுவில் முடிந்து விடுகிறது. நண்பன் அந்தத் திருவிழாவைப் பார்ப்பதற்காகக் கொழும்பிலிருந்து வந்திருந்தான். அவனோடு இழுபட்டுப் போய்விட்டேன். அவனைக் கோவிலின் உட்பிரகாரத்துள் பக்தி ரஸம் சொட்ட நிற்க விட்டு விட்டு, நான் அப்பால் நகர்ந்து தீர்த்தக் குண்டுப் படிக்கட்டில் காலைத் தண்ணீருக்குள் தோய்த்து அளைந்த படியே விரிவானத்தைப் பார்த்து இருந்தேன்.

தீர்த்தக்கேணியின் மேல் விதானத்தையும் மீறித் தென்னை மரங்களின் முடிகள் மட்டுமே தெரிந்தன. அந்தரத்தில் கருநீலம் போர்த்த பசுமை பளீரென்று பிரகாசிக்கும் வெண்ணிலவில் குளிர்ச்சியாய் நின்றது. வெண் பொட்டுக்களைப் பதித்திருக்கும் திமிரில் அங்கும் இங்குமாய் விரிவான் ஒளிகூட்டி நகைத்தது. இத்தனை ஆயிரம் ஜனத்திரளின் மத்தியில் இருந்தும் நல்லூர்க் கந்தன் அஞ்சி நடுங்கி விரிவானின் ஒளிப் பொட்டில் நின்றும் சுற்றி நிற்கிற ஜனத் திரளைப் பரிகாசமாய்ப் பார்த்துக் கண் சிமிட்டுகிறாற் போலப் பிரமையுணர்வு. பார்த்தபடி இருந்தேன்.

சிரிப்பொலி எழுந்தது. என்னைச் சுண்டிற்று.

உயிர்ப்பூ ஒன்று மெல்லென நடந்து வந்து கீழ்ப்படியில் எனக்கு வெகு சமீபமாய் நின்றது. அவள் கூசாமல் வெட்கப்படாமல், நாணமேயில்லாமல் என்னையும் விரிவானையம் மீண்டும் மீண்டும் மாறி மாறிப் பார்த்துச் சிரித்தாள். திருவிழாக் காலங்களில் முருகன் தன் தினைப்புனத்து லீலைகளை இளசுகள் மேலே ஏற்றி நாடகம் ஆடிவிடுவதாய் கேள்விப்பட்டிருக்கிறேன். ‘இது ஒரு பைத்தியம்’ என்று எண்ணியபடியே நான் என் முகத்தைத் திருப்பிக் கொண்டேன்.

நீரில் சலசலப்புப் பிறந்தது. திரும்பிப் பார்த்தேன். சேலைக் கரையைச் சற்றே கால்மேல் மிதித்தியபடியே காலை நீரில் விட்டு நீரைக் குமிழி கக்கச் செய்தபடி இருந்தாள். அந்தச் சூழ்நிலையில் ஒரு மகா காவியத்தின் நளினங்களைச் சுமந்தபடி நிற்கிறாற் போலத்தான் அவள் தோன்றினாள். இளம் சிவப்பும் மரநிறமும் கலந்த சேலையும் அதற்கேற்றாற் போன்ற மேற்சட்டையும் அவளுக்கு மிக்க எடுப்பாயிருந்தது. கவலையில்லாமல் அலாதி ஆணவத்தோடு தானே அவ்விடத்தின் அரசிபோலத் தட்டத்தை ஏந்தியிருந்த அழகு என் உள் விர்ரென்று ஏறுமாப் போல இருந்தது. கலைஞனின் மனம் தான் எவ்வளவு கோமாளித்தனமாய் ஆகிவிட்டிருக்கிறது. ஆஸ்கார் ஒயில்ட், பைரன் முதலான கலைஞர்கள் நெறி பிறழ்ந்து - நெறி பிறழ்ந்து அழகுக்கு ஆட்பட்டு - ஆட்பட்டுப் போய்ச் சீரழிந்ததற்கு அவர்களின் 'புனித வழிபாடற்ற தன்மை'யே காரணமாயிற்று என்று நான் கேள்விப் பட்டிருக்கிறேன். பாரதி முதலான கவிகள் அழகைப் போற்றியிருந்தாலும் சீரழியாமல் இருந்ததற்கு அந்தப் புனித வழிபாட்டுத் தன்மையே காரணமாயிற்றோ என்னவோ? நெஞ்சில் எது எதுவோ சிந்தனைகள் பற்றிப் படர நான் அவளைப் பார்த்தேன். அவளது அற்புதமான அழகை இந்த உலகத்தின் சகல பரிசுத்தங்களின் மேலும் ஏற்றிப் பார்க்க முயன்றேன். நெஞ்சில் ஏறிய சலனம் தீருகிறதாக இல்லை. என் நுட்பமான அழகு ரசனைப் புலன்களில் அவள் இடம் பிடிக்கலானாள்.

***

அவளது ஆணவத்தோடும் திமிரோடும் ஒரு நிமிடம் வேடிக்கை ஆடலாம் போல என் உள் புதுக்குரல். நாணாமல், கூசாமல், வெட்கப்படாமல், அவளை நான் பார்த்தேன். என் கண்களே மருட்சி கண்டு, நாணம் கொண்டு, தாழ்ந்து விரிவானுக்கு மாறிற்று. அவள் மீண்டும் சிரித்தாள். நான் ஆண்பிள்ளை என்கிற அகங்காரம் என் உள் மூண்டுவிட்டது.

திரும்பி விடாமல் அவள் கண்களைப் பார்த்தேன்.

மீண்டும் தோல்வி.

மீண்டும் அவள் சிரித்தாள். கன்னத்தில் போய்ப் 'பளீர்' என்று அறைந்து விட வேண்டுமென்பது போல ஒரு நினைவு எழுந்தது. ஓடிவிட்டாள். அவமானம் என்கிற ஆதங்கம்.

நான் திரும்பியே பாராமல் இருந்தேன்.

நேரம் பெயர்ந்து கொண்டிருந்தது. அவள் தொலைந்து போய் விட்டாள். என்கிற நினைப்பில் திரும்பினால் அவள்.... அதே சிரிப்பு மாறாமல் இன்னமும் அங்கு நின்றாள். பேசவும் செய்தாள்.

‘என்ன அப்படிப் பார்க்கிறீர்கள்’.

இவளுக்காய், இவள் ஆணவத்தையும் திமிரையும் அடக்கி விடுவதற்காய் நான் ‘இந்தத் துறையில்’ இறங்கியிருக்கலாமே என்கிறாற் போல பெரும் வேதனை மூண்டது. நாலு இடங்களுக்குப் போய் நாலு பெண்களோடும் பழகியிருந்தால்...............?

வெறுப்பைக் கண்களின் வழியே திரட்டி விரிவானையும் சுட்டிக்காட்டி ‘இந்த விதானத்தின் மேல் கும்மாளமிடும் அழகுகளை’ என்று சொன்னேன். என் உள்ளமே என்னை ஏமாற்றியிருக்கலாமோ? வெறுப்பைக் காட்டுகிறாற் போலக் கனிவைக் காட்டிவிட்டேனோ?

அப்போதே - அப்போதே தான் அவளுக்கு நாணம் பிறந்தாற் போலிருந்தது.

சடுதியாய் என் மனம் விழித்துக் கொண்டு விட்டது. என் மனதின் சேட்டை எனக்கே அசிங்கமானதாகப் பட்டுவிட்டது. ஒன்றுமே பேசாமல் எழுந்து போக ஆரம்பித்தேன். வடக்கு வீதியில் மணலில் புரளலாம் என்றோ, போவது போல் போக்குக் காட்டிவிட்டு அவள் போனதின் பின்னால் மீண்டும் வந்து உட்கார்ந்து கொள்ளலாமென்றோ தான் நான் எண்ணியிருந்தேன். வாயிலில் நின்றும் திரும்பிப் பார்த்தேன். அவள் என்னையே பார்த்தபடி நின்றாள். வடக்கு வீதியின் மணலில் புரண்டபடி இருந்தேன் நான். வடக்கு வீதியைக் கடந்து வாகனம் போய்விட்டதால் அங்கே ஜன நடமாட்டம் அதிகமில்லை. புரண்டபடி கிடந்த என்மேல் தன் சேலையின் கீழ் முனைகள் உரசும் படியாய் நடந்து வெகுசமீபமாய் அவள் நின்றாள்.

எனக்கு ஆத்திரம் பற்றி விட்டது.

‘எதற்கு நீ சிரிக்க வேண்டும்?’

அதே நளினம் சீறும் சிரிப்பு.

எழுந்து விட்டேன். நான் நடக்க அவளும் நடக்க ஆரம்பித்தாள். அவளும் இப்படி யாரையேனும் பைத்தியமாக்கிக் கொண்டிருக்கிறாளோ என்று நினைத்தேன். இதழ்வழியே அமுதம் கசிந்து கசிந்து பைத்தியமாக்குகிற சிரிப்போடு அவள் தொடரத் தொடர எனக்குப் பைத்தியம் பிடிக்குமாப் போல இருந்தது. என் கனவுகளும் இலட்சியங்களும் அவள் சிரிப்பின் முன்னால் துகள் துகளாகிறாற் போலத் தான் பட்டது. ஆத்திரத்தைக் கொட்டுகிறாற் போல என் பலவீனத்தையே காறி உமிழ்கிறாற் போல ‘தூ’ என்று துப்பினேன்.

அவள் முகம் வேதனையில் சுண்டிப்போய் விட்டது. மிக்க பரிதாபகரமாய் விட்டது. அந்தப் பலவீனத்திற்கு அடி பணிந்துவிடுவதற்கு நான் தயாராகவில்லை.

‘‘மேல் விதானத்தில் கும்மாளமிடுகிற அழகுகள் இப்போது ‘தூ’ என்று

ஆகிவிட்டதோ?" என்று சொல்வது எனக்குக் கேட்டது. நான் பேசாமலே நடந்து விட்டேன்.

என்னைத் தொடர்ந்து தொடர்ந்து வந்ததால். 'மேல் விதானத்தின் மேல் கும்மாளமிடுகிற அழகுகள்' எல்லாம் காறி உமிழ்கிறாற் போலாகிவிட்டது. என்று நயம் படும் படியாய்த்தான் சொன்னாள்.

நண்பனை எங்கேயென்று தேடுவது? அவளிடமிருந்து தப்பி வீடு போய்ச் சேர்ந்து விட்டாற் போதுமென்று ஆகிவிட்டிருந்தது. வீட்டிற்கு வந்து முதல் வேலையாய்க் காலலம்பிவிட்டு சுவாமி விவேகானந்தரின் திருப்படத்தின் முன்னால் நின்ற படி அவர் கண்களை உற்றுப் பார்த்தேன். எனக்கு அழுகை வீறிட்டுப் பெருகியது. அவர் பேசுமாப் போல இருந்தது.

'தம்பி'

எனக்குத் தேகம் புல்லரிக்க ஆரம்பித்துவிட்டது. மயிர்க் கால் தோறும் இலட்சியக் கனல் ஊர்ந்து உள் புகுந்து சுடுநீராய்ப் பெருகித்தகிக்கிறாற் போல இருந்தது. ஒரு நொடிதான். கனிவு சொட்ட அந்த அழைப்பு மாறிற்று.

'தம்பி, உன் எழுத்தில் தெரியும் பரிசுத்தங்கள் உன் பேச்சில், பார்வையில், நினைப்பில் ஏற்படும் பரிசுத்தங்களின் பிரதிபலிப்பாயிருக்கவேண்டும். இந்தச் சலனத்திற்கு நீ ஆட்படாதே. எழுத்தை நீ என் முன்னால் உன் இலட்சியமாய் ஏற்றுக் கொண்டாய். அதை நாணும் படியாய் நீ ஆக்கிவிடக் கூடாது'.

அந்த நிமிடமே அந்தப் பெண்ணின் கருநீலக் கண்களும், அதில் புரளும் அற்புத சௌந்தர்யங்களும் குமிழியிடக் குமிழியிடச் சிரிக்கும் சிரிப்பும் மறைந்து விட்டன. அந்தக் கம்பீரமான உருவத்தில் இருந்தும் சலனத்தையே கண்டறியாத அவரது மனம் என் உள் இறங்கிவிட்டாற் போலிருந்தது.

இரண்டு ஆண்டுகளின் பின்னால் இப்போது ஒரு சலனம். அவளுக்காய் எழுதிய கடிதத்தைப் பார்த்தேன். எனக்கே அசிங்கமாயிருந்தது. என் கதைகளிலே கூடத்தான் இது வரை நான் எழுதாதவரிகளாயிருந்தன.

அறையை விட்டு எழுந்து, வராந்தாவில் வந்து படுத்த படி அவளை நினைத்துப் பார்த்தேன். இரண்டு ஆண்டுகளின் முன்னால் அவள் சிரித்த சிரிப்பு இப்போதும் பசுமையாயிருக்கிறது. நெஞ்சில் ஆதங்கம் மூண்டுவிட்டது. அத்தனை தூரம் அவமானப் படுத்தியிருக்கக் கூடாதென்பது போல ஒரு வருத்தம் மனதைப் பிசைந்தது.

தபாற்காரன் குரல்.

எழுந்து போய்க் கடிதத்தை வாங்கினேன். எழுத்து உருண்டு உருண்டு முத்துக் கோத்தாற் போல இருந்தது. மனம் துள்ளக் கடிதத்தைப் பிரித்தேன்.

கடிதத்தின் வரிகள் ஓடின. ''இரண்டு ஆண்டுகளாய் வீதியிலும் தெருவிலும் சந்தியிலும் பிற இடங்களிலும் உங்களைப் பார்ப்பதற்காய் நான் அலைந்திருக்கிறேன். நீங்கள் சந்தித்ததில்லை. துறவியாய் எங்கேனும் போய்விட்டீர்களோ என்று சந்தேகப் பட்டேன். எப்படியோ நினைப்பையே தவமாக்கிச் செய்த பிரார்த்தனையில் உங்கள் இருப்பிடத்தை அறிந்து கொண்டேன். படத்தைப் பார்த்தால் உங்களுக்கு என்னைத் தெரியுமே? இராமர் சீதையை சந்திக்க அனுப்பிய போது அடையாளமாய்த் தனது கணையாழியைக் கொடுத்து உறவைத் தெரிவித்துக் கொண்டாற் போல 'மேல் விதானத்தில் கும்மாளமிடும் அழகுகளைப் பார்க்கிறேன்' என்ற உங்களது வார்த்தைகளையே சொல்லிக் கொள்கிறேன். இரண்டு ஆண்டுகள் ஓடி விட்டன. உங்களின் வரண்ட தத்துவ விசாரங்கள் போய் உங்கள் உள்ளத்தில் நளினமான பெண்ணைப் பற்றிய எண்ணங்கள் எழுமானால் என்னை வந்து சந்திக்கலாமே? உங்களுக்காக இன்னும் இன்னும் தவம் செய்து கெண்டிருப்பேன். படம் அனுப்பியிருக்கிறேன். துப்பிவிடாதீர்கள்'.

மனதில் சலனம் எழுந்தால் அது பெருகிப் போக ஆரம்பித்து விடுகிறது. தடுத்து நிறுத்தி 'இவை உனக்கு ஏற்றவையல்ல. ஏற்றவையே அல்ல' என்று மனம் கதறிக் கதறி அழுதாலும் கற்ற நூல்களின் பொருட்கள் வந்து ஒரே சமயத்தில் குவிந்தாலும் மனதில் பிளந்த சலனத்தைத் தடுத்து நிறுத்தி விடுகிறதில்லை. அவளைப் போய்ப் பார்க்க வேண்டும் என்று நெஞ்சு துடிக்க ஆரம்பித்து விட்டது.

விலாசத்தைத் தேடிக் கொண்டு போனேன்.

அவள் வாயிலில் நின்றாள். இரண்டு ஆண்டுகளுக்கிடையில் அவள் அழகாய் இன்னும் அழகாய்ப் பொலிந்து போயிருந்தாள். வீடு பழம் வீடாயிருந்தது. வறுமையின் கோலங்கள் அங்கு மிங்குமாய் மிதந்து நின்றாலும் அவள் பேரரசியாய் நின்றாள்.

'வாருங்கள்' என்று வரவேற்றாள்.

இருக்கச் சொல்லி ஒரு கதிரையைப் போட்டாள்.

நெடு நாட் பழகியவளைப் போல என் சேமலாபங்களை விசாரித்தாள். அதே குமிழிடுகிற சிரிப்போடு. என்னையே இமையாது, இமையாது பார்த்தாள்.

'என்ன வேண்டும்?'

பேசாமல் இருந்தேன்.

'சொல்லுங்கள் உங்களுக்கு என்ன வேண்டும்' மிகவும் நிதானமாய் வார்த்தைகளை இழுத்து நிறுத்தி நிறுத்திக் குமிழிடும் சிரிப்போடு கேட்டாள்.

'பேசுங்களேன்'.

நான் பேசாமலிருந்தேன்.

மகத்தான காரியத்தைச் செய்யப் பிறந்திருக்கிறேன் என்கிறாற் போல எனக்கு அடிக்கடி ஒரு நினைவு மனத்தே எழுவதுண்டு. எனது படிப்பறையில் மாட்டப்பட்டிருக்கும் சுவாமி விவேகானந்தரின் அற்புத உருவம் என் முன்னால் தெரிகிறாற் போல இருக்கும். சலனங்கள் ஏற்படாமல் அவற்றைத் 'தூ' என்று காறி உமிழ்வதற்கான நெஞ்சும் - அந்த நினைவு தந்த வெற்றிதான். அவள் தேநீர் போடவா எதற்கோ உள்ளே போனாள். சடுதியாய் எழுந்து ஓடி வந்துவிட்டேன்.

வீட்டிற்கு வந்து முதல் வேலையாய் அவளுக்கு ஒரு கடிதம் எழுதினேன். அற்புதமான விவேகானந்தரின் கண்களைப் பார்த்தபடியே கடிதத்தை எழுதினேன். மிகவும் வேகமாய் மிகவும் வேகமாய் கடிதவரிகள் உருண்டன.

பெண்ணே!
உனக்காய் இப்போது நான் விம்மி விம்மி அழுகிறேன்.

நீயே பெருமளவு காரணமாகி என் நெஞ்சரங்கில் ஏற்ற முயன்ற உன்னைப் பற்றிய நளின நினைவுகள் இந்த நிமிடத்திலிருந்தும் கருகி உதிருகின்றன. இந்த நிமிடம் உன் புனிதமான இருதயத்திற்காகவும் உன் நல் வாழ்விற்காகவும் நான் நெகிழ்ந்து நெகிழ்ந்து பிரார்த்திக்கிறேன். நீ என்னைப் புரிந்து கொண்டு அன்பு செலுத்த முயன்ற நினைவு,பெண்ணைப் பற்றிய இனிய நினைவுகளுள் இனிய நினைவாய் இருக்கும். பல ஆண்டுகளுக்கு முன்னால் என் வாழ்வில் நடந்த ஒரு நிகழ்ச்சியை உனக்கு நான் அப்படியே எழுதுகிறேன். அதை நீ புரிந்து கொள்ளக் கூடுமானால் உன் அன்பை ஏற்றுக் கொள்ள முடியாமல் நான் உதறிவிடுவதற்கு என்னை நீ மன்னித்து விடக்கூடும்.

ஒரு சமயம் இந்து தத்துவங்களின் பெயரையே தெரியாத இளைஞர்களும், பெரியவர்களும், சின்னவர்களும், ஆணும், பெண்ணும் எல்லோருமாய்க் கூடிக் கூடி என் கதைகளை வார்த்தைக்கு வார்த்தை பரிசோதித்தார்கள். என் கண்களையும், கண் பார்வையையும் சிரிப்பையும் உடையையும் தோற்றத்தையும் பார்த்து என் எழுத்தோடு பொருத்தினார்கள். தம் அறியாமையாகிய அளவு கோலால் என்னை மந்திரவாதியாகவும், இராமகிருஷ்ணராயும் ஆக்கிவிட்டார்கள். 'நான் எதைப் பார்க்கிறேன்' என்பதை எல்லாம் வேவு பார்க்க மனிதர்கள் பெருகி நின்ற சமயம் அது. என்னை வேவு பார்த்த மனிதர்கள் எல்லாரையுமே நான் பைத்தியங்களாக்கி யிருக்கிறேன். அவர்களைப் பைத்தியங்களாக்குவதற்காய் மேலேயும் கீழேயும் பார்த்துப் பார்த்து நான் துறவியாய் நடித்த நடிப்பில் என் கண்கள் கூட நோ எடுத்துவிட்டிருந்தன. உணர்வுமயமாய் நான் எழுதிய எழுத்திற்கு நானே அர்த்தம் கண்டுபிடித்து அவற்றைத் தாகூரின் பேரிலும், பாரதியின் பேரிலும் சுமத்தி விட்டு - பைத்தியங்களாய் இந்த உலகத்தை ஆக்கி விட்ட சிரிப்பில் நான் மகிழ்ந்தது என்னவோ உண்மைதான். கலையைப் பின் பற்றுகிற - கலைப் பயிற்சியில் ஈடுபட்ட எவருக்கும் இயல்பாய்

அமையும் 'மயக்கத்தைத் தருகின்றாற் போன்ற கண் அமைப்பை' புனிதமான யோகியின் கண்களுக்கும் மந்திரவாதியின் வெறிக் கண்களுக்குமாய் ஒப்பிட்டு நின்ற அந்த மனிதர்களை நான் உற்று உற்றுப் பார்த்தே கதிகலங்கப் பண்ணியிருக்க முடியும். ஆனாலோ என்னால் அழத்தான் முடிந்தது. தம் சமயத்தின் அந்தரங்கமான இரகசியங்களைப் புரிந்து கொள்ள முடியாத அந்த மனிதர்களை நொந்து ஆகிறது என்ன. சந்தி முகப்புகள் பஸ் நிலையங்கள் வீதி முகப்புகள் என்று இன்றைக்கு ஒன்றையுமே தெரியாமல், தெரிந்து கொள்ள விருப்பமில்லாமல் பெருகி நிற்கிற இளைஞர்களின் நெஞ்சங்களிலே கனலை மூட்டி விடுவதாய் அப்போதேதான் சத்தியம் செய்தேன். இந்தக் கனலை ஏற்றுவதற்குக் 'கிப்நொடிஸ்' முறையோ அல்லது தாயையும் குழந்தையையும் வழி படுகிற முறையோ உதவி விடாது. இது வாழ்க்கைப் போராட்டம். எழுதுகிறவன் அழிகிற போராட்டம். வேறு நினைப்பின்றி அந்த இலட்சியத்தையே நினைந்து நினைந்து வாழ்ந்தால் மட்டுமே அதைச் சாதிக்க முடியும். அந்தச் சாதனையில் அவன் அழிகிறான்.

இந்த அழிவில் உன் அற்புதமான இருதயத்தையும் என்னோடு பிணைத்து அழித்துக் கொண்டு விடுவதாய் எனக்கு உத்தேசமில்லை. நீ என்னை மன்னித்துவிட வேண்டும்...........

***

நிமிர்ந்து விவேகானந்தரைப் பார்த்தேன். அவர் கண்களைப் பார்த்தபடியே சொன்னேன்.

''நீங்கள் சலனமேயில்லாமல் எப்படி வாழ்ந்திருக்கிறீர்கள், என்று இப்போது தான் எனக்குப் புரிகிறது. இலட்சிய வாதியின் மனதிலும் ஒரு சமயம் காதல் அரும்புகள் அரும்புகின்றன. ஆனால் அவை ஒரு நிமிடம் மட்டுமே வாழ்கின்றன. அவன் வரையில் காதல் நிமிடப் பூக்கள்தான்.''

அவர் சிரிக்கிறாற் போலப் பட்டது.

*ஈழநாடு*
*12-04-1966*

# புதிய உயிர்

இருள் கெடுகிறது. காலை விரிகிறது. கீழ்த் திசையில் வர்ண பேதங்கள். ஒளிக் கற்றைகள் ஒளிச்சுடரில் பொய்யும் மெய்யும் கலந்த பிரபஞ் சத்தின் பிறப்பு. வஞ்சனையும் கயமையும் கலந்த கலப்பு. சிருஷ்டியின் பேதங்கள். புலனுக்குப் புலப்பட்டும் புலப்படாமலும் அறிவிற்கு எட்டியும் எட்டாமலும், இருதயத்தைத் தொட்டும் தொடாமலும் பிறக்கும் இசை ஒலிகள். அழுகுரல்கள். சின்னதுகள். பெரிதுகள்.

காகம் கரைகிறது. சிருஷ்டியின் கீறலா? கறவை மாடு கத்துகிறது. சிருஷ்டியின் தாய்மையும் தியாகமுமா? மண்புழு நெளிகிறது. எது சேவை?

பிரபஞ்சமே கலவைதானே? புதிய கலவை. மனிதன் கலந்தால் ஒரே மாதிரி இருக்கும். இது புதிய கலவை? நேற்றிருந்தாற் போன்று இல்லையே? நேற்றும் இன்றும், நாளையும், அதுமட்டும் என்ன? மனிதனின் காலக் கலவை? திங்கள், செவ்வாய், புதன் - மாதம் - வருடம் - நிமிடம் மணி நாள்....... மனிதக் கலவை? கீறலாய்த் தெரிகிறதே?

புதிய கலவை விரிந்து கொண்டிருக்கிறது. மலரொன்று விரிகிறது.

பார்த்தபடியே நிற்கிறேன். மலர் மட்டும் கலவையில்லையா? புலனாகாத அணுக்களின் கலவை. பார்வை மட்டும் பிரபஞ்சமே அதுதானே?

முகை அவிழ்கிறது. இதமாய் மணம் மூக்கில் ஏறுகிறது. ஏறுகிறதா? ஏறுகிறதுபோல ஒரு தோற்றம். ஓர் எண்ணம். எண்ணம் மட்டுமென்ன? கலவைதானே?

நேற்றிருந்தவன், அதற்கு முந்தி, அதற்கும் முந்திப் பேசியும் பேசாமலும்

காட்டிய, பேசிய, செய்தவைகளின் தொகுப்புத்தானே? அதுவும் கலவைதான். அவன் இல்லாவிட்டால் நானில்லை. என் எண்ணமில்லை.

ரசித்தபடியே நிற்கிறேன். எண்ணம் விரிகிறது.

மகள் நட்ட மரம். முந்திய நாள் அரும்பு சிறிதாய்க் கட்டியிருந்தது. உயிர் தோற்றம். பால்யம். பூ என்கிற யௌவனத்தின் பால்யம். சிறு குழந்தை. மொத்தக் கலவையின் ஆரம்பக் கலவை. பருவம்.

அவ்வளவுதான்.

பார்த்துக் கொண்டிருக்கிற போதே பொல பொலவென்று இதழ் விரித்து மணம் பரப்பி.... இப்போது பூ. பூத்தான். பூவேதான். என்ன அழகாய்ச் சிரிக்கிறது.

இது எங்கிருந்தது? எப்போது வந்தது? நெற்றாய் இருந்தது. - நெற்றுள் இருந்தது - வெளிக் கிளம்பத் துடித்து, அதன் ஓயாத பிரார்த்தனையில் மண்ணில் விழுந்து அமிழ்ந்து மாரி பெய்து முளையாய்ச் செடியாய் மரமாய்..... அதுவும் பூக்கிறதே?

யௌவனம். யௌவனம். யௌவனம் தானே. நடுப் பகல் தாண்டி மாலை வந்தது. பூ சோர்ந்து போய் நிற்கிறதே?

கலவை மங்கத் தொடங்கி விட்டதே? ஆங்கிலக் கவி டெனிசன் இவற்றை வரையறுத்தானாமே! நிழல்கள் என்று? நிழல் மங்குகிறதா? உருவமில்லாமல் நிழலா? உருவமே நிழலே - கலவையே மங்குகிறதே?

முதுமை. முதுமை. தள்ளாத முதுமை தானே?

கீழ்த் திசையில் ஞாயிறு மறுநாள் சுடர் பரப்புகிறது.

புதிய கலவை. புத்தம் புதிய கலவை? கலவையா? வேறு என்ன? அதே மரம்.

பூ காம்பு கழன்று சோர்ந்து போய் மண்ணில் கிடக்கிறது. அதே மரத்தில் நேற்றுப் பூத்தாற் போல வேறு ஒரு பூ பளிச்சென்று சிரிக்கிறது. அதன் 'ஆத்மா' தான் இதில் சிரிக்கிறதோ?

ஈழநாடு
09-04-1967

# காற்றே நீ கேட்டிலையோ

மேற்கிலிருந்து கிழக்கு வரை கண்ணுக் கெட்டிய தூரம் வரையும் தெரிகிற வானின் அடி வளையத்தை யாரோ சம அளவாய்ச் செதுக்கியபடியே புகாரில் தோய்த்துக் கொண்டிருப்பது போலத் தெரிகின்றது.

அடிவானின் மேல் செம்பருதிக் கோளம் தகதகவென்று பிரகாசிக்கிறது.

சோழகக் காற்று வலிமையுடன் வீசுகிறது.

கடலெங்கும் 'பூஞ்சிதறல்களை'யாரோ இங்கும் அங்கும் எங்குமாய் உருட்டிவிட்டுக் கொண்டேயிருக்கிறாற் போலவும் மரணம் அவற்றைக் குலைத்து விட்டுப் புதிது புதிதாய் ஆக்கி அவற்றின் ஊடே சிதறிச் சிதறிச் சிரித்துக் கொள்கிறாற் போலவும் படுகிறது.

'திட்டித் துறையில்' நங்கூரம் பாய்ச்சப்பட்டுக் கிடந்த படகுகள் அலை எற்றில் அங்குமிங்குமாய் அலைப்புண்டவாறு நீந்துகின்றன. திட்டித்துறையின் கரையை ஒட்டி நெடுவாக்கில் ஓடிய கரைப் பிரதேசமெங்கும் நுரைகக்கல். குமிழியிட்டுச் சேர்ந்தும் உடைந்தும் புதிது புதிதாய்ப் பிறந்தபடியே இருக்கின்றன. சாதாளைகள் மிக வேகமாய் ஒதுங்கிச் சேருகின்றன.

'கிட்டித் துறையை' அடுத்து முக்கால் மைல் தூரம் தள்ளி 'இரட்டைப் பனைத் தீவு' என்றும் காக்கை தீவு என்றும் சொல்லப்படுகிற மண் திடலை நோக்கிக் கூட்டங் கூட்டமாய் காகங்கள் பறந்து செல்கின்றன. பருந்துகள்

அயலேதரைப் பிரதேசத்தில் சோடை பற்றி வளர்ந்திருந்த தென்னை மரங்களை பொர பொரப்பான அழுகை ஒலியுடன் நாடுகின்றன. குருட்டுக் கொக்குகளும், கடல்வாத்துக்களும் கூட்டம் கூட்டமாய் மேலே பறந்து செல்கின்றன.

வட்டுக் கோட்டைக்கு நகர்ப் புறத்திலிருந்து செல்லும் இ. போ. ச. வண்டி ஒன்று வேகமாய் ஓடுகிறது.

நேரம் இப்போது ஐந்தரை மணி.

'திட்டித்துறையில்' இப்போது மனித நடமாட்டம் தொடங்கிவிட்டது.

சங்கத்தாரால் நியமிக்கப் பட்ட துறைக்காவற் கிழவன் பொன்னையா பரபரப்பாக அங்கும் இங்கும் ஓடுகிறான். அவசரம் அவசரமாய். சாகடிக் குறிச்சியில், இருக்கிற தொழில் செய்பவர்கள் அவனை ஏவியபடி இருக்கின்றனர். சவள்கள், மரக்கால்கள் - வீச்சு வலைகள் - மண்டாக்கள் - குருத்துக்கள்..... அவன் அடையாளம் வைத்திருந்து அவனவனுக்குரியதை எடுத்துக் கொடுக்கின்றான்.

துறை மண்டபத்திலிருந்தும் பாய்மரத்தை எடுக்கிறான் முருகேசு. அப்படி எடுக்கிறபோது கிழக்கு நோக்கி அவர்களது குல தெய்வம் நல்லூரானை - முருகனை அவன் மனமும் உதடுகளும் தோத்திரம் செய்கின்றன. அவன் கண்கள் திரும்பி நெடுங் கடலைப் பார்க்கின்றன. அவன் காதுகள் மிக மிகக் கூர்மையாய் நிமிர்ந்து நிற்கின்றன. கெவுளி சொல்லுகிறதா?

அவன் முகம் சந்தோஷமாய் மாறுகிறது. அவர்கள் நம்பிக்கையின் படி 'முருகன்' சம்மதம் கொடுத்துவிட்டான்.

நங்கூரத் தடியை எடுத்து அதன் அடியை நீரில் அலசி விட்டுப் படகிற்குள் போட்டுத் தானும் உள்ளே தாவி விடுகிறான் முருகேசு. உணவுப் பொட்டலத்தை ஒருவன் காவிக் கொண்டு வர மற்றவன் துறைகாவற் கிழவனோடு ஒத்து மரக்கால்களையும் - வீச்சு வலைகளையும் - குத்துக்களையும் படகிற்குள் போடுகின்றான்.

படகைப் பிடித்தபடியே எழும்மி நின்று கிழக்கு நோக்கி மறுபடியும் 'முருகா' என்று உரக்கச் சொல்லுகின்றனர். வலிமையுடன் வீசிய காற்றில் அது மிதந்து மிதந்து கடற் பிரதேசமெங்கும் நிறைந்திருக்குமோ? பிறகு சுற்றித் திசைகளை வணங்கியபடியே இரண்டுபேர் மரக்காலை ஊன்றுகின்றனர். படகு புறப்பட்டு விட்டது.

காவற் துறைக் கிழவன் கண்கள் பரபரப்பான அந்த நேரத்தின் இடையேயும் யாரையோ எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற சாயலில் வீதி முடக்கை நோக்குகின்றன. ஏமாற்றத்தின் அறிகுறி அவன் கண்களில் படிகிறது.

அடுத்து அடுத்துப் படகுகள் புறப்படுகின்றன. படகிற்கு நால்வராய் அறுபது பேருக்கு மேலே போய்விட்டார்கள். திரை கடலில் இறங்கிவிட்டார்கள்.

கடைசியாக ஒரே ஒரு படகுதான் நிற்கிறது. அதைச் சுற்றி நின்ற நால்வரும் மரக்காலை ஊன்றிப் போடுகிற சமயம், அவன் ஓடிவந்தான்.

காவற் துறைக் கிழவனின் கண்கள் எதனாலோ கலங்குகின்றன. ஓடிவந்த சிறுவன் கிழவனை அணுகினான்.

கிழவன் கண்களை ஆழமாகப் பார்த்தபடியே எது எதுவோ சொல்லுகிறான்.

''செல்வராசா, எசக்குப் பிசக்காய்ச் செய்து அவங்கடை கோவத்தை சம்பாதிச்சுப் போடாதை. கடலுக்குப் போறவனுக்கு, அதுக்கெண்டு பொறந்தவனுக்கு ஆண்டவன் நெஞ்சிலை உரமும் சேத்துத்தான் வைச்சிருக்கான். உறம் வேணும். பார்த்துக்கொள் - பார்த்துக் கொள். எல்லாம் இயைபாய் வரும். மீங்குஞ்சுக்கு நீஞ்சல் போட யாரும் செஞ்சு காட்டறாங்களா?''

அந்த நால்வரும் பரபரப்படைகின்றனர். ஒருவன் உரக்கக் கத்தினான். ''பொழுது போச்சு. என்ன ஓதிறியா? அப்ப வைச்சு, ராப்பூராவும் ஓதி நாளைக்கு அனுப்பு''

செல்வராசன் ஓட்டமாய் ஓடிப் படகை அடைந்தான். அவன் காதுகளில் கிழவனின் குரல் இறுகி விழுந்தது.

''முருகனை நெனச்சுக் கொள். கிழக்காலை கும்பிடு. உறம் வேணும். உறம் அது தான்''

கடைசிப் படகும் புறப்பட்டு விட்டது.

கிழவனுக்கு இனிவேலை இல்லை. மேலோட்டமாய்ப் பார்த்துக் கொண்டால் சரி தான். பொழுது படத்தொடங்கிக் கருந்திரை இறுகிச் சேர்ந்துவிட்டது.

'துறை மண்டபத்தில், பொன்னையனும் நாகலிங்கமும் சரவணமுத்தனும் அவனோடு பொழுதைப் போக்க வந்த நான்கு ஐந்து இளவட்டங்களும் இருந்து ஏதோ பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

இரவு இரவாய் அவர்கள் விழித்திருப்பார்கள். பகற் போதில் 'களம் கண்டி' படுக்க வைத்தவர்கள். விடி காலையில் தான் அதைக் கொய்ய வேண்டும். கிழக்கே வெள்ளி வீறிட்டுக் கிளம்புகிறவரையும் அவர்களுக்கு விழிப்புத்தான். ஓயாத விழிப்பு. 'களம் கண்டி'யின் காட்டுக் கம்புகள் திடீரென்று சோழகக் காற்றுப் பலத்து விட்டால் கிளம் புண்டுபோய் விடுகின்றதுண்டு. மிதப்புக்கள் மிதந்து ஒரேயடியாய் அவை நெடுந்தூரம் தொலைந்து போகிறதுமுண்டு. அதைவிட எதிராளிகள் இரவோடு இரவாக வந்து 'களம் கண்டியை'ப் பிடுங்கிக் கொண்டே கம்பி நீட்டி விடுகிறதுமுண்டு.

இதெல்லாம் அவர்களுக்குச் சகஸம். இவைகள் தொலைந்தால், எந்த வழியில் இழந்தார்களோ அந்த வழியில் மீட்டுக் கொள்கிறதுமுண்டு.

விழிப்பினை நிலைநிறுத்துவதற்காய் இப்போது அவர்கள் 'அரிக்கேன்லாந்தர்' விளக்கொளியில் சீட்டாடுகிறார்கள். பொன்னையனுக்கு இலேசான வெறி. 'நாவாந்துறையாங்களை'க் கண்டபடி ஏசுகிறான்.

தூணோடு சாய்ந்தபடியே 'களம் கண்டி' வலையில் சிக்குகிற மீன்களைப் பிடித்திழுப்பதற்காய் உபயோகப் படுத்தப்படும், 'கடிப்பு வலையை' விளக்கு வெளிச்சத்தின் உதவியோடு துப்புரவு செய்து கொண்டிருக்கிறான் கந்தசாமி.

கிழவன் அவனுக்குப் பக்கத்தில் வந்து அமருகிறான்.

''பகல் முத்தும் தூங்கினியா? இந்தப் 'புகைமண்டி' லாந்தரிலை எல்லாத்தையும் செய்துவிடுவியா? ஊரி கையிலை குத்திடப் போகிது.''

அன்று பகலில் தான் அந்த வலையை அவன் காயப் போட்டிருந்தான். இடையே வந்து ஊரிகளையும் சாதாளைகளையும் அறுகுகள், சிப்பிகளையும் பொறுக்கிப் போட அவனுக்குப் பகலில் நேரம் இருக்கவில்லை. ரவுணுக்குப் போய் ஏதோ வாங்கி வரவேண்டியிருந்தது. அதோடு நேற்று இராப்பூராவும் விழித்த அலுப்பு. புதிதாகப் பிறந்த சோழகக் காற்றில் உடம்பை முறித்து விட்டது போன்ற அலுப்பு. தூங்கிப் போய்விட்டான். திரும்பி வந்து பொறுக்கியெடுக்க முடியவில்லை. வழக்கமாய் இந்த மாதிரிச் சந்தர்ப்பங்களில் கிழவன் தான் எல்லாருக்கும் செய்துவைப்பான். கந்தசாமியும் அப்படித்தான் நினைத்திருந்தான். 'கிழவன் செய்திடுவான்' என்ற எண்ணத்தில் தான் தூங்கி விட்டான். கிழவனுக்கு அன்றைக்கு என்ன அலுவலோ அவன் செய்துவைக்கவில்லை.

கந்தசாமிக்கு அந்த ஆத்திரம். அவன் பேசவில்லை.

கிழவனுக்கும் அது புரியவில்லை. கிழவன் மீண்டும் பேசினான். ''கண்டியா கந்தசாமி, நாகம்மான்ரை பொடியன் செல்ராசனு மெல்லே இண்டைக்குப் படகிலை போறான்''.

கந்தசாமி அப்போதும் பேசவில்லை.

கிழவன் என்ன நினைத்தானோ? துண்டை உதறிப்போட்டுப் படுக்கிறான்.

''கெழடா இதுக்கா உனக்குக் கூலி? பார்த்துக்கொள். ஒரு நாளைக்கு மண்டாவாலே குத்தி உன்னைச் சாய்க்கிறன், பார்த்துக் கொள்.'' பொன்னையன் குடி போதையில் உளறினான்.

கிழவன் இப்படி எத்தனையோ பேரைக் கண்டவன். 'சாகடிக் குறிச்சியில்' வாழ்ந்து வருகிற பல நூறு பரதவக் குடும்பங்களின் தந்தையைப் போன்றவன். ஆண்டுகளாய் அந்தச் சமூகத்தின் சுகதுக்கங்களில் பங்குகொண்டு ஒட்டி நின்ற மனிதன். அவனுக்கு இவர்களெல்லாம்

குழந்தைகள். குழந்தைகள் தாம். தம்மை எந்த நேரமும் பிடித்துக் கவ்வக் கடலில் காத்திருக்கும் அபாயங்களின் மத்தியில் அதை அறிந்தும் அறியாத குழந்தைகள்.

கிழவன் சிரித்தான்.

''டேய் பொன்னையா, கொஞ்சம் தலை சாய்ச்சு எழும்படா? 'கடிப்புவலை போடப் போகவேணுமேடா? படுத்த மீனும் கைநழுவிப் போகுது பார்?''

கடைசி இ. போ. ச. பஸ் ஓடிக் கொண்டிருந்தது. அந்தப் பகுதிக்கு இன்னும் மின்சார வெளிச்சம் வரவில்லை. இருளை முன் நகர்த்திய படியே ஒளியை உமிழ்ந்து வரும் அந்த பஸ் வண்டியை எல்லோரும் தான் பார்த்தார்கள். என்னென்ன நினைவுகளை அது அவர்களுக்கு எழுப்பிற்றோ?

கிழவன் மனதில் நினைவு ஒன்று எழுந்தது.

''பஸ் போவுது - நேரம் பதினொண்டுக்குத் தாண்டியிருக்கும். 'ரேகடியில்' இருந்தும் கிளம்பியிருப்பாங்கள். குழந்தைகள்'' என்று அந்த எண்ணமே மேவிவந்து உதட்டில் தவழ்ந்து வெளியே உடைந்து ஒலித்தது.

***

அலுப்பாந்தித் துறை முகத்திலும், பாஷையூர், குருநகரை அடுத்துள்ள கரைகளை ஒட்டியும் நின்ற பெரும் போட்டுக்களும், ஸ்ரீம் என்ஜின்களும் பூட்டிய கப்பல்களும் சோழகக் காற்றின் வேகத்தில் எம்பி எகிறிக் குதிக்கும் அலைகளோடு எது எதுவோ பேசின. அலை அவற்றின் அடியில் மோதுகிறபோது நுரை கக்கிச் சிரித்தன. காதலி காதலனுக்கு நீர் வாரி இறைத்துக் கலீர் என்று சிரித்து மகிழுகிறாற் போல அவை இருந்தன.

மன்னார், நெடுந்தீவு, தாழையடி, செம்பியன்பற்றுப் போன்ற வடகடற்துறைகளுக்குப் போகும் பெரும் முதலீடு இட்ட கருவிகள் அவை. இப்போது அவற்றில் இரண்டொன்று பதினைந்து தொழிலாளர்களை ஏற்றியபடியே கிளம்பிக் கொண்டிருந்தன. அவற்றின் இயந்திரத்தின் உறுமல் ஒலி மனித சக்தியோடு இயந்திர சக்தியும் இணைந்து விட்டால் 'எதையும் கடலில் சாதிக்க முடியும்' என்று கூறிக் கொள்கிறாற் போலப் படுகின்றது. அவை கக்கிய புகார்ப்படலம் மிகக் கருமையாய் மேலெழுந்து போய்க் கொண்டிருக்கிறது.

அலுப்பாந்தித் துறைமுக மண்டபத்தில் மாட்டப்பட்டிருந்த சக்தியுள்ள காந்த விளக்கின் ஒளிக் கற்றைகள் நெடுந்தூரம் பாய்ந்து படருகின்றன.

‘நட்சத்திரம்’ என்று சொல்லப்படுகிற ஒரு சாதி உயிர்ப் பிராணி குவிந்து கிடந்த சாதாளைக் குவியல்களில் ஒட்டிக் கொண்டு கிடப்பது தெரிகிறது. முற்றிய பூவரசமரத்தின் மேற்பட்டையில் வெடித்துத் தெரியும் கொப்புளங்கள் போல அந்த நட்சத்திரத்தின் மேற்புறம் தெரிகிறது.

அலுப்பாந்தித் துறைக்குக் கொஞ்சம் தள்ளி மேற்கே அதிகம் ஆழமில்லாத ‘ரேகடிப்’ பரப்பில், ‘பரவையன் திட்டித்துறையில்’ இருந்தும் கிளம்பிய வத்தைகள் நங்கூரம் பாய்ச்சி நிற்கின்றன. இப்போது அவை கிளம்பவும் ஆயத்தமாயின.

‘‘சுருக்குப் பாய்ச்சுடா! முழிக்கிறான்! பொஸ்தகம் படிச்சியா?மரக்காலை ஊண்டிப் பாய்ச்சி உந்தடா’.

செல்வராசன் தட்டுத் தடுமாறியபடியே மரக்காலைப் பாய்ச்சி உந்தினான்.

மீண்டும் படகு நீரில் மிதந்தது.

பரவையன் திட்டியில் இருந்தும் அந்தி சாய்கிறபோது கிளம்பும் படகுகள் ரேகடித்துறையை அடைந்ததும் நங்கூரம் பாய்ச்சிவிடுவார்கள். தாம் கொண்டு வந்த சோற்று மூட்டைகளை அவிழ்த்து அவசரம் அவசரமாய் வயிற்றை நிரப்பி அப்பால் அரசாங்கத்தாரால் போடப்பட்ட பைப்பிலே நீரை ஏந்தி மடக்கென்று குடித்துவிட்டுப் படுத்துக் கொள்வார்கள். சுற்றுப் புறத்தில் மூட்டைகளை இறக்கும் தொழிலாளர்களது குரல்கள், இரும்புச் சத்தங்கள் பலகையில் உளி வான் சீவுளிக் கூடுகள் பாயும் ஓசைகள், எழுந்து கொண்டேயிருக்கும் இவற்றின் மத்தியில் தொழிலாளர்களது போதை கலந்த குரல்கள் இரவின் போர்வையில் பொங்கி வீசும் அலைகளின் ஓலமும் பிறந்து கொண்டேயிருக்கும். அவர்களுக்குத் தூக்கமும் பிடித்துக் கொள்ளும். பதினொரு மணிமட்டில் தூங்கிவிடுவார்கள். அவர்களுக்கு அவை எல்லாம் பழக்கம் தான். ஆச்சரியம்தான். அவர்களும் மனிதர்கள் தான். ஆச்சரியமில்லையா?

‘‘பொட்டையங்கள், பொட்டைக் கடலுக்குப் போறாங்கள்’’.

அலுப்பாத்தித் துறை முகத்தில் இருந்த, குருநகர் பாஷையூர் இடங்களில் இருந்து வந்திருந்த தொழிலாளர்கள் ஏளனமாய்க் குடிபோதையில் உரக்கக் கத்தினார்கள்.

நங்கூரத் தடியைப் பிடுங்கி அடியை அலம்பிக் கொண்டிருந்த முருகேசு நிமிர்ந்து பார்த்தான். அவர்கள் அப்பால் போய்க் கொண்டிருந்தார்கள்.

‘‘பொட்டைக் கடல் தான் வட கடல் இல்லைத் தான். ‘பெரிய ஆறுகள் குறுக்கிடாது தான். சை இவங்கள் என்ன மனுஷங்கள், சகோதர தொழிலாளி தங்களைப் போலக் கடலை நம்பிச் சீவிக்கிறவங்கள் எண்ட நேசப் பாங்கு இல்லாத பேத்தை மீங்கள்’’.

அவ்வார்த்தைகள் வெளியில் கேட்கவில்லை கேட்டிருந்தால் அவர்கள்

தாம் வென்றிருப்பார்கள். 'ரேகடித்' துறைக்கே அவர்களை வராமல் அவர்களால் செய்துவிட முடியும்.

முருகேசு சொன்னதில் குற்றம் இல்லைத்தான். பொதுவாய்க் குருநகரிலும் பாசையூரிலும் வாழுகிற தொழிலாளர்கள் வடகடலுக்குப் போகிறவர்கள். பெரிய சமுத்திரங்களோடு போராடுகிறவர்கள். அவர்கள் பார்வையில் இவர்களின் மீன் படுகை எல்லாம் மிக அற்பமானவை. அதற்காய்ச் சக தொழிலாளியை அவர்கள் வைது கொள்ளலாமா? பொட்டைக் கடலோ, ஆண்கடலோ? கடல் கடல்தானே? ஆபத்து ஆபத்துத்தானே?

உடுப்புக்களை எல்லாம் கழற்றி வைத்துவிட்டுக் 'கோவணம்' மட்டுமே வரிந்து கட்டிக் கொண்டு கிளம்பத் தயாராய் மற்றவர்கள் நிற்கிறார்கள்.ஒளிச்சுடரில் அவர்களது தேகங்கள் பள பளவென்று மின்னுகின்றன. அவர்களின் நிழல்கள் பயங்கரமாய்த் தெரிகின்றன.

படகுகள் மீண்டும் கிளம்பிவிட்டன.

கரிய இருளை நோக்கி அவை மிதந்து செல்கின்றன. அவை மிதந்து போகிற போது அழகாகத்தான் இருக்கிறது. 'டேவிட்' என்கிற ஆங்கிலக் கவி அழகுகளை வரையறுக்கிறபோது படகு கடலிலே மிதக்கும் போது சுடர் விடுகிற அழகையும் சேர்த்துத்தான் பாடினான்.

***

நேரம் இப்போது எத்தனை இருக்கும் என்பதை அறிய விரும்பி வெளியே வந்து விரிவானைப் பார்க்கிறான் கிழவன்.

அவன் கண்கள் சுழன்று சுழன்று எதையோ தேடுகின்றன. ஏமாற்றமே முகத்திலும் கண்களிலும் தெரிகிறது.

அண்ணாந்து பார்க்கிற போது காற்றின் வீச்சில் நாக்கில் விழுந்த 'துந்துமி' உப்புக் கரித்தது.

கிழவன் 'ஆறாமின் வெள்ளி' யைத்தான் பார்க்கிறான். சித்திரை இருபத்திரண்டில் படத்தொடங்கிப் படிப் படியாய்ப் பட்டுச் சித்திரை இருபத்தெட்டில் அது மறைந்து போயிருந்தது. வைகாசி இன்றைக்குத்தான் பிறந்திருந்தது. இனி ஆனி பிறந்து - ஆனி பிறக்கிற போதே சூரியன் கிளம்பும் மண்டலத்திலிருந்துதான் அது கிளம்பித் தோன்றும். வைகாசியில் அதைக் காணவே முடியாது.

கிழவனுக்கு அது மறந்து போய்விட்டது.

உரக்கக் கூப்பிட்டான் கிழவன். நெஞ்சில் கிழவனுக்குப் பயம் கூடத்

தட்டியது. 'ஆறாமீன் வெள்ளி ஒளிசிட்டுதே'.

'களக்கண்டியில் பலமாக ஏதாவது மீன் படுத்திருக்கிறதா என்று பார்க்கக் கிளம்புகிற தருணத்தில் இருந்தான் கந்தசாமி. கிழவனின் வார்த்தைகளும் குறுக்கீடும் அவனுக்கு அபசகுனமாகப்பட்டன. அந்த ஆத்திரம் தீரத் ''தரித்திரம் பிடிச்சவன்'' என்று முணு முணுத்தான். காற்றுவாக்கில் கிழவனுக்கு அது இலேசாகக் கேட்டது.

மீண்டும் குரல் கொடுத்தான் கிழவன். கிழவனது குரல் இலேசாய் நடுங்கிற்று. கந்தசாமியும் கத்தினான். 'உனக்கும் கண் பொட்டையாய்ப் போச்சுது. வைகாசி பொறந்திட்டுதே தரித்திரமே.''

கிழவனுக்குப் பால் வார்த்தாற் போல இருந்தது.

கந்தசாமிக்குக் கிழவனை நன்றாகத் தெரியும். மற்றவர்களுக்கும் கிழவனைத் தெரியும். கடலிற் செல்லுகிற அவனது குழந்தைகள் மீண்டும் உயிரோடு வரவேண்டும்மென்பதற்காய் - அந்த அமுந்தலில் கிழவனது உடலும் மனமும் கிடந்து தவித்துக் கொண்டேயிருக்கிற சங்கதியை அவர்கள் நன்றாகவே அறிவார்கள். காற்றின் வேகமான வலிமையைக் கண்டு அவன் வாய் முருகா முருகா என்று முணு முணுக்கிறதும், உற்று உற்று அபசகுனங்கள் ஏதாவது பிறக்கிறதா என்று தவித்துக் கொள்கிறதும், கந்தசாமிக்கும் தெரியும். ஆனால் அப்போது கிழவனது 'குறுக்கீடு' அபசகுனமாகவே அவனுக்குப் பட்டது.

அவர்களது வழக்கம் அது. காலம் காலமாய் அடி தொட்டு வந்த நம்பிக்கை. 'கடலிற்கு மீன் படுக்கப் போகிறபோது' அப்படி நெனைச்சிடறபோது. கெவுளி சொன்னால் பூனையோ, தும்மியபடியே மனிதனோ குறுக்கிட்டால் அவர்கள் அன்றைக்கு தொழிலுக்குப் போகாமலே நின்று விடுவார்கள். இன்றைக்கு இந்த நம்பிக்கை இளவட்டங்களிடம் குறைந்திருக்கிற சங்கதியும் கந்தசாமிக்குத் தெரியும். மொத்தத்தில் இந்தச் சகுனங்களின் வாயிலாய் அவர்களது தெய்வமும் முருகனே முன்னறிவு கொடுக்கிறதாகத்தான் பலரும் நம்புகிறார்கள் என்கிற உண்மையும் கந்தசாமிக்குத் தெரியும்.

பேசாமல் கந்தசாமி குந்திவிட்டான். கிழவன் அவனை நெருங்கி வருகிறான்.

கந்தசாமிக்குப் பச்சாத்தாபமே மேலிட்டது. 'பாவம் இந்தக் கூதல்லைகெடந்து வாடுதே - எங்களிலை தான் அதுக்கு என்ன பாசம்'' என்று வாய்விட்டே சொல்லிக் கொண்டான்.

''ஒண்டும் தெரிய மாட்டேங்கிது. நேரம் ஒண்டு இருக்குமாடா தம்பி''.

'இருக்கும்' என்பதற்கறிகுறியாக் கந்தசாமியின் தலை ஆடுகிறது.

கந்தசாமி எதையோ எண்ணியவனாய் மெதுவாக எழுந்து பொன்னையனைத் தட்டி எழுப்பி, வத்தை ஒன்றை அவிழ்த்துக் 'களக்கண்டி' வலையை நோக்கிச் செலுத்தினான்.

பருந்து ஒன்று மொர மொரப்பாய் இழுத்து அழுகிற சத்தம் காற்றில் மிதந்து பரவுகிறது.

அரிக்கேன்லாந்தர் புகை மண்டிக் கிடக்கிறது. காற்று வேகத்தில் அது அணையாமல் கிடக்கிறதே ஓர் அதிசயம் தான்.

கிழவன் தனிமையில் இருக்கிறான். செல்வராசன் நினைவே அப்போது அவன் நெஞ்சு முழுதும் நிறைந்திருந்தது. அவன் நினைப்பின் குறைபாட்டில் பால்ய நினைவுகள் எழலாயின.

பன்னிரண்டு வயதிற்குப் பிறகுதான் பெற்றோர்கள் தம் குழந்தைகளைப் 'படகில்' தொழிலுக்குப் போக அனுமதிப்பார்கள். அதுவும் தகப்பனோடோ, சுற்றத்தவர்களோடோ தான். இதுவும் இல்லாதவர்கள் தமக்கு மிக மிக வேண்டியவர்களோடு தான் போவார்கள். புதிதாய்த் தொழிலுக்குப் போகிறதிற்கு முந்தி அதிகாலையில் எழுந்து முருகனிடம் போய் மௌன பாஷையில் ஆசிகள் பெற்றுக் கொள்வார்கள். பிறகு கடலில் நாலையும் கண்டு முதுமையும் அனுபவமும் ஒருசேர நிற்கிற பெரியவர்களிடம் ஆசிகள் பெற்றுக் கொள்வார்கள். அதற்குப் பிறகுதான் அவர்கள் படகில் கால் வைப்பார்கள்.

பன்னிரண்டு வயதை அடைவதற்கு முன்னாலும் கிழவன் எத்தனையோ அனுபவங்களைப் பெற்றிருக்கின்றான். பொதுவாய் எந்தப் பரதவச் சிறுவனும் பெறுகிற அனுபங்கள் அவை.

கிழவனுக்கு இப்போதும் நன்றாக ஞாபகமிருந்தது.

அதுவும் சோழகக் காற்றுக் காலம் தான். மதியச் சாப்பாட்டை அவன் வீட்டிலிருந்தும் காவிக் கொண்டு வந்திருக்கிறான். சாப்பாட்டைத் தகப்பனிடம் கொடுத்த பிறகு திட்டித் துறைக் கரையோரமாய் நடந்து கொண்டிருக்கிறான்.

முதல் மதகடியில் நீர் ஒரு முழத்திற்குமேல் சல சலத்துக் கொண்டிருந்தது. காற்றுக் காலத்தில் அந்த இடத்திலும் நீர் அப்படித்தான் தேங்கி அலைமோதும். என்கிற சங்கதிகள் அப்போது அவனுக்குத் தெரியாது.

'சுங்கான், கறுவாச் சள்ளை, கிளாக்கன், யப்பான் மீன், குஞ்சுகளை அவன் கண்கள் அகல நோக்குகின்றன. அதன் சுழிப்பிலும் நெளிப்பிலும் அவனுக்கு எது எதுவோ ஆசைகள் எல்லாம் பிறந்தன. அவற்றின் அசைவுகளை நெடுகிலுமே பார்த்தபடி நிற்க வேண்டும்போல ஒரு யோசனை கூட எழுந்தது.

'திட்டித்துறையும் நாவாந்துறைச் சந்தையும் தொடுத்து நிற்கிற

கரைப்பகுதியில் முனிசிப்பாலிற்றியா்ர் பறித்துவிட்ட குப்பை கூளங்கள் கிடக்கின்றன. அவற்றினைக் கிளறி எப்படியோ ஒருநெளிந்த பேணியொன்றை எடுத்து விட்டான்.

பிற்காலத்தில் 'சிறு தீவிலோ, மண்டைதீவிலோ' பிடித்த பெரும் பெரும் கால்வாய் மீன்களை விடக் கிழவனுக்கு அந்த இளம் பிராயத்தில் கிளாக்கன் குஞ்சுகளைப் பிடித்த நினைப்பு இனிமையாகப் பட்டது.

கொஞ்சம் வயது வர ஊரிகளையும், சங்குகளையும் சேர்த்து வீட்டிலே படகு ஓட்டிய ஞாபகங்கள் - தகப்பனிடம் கெஞ்சிக் கெஞ்சி அலுப்பாந்தி மீன் பிடிகாரர்களிடமிருந்து 'நட்சத்திர' ஓட்டையும் மன்னாரில் அவர்கள் பொறுக்குகிற 'ஆனைச் சங்குகளையும், பெற்றுத்தரக் கேட்டவை. எல்லாமே கிழவனுக்கு இப்போது இனிப்பாய் இனித்தது.

கிழவன் புரண்டு படுத்தான். அந்தச் சிந்தனைக்கு அதுவே முற்றுப் புள்ளியாய் அமைகிறாற் போல இருந்தது.

பிற்காலத்தில் இந்தப் பரந்த கடலில் வலிமைகளை எல்லாம் செலுத்திச் செலுத்திப் போராடுவதற்குப் பரதவச் சிறுவன் ஒவ்வொருத்தனும் தான் தனிப்பட்ட முறையில் அனுபவம் பெற்றுக் கொள்கின்றான். குழந்தையாய் இந்தக் காற்றிலும் மண்ணிலும் - நீரிலும் புரண்டும் தவழ்ந்தும் பெறுகிற அனுபவங்கள் தான் அவனது வலிமைகள்.

கிழவனுக்கு இந்த இடத்தில் இரக்கம் மேலிட்டது.

செல்வராசனுக்கு இவை ஏதாவது இருக்கிறதா?

முருகா, பொஸ்தகத்தைக் காவிக் கொண்டு நேத்துவரையும் திரிஞ்ச பெடியன், எங்களைப் போல அனுபவமே இல்லாதவன். நீதான் காப்பாத்தவேணும்.

கிழவன் குரல் வெளியே பலமாக வீசிக் கொண்டிருந்த காற்றிற்குக் கேட்டிருக்குமா?

*ஈழநாடு*

*06-10-1965*

*13-10-1966*

*21-10-1966*





முனியப்பதாசனின் இயற்பெயர் தாமோதரம்பிள்ளை சண்முகநாதன். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் மாணவர். 1944 - 1945 களில் வண்ணார் பண்ணையில் பிறந்தார். அவரது இல்லம் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கு அருகு ஒழுங்கையில் அமைந்திருந்தது. யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி உருவாக்கிய பேராசிரியர் கைலாசபதி, கவிஞர் முருகையன், கவிஞர் சோ. பத்மநாதன், செங்கை ஆழியான், செம்பியன் செல்வன், தில்லை நடராஜா, து. வைத்திலிங்கம், வண்ணை சோ. சிவராஜா என்ற படைப்பாளிகளின் வரிசையில் மிக உயர் இடமுள்ளது.

"இந்த ஆற்றல் மிக்க படைப்பாளியைத் தமிழுலகிற்கு வெளிக் கொணர வேண்டுமென்ற அயராத ஆவலின் விளைவாக அவரது சிறுகதைகளைச் சேகரிக்க ஆரம்பித்தேன். இவ்வளவையும் சேர்த்து முடிக்க எனக்கு ஆறு ஆண்டுகளெடுத்தன. முனியப்பதாசன் தான் காலமாவதற்கு முன் தன்னிடமிருந்த அனைத்துப் பிரதிகளையும் எடுத்துச் சென்று தீயிட்டுக் கொழுத்தி, அதனைப் பார்த்துச் சிரி சிரி என்று சிரித்துள்ளார்".

... செங்கை ஆழியான்.

ISBN 955825009-0